2957

T.N.L.A. Debates

Official Report

Vol 32 No 3&4

3,4 March 1987

(C)

V211,31 N87
N87.32.3&4
136503

வெளியீடு 24-9-1987 Issued 24-9-1987

1617/87
2957

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க் கிழமை மார்ச் 3, 1987—தொகுதி 32 எண் 3
Tuesday the 3rd March 1987—Volume 32 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

V2,11,31 N87
N87-32-3 f4
136503
சென்னை-600 008

## உள்ளடக்கம்.

3-3-1987.

| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 191—225 |
| 2. அறிக்கை அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு .. .. .. | 225—226 |
| 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி). | 226 |
| திருமதி பா. வளர்மதி .. | 226—230 |
| திரு. வி. தங்கவேலு .. | 230—234 |
| திரு. எப். எம். இராசரத்தினம் .. | 234—239 |
| திரு. கோ. வீரய்யன் .. | 240—247 |
| திரு. எம். அண்ணாதாசன் .. | 247—251 |
| திரு. கே. சுப்பராயன் .. | 251—260 |
| திரு. ஆர். ரெங்கசாமி .. | 261—266 |
| திரு. வெ. சோ. பஞ்சவர்ணம் .. | 266—271 |
| திரு. எ. தெய்வநாயகம் .. | 272—275 |
| திரு. க. சோலைராசு .. | 276—285 |
| டாக்டர் தே. குமாரதாஸ் .. | 285—291 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 291—296 |
| திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் .. | 296—301 |
| டாக்டர் த. முகம்மது சலீம் .. | 301—303 |
| திரு. மா. சுந்தரதாஸ். .. | 303—307 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. | 308 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 3, செவ்வாய்க்கிழமை.

மாசி 19, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் ''.

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம்.

21—*(வினா எண். 6464) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தொண்டியகாடு, முனங்காடு, புதுக்குடி, மேலக்காடு, மேலத்தொண்டியகாடு கூட்டுக்குடிநீர் திட்டத்தில் கற்பகநாதர் குளம் பஞ்சாயத்தில் கேணிவெட்டி மோட்டார் பொருத்தி சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் பைப் லைன் போட்டும் மேல்நிலைத் தொட்டி கட்டியும் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்று அரசுக்குக் கோரிக்கை மனு வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1987 மார்ச் 3

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டியக்காடு பகுதி கடற்கரைக்கு அருகில் உள்ள இடம். கற்பகநாதர்குளம் பஞ்சாயத்தில் பெரிய கேணி ஒன்று வெட்டப்பட்டு, அதிலிருந்து பைப் லைன் தொண்டியக்காடு வரையில் இணைக்கப்பட்டும் செயல்படாமல் நின்றுவிட்டது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அதுபற்றி கேட்டபோது அதிகாரிகள் தண்ணீர் சப்ளை செய்வதாகச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடமில்லை என்று எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்தக் கேள்விக்குப் பிறகாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பி, தொண்டியக்காடு பகுதியில் இருக்கிற ஊர்களுக்குத் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூனங்காடு, புதுக்குடி, மேலக்காடு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் நல்ல தண்ணீர் வழங்க 5 மீட்டர் விட்டம் உடைய கிணறு வெட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி, எல்லாவற்றையும் செய்ய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 4,999 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, அந்தக் கிணறு வெட்டப்பட்டு, பைப் லைன் இணைக்கப்பட்டு, தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது. பைப் லைன் பிளாஸ்டிக்கில் போடப்பட்டிருந்ததால்-சுமார் 7 கிலோ மீட்டர் தூரம்—இடையிலே எலி கடித்து, துண்டு துண்டாகிவிட்ட காரணத்தினால் தண்ணீர் செல்வது நின்றுவிட்டது. ஆகையால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய தகவல்படி தண்ணீர் இல்லை என்று தான் கூறப்பட்டிருக்கிறது. தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு, இடையில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இரும்பு பைப்புகள் போட்டு, தொடர்ந்து தண்ணீர் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஏதாவது பிரச்சனைகள் வருவதாக இருந்தாலும் பராமரிப்பிற்காக 17,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ரிப்பேர் செய்து, ஒழுங்காக தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 மார்ச் 3]

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்,

22—(*வினா எண். 8126) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சிக்கு உலக வங்கியின் துணையோடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு, அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆலங்குடி பேரூராட்சி ஆண்டுக்காண்டு மழை பொய்த்து விடுகின்ற காலங்களில் கடுமையான வறட்சிக்கு இலக்காகி, குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அது ஒரு 'டவுன் பஞ்சாயத்து'. குடிநீர் வழங்குவதற்காக மதிப்பீடு தயாரிக்ப்பட்டு 5, 6 ஆண்டுகளாக அது தாமதமாகிக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டபோது இந்த விவரத்தைத் தெரிவித்தார்கள். மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 5, 6 ஆண்டுகளாக தாமதமாகிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அந்தக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற இந்த ஆண்டு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு மழை பொய்த்துப்போன ஆண்டு என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் தர இந்த அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து வருவதை நேற்றே சட்டமன்றத்தில் நான் தெரிவித்திருக்கிறேன். திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்கான உதவிகளை உலக வங்கியிடம்கூட கேட்டிருக்கிறோம் : அவர்களிடமிருந்து இன்னும் அறிவிப்பு வரவில்லை. இருந்தாலும் அரசு எல்லா மக்களுக்கும் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறபோது அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளையும் அணுகிக் கேட்டபோது அந்தக் கோப்பானது கிரவுண்ட் வாட்டர் சான்றிதழ் ஒன்று வேண்டுமென்று ஒரே காரணத்திற்காக மட்டும் தேங்கி இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலில் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோப்பில் உள்ள குறைகளை நீக்கி இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள ஆலங்குடி பேரூராட்சி இந்த உலக வங்கித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. உலக வங்கி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் அந்தப் பதிலை நான் சொல்ல வேண்டியிருந்தது. அடுத்தாற்போல் வருகிற ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆற்காடு வட்டம், ஆற்காடு மற்றும் திமிரி ஒன்றியங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

23—(*வினா எண். 9330) திரு. த. பழனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், ஆற்காடு ஒன்றியம், திமிரி ஒன்றியம், முப்பதுவெட்டி, பூங்காடு, சர்வந்தாங்கல், புன்னைப்பாடி, குஞ்சிரப்பந்தாங்கல், லாடாவரம், அத்தித்தாங்கல், கல்லேரி, கரிவேடு, வெம்பேடு, கே. வேலூர், கீழ்பாடி, பழையனூர், கன்னியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துகிற எண்ணம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக தனித்தனியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அந்தத்



திட்டங்கள் ஒப்புதலுக்காக தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாக கோட்டப் பொறியாளர் அவர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது தொடர்ந்து வறட்சியாக இருப்பதால் திமிரி ஒன்றியம் மற்றும் என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் 200 அடி, 300 அடி போர் போட்டாலும் பாறையாகவே வருகிறது. மேலும், பல கிராமங்களில் ஆற்றுப் படுகையாக இருப்பதால் உப்புத் தண்ணீராக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக வேகமாக நடவடிக்கை எடுத்து குடிநீர் வழங்க ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராமங்களுக்குத் தண்ணீர் தரவேண்டி இருக்கிறது. தமிழகத்தில் தற்போது நீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, முடிந்த அளவுக்கு எல்லா இடங்களிலும் கை இறைப்பான்கள் போட்டு குடிக்கத் தண்ணீர் தந்து கொண்டு இருக்கிறோம். சில இடங்களில் தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஆகவே, அதுபற்றியும். ப்ளோரைடு போன்றவை தண்ணீரில் இருக்கிறதா என்றும் கண்டறியப்பட்டு அவற்றை எல்லாம் நீக்கி நல்ல வகையில் தண்ணீர் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் போடாததற்குக் காரணம் பெரிய நீர்நிலைகள் தமிழகத்தில் பல இடங்களில் இல்லை என்பதுதானே தவிர போடக்கூடாது என்பதல்ல.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் தராவிட்டாலும் தனித்தனியாக அந்தந்த கிராமங்களில் இருக்கிற நிலத்தடி நீரை வைத்து அந்தந்த கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்குகிற திட்டம் தலைமைப் பொறியாளரிடத்தில் கடந்த ஓராண்டுக் காலமாக நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உடனடியாக ஒப்புதல் வழங்கினால் இப்போதே அந்தத் திட்டத்தை செயல்முறைப்படுத்தலாம். பல கிராமங்களுக்கு டெண்டர் விடப்பட்டு மேல்நிலைத் தொட்டிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டப்பட்டிருக்கிற அந்தத் தொட்டிகளுக்கு நீர் வரத்துக்கள் சரிசெய்யப்பட்டு போர் போடப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் தரப்படுமேயானால் மிக விரைவில் அந்தக் கிராமங்கள் தண்ணீர் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று நான் எண்ணுகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,

[1987 மார்ச் 3

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, முப்பதுவெட்டி என்ற கிராமத்தில் 2400 மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பூங்காடு என்ற கிராமத்தில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. புன்னைப் பாடியிலும் கை இறைப்பான்கள் பொருந்தப்பட்டு இருக்கின் றன. குஞ்சிரப்பந்தாங்கல் பகுதியிலும் கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. சர்வந்தாங்கல் பகுதியில் குடி நீர்த் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. லாடவரம் கிராமத்திற்கு நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட் டத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் துவக்கப் படவுள்ளன. அத்தித்தாங்கல், கல்லேரி, கரிவேடு, வெம்பேடு, ஆகிய எல்லா இடங்களிலும் கையிறைப்பான்கள் பொருத்தப் பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகு தியில் உள்ள கே. வேலூர், கீழ்பாடி, பழையனூர், கனியனூர் ஆகிய எல்லா ஊர்களிலும் சரிவர பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஜோலார்பேட்டை பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

24—(*வினா எண். 9618) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜோலார்பேட்டை பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் ஜோலார் பேட்டை மற்றும் நாட்றம்பள்ளி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 198.68 இலட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப் பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனை யில் உள்ளது. வாரியத்தின் ஒப்புதலுக்குப் பின்பு, அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அரசு/ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

(முற்பகல் 10-10)

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்காக நன்றி. குடிநீர் வடிகால் வாரியம் அரசினுடைய அனுமதி யைப் பெற்று கடந்த 22-1-1987 அன்று, குடிநீர்



1987 மார்ச் 3]

வடிகால் வாரியத்தினுடைய தலைவர் திரு. உகம்சந்த் அவர் களின் திருக்கரத்தால் 2 இடங்களுக்கு அடிக்கல் நாட்டப் பட்டது. அந்தத் திட்டங்கள் எப்போது செயல்படுத்தப்படும், எப்பொழுது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த அரசு அடிக்கல் நாட்டிய எல்லா திட்டங்களையும் தொடர்ச்சியாக வரைமுறையாக ஒழுங்காகச் செய்து முடிக்கும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான உழவுக் கருவிகள் வழங்கல்.

25—(*வினா எண் 9654) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயக் கிடங்கு களில் விவசாயிகளுக்கு தேவையான உழவுக் கருவிகள் வழங்கப் படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், பென்னகரம் விவசாயக் கிடங்கில் உழவுக் கருவிகள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1985-86-ம் வருடத்தில் பென்னகரம் விவசாயக் கிடங்கில் 6 எண்கள் ''விதை மற்றும் உரமிடும் கருவிகள்,' விநியோகிக்கப்பட்டுள்ளன.

1986-87-ம் ஆண்டில் அதிக அளவில் விவசாயக் கருவி களை இக்கிடங்கின் இருப்பில் வைத்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் 1985-86 ஆம் ஆண்டில் விதை மற்றும் உரமிடும் கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டிற்குக் கருவிகள் வழங்க கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன் னார்கள். நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வ தெல்லாம் இப்படிப்பட்ட விவசாயக் கருவிகள் வழங்குவதில் குறைபாடுகளிருப்பதால் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. அத்தோடு விதை மற்றும் உரங்கள் கூட அவர்களுக்குத் தகுந்த, நியாயமான

விலையில் கிடைப்பது இல்லை. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் எல்லாப் பொருள்களும் எளிதாகக் கிடைக்கிற விதத்தில் அமைச்சர் அவர்கள் அந்த போர்டினுடைய ஆணையாளரிடத்திலே சொல்லி தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, தவறுகள் எங்கே நடந்தாலும் அவற்றைக் களைய தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயக் கிடங்குகளின் மூலமாக உழவுக் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் அவை யாருக்காக வழங்கப்படுகின்றனவோ அவர்களுக்குப் போய்ச் சேராமல், நலிந்தவர்களுக்குப் போகாமல் வல்லவர்கள் சிலருக்குப் போய்விடுகின்றன என்ற பிரச்னை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் யாருக்காக இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே போய்ச் சேருகின்ற வகையில் ஊராட்சிப் பெருந்தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சேர்ந்த ஒரு குழு அமைத்து அவர்களின் நேரிடைப் பார்வையில் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் பலவிதமான சலுகைகளை விவசாயிகளுக்குத் தந்து வருகிறார்கள். யாராவது தவறு செய்வார்களோ என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களின் முன்னாலே தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அத்தோடு எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த விதமான கருவிகள் வழங்கப்படுகின்றன என்ற விவரங்களையும் வானொலி மூலமாகத்தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

**திரு. டி. நீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கிடங்குகள் மூலமாக என்னென்ன பொருள்கள் வழங்கப்படுகின்றன என்பது குறித்து சரியான விளம்பரம் இல்லை. விவசாயிகளுக்கு அது பற்றி தெரிவதே இல்லை. அவர்களுக்கு விவரம் தெரியாததால் மானிய விலையில் விதை, உரம் போன்றவை கிடைப்பதே இல்லை. சப்சிடி கூட கிடைப்பதில்லை. சப்சிடியினால் வியாபாரிகள்தான் பயன் பெறுகிறார்களே தவிர விவசாயிகள் பயன் பெறுவதில்லை. ஆகவே தகுந்த விளம்பரங்களைக் கொடுக்க அரசு முன் வரவேண்டும் என்று விரும்புகிறேன். அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, 722 வேளாண்மைத் தொழில் கூடங்கள் இயங்கி வருகின்றன. 20 அம்சத் திட்டத்தின் கீழ் உழவுக் கருவிகள் வழங்குவது, மற்றும் விதை வினியோகம், உரம் வினியோகம், சப்சிடி போன்றவற்றை வழங்குவது போன்ற பலவற்றை அரசு செய்துகொண்டு வருகிறது. அந்த வகையில் பல இடங்களில் ஒழுங்காக இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. அப்படி ஒழுங்காக இல்லை என்று எந்த இடத்திலாவது தகவல்கள் வருமேயானால் அதற்குத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

விளம்பரங்களைப் பொறுத்த வரையில் வானொலியில் காலை 7 மணிக்குள்ளாக எங்கெங்கே, என்னென்ன பொருள்களைக் கொடுக்கிறார்கள், உரங்கள், விதைகள், டிராக்டர்கள் போன்றவை எங்கெங்கே கிடைக்கின்றன என்பதை நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். வானொலியைக் கேட்பவர்கள் அறியலாம் என்று நான் நம்புகிறேன்.

### தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அலுவலர்களுக்கு வைப்புநிதி வட்டியை அதிகரித்தல்.

26—(*வினா எண். 4832) **திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அலுவலர்களின் வைப்புநிதி வட்டி விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதமாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அரசு அலுவலர்களைப் போன்று, பொது வருங்கால வைப்புநிதியாக 1987–88-லிருந்து மாற்றி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் கிடைக்கிற வீடு கட்டுகிற லோன், திருமணக் கடன் போன்ற பல்வேறு சலுகைகள் நடைமுறையில் கிடைப்பதில்லை. ஒரே பணியைச் செய்கின்ற ஒரே துறையைச் சேர்ந்தவர்களுக்கு இருவித அளவுகோல் என்பது நியாயத்திற்குப் புறம்பானது ஆகும். எனவே, அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற

[1987 மார்ச் 3

ஆசிரியர்களுக்குள்ள அனைத்து சலுகைகளும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்ற தெளிவான உத்தரவை அரசு பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ்நாட்டில் இருந்து வந்த குறைபாடு. சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின்போது பல குறைகளைக் களைந்து ஆணையிட்டு இருக்கிறார்கள். இதிலே இருவித அளவுகோல் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கக் கூடாது என்பதுதான் அரசினுடைய கொள்கை. இதற்கு ஏற்கனவே போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றைக்கு வரைக்கும் அவர்களுக்கு விடிவு வரவில்லையென்பதால் இனியொரு சுதந்திரம் என்ற முறையிலேயாவது அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கும் என்று உறுதிப்படுத்த, தெளிவாக அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. போன்னையன் :** தலைவர் அவர்களே, அத்தகைய சுதந்திரத்தை அவர்களுக்குத் தரவேண்டுமென்ற நல்ல உள்ளத்திற்குச் சொந்தக்கார ஆட்சிதான் இங்கே நடக்கிறது. சென்ற ஆண்டு அதனால்தான் மாண்புமிகு முதல்வர் அந்தச் சலுகைகளை அளித்தார்.

## தாம்பரத்தில் குற்றவியல் நீதிமன்றம்.

27—(*வினா எண். 8397—**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தாம்பரம் நகரத்தில் தற்போது தனியாக முறையான குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடமில்லை.



1987 மார்ச் 3]

ஆனால், தற்போது இம்மாநிலத்தில் உள்ள மதுவிலக்கு சிறப்பு முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்தையும் முறையான முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றி அமைக்கும் உயர்நீதிமன்றத்தின் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. அவ்வாறு மாற்றி அமைக்கப் பட்டால், தாம்பரத்தில் தற்போது இயங்கி வரும் மதுவிலக்கு சிறப்பு முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமும் முறையான முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமாக மாற்றி அமைக்கப் படும்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இந்த நீதிமன்றம் வர வேண்டுமென்று வழக்கறிஞர்களும், பொது மக்களும் பன்னெடுங்காலமாக கோரி வருகிறார்கள். எனவே இதனை இந்த ஆண்டிலாவது பரிசீலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதிக்குக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று தேவையென்பதை அரசு உணர்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், வழக்கறிஞர்களும் ஏற்கனவே இந்தக் கோரிக்கையை அரசுக்குத் தந்திருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை இதற்குத் தேவைப்படுகிறது. உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரைக்காக அரசு தாக்கீது செய்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை வந்த பிறகு அரசு தக்க நடவடிக்கையை இதுகுறித்து எடுக்கும்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று துவங்குவதற்காக மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் அளித்த விடையில் இது குறித்து சொல்லிவிட்டேன். உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையைப் பெற்றவுடன் இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் அமைக்கவேண்டுமென்று பேசப்படும் போது பல நீதிமன்றங்களில் இப்போது நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் ஏறத்தாழ 77 நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். உதாரணமாக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி தாம்பரம் நகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதைப் பற்றியதாகும். எனவே, மூலக்கேள்வியை ஒட்டியே துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

### இலவச சட்ட உதவி மையங்கள்.

28—(*வினா எண். 9719) **திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சட்ட உதவி மையங்கள் எத்தனை இயங்கி வருகின்றன ?

(ஆ) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சட்ட உதவி மையங்கள் 34,

(ஆ) 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 38,00,000.00 (ரூபாய் முப்பத்தி எட்டு லட்சம் மட்டும்) ஆகியுள்ளது.

(முற்பகல் 10–20)

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தான் சிறந்த முறையிலும், சீரிய முறையிலும் இந்த இலவச சட்ட உதவி முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. மூத்த அனுபவமிக்க வழக்கறிஞர்களுடைய சேவை, பணி, இந்த இலவச சட்ட உதவி முகாம்களிலே பயன்படுத்தப்படுவதில்லை என்ற குறைபாடும், அதைப்போலவே இப்போதுள்ள இலவச சட்ட உதவி முகாம்களிலே உள்ள பட்டியல்களில் Raw hands என்று சொல்லக்கூடிய அதாவது காலேஜிலே படித்துவிட்டு உடனடி



யாக வெளிவரக்கூடிய இளைய வழக்குரைஞர்கள் அனுபவமின்றி, நேரடியாக வழக்கறிஞர்களாக பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் மாற்றி அமைத்து, மூத்த அனுபவமிக்க வழக்கறிஞர்களுடைய பணி இந்த இலவச சட்ட முகாம்களுக்குப் பயன்பட்டிடவும், அதைப்போலவே ஓரளவு குறிப்பிட்ட அனுபவமிக்க வழக்கறிஞர்களுடைய பணி இந்த இலவசச் சட்ட உதவி முகாம்களுக்கு கிடைத்திடவும் குறைந்த அளவு அனுபவம் கோருதல் போன்ற வழிமுறைகள் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக பரவலாக மாவட்டங்கள், வட்டங்கள் என்ற அளவிலே முதுநிலை வழக்கறிஞர்கள், அதைப்போல் ஜூனியர் அட்வகேட்ஸ் என்ற இரு தரப்பார்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அது செவ்வனே நடைபெற்று வருகிறது. இதிலே இரண்டு பிரிவுகள், அதாவது 'ஏ குருப்' அட்வகேட்ஸ் என்று சொல்லப்படுபவர்கள் இடைநிலை வழக்கறிஞர்கள் என்றும், 'பி குருப்' அட்வகேட்ஸ்கள், முதுநிலை வழக்கறிஞர்கள் என்றும் இருக்கின்றனர். முதுநிலை வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்கு ஏற்கனவே நீதிமன்றங்களிலே அதிக வழக்குகள் இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ இதைப் போன்ற பொதுச் சேவைக்கு வருவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். அதற்கு ஊக்கம் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட நீதிபதி ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். தற்போது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. பகவதி அவர்களும், நீதிபதி திரு. மிஸ்ரா அவர்களும் வெளிப்படையாகச் சொன்னதைப் போல, தமிழகத்தில்தான் இது மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. 1978 ஆம் ஆண்டு 2 இலட்சம் ரூபாய்தான் இதற்கு ஒதுக்கினோம். ஏழைகளுடைய நலன் கருதி, இந்த இலவச சட்ட உதவிக்காக, 38 இலட்ச ரூபாயை ஒதுக்கிய அரசு இந்தியாவிலேயே இந்த அரசுதான். மேற்கொண்டு 2 இலட்சம் ரூபாயைக் கூட அண்மையிலே தமிழக அரசு இதற்காக ஒதுக்கி, ஆக 40 இலட்சம் ரூபாயை இதற்காக ஒதுக்கி, நல்லமுறையில் இது செயல்பட்டுக்கொண்டு வருகிறது,

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட உதவி முகாம்கள் ஏழைகளுக்காக மிக அதிகமான ' அளவில் பயன்பட்டுவருகின்றன என்றாலும், ஏழைகள் மத்தியில், பல்வேறு கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்கள் மத்தியிலே, இந்த இலவச சட்ட உதவி முகாம்கள் பற்றிய விளம்பரங்கள் முழு அளவில் செய்யப்படவில்லை என்ற கருத்து இருக்கின்றது. எனவே தற்போது தாலுக்கா அளவிலே நடைபெறுகிற இந்த முகாம்களுக்கான எண்ணிக்கையை அதிகப்படுத்தி, ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலே, அதிகமான அளவிலே, முகாம்களை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நீதிமன்றங்களில், ஆதிதிராவிடர்களிடமிருந்து 43,185 மனுக்கள் சென்ற ஆண்டு வந்திருக்கின்றன. பெண்களிடமிருந்து 42,217 மனுக்கள் வந்திருக்கின்றன. மலைவாழ் மக்கள், பழங்குடி மக்களிடமிருந்து 3,984 மனுக்கள் வந்திருக்கின்றன. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், அல்லது திருமணம் ஆனவுடன், குடும்பத்தில் ஏற்படுகின்ற குழப்பங்கள் போன்றவை காரணமாக பெண்களிடமிருந்து வரப்பெற்றிருக்கிற மனுக்கள் 10,169, இதிலே கிட்டத்தட்ட 80 சதவிகிதம் மனுக்கள் கிராமப்புறங்களிலேயிருந்துதான் வந்திருக்கின்றன. வட்ட அளவிலே அந்த மையங்கள் நடைபெற்ற போதிலும் கூட, அங்கேயிருக்கின்ற வட்ட ஆட்சியர், தாசில்தார் மூலமாக கிராமப்புறங்களிலே உள்ள ஏழைகளுக்கு இதிலே முக்கியத்துவம் தரவேண்டும் என்று ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தாக்கீது அனுப்பி இதை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இன்னும் அதிகமான அளவிலே, மாண்புமிகு உறுப்பினர் விரும்பியவாறு விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள இந்த இலவச சட்ட உதவி மையங்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இந்தச் சட்ட உதவி மையங்களுக்கு Summoning Power இல்லை. இதனால் பல இடங்களில் வழக்குகளை பைசல் செய்ய முடியாமல், எதிர் தரப்பினர் ஆஜர் ஆகாமல் வழக்கைத் தவிர்த்து விடுகிறார்கள். இலவச சட்ட முகாம்களுக்கு சாட்சிகளை அழைக்கிற அதிகாரத்தை சட்டபூர்வமாக ஆக்கித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, "an element of compulsion should be introduced for implementing the scheme successfully" என்று மைய அரசும் கருதியது, மாநில அரசுகளோடும் கலந்து ஆலோசித்தது. இறுதியிலே எடுக்கப்பட்ட முடிவு, நீதிமன்றங்களில் சில நடைமுறைகள், கட்டுப்பாடுகள் இருக்கிற காரணத்தால் வழக்கறிஞர்கள் வாய்தா வாங்கி, வாங்கி, வழக்குகள் தள்ளிப் போடப்பட்டு போடப்பட்டு இறுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் பல ஆண்டுக்காலம் ஆகி கிடைக்கிற அவல நிலை இருப்பதால், இந்த நிலையைத் தவிர்த்து, conciliation என்ற முறையிலே, negotiated settlement பேச்சு வார்த்தை மூலமாக, சுமூகமாகப் பேசியே பிரச்சினைகளைத் தீர்ப்பது தான் இதற்குப் பலன் தரும் என்ற நோக்கோடு மத்திய அரசு இதற்கு விருப்பம் தெரிவித்து, அதற்குத் தாக்கீது அனுப்பி அந்த முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு படி அதிகமாகச் சென்று, Mediation Centres என்று சொல்லக்கூடிய, பேச்சு மூலமாக சுமூகமாகத் தீர்க்கக் கூடிய அமைப்புகள் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வரவேண்டும், மாவட்டந்தோறும் முதற் கட்டமாக அமைக்க வேண்டும் என்ற நோக்கோடு நாங்கள் ஏற்கனவே அதைத் தொடங்கியிருக்கிறோம். அதிலே அனைத்துத் தரப்பும் ஒத்து வரவேண்டும் என்பதற்காக, கையெழுத்து வாங்கிய பிறகு அது தொடங்கப்படுகிறது. கையெழுத்திட்ட பிறகு அவர்கள் கட்டாயம் வர வேண்டும் என்பதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த அரசு இந்த ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது, ஆதி திராவிடர்களிடமிருந்து அதிக அளவிலே மனுக்கள் வரப்பெற்றதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட மனுக்கள் எந்தத் தரப்பின் அடிப்படையிலே வந்திருக்கின்றன, எவ்வளவு முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களிடமிருந்து குறிப்பாக பெரும் விவசாயிகளிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத நிலையிலே, கொத்தடிமைகள் என்ற முறையிலே பாதிக்கப்பட்டவர்களில் பலரிடமிருந்து மனுக்கள் வரப்பெற்று, அவை பேசி தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன.

[1987 மார்ச் 3

**திரு. கோ. பெருமாள் பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட உதவியால் பெருவாரியான மனுக்கள் சமாதானமாக முடித்து வைக்கப்படுகின்றன. அப்படி முடித்து வைக்கப்படுகிற நேரத்திலே, அங்கே வழங்கப்படுகின்ற தீர்ப்பை எதிர்த்து ஒருவர் நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற நேரத்தில், நீதிமன்றத்தில் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்ற நிலை ஏற்பட்டு, மீண்டும் அந்த வழக்கு புதிதாக வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதை மாற்றியமைப்பதற்கு ஏதுவாக, Indian Evidence Act என்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமை அதுவல்ல.

"A settlement made out of Court, by way of a negotiated settlement, is binding upon all the parties" என்ற முறையிலே நீதிமன்றத்திற்கு வெளிப் புறமாக இது போன்ற இலவச மையங்கள் மூலமாக நடத்தப்படுகின்ற வழக்குகளால் ஏற்படுகின்ற தீர்வுகள் அனைத்திலும் சம்பந்தப்பட்டவர்கள், கையெழுத்திடுகிற காரணத்தினால், அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லி உயர் நீதி மன்றங்களும், உச்ச நீதி மன்றமும் இதற்காகத் தீர்ப்புகள் வழங்கி, தாக்கீதுகள் அனுப்பி, அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட உதவி என்பது ஒரு சிறந்த திட்டம் என்பதும், அதற்காக அரசு இன்றைக்கு 38 இலட்சம் ரூபாய் செலவழித்துக் கொண்டு இருப்பதும் பாராட்டக்கூடிய செய்தியாக இருந்தாலும், நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையில், அந்தத் திட்டத்தை நடத்துவதில் உள்ள குறைபாடுகளை நேரில் அறிந்தவன். அது என்னவென்றால் ஒரு சில வழக்கறிஞர்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக Briefless Lawyers என்று சொல்லும்போது, என்னைத் தவறாக நினைக்க வேண்டாம்—அப்படி Briefless Lawyers என்று சொல்லப்படுகின்ற ஒரு சிலர் இந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு அமைப்பை அமைத்து, ஏழைகளுக்கு நியாயமான சட்ட உதவி வழங்காமல், தரப்படுகின்ற பணத்தை தாங்கள் கைப்பற்றுவதிலேதான் இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் வழக்கறிஞர்களைக் கொண்ட, சட்டம் படித்தவர்களைக் கொண்ட ஒரு Monitoring Cell-ஐ அமைத்து அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சிறப்பான திட்டத்தை, ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் நாம் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கி



1987 மார்ச் 3] [திரு டி. ஆர். வேங்கடரமணன்]

றோம் என்றாலும், இன்னும் சிறப்பாகச் செய்யக் கூடிய ஒரு திட்டம் என்பதால், அதிலே உள்ள குறைகளைக் களைவதற்கு அரசு இந்தச் சட்ட மன்றத்தில் உள்ள சட்டம் படித்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு Monitoring Cell அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் தாராள மனம் வைத்து ஏழைகளின் நலனைக் கருதி, இலவச பணியைச் செய்ய முன் வர வேண்டும். அதுதான் நல்லது. ஆனால், இந்தப் புரட்சித் தலைவர் அரசு வழக்கறிஞர்களுக்கு ஓரளவுக்கு நிதி தரவேண்டும் என்ற முறையில், பீசும் தந்து அவர்களை இந்த வழக்குகளை நடத்தச் சொல்கிறது. வழக்கறிஞர்கள் இதுபோன்ற தவறுகள் செய்வதாக வழக்கறிஞர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது வேதனைப் பட வேண்டிய ஒன்றுதான். எதற்கெடுத்தாலும் போராட்டம் என்ற உணர்வு படைத்திருக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு Monitoring Cell அமைப்போம் என்றாலும், வழக்கறிஞர்கள் அதை ஏற்பார்களா, அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்திரவாதம் தருவார்களா என்பதே ஒரு பிரச்சினை ஆகிவிடும். வழக்கறிஞர்கள் மத்தியில் ஒரு மன மாற்றம் ஏற்பட வேண்டும். ஏழைகளைக் காக்க வேண்டும் என்பது தங்களுடைய கடமை என்ற உணர்வு அவர்களுக்கு வர வேண்டும். அந்த நிலை ஏற்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய விருப்பம்.

## தமிழகத்தில் குடும்ப நீதிமன்றகள் அமைத்தல்.

29—(*வினா எண். 11575—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 'குடும்ப நீதிமன்றம்' அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய அரசு குடும்ப நீதிமன்றங்களை அமைக்கும் பொருட்டு 1984-ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தை (மையச் சட்டம் 66/84) இயற்றியுள்ளது. இந்த சட்ட விதிகளின்படி தமிழ்நாட்டில் குடும்ப கோர்ட்டுகள் அமைப்பதுகுறித்து அரசின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 10–30)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைய இருக்கிற குடும்ப நீதிமன்றங்களுக்கு எந்த எந்த வகையான குடும்ப வழக்குகளை விசாரிக்கிற அதிகாரங்களைக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு இந்தச் சட்டத்தின் Salient features என்ன என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. 'Family Courts are established with a view to promoting conciliation in and secure settlement of disputes relating to marriage, family affairs and matters connected therewith.' என்று குறிப்பிட்டிருக்கிறது. திருமணம் சம்பந்தமான, திருமணத்திற்குப் பிறகு கணவன் - மனைவி இடையே பூசல்கள், பிரச்சினைகள் ஏற்படுகிறபோது, குழந்தைகளைப் பராமரிப்பதிலே பிரச்சினைகள் ஏற்படுகிறபோது அவற்றில் பிரத்தியேகமாக, முழுமையாக கவனம் செலுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மைய அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மாநில அரசு ஏற்கனவே 1968 ஆம் ஆண்டே பெண்களுக்கு, தாய்க்குலத்திற்கு இருக்கிற குறைபாடுகளை நீக்க வேண்டுமென்ற முறையிலே இப்படிப்பட்ட அமைப்புகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை, மைய அரசுக்கு எழுதியிருக்கிறது. முதன் முதலாக அவ்வாறு எழுதியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாநிலம் முழுவதும் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே உள்ள நீதிமன்றங்களிலே வழக்குகளின் தேக்கம் தவிர்க்க முடியாத பிரச்சினையாக இருந்து வருகிறது. பல்வேறு நீதிமன்றங்களிலும் தேங்கியிருக்கிற வழக்குகளில்—இந்தக் குடும்ப நீதிமன்றங்களுக்குக் கொண்டுவரப்பட உத்தேசித்துள்ள வழக்குகள்தான்—அப்படிப்பட்ட வழக்குகள் தான் நிறையத் தேங்கிக் கிடக்கின்றன. எனவே இந்தக் குடும்ப நீதிமன்றங்கள் மாநில அளவிலே எத்தனை உருவாக்க அரசு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற பெரிய பிரச்சினை நிதிப் பிரச்சினை. மைய அரசு நீதி பரிபாலனத்திற்காக ஒதுக்குகிற தொகை சொற்பமான தொகையாக இருக்கிறது. 'This has not been treated as Core sector by the Union Government.' மாநில அரசு ஆண்டுக்காண்டு அதற்காக நிதியை ஒதுக்குகிறது. பெண்கள் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் இவை என்ற காரணத்தினால் ஒவ்வொரு மாவட்டத்திலும் துவக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கமாகும். அதற்காக அரசு நிதியை ஒதுக்க இருக்கிறது.

## சென்னை நகர்ப் பகுதிகளில் பல அடுக்கு மாளிகைகள்.

*30—(*வினா எண். 10942)* திரு. கே. உச்சி மற்றும் திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர் பகுதிகளில் தற்போது பல அடுக்கு மாளிகைகள் கட்டப்படுவதை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) சென்னையில் அரசு (எம். எம். டி. ஏ.) அனுமதி பெறாமல் வீடுகள் கட்டப்படுவதை ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்ட சட்டம் 1971-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் கீழ் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டப்படுவது கட்டுப்படுத்தப்படுகின்றது.

(ஆ) ஆம்.

**திரு. கே. உச்சி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சென்னையைப் பொறுத்தவரையில் எத்தனை அடுக்கு மாளிகைகள் கட்டலாம் என்பதையும், யாராவது விஷமிகள் அதை மீறுவார்களானால் அப்படி மீறியவர்கள்மீது என்ன நடவ்டிக்கை எடுக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 3

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாளிகைகள் கட்டுவது அரசால் பரிசீலிக்கப்பட்டு 10 மாடிகள் வரை அனுமதிக்கப்படுகிறது. விதிகளுக்கு உட்படாமல் கட்டுகிறவர்கள் மீது எம். எம்.டி.ஏ. அவர்கள் வேலையை நிறுத்துவதற்கும், மேற்கொண்டு அவர்கள் கட்டாமல் சிவில் கோர்டில் ஸ்டே வாங்குவதற்கும் அதற்கு பிறகு டெமாலிஷன் நோட்டிஸ் கொடுத்து கட்டியதை இடிப்பதற்கும் கார்ப்பரேஷனால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதியில்லாமல் கட்டியிருக்கிற கட்டடங்களை இடிப்பதற்கு அரசு ஆணையிடுமா? அதேபோன்று எம்.எம்.டி. ஏ. அப்ரூவல் இல்லாமல் கட்டியிருக்கிற கட்டடங்களை house to house survey செய்து நியாயம் என்றால் அவர்களுக்குக் கொடுக்கவோ, இல்லையென்றால் அதை இடித்து மாற்றுவதற்கோ அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதியில்லாமல் கட்டப்படுகிற கட்டடங்களை இடிப்பதற்கு எம். எம். டி.ஏ. உத்திரவிடுகிறது. அதை நடைமுறைப்படுத்துகின்ற, இடிக்கின்ற பணியை மாநகராட்சி செய்கிறது.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை அடுக்கு மாளிகைகள் கட்டலாம் என்று விதி 1971 ஆம் ஆண்டிலே வகுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் காலப்போக்கில் சென்னை போன்ற பெருநகர்ப் பகுதிகளில் வீடுகட்டுவதற்கு போதுமான மனைகள் கிடைக்காத இந்த நிலையிலே கட்டப்படுகிற கட்டடங்கள் குறைந்த அளவு 3 அடுக்கு கொண்டவையாக இருக்கவேண்டுமென்று உத்திரவிட அரசு யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்படுகிற எல்லா கட்டிடங்களும் 3 அடுக்குகளைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று அரசு பொதுவாக உத்திரவிட முடியாது. ஏனென்றால், கிரவுண்ட் ஏரியா, எவ்வளவு இடத்திலே கட்டப்படுகிறது என்பதைப் பொறுத்துதான் அந்தக் கட்டிடத்தினுடைய அடுக்கு மாடிகளை நிர்ணயிக்க முடியும். எனவே, அந்த அளவுக்கேற்ப, கட்டிடத்தினுடைய உயரம், அடுக்கு மாடிகள் ஆகியவை, அதற்கென்று இருக்கிற எம்.எம்.டி.ஏ.வினுடைய விசேஷ குழுவால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் அரசால் பரிசீலிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.



1987 மார்ச் 3]

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் 1/4 கிரவுண்ட், 1/2 கிரவுண்ட், 3/4 கிரவுண்ட், 1 கிரவுண்ட் என்று பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் வீடு கட்டும்போது, எம்.எம்.டி.ஏ. சட்டதிட்டங்கள் அதிகமான இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று விதியில் இருக்கிறது. அந்த விதியை மாற்ற வேண்டுமென்று பலமுறை கேட்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையெனில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மாத்திரம் இதில் விதிவிலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1/4 கிரவுண்ட், 1/2 கிரவுண்டிலே வீடுகள் கட்டுகிறபொழுது, கிரவுண்ட் ப்ளோர் மட்டும் கட்டுவது என்றால், கார்ப்பரேஷன் அனுமதி வாங்கினாலே போதும். ஆனால், 1/4 கிரவுண்டிலே 3 மாடி கட்ட வேண்டுமென்றால்தான் எம். எம். டி. ஏ. குறுக்கிட்டு விதிகளைப் புகுத்த வேண்டியிருக்கிறது.

**திரு. எஸ். வேணுகோபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கட்டிடங்கள் 10 அடுக்கு மாடி மொத்தம் எத்தனை கட்டப்பட்டிருக்கின்றன என்பதைச் சொன்னார்கள். ஆனால், எத்தனை இடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மேலும் சாதாரண ஏழைகள் 800 சதுர அடி, 600 சதுர அடியில் பல மாடிகள் கட்டும்போது, அதாவது 2 அடுக்கு, 3 அடுக்கு கட்டும்போது, பல பேருக்கு பர்மிஷன் தராமல் எம்.எம்.டி.ஏ. வினர் தங்க வைத்துக் கொள்கிறார்கள். அதற்குக் கருணை கொண்டு உத்தரவு தருவார்களா, பர்மிஷன் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, 800 சதுர அடியில் 3 மாடி கட்டுவதற்கெல்லாம் அனுமதி தர முடியாது. விதிகளுக்காக மட்டுமல்ல, அங்கே, ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போது, உயிர்களுக்கு அல்லது உடமைகளுக்கு, 3 மாடி என்பதால், பாதுகாப்பு இராது. எனவே, 3 மாடி, 4 மாடியெல்லாம், 800 சதுர அடியிலே கட்ட அனுமதிக்க முடியாது. விதிகளுக்கு உட்பட்டுத்தான் கட்ட வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் கேட்ட முதல் கேள்விக்கு, ஏறத்தாழ 340 வேலைகளுக்கு, வேலை நிறுத்த உத்தரவு கொடுக்கப்பட்டு, எம்.எம்.டி.ஏ. வால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; இன்னும் சிவில் கோர்ட்டிலே ஏறக்குறைய 190 வழக்

குகள் நிலுவையிலே இருக்கின்றன. டெமாலிஷன் நோட்டீஸ் கொடுத்ததற்கு கார்ப்பரேஷனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை வழக்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்பெற்றது என்பது பற்றிய விவரத்தை கார்ப்பரேஷனிடமிருந்து பெற்று உறுப்பினருக்கு அனுப்புகிறேன்.

## குடிசை மாற்று வாரிய வீடுகள்.

**31—*(வினா எண். 12083) திரு. கு. ரமணி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகள் நீண்டகாலமாக பராமரிப்பின்றி ஏராளமான வீடுகள் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகளை பழுது பார்க்க அவசரத் திட்டம் ஏதாவது போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) அரசு அனுமதியுடன் அட்கோ கடனுதவியுடன் 121 திட்டப் பகுதிகளிலுள்ள குடியிருப்புகளை ஏறக்குறைய ரூ. 1 கோடியே 70 இலட்சம் செலவில் பழுதுபார்க்கக் கோரும் செயற்குறிப்பு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பரிந்துரை செய்யப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் இரண்டு மூன்று பகுதிகளில் உள்ள குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளிலே மேலே ஏறி போகக்கூடிய படிக்கட்டுகள் பூரா இடிந்து விழுந்து, மேலேயிருக்கிற சீலிங் எல்லாம் இடிந்து விழுந்து, சிலருக்குக் காயம் ஆகி, இப்படி இடிபாடுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஜன்னல்கள் உடைந்து போகின்றன, மாற்றப்படுவதில்லை. மேலே இருக்கிற கழிவறை தண்ணீர் கீழேயிருக்கிற வீடுகளிலே வந்து விழுகிறது. இதை நான் நேரிலே மாவட்ட ஆட்சித் தலைவரையும் மற்றவர்களையும் அழைத்துபோய்க் காட்டியிருக்கிறேன். ரிப்பேருக்குப் பணம் கொடுப்பதில்லையென்ற செய்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு உடனடியாக ரிப்பேருக்குப் பணத்திற்கு அனுமதி கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்றுப் பகுதியில் ஏறத்தாழ 40,000 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மெயின்டெனன்சுக்கு ஒதுக்கப்படுகிற பணம் போதுமானதாக இல்லை என்கிற காரணத்தாலே அப்போதைக்கப்போது சீதோஷ்ண நிலைகளால், புயல், பெரு மழை இவற்றால் சேதாரம் ஏற்படுகிற சூழ்நிலைகளில் பழுதுபார்க்கிறபொழுது, அவற்றை முழுமையாகச் செய்ய முடியவில்லை. அதற்காகத்தான் இப்பொழுது சமீபத்திலே அரசு ஒரு திட்டத்தைப் போட்டு, ஏறக்குறைய எல்லா வீடுகளையும் பழுது பார்ப்பதற்காக, சுமார் ரூ. 1 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலே, 22 வருஷம் கடன் உதவியோடு அதைச் செயல்படுத்த முன் வந்திருக்கிறது.

(முற்பகல் 10-40)

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டு குடிசைகளை அப்புறப்படுத்தி வீடுகள் கட்டி சுகாதாரத்தோடு, ஏழைகளாக இருப்பவர்கள் குடியிருக்கவேண்டும் என்பதுதான் அதனுடைய நோக்கம். ஆனால் இடையிடையே பல பேர் குடிசைகளைத் திரும்பவும் அந்த இடங்களில் அனுமதி இல்லாமல் போட்டுக்கொள்வதால் பலயிடங்களிலே சுத்தப்படுத்திவைக்க முடியாமல் இருக்கிறது. இந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகள் பகுதிகளிலே சாக்கடை வெட்ட மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். சாக்கடை வெட்டுகின்ற வேலையை முனிசிபாலிட்டிக்கு hand over செய்யாததால் அவர்கள் எடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட Unauthorised ஆக இருக்கக் கூடிய, திரும்பவும் முளைக்கிற குடிசைகள் முளைக்காமல் தடுப்பதற்கும் முளைத்து இருப்பதை அங்கே இருந்து நீக்குவதற்கும் 'அதே மாதிரி' சாக்கடை வசதி இல்லாமல் இருப்பதை போக்க முனிசிபாலிட்டிக்கு hand over செய்வதற்கும் ஒரு திட்டவட்டமான முடிவை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட வீடுகளில் அவர்கள் குடியிருக்காமல் மற்றவர்களுக்கு வாடகைக்கு விட்டுவிட்டு அல்லது வேறு விதத்தில் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? இது குறித்து விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமிக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 3

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டு விட்ட காரணத்தால் பதில் சொல்லுகிறேன். இது குறித்து ஏற்கனவே குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு என்று தனியாக விசாரணை கமிஷன் தேவையில்லை.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு இருக்கிற வீடுகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள அத்தனை வீடுகளையும் குடியிருப்பவர்களுக்கே விற்கும் திட்டத்தை அரசு உருவாக்கினால் இந்த நிலையைத் தவிர்க்கலாம் என்பது பற்றி அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்?

(பதில் இல்லை.)

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள் கேட்ட கேள்வியை நான் கேட்கலாம் என்று இருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இடிந்து இருக்கிற கட்டிடங்களைப் பழுதுபார்ப்பது குறித்து தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களின் கண்காணிப்புக் குழுக்கள்.

32—(*வினா எண். 9491) திரு. செ. செம்மலை : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களைக் கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



1987 மார்ச் 3]

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கிற சத்துணவு மையங்களை கண்காணிக்கின்ற குழுவில் எல்லோருமே ஆண்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். உண்மையிலேயே அந்தக் குழுவை அரசு நியமித்து இருந்தாலும் கூட அத்தனை அக்கறையோடு அவர்கள் கண்காணிப்பது இல்லை. எனவே இதை மாற்றி மாநிலம் முழுவதும் உள்ள கிராமங்களில் உள்ள சத்துணவு மையங்களில் கண்காணிக்கின்ற பொறுப்பையும் அந்த கண்காணிக்கின்ற குழுவில் முழுக்க முழுக்க பெண்களை உறுப்பினர்களாகவும் நியமிக்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கின்ற குழந்தைகள் நல மையங்களை ஆய்வு செய்வதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. 2 அல்லது 3 மாதர் சங்கங்களினுடைய உறுப்பினர்களும், கிராம நிர்வாக அலுவலரும், சமூக சேவையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற உள்ளூர் பிரமுகர் ஒருவரும் இந்தக் குழுவிலே இருக்கிறார்கள். வட்டார வளர்ச்சி அலுவலரால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலோடு மேற்சொன்ன குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழையடி வாழையாக ஏழையாக வாழ்ந்து கொண்டு இருக்கும் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சில கெட்ட நோக்கம் கொண்டவர்கள் அந்தத் திட்டத்திலே அமைப்பாளர்களாக புகுந்து கொண்டு அந்தத் திட்டத்தை விமர்சனம் செய்பவர்களை கண்டு கொண்டு அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற தவறுகள் ஏற்படுகின்ற போது எல்லாம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது தவறுகள் நேர்ந்ததை சுட்டிக் காட்டுவார்களானால், அவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1987 மார்ச் 3

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பசித்த வயிற்றுக்குப் புசிக்க உணவு அளிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்திலே—பல்வேறு இடங்களிலிருந்து எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன்—பொறுப்பிலே இருக்கின்றவர்கள் அங்குள்ள பண்டங்களைத் திருடி விற்கின்ற சமுதாயக் குற்றங்களைச் செய்கிறார்கள். எனவே நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டு, இன்னும் கொஞ்சம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியுமா ? அல்லது மாற்றுத் திட்டம் ஏதாவது கொண்டு வருவீர்களா? கிராமப் புறங்களில் சின்னஞ்சிறிய குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போவதில்லை. பொறுப்பிலே இருப்பவர்கள் அந்தக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதாக கணக்குக் காட்டி . . . . . . . . . . . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : குற்றச்சாட்டு இல்லை. அப்படி இருந்தால் தனிப்பட்ட முறையில் சொல்வேன். பொதுவான நிலையைச் சொல்ல வேண்டும். கிராமப்புறங்களிலே அந்தக் குழந்தைகள் விடுமுறை நாட்களில் பள்ளிக்குப் போவதில்லை. அந்தக் குழந்தைகளுக்கும் சேர்த்து உணவு போடுவதாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்கள் போய்விடுகிறார்கள். விடுமுறை நாட்களில் சோறு போடாத அளவிற்கு நிறுத்தப்படுமா ? அல்லது அளிப்பதற்காக வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினாலே தான் தற்போது பள்ளி மற்றும் பாலர் பள்ளி மையங்களை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கல்வி, சமூக நலம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது மாதத்திற்கு 10 மையங்கள் வீதம் ஆய்வு செய்ய வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அது மட்டுமல்லாமல், தற்போது விடுமுறை நாட்களில் உள்ளூரிலே இருக்கின்ற குழந்தைகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு மட்டும், பள்ளிக்கு வருவார்களா என்று கேட்டறிந்து உணவு அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடுகள் தற்போது எங்கும் நிகழ்வதில்லை.



1987 மார்ச் 3]

**ஆண்டிமடம், செந்துரை ஊராட்சி ஒன்றியங்களில் புதிய பாலர் பள்ளிகள் துவங்குதல்.**

33—(*வினா எண். 9819) திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் மற்றும் செந்துரை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மேலும் புதியதாக பாலர் பள்ளி துவங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) எந்தெந்த கிராமங்களில் சத்துணவுக் கூடங்கள் இல்லாமல் தேவையான அளவிற்குக் குழந்தைகள் இருக்கிறார்களோ, அங்கு அந்தக் குழந்தைகளுடைய எண்ணிக்கையை ஆய்வு செய்து அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தக்க பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை கிடைத்த பின் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் கூறுகின்ற போது குழந்தைகள் எண்ணிக்கையைப் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை வருமேயானால், அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று சொன்னார்கள். அந்த வகையில் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில், சாலக்கரை, மணக்கொல்லை போன்ற கிராமங்களிலேயும், செந்துரை ஊராட்சி ஒன்றியத்தில் நைனார்குடிகாடு போன்ற கிராமங்களிலேயும், 150-க்கும் மேற்பட்ட குழந்தைகள் இருக்கின்ற காரணத்தால் அந்தந்த கிராமங்களிலேயே பாலர் பள்ளிகளை புதியதாக துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்கு மேல் இருக்குமானால், அந்தக் கிராமத்திலேயே சத்துணவுக் கூடங்கள் துவங்கப்படுகின்றன. 70 குழந்தைகளுக்குக் குறைவான எண்ணிக்கை இருக்குமானால், துணை மையங்கள் துவங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய கிராமங்களில் சத்துணவு மையங்களைத் தோற்றுவிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆய்வு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

[1987 மார்ச் 3

**ஜெயங்கொண்டம் தொகுதியில் பனைபொருள் உற்பத்தி நிலையம் அமைத்தல்.**

34.—(*வினா எண். 11329) **டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் பனைபொருள் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**பேரூர் தொகுதி எட்டிமடையில் 'அம்பர் ராட்டை' தொழிலகம் அமைத்தல்.**

35.—(*வினா எண். 11732) **திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி எட்டிமடை கிராமத்தில் 'அம்பர் ராட்டை' தொழிலகம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. நடராசன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் கிராமத்தில் அம்பர் ராட்டைத் தொழிலகம் வேண்டுமென்று கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பொது மக்கள் அங்கே கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். அதைத் துவக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராம நூற்பு நிலையங்கள் 591 கிராமங்களில் செயற்பட்டு வருகின்றன. இதன்மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. பல கிராமங்களில் குறிப்பாக பெண்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். எட்டிமடை என்ற கிராமத்தில் அப்படி



1987 மார்ச் 3]

ஒரு நூற்பாலை வேண்டுமென்று கேட்டு மனுக்கள் வந்திருக்கின்றன. அந்தக் கிராமத்தில் உள்ள எவ்வளவு பெண்கள் இந்தத் தொழிலுக்கு வரத் தயாராக இருக்கிறார்கள் என்று உரிய அதிகாரிகள் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆய்வு முடிந்ததற்குப் பின் அங்கு ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

**திரு. க. சோலைராசு :** தலைவர் அவர்களே, காலையிலிருந்து மாலை வரை உழைத்து, ரூ. 9-லிருந்து 12 வரை கூட வருமானத்தை பெற்றுக் கொடுக்கிற அந்த அற்புதமான திட்டத்தைத் தொடங்குகின்றபோதே, இந்தக் கூடங்களைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா ? கூடங்களைக் கட்ட முடியாமல் இருக்கின்ற சூழ்நிலையில் தொடங்கப்படுகின்ற அந்தத் தேதியிலிருந்து வாடகைக் கட்டிடங்களுக்கு முறையான வாடகை கொடுப்பதற்கு உடனடி நடவடிக்கையை அரசு எடுக்குமா ? அல்லது வங்கிக் கடன் மூலம் கூடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது துவக்கப்படுகின்ற இடங்களில் வாடகைக்கு இடங்கள் பிடிக்கப்பட்டு உரிய வாடகை வழங்கப்பட்டுதான் நடத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான இடங்களில் ஆதிதிராவிடநலத்துறை மூலமாக இதற்குத் தேவையான கட்டிடங்கள் கட்டித்தரப்பட்டு அவை செயல்படுத்தப்படுகின்றன. படிப்படியாக சொந்தக் கட்டிடங்களிலே செயல்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, அம்பர் ராட்டை தொழிலகம் பல கிராமங்களில் இயங்காமல் இருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால் அம்பர் ராட்டை தொழிலகத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சியாளர்கள் நியமிக்காமல் மூடிக்கிடக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, பயிற்சியாளர்களை அதிகமாக நியமித்து மூடிக் கிடக்கின்ற தொழிலகங்களைத் திறக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி அளிப்பதற்கானவர்கள் இருக்கிறார்கள். பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால் பொதுவாக கிராமங்களில் அறுவடை நேரங்களில் அந்த நூற்பு நிலையங்களுக்கு ஆட்கள் வருவதில்லை. ஆகவேதான் அவைகள் மூடிக்கிடக்கின்றனவே தவிர வேறு காரணங்களினால் அல்ல,

சினிமா டிக்கெட்டிற்கு ஒரே வரி விதிக்கும் திட்டம்.

36—(*வினா எண். 5325) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா டிக்கெட்டில் பல்வேறு வரிகளுக்குப் பதிலாக ஒரே வரியை விதிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : (அ) ஆம்.

(ஆ) இணைக்க வரி நடைமுறையில் இல்லாத இடங்களில் உள்ள சினிமா திரையரங்குகளில் 6 விதமான கீழ்க்கண்ட வரிகள் செலுத்த வேண்டி இருக்கின்றன.

(1) கேளிக்கை வரி ; (2) கேளிக்கை வரி மீதான மேல் வரி (3) கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி : (4) காட்சி வரி (5) காட்சி வரி மீதான மேல் வரி, (6) காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி. இந்த 6 விதமான வரிகளிலிருந்து கிடைக்கக் கூடிய வருவாய், காட்சிக்கான மொத்த நுழைவு கட்டணத்திலே சுமார் 53 சதவீதம் ஆகும். இந்த 6 விதமான வரிகளை ஒன்றாக இணைத்து ஒரே வரியாக—6 விதமான வரிகளுக்குப் பதிலாக ஒரே வரியாக—விதிக்கலாமா என்பது குறித்து அரசு தற்போது ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா டிக்கெட்டில் பல்வேறு வரிகளுக்குப் பதிலாக ஒரே வரியை விதிக்கும் திட்டம் எப்போது, எந்த வருடம் ஆய்வு செய்யப்பட்டது? எப்போது எந்த வருடத்தில் அந்த ஆய்வு முடிந்து செயலுக்கு வரும்? இந்த சினிமா டிக்கெட் வரியினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 விதமான வரிகளில் கேளிக்கை வரி, கேளிக்கை வரி மீதான மேல் வரி, கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி ஆகிய மூன்று வரிகளும் பார்வையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. காட்சி வரி, காட்சி வரி மீதான மேல் வரி, காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி ஆகியவை திரையரங்கு உரிமையாளர்களிடத்திலேயிருந்து பெறப்படுகிறது. திரையரங்கு உரிமையாளர்களிடத்திலும் பல்வேறு நிலைகளிலிருந்து, இந்த வரியை ஒரே வரியாகப் போட வேண்டுமென்று பல்வேறு மட்டத்திலே அரசுக்குப் பரிந்துரை பெறப்பட்டது.





அந்த அடிப்படையில் வணிக வரித் துறையினிடத்திலிருந்தும் பரிந்துரை—இந்த 6 வரிகளை இரண்டு வரிகளாக அதாவது டிக்கெட்டுகளிலே வைக்கப்பட்டிருக்கின்ற 3 வரிகளை ஒரே வரியாகவும் அதைப் போல காட்சிகளின் மீது செலுத்தப்படுகின்ற 3 வரிகளை ஒரே வரியாகவும், ஆக இந்த வரிகளை இரண்டாகப் பிரிக்கலாம் என்று அரசுக்குப் பரிந்துரை— அனுப்பியுள்ளார்கள். இருந்தாலும் அரசு இதை ஒட்டு மொத்தமாக ஒரே வரியாகச் செலுத்தலாம் என்று ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக் கேள்வி நீக்கப்படுகிறது.

Increasing of irrigation facilities of Coovam river in Chingleput District.

37—(* Q. No. 4890) Thiru G. ANANTHA KRISHNA : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government has plans to introduce a system for Coovam river flowing in Chengleput district to increase the irrigation facilities to the parts of the district where the river is flowing ; and

(*b*) if so, the steps taken thereon ?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

டி 2 எ 423—5

### பரம்பிக்குளம், ஆளியாறு திட்டம்.

38—(*வினா எண் 6837) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் மூலம் எத்தனை ஹெக்டேர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் மூலம் 1,15,731 ஹெக்டேர் நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசு ஆரம்ப காலம் முதல் தற்போது வரை செலவழித்துள்ள தொகை எவ்வளவு? இந்தத் திட்டத்தினை மூன்று பகுதிகளாகப் பிரித்து வேலை செய்கிறார்கள்; ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆகின்ற செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மூன்று கட்டங்களிலே அரசாங்கம் நிறைவேற்றி இருக்கின்றது. முதல் கட்டத்திலே ரூ. 1,430 இலட்சங்கள், 2-வது கட்டத்திற்கு ரூ. 324 இலட்சங்கள்; 3-வது கட்டத்திற்கு 743.5 இலட்சங்களையும் இந்த அரசாங்கம் செலவழித்திருக்கிறது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ஹெக்டேர் நிலம் சாகுபடி செய்வதற்கு இந்தத் திட்டத்தின் மூலம் குறியீடு வைத்துள்ளீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு கட்டங்களும் முடிந்த பிறகு இந்தத் திட்டத்தின் மூலமாக 1,72,401 ஹெக்டேர் நிலங்களை பாசனத்திற்குக் கொண்டு வரவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின்படி, புஞ்சைப் பாசனமாக அதிகப்படியாக பாசனம் கொடுக்கக் கூடிய எல்லையை முதலில் நிர்ணயித்ததிலிருந்து இதுவரைக்கும் அதிகப்படுத்தி கொடுத்திருக்கும்படியான பகுதி எவ்வளவு இருக்கும் ? அப்படிச் செய்ததின் விளைவாக இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகள்



வரைக்கும்கூட சில பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கப்பட முடியாமல் கஷ்டம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு நஷ்டமும் ஏற்பட்டு வருகிறது உண்மையா? அப்படியானால், முறையான பாசனத் திட்டமாக எவ்வளவு ஏக்கருக்கு அதைக் கொடுக்க முடியும் என்பதை அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக தற்போது 18 மாதங்களுக்கு ஒரு முறை பாசனத்திற்கு நாங்கள் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது திட்டம் முடிவுறுகின்ற நேரத்தில் அதிகப்படியான ஹெக்டேர் நிலங்களை பாசனத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, அது நஞ்சையிலிருந்து புஞ்சைப் பாசனமாக வருகிற நேரத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கொடுக்க வேண்டிய காலகட்டம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பல பகுதிகளிலே கொஞ்சம், கொஞ்சமாக நஞ்சையிலிருந்து புஞ்சையாக்கி இருக்கிறார்கள். மொத்தமான கணக்கு இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பகுதி வாரியாக பதில் சொல்லப்படும்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின்கீழ் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டிருக்கிற ஏழு பஞ்சாயத்துக்களில் வெட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கால்வாயில் இதுவரையிலும் தண்ணீர் விடப்படவில்லை. ஏறத்தாழ 5 ஆண்டுக்காலம் ஆகியும்கூட, இதுவரை ஒரு முறைகூட பாசனத்திற்கென்று தண்ணீர் விடப்படவில்லை. ஆகவே, எப்போது தண்ணீர் விடப்படும் என்பதை அறிவதோடு, இறுதியாக பல்லடம் தாலுகாவினுடைய கடைசிப் பகுதியாக இருக்கக்கூடிய முதலிபாளையம் என்ற கிராமம் மட்டும் இந்தத் திட்டத்தில் விடப்பட்டிருக்கிறது. நெடுங்காலமாக முதலிபாளையத்தைச் சேர்ந்தவர்கள் இந்தத் திட்டத்தை, அந்தப் பஞ்சாயத்திற்கும் நீட்டிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, காங்கேயம் ரோட்டுக்கு அடுத்து இருக்கக்கூடிய முதலிபாளையம் கிராமத்திற்கும் பி.ஏ.பி. திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனி ஊர்களாக இருக்கின்ற ஊர்களுக்கு எல்லாம் திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அந்த ஊர்களின் பெயரைச் சொல்லி, இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா என்று தனிக் கேள்வி கேட்டால், அதற்குச் சரியான பதில் சொல்லப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தில் கேரளாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், மேலும் கேரளாவிலிருந்து பெறவேண்டிய நீரை நாம் நம் பகுதிக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கேரளாவிலிருந்து இன்னும் நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய நீர், ஒப்பந்தப்படி இருக்கிறதா? அப்படி இருந்தால், அதை நாம் பெறுவதற்கான முயற்சி எடுத்திருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 டி.எம்.சி. தண்ணீர் ஒப்பந்தப்படி நமக்கு வந்தாகவேண்டும். இப்போது அந்தப் பகுதியில் சரியான மழை இல்லாத காரணத்தால், 28 டி.எம்.சி. யிலிருந்து 30 டி.எம்.சி. வரைதான் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, குறைவான தண்ணீர்தான் அங்கு வந்துகொண்டிருக்கிறது.

### காட்டுமன்னார்கோயில் வட்டம் வீராணம் ஏரியை ஆழப்படுத்தல்.

39—(*வினா எண். 9405) திரு. சா. ஜெயச்சந்திரன், திரு. கே. ஆர். கணபதி, திரு. ஏ. தங்கராசு, மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் வட்டம் வீராணம் ஏரியை ஆழப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வீராணம் ஏரியில் தூர் வாரி அதனுடைய கொள்ளளவை பழைய நிலைக்குக் கொண்டுவர மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வருகிறது.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்கள். அந்த மதிப்பீட்டினுடைய தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிக்கு சுமார் 50 லட்சம் ரூபாய் செலவிலே அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.



### பெரியாறு-வைகை கால்வாயை நவீனப்படுத்துதல்.

40—(*வினா எண். 11250) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நடைபெறும் பெரியாறு-வைகை கால்வாயை நவீனப்படுத்தும் பணி எப்போது நிறைவு பெறும்?

(ஆ) இதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெரியாறு-வைகை பாசன மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 1988 ஏப்ரல் திங்களில் நிறைவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) முதற் கட்டப் பணிகள் ரூ. 46.40 கோடி செலவில் 1984 டிசம்பர் திங்களில் முடிவடைந்தது. இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், ரூ. 56.86 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அறிக்கையினை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

" இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் (சிவில்) சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள்

குழுவின் (1983–84) முப்பத்தி நான்காவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை குறித்த மேற்படி குழுவின் முப்பத்தொன் பதாவது அறிக்கை''.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

### 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்-விவாதம்—தொடர்ச்சி.

* **திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன். மதுவிலக்கைப் பொறுத்தவரை, தமிழகத்தில் எந்தத் தலைவரை விடவும், எந்தக் கட்சியை விடவும் புரட்சித் தலைவரின் தலைமையிலே இயங்கி வருகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள். குடியாலே ஒரு குடும்பம் கெட்டது என்ற அவப் பெயர் நமக்கு வந்துவிடக் கூடாது என்கிற அச்ச உணர்வின் காரணமாகவே மதுக் கடைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் சில கால கட்டங்களில் மிகுந்த நம்பிக்கையோடு இந்த அரசு செயல்பட்டு வந்தது என்பதை நான் இந்த மன்றத் திலே நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலை வரின் நீண்ட காலக் கனவு இந்த ஆண்டு தொடக்க முதல் நிறை வேறி இருக்கிறது என்பதை இந்த நாடு அறியும். ஏறத்தாழ 250 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டிருந்தாலும் கூட தமிழகத்திலே புரட்சித் தலைவர் கூறிய கூற்றுப்படி இன்றைக்கு சாராயக் கடைகள் மூடப்பட்டு விட்டன. தமிழகத்திலே இருக் கிற பொது மக்களின் சார்பாகவும், தாய்க்குலத்தின் சார்பாக வும், எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித் துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கள்ளுக் கடைகள் மூடப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ 30 ஆயிரம் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலை இழந் திருக்கிறார்கள். தொழிலை இழந்த காரணத்தால் அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படும் என்று கருதி அவர்களுக்குப் பதநீர் இறக்குதல், பனை வெல்லம் தயாரித்தல் போன்ற தொழில் களை நடத்திக் கொள்வதற்காக அரசால் 2 ஆயிரம் ரூபாய் ரொக்க உதவி அளிக்கப்படும் என்ற உன்னதமான திட்டம், இன்றைக்குப் பலநோக்குப் பார்வையோடு பார்க்கக் கூடிய ஒன்றாகும்.



இந்த ஆண்டின் திட்டச் செலவு 1,200 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார நிலையை வளர்ச் சியடையச் செய்ய 1,250 கோடி ரூபாய்களை ஒதுக்க மாநில அரசு இன்றைக்குக் கருதி இருக்கிறது. பருவ மழை பொய்த்துள்ளது, மதுவிலக்கின் காரணமாக மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள வரு வாய் இழப்பு ஆகிய காரணங்களால் 86 கோடி ரூபாய் அள விற்குப் பற்றாக் குறை இருப்பதாக இன்றைக்கு மத்திய திட்டக் குழு கவனப்படுத்தி இருக்கிறது. மதுவிலக்கு என்ற நல்ல லட்சி யத்தை நடைமுறைப்படுத்திய காரணத்தால், பற்றாக் குறை யால் துன்பப்படும் தமிழக அரசுக்கு மத்திய அரசு கருணைக் கரம் நீட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டிலே இருக்கிற தொழில் துறை வளர்ச்சி அந்த நாட்டின் மின் துறை வளர்ச்சியோடு தொடர்பு கொண்டிருக் கிறது என்பதை அறிவில் சிறந்திருக்கிற வல்லுநர்கள் தெளிவாகத் தெரிந்திருப்பார்கள். தமிழகத்திலே புதிதாகத் தொழில் தொடங்க நினைப்பவர்கள் மாநிலத்திலே நிலவுகின்ற மின் பற்றாக் குறையைக் கண்டு அஞ்சுகிற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே தொழில் துறையிலே ஆண் டுக்குக் குறைந்த பட்சம் 10 சதவீதம் வளர்ச்சி பெற வேண்டு மானால் ஒவ்வொரு ஆண்டும் 200-லிருந்து 300 மெகாவாட் வரை கூடுதல் மின் உற்பத்தித் திட்டம் செயல்பட்டாக வேண் டும். அந்த வகையிலே பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமான மின் சக்தித் துறைக்கு இந்த ஆண்டிலே, கவர்னரின் உரையிலே முதலிடம் தரப்பட்டிருக்கிறது. வட சென்னை அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையத்தின் இரண்டாம் கட்டப் பிரிவு, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது விரி வாக்கப் பணி போன்ற பல்வேறு ஆக்கப் பணிகளை தமிழக அரசு முனைப்போடு செயல்படுத்தி வருவதை நாம் இந்த நேரத்திலே பாராட்டியாக வேண்டும்.

நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையம் 630 மெகா வாட் மின் சக்தியை உற்பத்தி செய்கிறது. இதில் தமிழகத் தின் பங்காக 176 மெகாவாட் மட்டுமே தரப்படுகிறது. ஆனால் தமிழகத்தின் மின் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் உற்பத்தியாகிற, அதிலும் குறிப்பாக நெய்வேலியில் உற்பத்தியாகிற மின் சக்தி முழுவதையும் தமிழகத்திற்கே தர வேண்டும் என்று ஏற்கனவே பல முறை வற்புறுத்தியிருந்தா லும் கூட இந்த நேரத்திலும் நான் மத்திய அரசை மீண்டுமொரு முறை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் ஏற்பட இருக்கிற தொழில் வளர்ச்சியைப்பற்றி கோடிட்டுக் காட்டியுள்ளது மேதகு ஆளுநரின் உரை. அதையொட்டி இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். தமிழகத்தில் தொழில் தொடங்கும் ஆர்வத்தோடு வெளிநாடுகளில் வாழ்கிற இந்தியர்கள்—அதிலும் குறிப்பாக தமிழர்கள் முன் வந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் வேதனையோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அயல் நாடுகளில் வாழ்கிற இந்தியர்கள்—குறிப்பாக தமிழர்கள் அந்தந்த நாடுகளிலேயே முதலீடு செய்து தொழில் தொடங்க பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. இருந்தாலும் கூட தமிழ்நாட்டில்தான் தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு இங்கே தொழில் தொடங்க முன்வருகிறார்கள். அப்படி அவர்கள் முன்வருகிற நேரத்தில் சில பத்திரிகைகள்—பத்திரிகைச் செய்திகள்—அதைத் தவறாக—அதாவது அவர்கள் மீது குற்றம் சாட்டுகிற உணர்வோடு சில அரசியல் கட்சிகள் பேசுகிற காரணத்தால்—இன்றைய தினம் வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்கள் கூட இங்கே தொழில் தொடங்க அஞ்சிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆண்டுக்காண்டு தமிழகத்தில் பெய்கிற மழையின் அளவு குறைந்து வருகிறது. வறட்சியைச் சமாளிக்க ஆழ் துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன. இந்த நிலைமை தவிர்க்க முடியாததுதான். ஆனாலும் கூட இதன் விளைவாக, தமிழகத்தில் உள்ள நிலத்தடி நீர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. சென்ற ஆண்டு, பொதுக் கணக்குக் குழுவின் சார்பில் வட இந்தியச் சுற்றுப்பயணத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் தலைமையில் மேற்கொண்டபோது நானும் அதில் கலந்து கொண்டேன். அப்போது நாங்களெல்லாம் மரியாதைக்குரிய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களைச் சந்திக்கிற நேரத்தில்கூட அவர் சொன்ன கருத்து நிலத்தடி நீரைப் பற்றியதாகும். குடிநீர்ப் பிரச்சினை பற்றி வருந்தத்தக்க செய்தியை அவர் சொன்னார். அதை இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு உணர்ந்து, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய விதத்தில் நேற்றைய தினம் கூட அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, நிலத்தடி நீர் குறைந்து வருகிற அபாயத்தைக் குறைப்பதற்கு அரசு முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொலை நோக்குப் பார்வையோடு கடல்நீரைக் குடிநீராக்குவது போன்ற மாற்றுத் திட்டங்களில் நாம் கவனத்தைச் செலுத்த இதுவே உரிய நேரமாகும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஏழைத் தாய்மார்களுக்கும் இளஞ் சிறுவர்களுக்கும் இலவசமாக காலணி வழங்கும் திட்டம் கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்தால் பள்ளிப் படிப்பைப் பாதியில் விடுபவர்களின் எண்ணிக்கை 40 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாகக் குறைந்திருக்கிறதே அதைத் கூட எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்ட வேண்டாம். இலவச சீருடைத் திட்டத்தால் 40,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறதே, அதைக்கூட எதிர்க்கட்சி பாராட்ட வேண்டாம். ஏழைப் பிள்ளைகளுக்குச் செருப்பு வேண்டும் என்று ஒரு தலைவனின் நெஞ்சம் நினைத்ததே, அந்த நெஞ்சைப் பாராட்ட வேண்டாமா? இதைச் சொன்னால் காலணி கொடுத்தீர்கள், தாவணியும் கொடுங்கள் என்று எதுகை மோனையோடு ஏளனம் செய்கிற நிலை வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பார்வை குறைந்தவர்களுக்கு கண்ணாடி தந்தீர்கள், கண்ணுக்குக் கண்ணாடி தந்தீர்கள்; மூக்குக்கு மூக்குப் பொடி எப்போது தருவீர்கள் என்றா நாங்கள் கேட்டோம்? அதை நல்ல திட்டம் என்று நாடு ஏற்றுக் கொள்ளவில்லையா? ஆனால் இன்றைக்கு ஏழைப் பிள்ளைகளுக்குக் காலணி தந்தால் அதை எதுகை மோனையோடு கேலியும் கிண்டலும் செய்கிற நிலை வந்திருக்கிறதே, அது சரிதானா?

மழைக் குளிரால் வாடிய மயிலுக்குப் பேகன் போர்வை தந்தால் எந்த எதிர்ப்பும் இல்லாமல் உங்கள் இலக்கிய அறிவு ஏற்றுக் கொள்கிறது. படரக் கொம்பின்றித் தவித்த முல்லைக்கு, பாரி தேரைக் கொண்டு போய் நிறுத்தி அதைத் தந்தால் உங்கள் கற்பனை கவி பாடுகிறது. ஆனால் செருப்பில்லாமல் நடந்து ஒரு சின்னமணிப் பாதம் சிவந்து போகிறதே என்று நெஞ்சு வலித்து எங்கள் தலைவன் காலணி தந்தால் உங்கள் பொருளாதார அறிவு பொத்துக் கொண்டு வருகிறது. இதிலே அறிவியலைப் பார்க்காதீர்கள்; அரசியலைப் பார்க்காதீர்கள்; எங்கள் தலைவனின் நெஞ்சத்தைப் பாருங்கள்.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு இந்த நாட்டின் முதலமைச்சராக புரட்சித் தலைவர் இருக்கிறார். புரட்சித் தலைவர் ஆட்சி நடத்துவதை குறை சொல்லுவதற்கு, குற்றம் சொல்லுவதற்கு உங்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் அவர் முதலமைச்சராக இல்லாத நேரத்திலே கூட மழையால் வாடிய ரிக்ஷா தொழிலாளர்களுக்குத் மழைக்கோட்டு வழங்கிய மனவளம் படைத்தவர். அந்தப் புரட்சித் தலைவர் தான் இன்றைக்குத் தமிழக முதலமைச்சராக இருக்கிறார்.

பண்டித நேரு அவர்கள் இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் தன் உயிரை விட மேலாக நேசித்த தலைவன். தன்னுடைய மறைவுக்குப் பிறகு தன்னுடைய சாம்பலை பனிபடர்ந்த இமய மலையிலும், பசுமையான வயல் வெளிகளிலும், கரை தெரியாக்

கடல் மீதும் தெளிக்கச் சொன்னாரே—அந்த மகான் மறைந்திருக்கிறாரே என்றாலும் —அந்த உத்தமனின் இதயத்தை நீங்கள் வேறெங்கும் தேடிப் போக வேண்டாம். இன்றைக்கு தமிழகத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் உருவத்திலே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவர் நின்றால் இமய மலை; படுத்தாலும் பாரத நதி. அவர் போடுகிற திட்டங்கள் இந்த நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடுகின்ற ஏழை சந்ததிகளுக்காகப் போடுகிற திட்டங்கள். இந்தத் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து கவர்னர் உரை நிகழ்த்தியிருக்கிறார். அவரது உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இந்திய தேசிய கர்ங்கிரஸ் அமைப்பின் சார்பாக எனது விவாதத்தைத் தொடர ஆசைப்படுகிறேன்.

1987ஆம் ஆண்டு சனவரி முதல் மாண்புமிகு தமிழக முதல்வர், கள், சாராயக் கடைகளை மூடியிருக்கிறார். கறுப்புத் தமிழர், கருமவீரர், காமராஜ் நாடார், கன்னித் தமிழ் நாட்டு மக்களை பள்ளி தோறும் சென்று படிக்கச் சொன்னார். அப்படிச் சொன்ன அந்த இதய தெய்வத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர், கள், சாராயக் கடைகளை மூடியமைக்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

அதே நேரத்தில் இன்றைக்கு மேலை நாட்டு மதுபானக் கடைகள் இங்கே திறக்கப்பட்டிருக்கின்றன. அதற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைப்பார்களேயானால் எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பின் சார்பாக நீண்ட நல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள், கள், சாராயக் கடைகளை மூடிய காரணத்தால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த முப்பதாயிரம் பேர்களுக்கு நபர் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் ரொக்க உதவி தந்து பனைபொருள் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வாழ்வு தருவதற்கு முன் வந்திருக்கிறார். ஆனால் இன்றைய சூழ்நிலையில் இரண்டாயிரம் ரூபாய் என்பது, பனைபொருள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய கருவிகளை வாங்குவதற்குப் போதாது என்பதால், தயவு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு குடும்பத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் என்பதை ஒரு குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாயாக அதிகரித்துக் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





பொங்கல் திருநாளில் நாங்கள் எல்லாம் தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிற வகையில் திட்டங்களைப் போட்டுத் தந்தார்கள். ஆனால் எனது கோயம்புத்தூர் மாவட்டத்தில், வால்பாறை பகுதியைப் பொறுத்த வரையில் தொலைக்காட்சி இன்னும் மக்களுக்கு நன்றாகத் தெரியாத சூழ்நிலை இருப்பதால், வால்பாறை போன்ற மலைப் பகுதியில் இப்படிப்பட்ட தொலைக் காட்சியகம் ஒன்றைத் திறந்து மலைப்பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கும், கோவையில் வாழக்கூடிய மக்களுக்கும் இன்னும் அதன் சுற்றுப்புறங்களில் வாழக்கூடிய மக்களுக்கும் நன்றாகத் தெரியும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக புதிய தொலைக் காட்சியகத்தை வால்பாறையில் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பற்றாக்குறை பட்ஜெட் போட்டு பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் கருணைக் கொடை என்ற வகையில் பொங்கல் பரிசை எல்லா அரசு அதிகாரிகளுக்கும் தந்திருக்கிறார்கள். 14 போக்குவரத்துக் கழகங்களிலேயும் எனக்கு ஈடுபாடு உள்ளது என்ற முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சேரன் போக்குவரத்துக் கழகத்திலும், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திலும், இன்னும் பல போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றும் அரசுத் துறை ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் பொங்கல் பரிசு கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்று அங்கே இருக்கும் நிர்வாகத்தினரைக் கேட்கும் போது, அவர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொண்டார்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள், அதனால் பொங்கல் பரிசு தர முடியாது என்று சொல்லி, தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற அளவில், அனைத்து ஊழியர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மேலை நாடுகளின் உதவியுடன் மின் உற்பத்தியை நம் நாட்டிலே பெருக்க கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மரியாதைக்குரிய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சென்ற மாதம் கோவை மாநகருக்கு வந்திருந்தார்கள். அங்கே South Indian Mill Owners Association கூட்டம் நடந்தது. அதில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் நாட்டு நலனுக்காகவும், மில் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் நலனுக்காகவும் மேலை நாடுகளிலிருந்து Fuel Coalஎன்று சொல்

லக்கூடிய நிலக்கரியைக் குறைந்த விலையில் வாங்கி, ஆலை அதிபர்கள் தனித் தனியாக மின்சாரத்தைச் உற்பத்தி செய்யலாம் என்ற அற்புத யோசனையைச் எடுத்துச் சொன்னார்கள். அது வரவேற்கக் கூடிய யோசனை. அதைத் தமிழக முதல்வரவர்களும், மாநில, மத்திய அரசும் உடனே பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் இந்த நேரத்தில் ஒரு முக்கியமான கருத்தை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். மகாபாரதம் எழுதுவதற்கும், கம்பராமாயணம் எழுதுவதற்கும், அதற்குப் பின்னாலே இந்திய அரசியல் சட்டத்தை எழுதித் தருவதற்கும் தீண்டத் தகாதவர்கள் என்று சொல்லக்கூடிய சிந்தனைச் சிற்பிகளாக இருக்கக்கூடியவர்களை அழைத்து எழுதச் சொன்னார்கள். பாபா சாகிப் அம்பேத்கார் இந்திய அரசியல் சட்டத்தை எழுதித் தந்திருக்கிறார்கள். அந்தப் பரம்பரையில் முன்னால் தோன்றிய திருவள்ளுவர் திருக்குறளை எழுதித் தந்தார்கள். இப்போது சூரிய வெப்பத்தின் வாயிலாக மின்சாரத்தை உற்பத்தி செய்யலாமென்று மொட்டைசாமி கந்தசாமி சிங்—மொ.க. சிங்—என்ற இளம் விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கிறார். சூரிய வெளிச்சத்திலே தானாக இயங்கக்கூடிய தண்ணீர் இறைக்கும் இன்ஜின்களைக் கண்டுபிடித்துத் தந்திருக்கிறார். ஆனால் அந்தக் கண்டுபிடிப்பை இந்த நாடு ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. அவர் சோற்றுக்குக் கூட வழியில்லாமல் இருக்கிறார். அப்படிப்பட்ட விஞ்ஞானிகளை, Invent r களை அழைத்து. நம் நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறையை போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு Hydel power projects—நீர் ஏற்று மின் நிலையங்கள் நம் நாட்டுக்கு மிக மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றன. காடம்பாறை நீர் ஏற்று மின் நிலையத்தை எடுத்துக் கொண்டால், அதை உண்டாக்க நமக்கு சில கோடிக் கணக்கான ரூபாய்கள் அதிகமாகியிருக்கலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட நீர் ஏற்று மின் நிலையங்களை 15 மலைப் பாங்கான இடங்களிலே உருவாக்கி, இன்றைக்கு ஏற்பட்டுள்ள மின்சாரத் தட்டுப்பாட்டைப் போக்கலாம். இப்படிப்பட்ட நீர் ஏற்று மின் நிலையங்களை ஏற்படுத்துவதோடு, சூரிய வெளிச்சத்தின் அடிப்படையில் மின்சாரத்தை உற்பத்தி செய்திடும் மொட்டைசாமி கந்தசாமி சிங்கையும் இந்த அரசு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழுப்பு நிலக்கரி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. அதை மேலும் பயன்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து மண் பாண்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களைப் பற்றிச் சொல்லும்போது, இந்தத் தொழில் வளர்ச்சிக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மேலும் வளர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11–20.)

இங்கே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை யெளியவர்களுக்குக் காலணி கொடுக்கவேண்டும் என்று ஆளுநர் உரை மூலம் சொல்லியிருக்கின்றார்கள். இந்தக் காலணித் திட்டம் உண்மையிலேயே ஒரு அற்புதமான திட்டம். இங்கே மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் காலணி திட்டத்தைப் போட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அட்டவணை சாதியினர் என்று சொல்லக்கூடிய தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனத்தவர் கிட்டத்தட்ட 126 சாதியினர் இருக்கின்றனர். அந்த அட்டவணை சாதியினர்களில் இன்றைக்கு மிகமிக ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்கள் அருந்ததியர் மக்கள் ஆவர். இன்றைக்கு அருந்ததியர் மக்கள் பல வழிகளிலே ஒடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலேயே அவர்களுடைய சொந்தத் தொழிலாக, உயிர்த் தொழிலாக, குலத் தொழிலாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவில் உள்ள காலணி தயாரிக்கும் திட்டத்திற்கு மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து அந்தத் திட்டத்தை அமல் செய்திருக்கின்றார்கள்.

இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்திலே நான் இருந்தாலும், இந்தக் காலணி தொழில் செய்து வாழும் 5 லட்சம் மக்கள், தாழ்த்தப்பட்ட மலை வாழ் நரிக்குறவர் சங்கத் தலைவர் என்ற முறையில் நான் இந்தத் திட்டத்தை உண்மையிலேயே மனமார, உளப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். காரணம் "When we enter into our houses, we leave our Shoes or chappals outside. In the same way, we are all kept out of the Society. The untouchables are kept out of the Society" என்று பாபா சாகேப் அம்பேத்கார் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். "நாம் வீட்டிற்குள்ளே நுழைகிறபோது, காலணி என்று சொல்லக்கூடிய செருப்பை வீட்டிற்கு வெளியே தூக்கி எறிந்துவிட்டு செல்கிறோம். அதைப் போலவே, இன்றைக்கு சமுதாயத்திலே தீண்டத்தகாதவர்கள் என்று சொல்லக்கூடிய தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் சமுதாயத்திலே தீண்டத் தகாதவர்களாக தூக்கி எறியக்கூடிய மக்களாக இருக்கின்றார்கள்" என்று அன்றைக்கு பாபா சாகேப் அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதே நேரத்திலே மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் அந்தக் காலணியை உண்டாக்கக்கூடிய அருந்ததியர் மக்களுக்கு வாழ்வு தரவேண்டுமென்பதற்காக காலணித் திட்டத்தை இங்கே உருவாக்கி இருக்கின்றார்கள்.

[திரு. வி. தங்கவேலு] [1987 மார்ச் 3

பெரம்பூரிலே அருந்ததியர் காலணிகள் உருவாக்கும் கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது. இப்படிப்பட்ட அடிமைப்பட்ட சமுதாயத்திலே பொட்டுப்பூச்சியாக, புன்மைத் தேரையாக வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மக்களை அடையாளம் கண்டு அந்த மக்களுக்கு வாழ்வு தரவேண்டும். வசந்தம் தன்னால் வரவேண்டுமென்று நினைத்து அந்தக் காலணித் திட்டத்தை தமிழக முதல்வர் இங்கே அறிமுகம் செய்து வைத்திருக்கிறார். அந்தத் திட்டம் சீராக நடத்தப்படவேண்டும். குறிப்பாக அருந்ததியர் மக்களுக்கு நிலையான வாழ்வு தருவதற்காகக் கொண்டுவந்திருக்கின்றார். ஒவ்வொரு அருந்ததியருக்கும் ஒரு நாளைக்கு கூலி ரூ. 50 கொடுத்து அந்தச் சமுதாயத்து மக்களை மேல்நிலைக்குக் கொண்டு வர அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதி வால்பாறையைப் பற்றிச் பேசவேண்டும். இன்றைக்கு மக்கள் வாழ்பாறையாக மாறுவதற்காகப் பல முயற்சிகளை இங்கே அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக பழங்குடி மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் இன்றைக்கு வால்பாறையிலே அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வால்பாறை என்று சொல்லும்போது, மரியாதைக்குரிய நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற மாதம் அங்கே வந்திருந்தார்கள். அது ஒரு வரலாறு. வால்பாறைக்கு மந்திரிகள் வருவது என்பதே ஒரு வரலாறு. அப்படி பல கொண்டை ஊசி வளைவுகளைக் கடந்து அன்றைக்கு மரியாதைக்குரிய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் வந்தார் என்றால், அவர்களோடு மதிப்பிற்குரிய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் வந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு வாந்தியே வந்துவிட்டது என்று சொல்லும்போது, அங்கே சென்று வருவதே ஒரு மகத்தான சாதனை. அப்படிப்பட்ட ஒரு சாதனை ஊரிலேயிருந்து, வால்பாறையிலே இருந்து, ஒரு சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில இன்னமும் 30 கிலோ மீட்டர் தூரம் மக்கள் நடந்து சென்று கொண்டு இருக்கின்றார்கள். மலைவாழ் மக்கள் நடந்து சென்று கொண்டு இருக்கின்றார்கள். போக்குவரத்து வசதி கிடையாது; மின்சாரம் கிடையாது; பத்திரிகை வசதி கிடையாது; நல்ல ரஸ்தா கிடையாது. ஆனால் அதே நேரத்திலே இந்தியாவிலேயே அதிக சூப்பர் டேக்ஸ் கொடுக்கக் கூடிய ஒரே ஒரு தொகுதி என்றால் அது வால்பாறை தொகுதி தான் என்பதை நாடு அறியும். நாட்டு மக்கள் அறிவார்கள். மணி அடிக்கப்பெற்றது).

*திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து, வரவேற்று ஒருசில உணர்வுகளை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தமிழகத்தினுடைய உயர்



1987 மார்ச் 3] [திரு. எப். எம். இராசரத்தினம்]

வுக்கு வழிவகுக்கும் திட்டங்களையும் மனிதாபிமான உணர்வுகளுக்கு மரியாதை தரும் உரையாகவும் நாட்டின் அனைத்துப் பிரிவினருக்கும் அடிப்படையான தேவைகளை நிறைவு செய்யும் அரசுத் திட்டங்களின் முன்னுரையாகவும் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை அமைந்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் உணர்வுகளையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் இன்றைக்கு நடைமுறைப்படுத்துகின்ற தலைவராக புரட்சித் தலைவர் அவர்கள் இருந்து வருகின்றார்கள். அந்த உணர்வின் அடிப்படையில்தான் இன்றைக்கு, கள், சாராயக் கடைகளை எல்லாம் மூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கள், சாராயம் எப்படி இருக்கும் என்று தெரியாதவர்களாக, அறியாதவர்களாக இருந்த இளைய தலைமுறையினருக்கு, கள், சாராயக் கடைகளை எல்லாம் திறந்து விட்டு அவற்றைப் பற்றி தெரிந்து கொள்ள வழி வகை செய்தது மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கள், சாராயம் பற்றி அறிந்து கொள்ளாமல் இருந்த தலைமுறையினருக்கு அவற்றைப் பற்றி அறிந்துகொள்ளுமாறு செய்து அத்தகைய ஒரு தலைமுறையை உருவாக்கியது அவர்களுடைய ஆட்சிதான். கள், சாராயக் கடைகளைத் திறப்பதன் வாயிலாக எதிர்கால சமுதாயம் பாழடையும் என்று மூதறிஞர் ராஜாஜி போன்றவர்கள் எல்லாம் கண்டித்தும் கூட அதையும் பொருட்படுத்தாமல் கள், சாராயக் கடைகளைத் திறந்தவர்கள் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைப் பற்றி விமர்சனம் செய்வது உள்ளபடியே வியப்பாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அவர்களின் செயல்களைப் பார்த்து நாடே வியப்படைகிறது. ஏழை எளியவர்களுக்காக துயர் துடைப்புத் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தியிருக்கும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியைப் பற்றி பாராட்டுகின்ற ஒரு மனப்பக்குவம் இல்லையென்றாலும் கூட உபகாரம் இல்லையென்றாலும் உபத்திரவம் இல்லாமல் இருக்க வேண்டுமென்று சொல்லுவார்களே, அதுபோல—அத்தகைய ஒரு உணர்வோடு அவர்கள் செயல்பட வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தை அவர்களின் கவனத்திற்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

கள், சாராயக் கடைகளை மூடுவதன் மூலம் 30 ஆயிரம் கள் இறக்குகிறவர்கள் வருமானம் இல்லாமல் வாடுவார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கவேண்டும் என்கிற நல்ல உணர்வோடு மறுவாழ்வு திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குக் கருவிகள் வாங்கவும், மாற்றுப் பணிகள்

செய்யவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 2 ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டிருப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்களை நாங்களெல்லாம் பாராட்டுகிறோம். கள், சாராயக் கடைகளை எல்லாம் மூடியதன் வாயிலாக அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல், பருவ மழை பரவலாக பொய்த்து நாட்டில் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதையும் பொருட்படுத்தாமல், அரசு ஊழியர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்பட்ட வகையில் ஏற்பட்ட செலவுகளையும் பொருட்படுத்தாமல் நல்ல உணர்வோடு சிந்தித்து இந்தத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருப்பதற்காக இந்த நாடே அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு நாட்டில் கடுமையான வறட்சி நிலை இருக்கிற இந்த வேளையில் இந்த வறட்சி நிலையினைப் போக்குவதற்காக, சமாளிப்பதற்காக போர்க்கால அடிப்படையில் வேகமாக வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்து வருவது கண்டு, நாட்டு மக்களுக்கெல்லாம் நம்பிக்கை ஏற்படும் அளவுக்கு நல்லுணர்வோடு செயல்பட்டு வருவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நாங்களெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரையிலும் மக்கள் பார்த்திராத அளவுக்குக் கடுமையான வறட்சி காணப்படுகிறது. பேச்சிப்பாறையில் தேங்கியிருந்த சிறிது நீரையும் பருவ மழை வரும் என்று எதிர்பார்த்து விவசாயத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் பருவ மழை பெய்யாத காரணத்தால், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் மிகப் பெரிய கரிவு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இதனால் பெருத்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரு போகம் சாகுபடியாகும் மாவட்டமாகும். இன்றைக்கு இருபோகமும் கரிவு ஏற்பட்டு சரியாக விளைச்சல் ஏற்படாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இரண்டுபோகமும் கரிவு ஏற்பட்டால்தான் அரசாங்கத்தால் நிலவரி தள்ளுபடி செய்யப்படும் நிலை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் கூட இரு போகமும் கரிவு ஏற்பட்டுள்ளதால் நில வரி, நீர் வரி மற்றும் அனைத்து விவசாயக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென்று நான் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளங்களில் எல்லாம் நீர் இல்லை. குளங்களை எல்லாம் ஆழப்படுத்த வேண்டும். நிலத்தடி நீரை ஆய்வு செய்யும் அதிகாரிகளை அங்கே அனுப்ப வேண்டும். அங்கேயுள்ள குளங்களில் எல்லாம் மிகப் பெரிய அளவிலான ஆய்வினைச் செய்து, ஆழ்குழாய்களை உடனடியாக அமைக்கும் பணியினையும் தொடங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள கடியப்பட்டணம், வாணியக்குடி, சைமன் காலனி, பெத்தேல்புரம், முகுந்தன் கிணறு, மாவிளை போன்ற இடங்களில் எல்லாம் குடிநீர் வசதி இல்லை. குடிநீர்த் தட்டுப்பாடு அங்கே மிக அதிகமாக இருக்கிறது. இந்த இடங்களில் எல்லாம் இன்றைக்குக் குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கப்படவில்லை. ஆரம்ப காலப் பணிகள் கூட இன்னும் தொடங்கப்படவில்லை. குழித்துறை ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 5 கோடி ரூபாய் அளவிலான திட்டமாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்றைக்குத் திட்டப் பணிகள் கிராமப் பகுதிகளில் எல்லாம் நடைபெற்று வரும் நிலையில் குளச்சல் பகுதியில் இன்னும் இத்தகைய பணிகள் தொடங்கப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, உடனடியாக குளச்சல் நகரத்திற்கும் திட்டப் பணிகளைத் தொடங்குவதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் தொலை தூரப்பார்வையோடு புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் அறிவிக்கிறார்கள். நல்ல தலைமுறையை உருவாக்க வேண்டுமென்ற நல்லுணர்வோடு செயல்பட்டு வழிவகுக்கிறவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இலவச சத்துணவுத் திட்டம், இலவச பாடப் புத்தகத் திட்டம், இலவச சீருடைத் திட்டம் போன்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் வலுவான வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் எண்ணத்தோடு, வளமான இளைய தலைமுறையை உருவாக்க வேண்டுமென்ற நல்ல உணர்வோடு படித்த பட்டதாரிகளை எடுத்துக் கொண்டாலும், பல்வேறு அரசு ஊழியர்களை எடுத்துக்கொண்டாலும், நாட்டின் பல்வேறு பிரிவு மக்களை எடுத்துக்கொண்டாலும்— அவர்களுடைய பிரச்சினைகளை எல்லாம் உணர்ந்து, அறிந்து அவர்களுக்குத் தேவையான திட்டங்களை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

படிக்கின்ற மாணவர்கள் எண்ணங்களை, பிரச்சினைகளை எண்ணிப் பார்த்து, அவற்றைத் தீர்க்கின்ற வகையில் இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டில் இருபது அம்சத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட திட்டங்கள் மூலம் நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கவும், அறிவாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் தொலை தூரப் பார்வையோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவர் அரசு உருவாக்கி, செயல்படுத்தி வருகின்றது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தையும் சுகாதாரத் திட்டத்தையும் இணைத்து ஒன்றுபடுத்தி, ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைந்த குழந்தை நல சத்துணவுத் திட்டத்தை சுமார் 400 கோடி ரூபாயில் உருவாக்கித்தர வேண்டுமென்ற முயற்சி இருந்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு அளப்பரிய முயற்சிகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி செய்து வருகிறது என்பதை நாமெல்லாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பான் இறைவன்" என்பது ஐதீகம். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கருவிலே இருக்கும் குழந்தைக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் நல்ல சத்துணவு அளிக்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இத்தகைய மனம் படைத்த மனித தெய்வத்தை, பொன்மனம் கொண்ட புரட்சித் தலைவரைப் போற்றுவதும் பாராட்டுவதும் வணங்குவதும் என்னுடைய கடமையாகும். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களை நாடே வணங்கிக் கொண்டிருக்கிறது, பாராட்டிக்கொண்டிருக்கிறது.

இலவச காலணித் திட்டத்தைப் பற்றி பலர் பல்வேறு கோணங்களில் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த இலவச காலணி வழங்கும் திட்டத்தினால் சிறுவர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது; கிராமங்களில் தொழில் பிரிவுகள் உருவாக நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆயிரக்கணக்கான செருப்புத் தைக்கும் தொழிலாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும் ஒரு சூழ்நிலையை இதனால் உருவாக்கியிருக்கிறோம். இந்தத் திட்டத்தினால் ஆண்டுக்கு 60 இலட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள் என்றால் எத்தகைய ஒரு பெரிய மாறுதலை, மாற்றத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தைப் பார்த்து சிலர் கொச்சைப் பேச்சுக்களைப் பேசி வருகிறார்கள். நான் அவர்களைப் பார்த்துச் சொல்ல விரும்புவதெல்லாம் உங்களுடைய ஆட்சியிலே இப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய முடியவில்லை; ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே நிறைவேற்றப்படுகின்ற இத்தகைய திட்டங்களுக்கு உபத்திரவம் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதுதான்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்த மட்டில், இன்றைக்குப் பெரிய மாவட்டங்களை எல்லாம் இரண்டாகவும், மூன்றாகவும், பிரித்து இந்தப் பிரிவினையின் மூலமாக நிர்வாகத் திறமையை உருவாக்கி,



ஆங்காங்கே இருக்கின்ற மக்களுக்கெல்லாம் நல்ல திட்டங்கள், திட்டத்தின் பயன்கள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் கருத்துக்கள் உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தந்தை பெரியார் பெயராலும், பேரறிஞர் அண்ணா பெயராலும், பெருந்தலைவர் காமராஜர் பெயராலும், பசும்பொன் முத்துராமலிங்கம் பெயராலும், சிதம்பரனார் பெயராலும் புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; நற்பணிகள் நடைபெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே நான்கு தாலுக்காக்கள்தான் இருக்கின்றன. தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தாலுக்காக்கள்தான் இருக்கின்றன. இந்த நான்கு தாலுக்காக்களிலும் மிகப் பெரிய தாலுக்காவாக இருப்பது கல்குளம் தாலுக்கா. ஆகவே, அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்து அரசாங்கத்திற்கு வந்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. கல்குளம் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும்போது குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று போராடிய சிதம்பரநாதன் பெயரை புதிதாக அமைகின்ற தாலுக்காவுக்குச் சூட்ட வேண்டுமென்றும் அது சிதம்பரநாதன் தாலுக்கா என்று அழைக்கப்பட வேண்டுமென்றும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குமரி மாவட்டத்தில் இரண்டு வருவாய்க் கோட்டங்களே இருக்கின்றன. நாகர்கோவில், பத்மநாபபுரம் என்பவை அந்த இரண்டு வருவாய்க் கோட்டங்கள். பத்மநாபபுரம் கோட்டத்தை எடுத்துக்கொண்டால் குமரி மாவட்டத்தில் இருக்கிற ஏழு தொகுதிகளில் ஐந்து தொகுதிகள் பத்மநாபபுரம் கோட்டத்தில் அடங்குகின்றன. ஆகவே, அந்தக் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் இன்றைக்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஆய்வுப் பணியில் இருக்கிற இராஜாக்கமங்கலம் அனல் மின் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் துறைமுகம் ஒரு இயற்கைத் துறைமுகம். கரைக்கு மிக அருகில் கப்பல்கள் வந்து செல்லக்கூடிய அளவில் அமைந்திருக்கிற ஒரு துறைமுகம். எனவே, குளச்சல் துறைமுகத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மாநில ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, வரவேற்று, அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

[1987 மார்ச் 3

***திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையின்மீது கருத்துக்களைச் சொல்லு கின்றபோது, ஆளுநர் உரையில் அனைத்துப் பிரச்சினை களுக்கும் வழி கண்டிட முடியும்; ஆலோசனை கூறிவிட முடியும் என்று நான் கூற விரும்பவில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் முன்னால் இருக்கக்கூடிய மிகப் பெரும் பிரச்சினை களுக்கு இந்த அரசு என்ன தீர்வு காணப்போகிறது என்பதை இந்த ஆளுநர் உரை சுட்டிக்காட்டுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அச்சத்திலிருந்து, தங்களுக்கு ஒரு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு உதவும் வகையில் ஆளுநர் உரை அமைந்திருக்கிறதா என்று பார்த்தால் அப்படி அமையவில்லை என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக இன்றைக்கு தமிழகத்தில் எல்லாவற்றையும்விட மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது அநாவது தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பட்டிருக்கிற பிரச் சினையாக இருப்பது வறட்சியும் அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய மிகப் பெரிய பாதிப்பும்தான். அதுதான் தமிழகத்தின் மக்க ளுக்கு முன்னால் நிற்கிறது. நேற்றைய தினம் கூட இங்கே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குடி நீர்ப் பிரச்சினை குறித்த திட்டங்களை அறிவித்தார்கள். இப் போது ஏற்பட்டிருக்கக் கூடிய வறட்சி நிலைமையில் குடிநீர்ப் பிரச்சினையை மட்டும் தீர்த்து விட்டால் முடியக் கூடிய இது பிரச்சினையாக இல்லை.

தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய தகவல்கள் மற்றும் செய்திகளைக் கேட்கின்ற வகையிலும் பல்வேறு மாவட்டங்களில் நான் பார்த்த அளவிலும் மிகப் பெரிய வறட்சியாகத்தான் இது இருக்கிறது. மாவட்டத் திற்கு மாவட்டம் ரூபாய் 50 கோடி, 100 கோடி, 200 கோடி என்ற அளவுக்கு விவசாயப் பயிர்கள் எல்லாம் நாசமாகி இருக் கின்றன. இப்படிப் பார்த்தால் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 20 மாவட்டங்களில் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் உணவுப் பயிர்களும், பொருட்களும் அழிந்து நாசமாகி இருக்கின்றன. வரப்போகிற சில மாதங்களில் கால் நடைகள்



1987 மார்ச் 3] [திரு. கோ. வீரய்யன்]

எல்லாம் அழிந்துபோகின்ற அபாய நிலைமை ஏற்பட்டு இருக் கிறது. அது ஆற்றுப் பாசனமாக இருந்தாலும், ஏரிப் பாசன மாக இருந்தாலும், இறவைப் பாசனமாக இருந்தாலும் ஒருசேர அனைத்து பாசனப் பகுதிகளும் பாதிக்கப்பட்டு மோச மான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமை காரணமாக மின்சார மோட்டார் களையும், ஆயில் இன்ஜின்களையும், உழவு மாடுகளையும் விவ சாயிகள் கேட்ட விலைக்கு விற்றுவிட்டு வேலை தேடி ஊரை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஏரிகளிலும், கேணிகளிலும் தண்ணீர் இல்லாமல் அவை வறண்டு கிடக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட அபாயகரமான நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. இவற்றில் பல ஆண்டுகளாகவே தொடர்ச்சியாக தமிழகத்தில் மழை இல்லாத பகுதிகளும் இருக்கின்றன. சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும், அதற்கும் முந்தைய ஆண்டும் தொடர்ச்சியாக வறட்சி ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமையில் இந்த ஆண்டும் மழை இல்லாமல் போனதால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அபாயகரமான சூழ்நிலை இருக்கின்ற நிலைமை யில் தமிழகத்து மக்களை இந்த அபாயத்திலிருந்து பாதுகாக் கின்ற அளவுக்கு ஆளுநர் உரையில் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தால், இந்த அபாயத்தை எடுத்துக் காட்டி அதற் கான நிவாரணத்திற்கு வழி காண்போம் என்ற வகையில் தமிழகத்து மக்களுக்கு நம்பிக்கையையும், உத்தரவாதத்தை யும் அளிக்கக் கூடிய முறையில் இந்த ஆளுநர் உரை அமைய வில்லை என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்று குறிப் பிட்டார்கள், குடிநீர் கொடுக்கும் வேலைகள் ஒரு போர்க்கால அடிப்படையில் துவக்கப்பட்டு இருக்கின்றன என்று. உதாரணத் திற்கு ஒன்றை நான் சொல்கிறேன். 2,413 கிணறுகளை ஆழப் படுத்துவதற்கு 1½ கோடி ரூபாயும், 2,161 புதிய ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளை அமைக்க 2 கோடி ரூபாயும் ஆக 4,574 கிணறுகளுக்கு 3½ கோடி ரூபாயும் கொடுக்கிறோம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் 50 வேலை களுக்கு மட்டும் தான் அனுமதி கொடுத்திருப்பதாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் பகிரங்கமாகவே அறிவித்து இருக்கிறார். தலைமைச் செயலாளர் அவர்களே 28 கோடி ரூபாய் குடிநீர் கொடுப்பதற்காகக் கொடுத்திருப்பதாக அறி வித்துவிட்டு அதிலே 5 கோடி ரூபாய்தான் வறட்சி நிவாரண வேலைகளுக்காக, குடிநீர் கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதுதான் மாநிலம் பூராவும் இருக்கக் கூடிய நிலைமை. 4,574 வேலைகளுக்கு அனுமதி கேட்டபோது 50 வேலைகளுக்கு மட்டும் அனுமதி

[திரு. கோ. வீரய்யன்] [1987 மார்ச் 3

கொடுத்துவிட்டு, அதாவது ரூபாய் 28 கோடி என்று அறிவித்து விட்டு, 5 கோடி மட்டுமே அந்த வேலைக்காகக் கொடுத்திருப்பது தான் போர்க்கால அடிப்படையில் நடக்கக் கூடிய வேலையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 28 கோடி ரூபாய் ஒதுக்கி 5 கோடி ரூபாய் தான் செலவு செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்போது நடைமுறைச் செலவில் எது, எது தேவையோ அவை பூராவும் செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே ஆத்தூர் பகுதியில் கொஞ்சம் வறட்சி இருக்கிறது. அங்கே 50 குழாய்க் கிணறுகள் தோண்டுகிற வேலையில் 35 குழாய்க் கிணறு வேலைகள் முடிந்து விட்டன. ஆகவே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்தால், அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டினால் அதற்கான நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

[முற்பகல் 11-40]

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 28 கோடியை அறிவித்து அதிலிருந்து 5 கோடி செலவழித்து இருப்பதாக நான் சொல்லவில்லை. நமது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அறிவித்திருக்கிறார்கள். அதைத் தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, பணத்தைக் கொண்டு போய் ஒரே இடத்திலே அப்படியே கொடுத்து விட முடியாது. செலவு ஆக ஆகத்தான் கொடுக்க முடியும். கொடுத்துக் கொண்டும் வருகிறோம். ஆகவே, அறிவிக்கப்பட்ட தொகையில் இதுவரை செலவு இவ்வளவு என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், செலவு ஆக ஆகத் தான் செலவழிக்க முடியும். குடும்பத்திலே செலவு செய்வது போலத்தான் அரசிலேயும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம் ஆத்தூரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் திருச்செங்கோடு சென்றிருந்தேன். அங்கே 200 அடிகளுக்கு மேல் கிணறுகளிலே தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. கிணறுகளை அப்படியே பாறை போட்டு மூடிக் கொண்டிருக்கிறார்கள், யாராவது தவறி விழுந்து விபத்தாகிவிடப் போகிறதே என்று. அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.



1987 மார்ச் 3] [திரு. கோ. வீரய்யன்]

அரசு வறட்சி நிலைமை ஏற்பட்டால் கூட உடனே அந்த மாவட்டத்திற்கு வறட்சி என்று அறிவிக்காத நிலைமையிலேயே இருக்கிறது. அதைத் தெரியாமல் செய்வதாக நான் கருதவில்லை. தெரிந்தே செய்கிறது என்றுதான் நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அந்த இடத்தில் வறட்சி என்று அறிவித்து விட்டால் நில வரி, கடன்கள் மற்ற வரிகளையெல்லாம் நிறுத்தி விட வேண்டி வரும் என்ற காரணத்தால் தான், ஏப்ரல், மே மாதங்களில் வறட்சி என்று அறிவித்தால் அதற்குள் வசூல்களை எல்லாம் முடித்துக் கொண்டு விடலாம் என்று கருதுகிறதோ அரசு என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்காமல், நிலைமையை இன்னும் தீவிரமாக்கி, தள்ளிக்கொண்டே போகிற முயற்சிதான் இது என்று நான் கூற விரும்புகிறேன்.

அதைப்போலத்தான் இந்த நிலைமை இவ்வளவு முற்றியதற்குப் பிறகும் மத்திய அரசிடமிருந்து உதவி கோருவதற்குக் காலம் கடத்தப்படுகிறது. நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கின்ற உறவு முறைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அது கணவன் மனைவி உறவு போலும், பூனை குட்டியைக் கவ்வுவது போலக் கவ்விச் செல்கிறது என்றும் பலவகையாகக் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு தமிழகத்திலே வறட்சி ஏற்பட்டபோது அதன் நிவாரணத்திற்காக 310 கோடி ரூபாயை மாநில அரசு கேட்டபோது, அதற்காக மைய அரசு 31.77 கோடியைத்தான் கொடுத்திருக்கிறது என்று ஆளுநர் உரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 310 கோடி ரூபாய் கேட்டதற்கு 31 கோடிதான் கொடுப்பது என்றால், இதுதான் பூனை, குட்டியைக் கவ்விச் செல்வது போன்ற உறவா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இதைப் பார்க்கும்போது நல்ல கணவன் மனைவி உறவாகக் கூடத் தெரியவில்லை. பொறுப்பற்ற ஒரு கணவன், தன் பிள்ளைகளும், மனைவியும் பட்டினி கிடக்கும்போது, மனைவி பிச்சை எடுக்கும்போது, கணவன் கையிலே பணத்தை வைத்துக் கொண்டு ஊர் சுற்றி வருவது போல், ஒரு பொறுப்பற்ற கணவனைப் போல்தான் இருக்கிறதே தவிர வேறு அல்ல என்பதைச் சென்ற ஆண்டு நடந்திருக்கக் கூடிய நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்து, தேவையான இடங்களை வறட்சிப் பகுதி என்று அறிவித்து விட வேண்டும். வறட்சிக்கு உரிய நிவாரணப் பணிகளைத் துவங்கிட வேண்டும். வறட்சிக் காலத்திலே மின்சார மோட்டார்களை உபயோகப்படுத்தாத விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். இப்படிப்பட்ட கொடுமையான நிலையில் போர்க்கால அடிப்படையில்

நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர நத்தை வேகத்தில் நடவடிக்கை எடுப்பது சரியல்ல. மிகத் துரிதமான வேகத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகத்தின் கிராமங்களிலே இருக்கக்கூடிய வறுமையைப் போக்குவதிலே இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதைப் பற்றி இந்த ஆளுநர் உரையிலே எதையும் பார்க்க முடியவில்லை. குறிப்பாக கிராமப் புறங்களிலே இருக்கிற கடுமையான வறுமையைப் போக்குவதற்கு—குறிப்பாக விவசாயக் கூலி வேலையை மட்டும் நம்பி வாழ்கின்ற 60 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களின் வறுமையைப் போக்குவதற்கு—என்ன செய்யப் போகிறீர்கள்? ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலத்தைக் கொடுத்து அதன் மூலம் அவன் வருவாயைப் பெருக்கி வாழ்வதற்கு முயற்சிகளைச் செய்யாமல் இருக்கிறீர்கள். அதற்கான வழியில், இருக்கின்ற நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தாமல் மாற்றி அமைக்காமல் இருக்கிறீர்கள். பினாமி நிலங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து எடுக்க சட்டம் போடவில்லை.

ஊரையும் மக்களையும் ஏமாற்றி, அரசையும் ஏமாற்றி பல பெரிய மனிதர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் அவர்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு பினாமி பெயரில் நிலங்களை வைத்திருக்கிறார்கள். தமிழகத்திலே மிகப் பெரிய அளவில் வறுமையும், ஏழ்மையும் ஏற்பட்டு பட்டினிக் கொடுமைக்கு விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஆட்பட்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில், அதிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான முறையில் நில உச்ச வரம்புச் சட்டம் திருந்தப்பட வேண்டும், பினாமி நிலங்கள் எடுக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கும், கோவில் நிலங்களைச் சாகுபடி செய்யும் குத்தகை சாயிகளுக்கும் நிலம் சொந்தமாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக் கும் பணத்தை வைத்து கோவில் நிர்வாகம் நடைபெறுகிற வகையில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் கிராமப்புற வறுமையைப் போக்குவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

காலணிகள் கொடுப்பதன் மூலமாக, அதிலே கிடைக்கும் வேலை வாய்ப்பின் மூலமாக, கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கக் கூடிய வேலையின்மையையும், நெருக்கடி நிலையையும் முழுமையாகத் தீர்த்துவிட முடியுமென்று அரசு எடுத்துக்காட்ட முயற்சிக்குமானால் அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதாகத்தான் அமையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதாக அமையாது. காலணிகள் கொடுப்பதைத் தவறு என்று சொல்லவில்லை. அதிலேகூட அரசியல் நோக்கத்தோடு திட்டமிடாதீர்கள் என்றுதான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.





இந்த அறிக்கையில் பள்ளி செல்லும் சிறார்களுக்கும், கிராமப் புற ஏழைப்பெண்களுக்கும் காலணிகள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படியானால் நகர்ப்புறங்களில் ஏழைப் பெண்கள் இல்லையென்று அரசு கருதுகிறதா? நகர்ப்புறங்களில் இருக்கிற ஏழைப் பெண்களுக்கு காலணி கொடுக்க வேண்டாம் என்று கருதுகிறீர்களா? அதைப்போல பள்ளி செல்லாத சிறார்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று கருதுகிறீர்களா? நீங்கள் கொடுக்கும்போது குழந்தைகள் அனைவருக்கும் காலணிகளைக் கொடுங்கள். கிராமப்புறம், நகர்ப்புறம் என்று வேறுபடுத்தாமல் ஏழைப் பெண்கள் அனைவருக்கும் அவற்றைக் கொடுங்கள். அப்படிக் கொடுத்தாலும், அதன் மூலம் வேலை வாய்ப்பை உண்டாக்கினாலும் இவற்றின் மூலமாக மட்டும் 40 ஆண்டுக்காலமாக ஏற்பட்டிருக்கின்ற கிராமப்புற வறுமையையும், பட்டினி, பஞ்ச நிலைமையையும் போக்கிவிட முடியும் என்ற ஒரு கருத்தை, ஒரு பிரமையை, தமிழக மக்களிடம் உண்டாக்க முயற்சிக்காதீர்கள். அது பலனளிக்காது என்றுதான் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல தமிழகத்தை வறட்சியிலிருந்து பாதுகாக்க எப்போதாவது பெய்யும் மழைத் தண்ணீரை சேமித்து வைக்கப் பயன்படும் ஏரிகள் முழுவதும் மேடிட்டு, பெரிய அளவிற்குத் தூர்ந்து இருக்கின்றன. அவற்றை சமுதாயக் காடுகள் வளர்க்கும் இடமாக நீங்கள் மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலையை மாற்றி தமிழகத்தில் இருக்கிற 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்தி, கிடைக்கக்கூடிய கொஞ்சம் மழைத் தண்ணீரையாவது சேமித்து வைக்கக் கூடிய முறையில் ஏற்பாடுகளைச் செய்வதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவிரி பாசனப் பகுதியில் இருக்கிற விவசாயிகளிடமிருந்து நெல்லை ஏகபோகக் கொள்முதல் மூலமாக வாங்குகிறீர்கள். அந்தக்காவிரி பாசன விவசாயிகளுக்குக் காவிரித் தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். இன்றைக்கு திருச்சி பகுதியிலே 58 கிலோ மூட்டை 150 ரூபாய்க்கு சாதாரணமாக விற்பனை ஆகிறது. ஆனால் காவிரி பாசனப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு 71 கிலோ மூட்டை 102 ரூபாய்க்கு அரசாங்கக் கொள்முதல் நிலையத்தில் விற்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருந்தாலும் அவர்களுக்குத் தண்ணீர் நிச்சயமாக கிடைக்குமென்ற நிலையில்லை. இந்த ஆண்டு விவசாயம் செய்திருக்கிறார்கள். தஞ்சையில் அதிகமாக உற்பத்தியாகிறது என்று சொன்னால் கண்ணம்பாடி திறந்ததினால் விவசாயம் நடைபெறவில்லை. கண்ணம்பாடி வழிந்ததினால்தான் தஞ்சைமாவட்டத்தில் விவசாயம் நடைபெற்று இருக்கிறது. அடுத்த ஆண்டு என்ன நிலையிருக்கும் என்பது இன்றைக்கும் கேள்விக்குறியாக இருந்து வருகிறது. எனவே, இந்தப் பிரச்

சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு காண வேண்டும். இல்லையென்றால் காவிரி பாசனப் பகுதியைப் பாதுகாக்க முடியாது. அப்படி பாதுகாக்கவில்லையென்றால் தமிழகம் முழுவதுமே ஒரு பஞ்சப் பிரதேசமாக மாறக்கூடிய அபாயம் ஏற்படும். எனவே, இந்தப் பிரச்சினையை காலத்தில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றைக்கு இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் இருக்கிற விவசாயிகளுக்கு நீங்கள் மானியம் என்ற பெயரால் குவிண்டாலுக்கு 35 ரூபாய் டோக்கனாக, உரமாகக் கொடுக்கிறீர்கள். அந்த உரம் முழுவதையும் விவசாயிகள் பயன்படுத்த முடியாமல் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய டோக்கனை 650 ரூபாய்க்கு— 350 ரூபாய் நஷ்டப்பட்டு - வெளியே டோக்கனாகவே விற்று விடுகிறார்கள். அந்தப் பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. எனவே, டோக்கனுக்குப் பதிலாக நீங்கள் ரொக்கமாக அவர்களுக்குக் கொடுக்க முயற்சியெடுக்க வேண்டும்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே குறிப்பாக நாகை நகரத்திலே கப்பல் போக்குவரத்து அந்தத் துறைமுகத்திற்கு வருவது ஆறுமாத காலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக அதை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்றையதினம் பட்டினி கிடக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிற வகையில் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரிப்பது என்பது இப்போது வரப்போகிற நிதியாண்டில் இல்லையென்று அறிக்கையிலிருந்து தெரிகிறது. அதுபற்றி அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, வரும் நிதியாண்டிலாவது தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து நாகையைத் தலைநகரமாகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டத்தை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு உரிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் கடைசியாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஆளுநர் உரையிலே கல்வியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கல்வி மானியம் வருகிறபோது அதிகமாக அதைப்பற்றி பேசலாம் என்றாலும், சுருக்கமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னை மாநகரத்திலே இருக்கிற அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் இருக்கக்கூடிய ஊழியர்கள் 7 ஆண்டுக்காலமாக சஸ்பென்சன் செய்யப்பட்டிருக்கிறார்கள், என்று சொல்லப்படுகிறது. அதனுடைய வரவு-செலவுகளில், நிதி நிர்வாக ஏற்பாடுகளில் பெருமளவு மோசடிகளும் ஊழல்களும் நடந்திருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பல்கலைக் கழகம் ஒரு தன்னாட்சி நிறுவனம்





என்று சொன்னாலும்கூட, இந்த அவையின் முன் இதனுடைய கணக்குகளை வைப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கடைசியாக ஒரு விளக்கத்தை அரசாங்கத்திடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கிற வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய டாக்டர் சமரசம் அவர்களுடைய பேச்சுக்குத் துணையாக அதை வலியுறுத்தி ஒரு சில கருத்துக்களைப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றையதினம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது விவாதம் துவங்கியபோது, எதிர்க் கட்சியிலே இருக்கிற, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள், அவர்களுடைய தனித்தன்மையான பாணியில் இங்கே பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்து உங்களுக்கு நன்றாகத் தெரியும், அதை நான் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காரணம் பின்னாலே நான் சொல்கிற கருத்துக்களோடு இணைத்துப் பார்க்க அது மிகவும் உதவியாக இருக்கும் என்பதால்.

வெளிச்சம் இல்லாத விளக்காக, விளைச்சல் இல்லாத நிலமாக, மணம் வீசாத மலராக உள்ளது எனவும், கச்சேரி முடிந்த பிறகு, மங்களம் பாடுவதைப் போல இருக்கிறது என்றும், அடுத்ததாக அத்தனையும் காற்றிலே கரைந்துவிட்டது என்றும் இங்கே அழகாகச் சொன்னார்கள். அவர் ஒரு வழக்கறிஞர். பார்லிமெண்டரி முறைகளைப் பற்றி நன்றாகப் படித்துக்கொண்டு வருகிறவர். இத்தனையையும் சொல்லிவிட்டு, கடைசியில், அத்தனையும் காற்றில் கரைந்துவிட்டது என்று சொன்னார். காற்றிலே கரைந்துவிடுவது என்றால் எப்படி? காற்றிலே கொண்டு செல்லப்பட்டுவிட்டது என்று சொன்னாலும்கூட பரவாயில்லை. தண்ணீரிலே கரைந்து விட்டது, அல்லது ஆற்றிலே கரைந்து விட்டது என்றுகூட சொல்லலாம். ஆனால் அவர் இங்கே சொன்ன அந்தக் கருத்துக்கள், இந்த அரசு மீது அடுக்கு மொழியிலே பல குற்றங்களைச் சுமத்த வேண்டும், அதைப் பத்திரிகையிலே உள்ள அத்தனை பேர்களும முதல் பக்கத்திலே போட்டு, விளம்பரம் தரவேண்டும் என்ற அந்த எண்ணத்திலே சொன்னதாகத் தான், எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் கருதுகிறது. நானும் கருதுகிறேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், இன்னமும் அவரைச் சார்ந்திருக்கிற, இந்த அரசு மீது சொல்லிக் கொண்டிருக்கிற குற்றங்களுக்குச் சொந்தக்காரர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், 1980 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதிக்குப் பிறகு நான் இந்த மன்றத்தில் உறுப்பினராக வந்தவன். அப்போது புரட்சித் தலைவர் அவர்கள், தேர்தல் காலத்திலே சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்ற முடியுமா என்று எதிர்த்தரப்பிலே இருந்தவர்கள் கேட்டபோது, புரட்சித் தலைவர் அவர்கள், விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்கிறேன், ரத்து செய்கிறேன் என்று சொன்னார்கள். தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், விவசாயிகளுக்குச் சொன்ன சொல்லை காப்பாற்றுகிற வகையில் விவசாயிகள் கடனை ஓரளவு ரத்து செய்தார்கள்.

அடுத்தது, இந்த மாமன்றத்திலே தன்னிறைவுத் திட்டம் என்ற மிகப் பெரிய நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தபோது, நேற்றைய தினம் பேசுகிற போது, இது விளைச்சல் இல்லாத நிலம், இது கரைந்துபோன திட்டம் என்று எல்லாம் சொல்லிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும், அவர் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் இங்கே உட்கார்ந்து கொண்டு இது ஒரு திட்டமா, இது நடைபெறுமா என்று எல்லாம் கேலியும் கிண்டலும் பேசினார்கள். அப்போதும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுத்துப் பாருங்கள் என்று இங்கே சொன்னார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தைத் தமிழகத்தில் செயற்படுத்தினார்கள். கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும், பேரூராட்சிகள் தோறும் அந்தத் திட்டத்தை மக்களுக்குப் பயன்படும் திட்டமாக வெற்றிகரமாக நடத்தினார்கள். அது நல்ல திட்டமா, இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களிடமிருந்து கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்திலே திடீர் என்று ஒரு நாள் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் இருந்தபோது சத்துணவுத் திட்டத்தை அறிமுகம் செய்தார்கள். அந்த நேரத்திலே இதற்கும் வசை மாரி பொழிந்தார்கள். இந்த மன்றத்தில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் சத்துணவுத் திட்டத்தை இது ஒரு திட்டமா, இது இந்த நாட்டில் நடக்குமா, என்று கேட்டதோடு மட்டும் அல்லாமல் இந்தத் திட்டத்தினால் நாட்டு மக்களைப் பிச்சை எடுக்க வைத்து விட்டார்கள் என்று இங்கே உட்கார்ந்து கொண்டு மிகவும் கேவலமாகப் பேசினார்கள். ஆனால், அந்தத் திட்டத்தையும் இந்தத் தமிழ்நாட்டில் இன்றைய தினம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் வெற்றிகரமாக நிறைவேற்றிக்





கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு எதிர் வரிசையில் இருப்பவர்களும் நாங்களும் இந்தத்திட்டத்தை நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்று ஒரு கால கட்டத்திலே சொன்னார்கள். இன்றைக்கு அதிலே திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற யோசனையையும் தந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சியில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று சொல்ல விரும்புகிறாரா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அரசு தாய்மார்களுக்கு வேலை வாய்ப்பு தரும் என்று சொன்னது. வேலை வாய்ப்பையும் தநதார்கள். முதியோர்களுக்கு உதவித் தொகை கூட்டித் தரப்படும், பாது காக்கப்படும் என்று சொன்னார்கள். அதையும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் செய்தார்கள். ஆனால், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு ஏனோ தெரியவில்லை, இவை எல்லாம் திட்டமாக தெரியவில்லை. இவை போன்ற திட்டங்களை எல்லாம் 27–2–1987 அன்று இந்த மாமன்றத்தில் உரை நிகழ்த்திய மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இப்படித்தான் ஒவ்வொரு ஆண்டும் இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் உரை ஆற்றியதற்குப் பின்னாலேதான் பட்ஜெட் என்ற நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து அந்த, அந்த ஆண்டுகளின் திட்டங்களை இங்கே நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். அந்த வகையிலேதான் இந்த ஆண்டு 27–2–1987 அன்று இங்கே நமக்குத் தந்த ஆளுநர் உரையில் சில கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இந்தக் கருத்துக்களையெல்லாம் பார்த்த பின்பும் கடந்த காலத்தில் நிறைவேற்றிய சில திட்டங்களை எல்லாம் மறந்து விட்டு இங்கே ஏளனம் பேசுகிறார்கள்.

அதோடு மட்டும் அல்லாமல் முதியோர்களுக்கு உடுக்க உடை தரப்படும் என்று அறிவித்தார்கள். அப்போதும் இந்த மன்றத்திலே கேவலமாகத்தான் பேசினார்கள். ஆனால் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதுவும் அவ்வாறே நிறைவேற்றப்பட்டது. மிகமிகத் தாழ்த்தப்பட்ட மக்கள் இதிலே பலன் அடைந்தார்கள்.

இன்னமும் சொல்கிறேன், 1980க்குப் பிறகுதான் தமிழகத்திலே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் இதய தெய்வம் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் கூட்டினார்கள். அன்றைக்கும் இதே வசைமாரியைத்

தான் பொழிந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் திட்டியதை எல்லாம் கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையை முறையாகச் செய்தார்கள்.

(நண்பகல் 12.00)

அதோடு மட்டும் அல்ல, தமிழ், தமிழ் என்று சொல்லுகிறார்கள், பேசிக் கொண்டே இருக்கிறார்கள். இன்று நேற்று அல்ல, பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு 7 ஆண்டுக் காலம் இந்தச் செங்கோலை கையில் வைத்துக்கொண்டு இருந்தவர்கள்தான் இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு சொல்லுகிறார்கள். அந்த 7 ஆண்டுக் காலத்தில் தமிழ் உணர்வு, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் என்ற அந்த வரலாறுகளை எல்லாம் நீங்கள் மறந்து விட்டீர்களோ என்பதுதான் என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிற சந்தேகம். அப்படிப்பட்டத் தமிழ் வரலாற்றை, உலக அளவில் பேசப்படுகிற அளவு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சையில் நிறுவியதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தான். இது நல்ல திட்டமில்லையா ? அதே நேரத்தில் உலக அளவில் இந்தத் தமிழ் வளர்வதற்காக மதுரையில் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கிக் காட்டியிருக்கிறார்களே, இது போன்ற திட்டங்கள் எல்லாம் நல்ல திட்டங்கள் இல்லையா? இன்னும்கூட சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னும் எத்தனையோ ஊராட்சி ஒன்றியங்களில் நீண்டகாலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், எங்களை அரசு ஊழியர்களாக ஆக்குங்கள் என்று 18 ஆண்டுக் காலமாகப் போராடினார்கள். சிறை சென்றார்கள். 7 ஆண்டுக் காலம் ஆட்சியிலே இருந்தவர்கள், அதற்கு முன்னாலே இருந்தவர்கள், ஆகியவர்களை நான் கேட்கிறேன், 18 ஆண்டுக் கால கோரிக்கையை நிறைவேற்றினார்களா என்றால் இல்லை. ஆனால், கவர்னர் ஆற்றிய உரையின், அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அத்தனை பேர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், கல்லூரியிலே பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கு கவரிலே வைத்துக் கொடுத்து அந்தக் கவரைப் பிரித்துக் கூட பார்க்கக்கூடாது என்று மேனேஜ்மெண்ட்கள் மிரட்டிய காட்சியைக் கண்ட புரட்சித் தலைவர், பட்டதாரி ஆசிரியர்களுக்கு காசோலைகளை வழங்குகின்ற உத்தரவை பிறப்பித்தது இந்த ஆட்சியில்தான். இது நல்ல திட்டமில்லையா? இப்படி நான் எத்தனையோ திட்டங்களைச் சொல்ல முடியும்.



வருவாய்த் துறையை எடுத்துக்கொண்டால், கணக்கு எங்கே இருக்கிறது என்று தெரியாது. கணக்குப் புத்தகம் யார் வைத்திருக்கிறார்கள் என்று புரியாது. யார் முன்சீப் என்று புரியாது. தாசில்தாரைக் கேட்டால் டி.ஆர்.ஓ.-வைக் கேட்க வேண்டும் என்பார்கள். ஆனால், எதுவுமே புரியாது. அப்படிப்பட்ட இருட்டடிப்பு வேதனையில், துணிச்சலோடு கர்ண ஒழிப்பைக் கொண்டு வந்து, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை, உறுதியாக, ஊக்கமாகக் கொண்டுவந்த ஒப்பற்ற தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஆவார்கள். இப்படியே நான் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கும், இன்னமும் மணிக் கணக்கிலே இந்த ஆட்சி செய்திருக்கக் கூடிய சாதனைகளை என்னால் சொல்ல முடியும். ஆனால், இங்கே நேரம் குறைவாக இருப்பதனால், நான் இத்தோடு இந்தச் சாதனைகளைச் சொல்லி, இந்த ஆட்சி நல்ல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று வேண்டுமென்றால் ரகுமான்கான் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். கிராமப் புறங்களில், நான் இளமையாக இருந்தபோது ராமாயணம் படிப்பார்கள். ஊர் மக்கள் எல்லாம் சாவடிகளிலே உட்கார்ந்துகொண்டு ராமாயணம் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ராமர் பட்டாபிஷேகம் நடக்கும். பக்கத்திலே இருப்பவர் வெளியே வந்து சீதைக்குக் கணவன் யார் என்று கேட்பார். இது என்னடா கேள்வி, பட்டாபிஷேகம் வரை பார்த்தாய். கடைசியிலே சீதைக்குக் கணவன் யார் என்று நீ தெரிந்து கொள்ளவில்லையா என்று கேட்பார், பக்கத்திலே இருப்பவர். இதுபோன்றுதான் படித்தவர், நல்ல ஒரு வழக்கறிஞர், இங்கே இந்த சட்டமன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற நல்ல திட்டங்களை எல்லாம் மறந்துவிட்டு, இங்கே எதுவுமே செய்யப்படவில்லை, எதுவுமே செய்யப்படவில்லை என்று...(மணியடிக்கப்பெற்றது).

*திரு. கே. சுப்பரராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதத்திற்கு முன் வைக்கப்பட்டிருக்கின்ற கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

இங்கே எதிர் தரப்பிலே இருக்கக் கூடிய பல்வேறு நண்பர்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகின்றபோது மிகுந்த வேதனையோடு, இதிலே தேவையான விஷயங்களைத் தவிர, தேவையற்ற விஷயங்கள் அதிகமாக இருப்பதாக வருத்தப்பட்டுக் கொண்டார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட வருத்தத்திற்கு நான் என்னை ஆட்படுத்திக்கொள்ளத் தயாராகயில்லை. பொதுவாகவே இந்த ஆட்சியில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொன்றிலேயும் தமிழகத்திலே இப்போது எவ்வளவு கடுமையான வறட்சி இருக்கிறதோ, அத்தகைய வறட்சி இருக்கிறது. இந்த ஆட்சியின் சாதனைகளிலும், கொள்கைகளிலும் வறட்சியே இருக்கிறது என்பதன் எக்ஸ்ரே காப்பி தான் இந்த கவர்னர் உரை. ஆகவே கவர்னர் உரையிலே எப்படி அது முழுமையாகவுள்ளது என்பது தான் எங்களுடைய விவாதத்திற்குரிய பிரச்சினை ஆகும். இங்கே நான் அடிப்படையாக கேட்க விரும்புவது, ஏதோ எதிர் தரப்பு என்பதனாலே சிலபல விஷயங்களைக் குத்திக் காட்டவேண்டுமென்பதற்காக அல்ல. மௌனமாக இருக்கின்ற, பேசாத பல்வேறு உறுப்பினர்கள், இந்த அவையில் இடம் பெறாத பொது மக்களின் கருத்துக்களை சரி சமமாக பிரதிபலிக்கின்ற கடமை எதிர் தரப்பிற்கு உண்டு. அந்த அடிப்படையிலே இங்கே நான் குறிப்பிட விரும்புவது, 5 ஆண்டு காலத்திற்கு தமிழகத்தை நிர்வகிக்கின்ற அதிகாரத்தை மக்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்து இருக்கிறார்கள் என்றால், அதனுடைய உட்பொருள் என்ன ? தமிழகத்தில் தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை, மிகச் சரியாக மதிப்பீடு செய்து, அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய பொருத்தமான மாற்று வழி முறைகளை உருவாக்குகிற பொறுப்பு இந்த ஆட்சிக்கு உண்டு. ஆனால் அத்தகைய கருத்துக்கள் இருக்கின்றனவா ?

நான் இங்கே அழுத்தம் திருத்தமாக கேட்க விரும்புகிறேன். வறட்சியைப் பற்றி கவர்னர் உரையில் சில பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வறட்சி, இந்த வருடம் தான் வறட்சியா ? தொடர்ந்து 5 ஆண்டுக்காலமாக தமிழ்நாட்டில் வறட்சி. வறட்சி மட்டுமா தமிழ்நாட்டில் நிலவிக் கொண்டிருக்கிறது? இந்த வறட்சி தொடர்ந்து இருப்பதால், நீடிப்பதால், இதைத் தீர்க்க நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ? வறட்சிக்கு நிவாரணம் வழங்குகின்றோம் என்ற பெயரில் யானைப் பசிக்கு சில சோளப் பொரிகளைப் போடுகிறீர்கள். அவ்வளவு தான். ஒரு பொறுப்புள்ள அரசிற்கு இந்த வறட்சியைச் சந்திப்பதில் இரட்டை கடமைகள் இருக்கின்றன. ஒன்று, வறட்சி நிவாரணம் அளிப்பது, இன்னொன்று, வறட்சியை நிரந்தரமாக ஒழிப்பது. நிவாரணம் அளிப்பதிலும் நீங்கள் தேர்ச்சியில்லை. நிரந்தரமாக ஒழிப்பதற்கும் உங்களுக்குத் திட்டம் இல்லை. பின் என்ன ஆட்சியினுடைய பொறுப்புணர்ச்சி என்று கேட்க விரும்புகிறேன். மாநில ஆட்சி என்பது 'பிரச்சனை' 'வறட்சி' என்று கூக்குரலிடுவதற்கா ? இதுதான் அமைச்சர்களின் பொறுப்பா? வறட்சி—தொடர்ந்து வறட்சி. Famine Code— என்ன சொல்கிறது? பஞ்ச



சட்டத் தொகுப்பு என்ன சொல்கிறது ? தொடர்ந்து வறட்சி ஏற்பட்டால், மக்கள் குடிபெயர்ந்து வேறு இடங்களை நாடிச் சென்றால், ஆடு மாடுகளுக்கு தீனி இல்லையென்றால், அந்தப் பகுதிகளை பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்றல்லவா சொல்கிறது. தமிழ்நாட்டில் குறிப்பாக சில மாவட்டங்களை பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டும். ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது ? பஞ்சப் பிரதேசம் என்று அறிவித்துவிட்டால், ஃப்ரீ ரேஷன் கார்டு கொடுக்க வேண்டுமென்றா ? வேறு பல சலுகைகளை கொடுக்க வேண்டுமே, அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவா ? பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க மறுக்கிறீர்கள். பிரச்சனையிலிருந்து நழுவி ஓடுகிறீர்கள். பிரச்சனையிலிருந்து தப்பித்துக்கொள்கிறீர்களே தவிர பிரச்சனைக்கு தீர்வு அளிக்கின்ற தெளிவு இந்த கவர்னர் உரையில் இல்லை என்பதுதான் என்னுடைய அழுத்தமான குற்றச்சாட்டாகும். இங்கே நான் முன் வைக்க விரும்புவது, நம்முடைய மரியாதைக்குரிய குடிநீர் வழங்குகின்ற அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். பத்திரிகையை படித்தபோது எனக்கே, அப்படியே புல்லரித்துப் போய்விட்டது. இவ்வளவு உஷார் தன்மையுடன் அரசு இருக்கிறதா, இயங்குகிறதா என்று. என்ன சொல்கிறார்கள் ? கலெக்டர்களுக்கு ஆணையிட்டிருக்கிறது அரசு, குடிநீருக்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று. படிக்க ரொம்ப அற்புதமாக இருக்கிறது. வாழ்க்கை அனுபவம் அப்படி இல்லையே. நான் கேட்க விரும்புகிறேன். இந்த மாநில அரசு இந்த வறட்சியில் மாநில மக்களின் குடிநீர்த் தேவையை எப்படி மதிப்பீடு செய்திருக்கிறார்கள் ? தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து மெம்பர், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர், நகர மன்ற உறுப்பினர், நகர மன்றத் தலைவர் மக்களிடமிருந்து பெறப்பட்ட தண்ணீர் கோரிக்கைகளை சேகரித்துப் பெற்று, அதன் அடிப்படையில் நீங்கள் பணம் ஒதுக்கி இருக்கிறீர்களா? 28 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இதுக்குள்ளே தொட்டுக்கோ, தொடைச்சிக்கோ என்று முடித்துக்கொள்ள ஒதுக்கியிருக்கிறீர்களா என்பது தான் என்னுடைய கேள்வி. ஆக நிவாரணம் என்பது முழுமை அல்ல. நிவாரணம் என்பது தேவையை மதிப்பிட்டு உருவாக்கப்பட்டதும் அல்ல என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நிவாரண நடவடிக்கை முழுமையில்லை என்று குறிப்பிடுகின்ற அதே நேரத்தில், நிரந்தரத் தீர்வை பற்றி கிஞ்சித்தும் ஒரு மயிரிழையாவது சிந்தித்தீர்களா ? இல்லையே. எப்படி தீரும் வறட்சி ? வருடந்தோரும் வறட்சிக்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவு ? வருடந்தோரும் தொடர்ந்து வறட்சி நிவாரணம், வறட்சி நிவராணம் தானா ? வறட்சியிலிருந்து நிரந்தரத் தீர்வுக்கு என்ன வழி என்பதை இந்த மாநில அரசு கட்டாயமாக சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து வறட்சி ஏற்படுவது மட்டுமல்ல. சில பல அறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நிலத்தடி நீர் கீழிறங்கிக்கொண்டே இருக்கிறது. பருவ மழை தவறிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால், தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் பாலைவனமாகப் போய்விடும் என்று அறிஞர்கள் சிலர் எச்சரித்தார்களே, இந்த அரசின் பார்வையிலே அது படவில்லையா ? அப்படி எச்சரித்திருக் கிறார்கள் என்றால் நிலத்தடி நீர் கீழிறங்குவதும், பருவ மழை குறைந்து கொண்டிருப்பதும் தானே அடிப்படை பிரச்சினை தமிழ்நாட்டிற்கு ? ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் ? ஒரு காவடி கட்டிப் பாமர மக்களின் தற்காலிக உணர்ச்சிகளை சரிகட்டி அவர்களைத் திருப்தி படுத்துகிறீர்களே தவிர. நிரந்தரமாக, நீண்டகால கண்ணோட்டத்தோடு, தமிழ்நாட்டின் தேவையை பூர்த்தியாக்குகின்ற திட்டம் பற்றிய சிந்தனையைச செய்யவில்லை. செருப்பு வழங்குவது பற்றி நான்...............

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்—குறுக்கிட வேண்டாம் என்று தான் நினைத்தேன்—நிரந்தர சிந்தனை இல்லை ; நிரந்தர சிந்தனை உங்களுக்கு இல்லை என்று சொல் கிறார்கள். நிரந்தர சிந்தனையை அவர்கள் விளக்கிச் சொல் வார்களானால் பொருத்தமாக இருக்கும். இன்னொன்று சொன்னார்கள். கிரவுண்ட் வாட்டர் டேபுளுக்கு கீழே போய்க் கொண்டிருக்கிறது, மழை பெய்யவில்லை, நிரந்தர சிந்தனை இல்லை என்று சொன்னார்கள். மழையைக் கொண்டு வருவ தற்கும், தண்ணீருடைய மட்டத்தை உயர்த்துவதற்கும் மேலான நிரந்தர சிந்தனை என்ன என்பதை அவரே வெளிப் படுத்த வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, அவசரப்பட்டு குறுக்கிட்டுவிட்டார். இங்கே அமைச்சர் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, அதை ஒரு சவாலாக எடுத்துக்கொள்கிறேன். தேசீய விடுதலை இயக்க காலத்திலிருந்து தொடர்ந்து வலியுறுத்துகிற ஒரு கோரிக்கை—கங்கை—காவேரி இணைப்பு.

[பிற்பகல் 12–10]

கங்கை—காவேரி இணைக்கப்படுகிறபோதுதான் வடக்கே வெள்ளச் சேதமும், தெற்கே.... (குறுக்கீடு) நான் பேசி முடித்ததற்குப் பிறகு அமைச்சர் தலையிடுவதுதான் பொருத்த மாக இருக்கும். (குறுக்கீடு) பேசி முடிப்பதற்கு முன்பேயே குறுக்கிடுவது, என்னுடைய கருத்தைச் சிதைப்பதற்கு துணை நிற்பதாக அமையும்.



ஆகவே, நான் இங்கே குறிப்பிட விரும்புவது கங்கை—காவேரி இணைக்கப்படவேண்டும். வட மாநிலம் முழுவதும் வெள்ளத்தால் வருடந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பேற்படுகிறது. தென் மாநிலங்களில் வறட்சிக்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கவேண்டியுள்ளது. 40 ஆண்டுக் காலத்தில் குறைந்த பட்சம் வருடத்திற்கு 500 கோடி என்று கோட்டால் கூட, 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகி இருக்கும். ஆகவே, இது 7 ஆயிரம் கோடி என்று முன்னர் மதிப்பிட்டார்கள். மேலும் ஒரு 5 ஆயிரம் கோடி என்றாலும் கூட, 12 ஆயிரம், 15 ஆயிரம் கோடிக்குள் கங்கை—காவேரி இணைப்பு சாத்தியம் என்று சர்வதேசப் பொறியாளர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு இந்தப் பேரவையில் தீர்மானம் ஒன்றை அண்ணா தி.மு.க. அரசு முன் மொழிந்து நிறைவேற்றுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தவறான கருத்தைச் சொல்லிவிட்டு, தவறாக வாதாடக்கூடாது. எந்த சர்வதேசப் பொறியாளரும் சொல்லவில்லை. இது நடக்காத காரியம் என்றுதான் எல்லோருமே சொல்லிவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். கங்கை—காவேரி இணைப்பது நடக்கமுடியாத ஒரு காரியம். கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கே இவ்வளவு சங்கடம் இருக்கும்போது, கங்கையிலிருந்து கொண்டு வரச் சொல்வது, ஏட்டுச் சுரைக்காயை விட மோசமானது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மிக வருந்துகிறேன். ஒரு அமைச்சரின் பதில் இவ்வளவு வறட்சியாக இருக்கக்கூடாது என்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன்......

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பின ருடைய பேச்சில் தண்ணீர் நிறைய நிறைந்து இருக்கிறது.

**திரு. கே சுப்பராயன் :** இப்படிப் பேசுவதற்கு வேண்டு மானால் அமைச்சர் செயல்படலாமே தவிர, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவரால் செயல்பட இயலாது என்பதற்குத்தான் இது பதிலாக அமையும் என்பதைத் தெரி வித்துக் கொண்டு, நான் இங்கே குறிப்பிட விரும்புவது—நான் சவாலாக மறுபடியும் சொல்கிறேன்—கங்கை—காவேரி இணைப்பு சாத்தியம் என்பதை மத்திய அரசும் ஒப்புக்கொண் டிருக்கிறது. ஆனால், அதற்குப் போதுமான நிதி ஒதுக்கப் பணம் இல்லை என்பதால்தான் கடந்த ராஜ்யசபைக் கூட்டத் திலே கூட இது நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பொறுப் பிலே இருக்கிறவர்கள் உணர்ந்து சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பொறுப்பிலே இருக்கிறவர்கள் உணர்ந்து மட்டும் அல்ல ; தெரிந்தும், மற்றவர்களிடமிருந்து படித்தும்தான் சொல்கிறோம். கங்கையிலிருந்து காவிரிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு சாத்தியம் இல்லை. காரணம், கங்கை ஓடிக் கொண்டிருப்பது, மிகவும் கீழே, பூமிக்குக் கீழே இருக்கிறது. பூமி மட்டம் பார்க்கிறபோது, காவிரியை விட மிகவும் கீழே இருக்கிறது. அதை மேலே கொண்டு வருவதற்கு மின்சாரத்தை வைத்து தண்ணீரை இறைக்க வேண்டும். எவ்வளவு மின்சாரத்தை வைத்து தண்ணீரை இறைக்க வேண்டும் என்று கணக்குப் போட்டார்கள். இந்தியா முழுவதும் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை பயன்படுத்தினால்கூட, அது போதாது என்று தீர்மானித்து விட்டார்கள். இவ்வளவு தூரம் வந்ததற்குப் பிறகு, படித்துவிட்டு இருக்கிற என்னைப் போய் படிக்கவில்லை என்று சொல்வது—பரவாயில்லை, முழுக்க விவரம் தெரிந்தவர் சொல்லும்போது கேட்டுக்கொள்ள வேண்டியது தான்.

**திரு. கே. சுப்பராயன் :** 1974-லே தஸ்தூர் அவர்கள், போட்ட திட்டத்திலேயே அவர் முழுக்க பூமலைத் திட்டம் என்று போட்டு, இது காரியார்த்தமான சாத்தியம் என்பதையும், இதை நிறைவேற்ற 7,000 கோடி செலவாகும் என்றும் கூறியுள்ளார். சோவியத் யூனியனிலேகூட டான் நதியும், வால்கா நதியும் இணைக்கப்பட்டிருக்கிறது. நமது நதியை விட 2 மடங்கு பெரிய நதிகள் இணைக்கப்பட்டிருப்பதால் இந்த நதியும் சாத்தியம் என்பதும், ஏற்றத்தில் பம்பிங் செய்வதற்குரிய நவீன கண்டுபிடிப்புகளும் இருக்கின்றன என்பதையும் நிரூபித்து இருக்கிற இன்றைய நிலையில், அவற்றைத் திட்ட ரீதியாக ஒப்புக்கொண்டு பொருளாதார ரீதியாக மத்திய அரசு மறுத்திருக்கிற நேரத்தில், இது காரிய சாத்தியம் இல்லை என்கிற வாதம் தவறானது என்பதை அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற, இந்தப் பேரவையில் ஒரு தீர்மானத்தை முன் மொழிய வேண்டும், நிறைவேற்ற வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, பல்வேறு பாசனத் திட்டங்களை தமிழ் நாட்டில் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. மேற்கு மலைத்தொடரில் பல ஆறுகள் வீணாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்று நீண்டகாலமாக நாம் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, புன்னம்புழா—பாண்டியாறு திட்டம். அதே போல், பரம்பிக்குளம்—ஆளியாறுத் திட்டத்தை ஸ்ட்ரெங்தன் செய்வதற்குரிய சில திட்டங்கள். இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதன் மூலமாக பாசனத்தின் குறைந்தபட்சத் தேவைகளையும் நிறைவேற்ற முடியும் என்று நா இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.



குடிநீர்ப் பிரச்சினை என்ற நிலையில், கிராமப்புறங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருப்பதால், அதனுடைய தேவையினை நிறைவு செய்கிற அளவில், லாரிகள் மூலமாக சப்ளை செய்ய வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, காடுகள் தொடர்ந்து அழிக்கப்படுகின்றன. காடுகளும், வனங்களும் அழிக்கப்படுவது, மழையின் வளத்தை வெகுவாகப் பாதித்திருக்கிறது என்பதையும் பல்வேறு ஆதாரங்களோடு குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, இவற்றைப் பற்றி தெளிந்த ஞானத்தோடு, இந்த சிந்தனைகளை முன் வைப்பதற்குப் பதிலாக நகப் பாலிஷ் போட்டு இருக்கிறீர்கள். நடக்க முடியாத நோயாளிக்கு நகப் பாலிஷ் போடுவது ஒன்றும் நல்ல மருத்துவம் இல்லை. ஆனால், நீங்கள் என்ன செய்கிறீர்கள் ? அதைத்தான் செய்திருக்கிறீர்கள். அது தமிழ்நாட்டின் தேவையை ஒரு போதும் பூர்த்தி ஆக்காது என்பதை குறிப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நிறைவேறாத பல திட்டங்கள். சொன்னால் வருத்தப்படுவீர்கள். இங்கே திட்ட நிறைவேற்றம் என்பது எப்படி இருக்கிறது ? ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகளிலேயும், போடுகிற திட்டங்கள் எப்படி இருக்கும் என்பதற்காகத்தான். சில பல திட்டங்களைப் போட்டீர்கள். எங்கள் கோவை மாவட்டத்திலே பொள்ளாச்சிக்கு ஒரு தண்ணீர்த் திட்டம் போட்டீர்கள். அந்தத் தண்ணீர்த் திட்டம் போட்டு நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. நான்கு வருடங்கள் ஆகியும்கூட, பொள்ளாச்சிக்கு தண்ணீர் வழங்கவில்லை. அதற்குப்பெயர் என்ன தெரியுமா ? ஆச்சரியப்படுவீர்கள். அதற்குப் பெயரும், Immediate Water Scheme. Immediate Water Scheme 4 வருடம் ஆகியும் நடக்கவில்லை. இம்மீடியட் என்றால் காலதாமதமா உங்கள் அகராதியில் ? Immediate Scheme போட்டீர்களே, நான்கு வருடங்கள் ஆகியும் பொள்ளாச்சிக்கு நிறைவேற்றப்படவில்லையே, ஒருவேளை பொள்ளாச்சியிலே தி.மு.க. சேர்மன் ஆகிவிட்டார் என்று விக்டிமைஸ் பண்ணுவதற்காக அதை துருப்புச் சீட்டாக ஆக்கலாம் என்று விட்டுவிட்டீர்களா? என்ன காரணம்? ஏன் நிறைவேற்றப்படவில்லை? திருப்பூர் இரண்டாவது குடிநீர் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அடிக்கல் போடப்பட்ட திட்டம் ; குடிநீர் திட்டம். ஆனால் இன்றைக்கு வரை என்ன நிலைமை ? மூன்று வருடத்திற்கு முன்னால் அடிக்கல் போட்ட திட்டத்திற்கு நான் கடந்த 16 ஆம் தேதி டி.டி.சி. மீட்டிங்கில் கேட்கிறேன் ; கலெக்டர் சொல்கிறார்,

[திரு. கே. சுப்பராயன்] [1987 மார்ச் 3

இன்னமும் ஓவர் டாங்க் கட்டுவதற்குரிய மூன்று ஏக்கர் நிலம் பவானி ஆற்றங்கரையில் விலைக்கே வாங்கவில்லை என்று. நிலமே வாங்காமல் வெறும் கையிலே முழம் போடுவதா ? திட்டத்திற்குரிய இடத்தை வாங்காமலேயே அடிக்கல் போட்டுவிட்டால் மக்களுக்கு எப்படி தண்ணீர் கிடைக்கும்? இந்த முறையெல்லாம் சரிதானா ? இந்த முறையில் தான் மக்களின் உணர்ச்சிகளை மதிப்பதா ? இந்த முறை மக்களின் தேவைகளைப் பூர்த்தி ஆக்க உதவுமா ? உதவாது. இந்த முறைகளை மாற்றிக் கொள்ளுங்கள் என்பதைத்தான் இங்கே நான் குறிப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு 30 இலட்சம் வீடுகள் ; சொல்லவே வேண்டாம். கட்டுமான பொறியாளர்கள் சொல்லி விட்டார்கள். நிதி நிர்வாக நிபுணர்கள் சொல்லி விட்டார்கள். அரசு அறிவித்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால், ஆண்டொன்றுக்கு 700 கோடி செலவாகும் என்று சொல்கிறார்கள். 700 கோடி செலவாகுமே, நிறைவேறி விடுமா ? போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போகலாம் என்று சொல்லிவிட்டு போகிறார்களே தவிர, நிறைவேற்றுகிற பொறுப்பை மேற்கொண்டு இருக்கிறார்களா ? இல்லை. இத்தகைய அறிவிப்புகள் ஒருபோதும் உங்களுக்கு துணை நிற்காது என்பதை இங்கே நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, தாம்பரத்திலே ஒரு "Free Zone" வரியற்ற வர்த்தக மண்டலம் உருவாக்கப்படுகிறது ; ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டது ஆகும். இந்த வரியற்ற வர்த்தக மண்டலத்தில் ஏறத்தாழ 350 தொழிற்சாலைகள் உருவாகக் கூடும். தற்போது 10 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே என்ன நடந்திருக்கிறது ? அந்த 10 தொழிற்சாலைகளிலும் ஒரு தொழிலாளிக்கு 150 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரைதான் சம்பளம். இந்திய தொழிற் தகராறு சட்டஷரத்துகள் அங்கே பொருந்தாது. 1 இலட்சம் தொழிலாளிகள் பணியாற்றுகிற வாய்ப்பு இருக்கின்ற அந்தப் பகுதியில் ஒரு கொத்தடிமைத்தனத்தை தடுத்து சட்டபூர்வமாக பாதுகாக்கிற ஒரு நடைமுறையை இந்த மாநில அரசு உருவாக்கி அங்கே தொழில் தகராறு சட்டம் பொருந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நில சீர்திருத்தச் சட்டம். நில சீர்திருத்தச் சட்டத்தைப்பற்றி சமீபத்திலே மாநில வருவாய்த் துறை மந்திரிகளின் அகில இந்திய மாநாட்டை தொடங்கி வைத்த மத்திய விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு ஜி. எஸ். தில்லான் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே, மாநில அரசாங்கம், இந்த ஸ்டேட் உட்பட, அதாவது தமிழ்நாடு



1987 மார்ச் 3] [திரு. கே. சுப்பராயன்]

உட்பட என்ன சொன்னார்கள் ; உபரி நிலத்தை கைப்பற்றுவதற்குத்தான் நில சீர்திருத்தச் சட்டம். 'அத்தோடு பினாமி மோசடியைத் தடுப்பதற்கும்தான். இவற்றை மாநில அரசாங்கம் முழுமையாகச் செய்யவில்லை என்று குற்றம் சாட்டி இருக்கிறார். யார் குற்றம் சாட்டியது ? அகில இந்திய விவசாய அமைச்சர் தில்லான் அவர்கள். அவர் குற்றம் சாட்டியபடி இந்த மாநிலத்தில் உபரி நிலங்களைக் கைப்பற்ற நடவடிக்கை உண்டா ? தில்லான் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த அவையினர் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிட விரும்புகிறேன் ; தில்லான் அவர்கள் குறிப்பிட்டிருப்பது உபரி நிலம், உண்மையான உற்பத்தி பற்றிய விவரங்களை, அதிகார வர்க்கத்தைக் காட்டிலும் கிராமப்புற ஏழை எளிய தொழிலாளிகளும் அவர்களின் கூட்டு ஸ்தாபனங்களும் தான் தெரிவிக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால் நான் மாநில அரசை கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த மாநிலத்தில் யார் யார் பினாமி மோசடி செய்திருக்கிறார்கள் ? எங்கெங்கு உபரி நிலம் மிச்சப்படுத்தப்பட்டு மறைக்கப்பட்டிருக்கிறது ? எந்தெந்த வகைகளில் ஒளிக்கப்பட்டிருக்கின்றன என்கிற விவரங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பு எடுத்துக்கொண்டு பரிபூரண விவரங்களைக் கொடுக்கத் தயார். அவற்றை கைப்பற்ற அரசு தயாரா ? அவற்றைக் கைப்பற்றுகிற துணிச்சல் அரசுக்கு இருக்கிறதா ? கைப்பற்ற வேண்டுமென்று தில்லான் சொல்லியிருக்கிறார். மத்திய விவசாய அமைச்சர் சொல்லி இருக்கிறார். ஆகவே மத்திய விவசாய அமைச்சர் சொல்லியிருக்கிற அந்த அடிப்படையில், அவர் இறுதியாகச் சொல்லியிருப்பது மாநில அரசுகள் பயனுள்ள சட்ட நடவடிக்கைகளின் மூலம்—நன்றாக தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? பினாமி நில மோசடியை கண்டுபிடித்து கைப்பற்றி விவசாய தொழிலாளிகளுக்கு வழங்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதற்குரிய நிலைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, இறுதியாக ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன்.

அதிகாரம் சம்பந்தப்பட்ட விஷயம். உள்ளாட்சி அமைப்புகள் ஒரு சிறைக் கூண்டு மாதிரி இருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதியும் இல்லை, போதிய அதிகாரமும் இல்லை. சுகாதாரத்தைப் பற்றி, மூளைக் காய்ச்சலைப் பற்றி எல்லாம் சொன்னோம். நூற்றுக்கணக்கில் குழந்தைகள் மடிந்தார்கள். மடிந்ததற்குக் காரணம் யார் ? தயவு செய்து பதில் சொல்லியாக வேண்டும். சுகாதாரத்துறை தான் மூளைக் காய்ச்சலுக்கு அடிப்படை காரணமாகிறது. கொசு உற்பத்தியாவதும், அவற்றைப் பாதுகாப்பதும் சுகாதாரக் கேடுதானே ? இந்த மாநில அரசு நகராட்சிகள்,

ஊராட்சிகளுக்கு சுகாதார ஊழியர்களை எடுப்பதை ஏன்
தடுக்கிறது? 30 வருடத்திற்கு முன்னால் இருந்த தமிழ்
நாடு இப்போது இல்லை. ஆனால் 30 வருடத்திற்கு முன்
னால் போடப்பட்டவர்கள்தான் இப்போதும் சுகாதார வேலை
செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி சுகாதாரம் வரும்?
பகுத்தறிவோடு சிந்தித்து, வளர்ச்சி அடைந்துவிட்ட தேவையை
பூர்த்தி செய்ய புதிய தொழிலாளர்களை போடவில்லையென்
றால் தெருவிலே குப்பை கிடக்குமா இல்லையா? சாக்கடை
தேங்குமா, இல்லையா? கொசு உற்பத்தியாகுமா, இல்லையா?
மூளைக் காய்ச்சல் உண்டாகுமா இல்லையா? இதற்கெல்
லாம் யார் காரணம்? (மணி அடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 12–20)

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கங்கை—காவிரி
இணைப்பைப்பற்றி குறிப்பிட்ட கருத்தையொட்டி ஒன்றைச்
சொல்கிறேன். கங்கை-காவிரி-காவிரியைக் குமரி என்று வைத்
துக் கொண்டாலும் கூட சரி—இணைப்பைப்பற்றி அவர்கள்
சொன்ன கருத்துக்கள் பல்வேறு புத்தகங்களில் எழுதப்பட்டி
ருப்பது உண்மைதான். ஆனால் 1971 ஆம் ஆண்டு ஒரு
முறையும், 1972 ஆம் ஆண்டு இன்னொரு முறையுமாக
வந்த ஐக்கிய நாடுகளுடைய எக்ஸ்பெர்ட்ஸ் கமிட்டி கங்கையை
மற்ற நதிகளோடு இணைப்பது சாத்தியம் என்றும், அதைக்கூட
கி.பி. 2000-க்குள் இணைக்கவில்லை என்றால் இந்தியாவிலேயே
ஒரு மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்றும் சொல்லிவிட்டுப்
போயிருக்கிறது. இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர்
திரு. சங்கரானந்த் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது அவ
ரிடத்தில் எடுத்துக் கூறினோம். பிறகு அவரிடத்திலிருந்து எங்
களுக்கும் ஒரு கடிதம் வந்தது. அதில் வடக்கே மகாநதி
யும் தெற்கே தாமிரவருணியையும் இணைப்பதற்கு முதலில்
திட்டமிடலாம் என்றும்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த விவரங்களை
எல்லாம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிடலாம்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்
களுடைய கருத்துக்கு ஆதரவாகத் தான் நான் இதைக் குறிப்பிடு
கிறேன். அதை ஒட்டியே விளக்கமாகச் சொல்கிறேன்.

இந்தத் திட்டத்தைப் பற்றி எக்ஸ்பெர்ட்ஸ் கமிட்டி சொல்லும்
போது தண்ணீரை ஒரு கட்டத்தின் மேலே ஏற்றுவதற்கு மிகுந்த
அளவுக்கு மின்சாரம் தேவைப்படும் என்று கருத்து தெரிவித்தது.
ஆனால் மேலே ஏற்றப்படுகிற அந்தத் தண்ணீர் கீழே விழுகிற
போது—மேலே ஏற்றுவதற்கு நாம் எந்த அளவு மின்சாரத்தைச்



செலவிட்டோமோ அதே அளவு மின்சாரத்தை எடுத்து விடலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. இதையெல்லாம் தகவலுக்காகத் தான் குறிப்பிடுகிறேன். அதோடு இந்தப் பிரச்சினைக்காக அதிகமான ஈடுபாட்டைக் காட்டி இதற்காக டெல்லியில் உண்ணாவிரதம் தொடங்கி நடத்தியவன் என்ற அடிப்படையிலும் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதைக் குறிப்பிட வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பில் கவர்னர் உரையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கவர்னர் உரையில் வாசகம் நன்றாக இருக்கிறது, விஷயம் இல்லை. புரட்சித் தலைவருடைய ஆட்சியில் கவர்னருடைய உரையில் புரட்சிகரமான திட்டங்கள் வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி ஏதுமில்லை. இருந்தாலும் வரக்கூடிய பட்ஜெட்டிலாவது நம்முடைய அரசு நல்ல புதிய திட்டங்களைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் மாநிலத்தில் உள்ள அரசு நிறுவனங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். நம்முடைய அரசு நிறுவனங்கள் எல்லாம் மிகவும் மோசமாகப் போய் கொண்டிருக்கின்றன. உதாரணமாகத் தனியார் பஞ்சாலைகள், சிமெண்ட் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் எல்லாம் நிறைய லாபம் பெறுகின்றன. They are minting money. ஆனால் நம்முடைய அரசு நிறுவனங்கள் ஒன்று nominal profit அல்லது loss பண்ணுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும்.

அதே மாதிரி "மோபேட்", செராமிக்ஸ், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ், அரக்கோணம் ஸ்டீல் பேக்டரி எல்லாம் நட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது போன்று பல தொழிற்சாலைகள் நட்டத்தில் நடக்கின்றன. இதற்கு என்ன காரணம்? அங்கே உள்ள நிர்வாகிகளுடைய திறமையின்மை, ஊழல் ஆகியவை தான். அதில் பற்று இல்லாமைதான் காரணம். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் அரசாங்கமானது நிறையகேப்பிடலை இன்வெஸ்ட் பண்ணியிருக்கிறது. போட்ட மூலதனத்திற்கு வட்டி வந்தால்கூட பரவாயில்லை. எனவே இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றுவதற்கு அரசாங்கமே அரசு நிறுவனங்களைப் பற்றியும், அவற்றின் ஒர்க்கிங் பற்றியும் அறிந்து சரிசெய்ய ஒரு விசாரணைக் கமிட்டியைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பல தொழிற்சாலைகள் இன்றைக்கு defunct ஆகி இருக்கின்றன. வேண்டுமென்றே அப்படிச் செய்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறியைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். கைத்தறியைப் பொறுத்த வரையில் அதிகமான அளவுக்குக் கைத்தறித் துணி தேக்கமாகிக் கொண்டிருக்கிறது. எட்டையபுரம், கடலையூர் பகுதியில் உள்ள மக்கள் ஒவ்வொரு ஆண்டும் கைத்தறித் துணியைத் தேக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் கையில் உள்ள பணத்தை எல்லாம் அதில் போட்டு முடக்கி வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக மேற்கொண்டு நூல் வாங்குவதற்குப் பணமில்லை. கோ-ஆப்டெக்ஸ் டிபார்ட்மென்டில் இந்தத் துணிகளை வாங்குகிறார்கள். ஆனால் அதிலும் வேண்டியவரிடம் வாங்கிக் கொள்கிறார்கள். வேண்டாதவரிடம் வாங்குவதில்லை. அதை எல்லாம் மாற்றி ஒழுங்காக, உற்பத்தியாகிற அவ்வளவு துணியையும் கூட்டுறவுத் துறையின் சொசைடி மூலம் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கொண்டு சோமசுந்தர ஆலையை கவர்ன்மென்ட் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதே மாதிரி ஸ்ரீஹரி-யையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். ஆனால் பல மில்கள் ஓடவில்லை. அதைப்பற்றி கவர்னர் ஒன்றும் சொல்லவில்லை. தொழிலாளர் நல அமைச்சர் பிராமிஸ் பண்ணினார். with in a month we will run the mill என்று சொன்னார். ஆனால் ஒன்றும் செய்யவில்லை. சென்னையிலுள்ள ''பின்னி என்ஜினியரிங்'' 12 மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதைத் திறக்க முயற்சி செய்யவில்லை. அங்குள்ள தொழிற் சங்கமும் அதைத் திறக்க முயற்சிக்கவில்லை. அவர்களும் சும்மா இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் உடனடியாக பின்னி என்ஜினியரிங்-ஐ திறப்பதற்கான முயற்சியை செய்ய வேண்டும். இதிலே முதலமைச்சர் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூர் சவுத் ஈஸ்ட் டானரி மூடி 4 மாதம் ஆச்சு. Financial trouble இருக்கிறது. அதையும் திறக்க கவர்ன்மென்ட் முயற்சி பண்ண வேண்டும். அது மாதிரி ஆம்பூர், வாணியம்பாடி பகுதியில் நினைத்தால் மானேஜ்மென்ட்டார் மூடுகிறார்கள். அதற்குக் காரணம் ஒன்றும் கிடையாது. பிறகு புதிதாக காண்ட்ராக்ட் ஆள் எடுத்து புது சர்வீஸ் என்று ஆக்குகிறார்கள். இதை எல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்த வரையில் நம்முடைய அணைக் கட்டுகளை எல்லாம் கட்டியாகி விட்டது. மேற்கொண்டு அணைகளைக் கட்ட முடியாது. நம்ம உறுப்பினர் திரு. சுப்பராயன் சொன்ன மாதிரி மேற்கு நோக்கி பாயும் ஆறுகளை



எல்லாம் நம் பக்கம் திருப்பி விடலாம். இது ரொம்ப முக்கியமான சமாச்சாரம். இந்த விஷயத்தை அரசாங்கம் உடனடியாக கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

கோவில்பட்டி பகுதியில் சீரியாறு தண்ணீர் வீணாகி மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. அதைக் கோவில்பட்டி பகுதிக்குள் கொண்டு வரலாம். பல முறை அரசாங்கத்திடம் சொல்லியாகி விட்டது. முயற்சி செய்யாதது ஏன்? நம்முடைய irrigated lands கம்மி. அதை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? அதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஊருக்கு ஒரு கண்மாய் என்ற திட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டும். எங்கெங்கே கண்மாய் இல்லையோ அங்கெல்லாம் கண்மாய் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

குடிநீர் பற்றி பேசினார்கள். இதற்காக அரசாங்கத்தில் நிறைய ஸ்கீம் போட்டிருக்கிறார்கள். அவை நல்ல ஸ்கீம்ஸ். வருஷா வருஷம் குழாய் கிணறு போடுவதால், பம்புசெட் போடுவதால் என்ன இலாபம்? every year we are spending money. We are spending about Rupees 25,000 for each pumpset. நூறு இடத்தில் குழாய்க் கிணறு, பம்ப் செட் போடுகிறார்கள் என்றால், என்ன ஆயிற்று? 25 இலட்சம் ரூபாய் ஆச்சு. இந்த மாதிரி வருஷா வருஷம் செலவு செய்வதைக் காட்டிலும் நிரந்தரமான ஸ்கீம் கொண்டுவர முடியாதா? உதாரணமாக என்னுடைய தொகுதியில் தாமிரவருணி ஆற்றில் தண்ணீர் இருக்கிறது. கோவில்பட்டி, கழுகுமலை, எட்டையாபுரம் போன்ற பகுதிகளுக்கு சீவலப்பேரியிலிருந்து தண்ணீர் வருகிறது. இன்னுமொரு ஸ்கீம் போட்டு அங்குள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் ஏன் கொடுக்கக் கூடாது? சென்னைக்குச் செய்கிறார்கள், கோயம்புத்தூரில் பண்ணுகிறார்கள், திருச்சிக்குச் செய்கிறார்கள். ஆகவே தயவு செய்து கோவில்பட்டியில் உள்ள கிராமங்களுக்கு நிரந்தரமாக தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அடுத்தபடியாக கல்வியைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழக அரசினர் ''நவோதயா'' பள்ளிகளை எதிர்க்கிறார்கள். இது ரொம்ப தப்பு. அது ஒரு மாடல் ஸ்கூல். இதனால் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது, தேசிய ஒற்றுமை ஏற்படுகிறது. ஆகவே அரசு கொள்கையை மாற்றி, நவோதயா பள்ளிகளுக்கு தமிழ் நாட்டில் இடம் கொடுக்க வேண்டும். The Central Government in spending the whole amount on this account அதை நாம் Loose பண்ணுகிறோம். பாண்டிச்சேரியில் அதை வைத்திருக்கிறார்கள். நாமும் அதைப் போல் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக வேலை வாய்ப்பு. நம்முடைய அரசாங்கம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. ஆனால் அது இன்னும் வரவில்லை. 900 சப்-இன்ஸ்பெக்டர் போஸ்டுக்கு ஐம்பதாயிரம் அப்ளிகேஷன் வருகிறது. ஒரு கிளார்க் போஸ்ட்டுன்னாலும் அப்படித்தான். கவர்ன்மெண்டில் 50 போஸ்ட் காலியிருக்கிறது என்றால் ஐம்பதாயிரம் அப்ளிகேஷன் வருகிறது என்றால் இது எதைக் காட்டுகிறது? கவர்ன்மெண்ட் சும்மாவே இருக்கிறது. இதைப்பற்றி சிந்திப்பதே கிடையாது. இது ஒரு ''dangerous problem. Unemployment problem is a dangerous problem. Unemployment problem என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே தாமதமாக ஆமை வேகத்தில் போகிறார்கள். இது வேண்டாம். விரைவாக முயல் வேகத்தில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விலைவாசி. இன்றைக்கு படி அரிசி ஐந்தரை ரூபாய்க்கு விற்கிறது. பருப்பு எட்டு, ஒன்பது ரூபாய்க்கு விற்கிறது. எண்ணெய் விலை ரூபாய் 24 ஆக ஏறியிருக்கிறது. ஏன் விலைவாசியைக் கட்டுப்படுத்தவில்லை? ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு போடுவோம் என்று அண்ணா சொன்னார். போகப் போக ஒரு ரூபாய்க்கு மூன்று படி போடுவேன் என்று சொன்னார். அதை தி.மு.க. வினர் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அ. தி. மு. க. அரசாவது அதை பண்ணக்கூடாதா? இவ்வளவு மோசமாக விலைவாசி போகிறதே! விலைவாசிக்குக் காரணம் மத்திய அரசு என்று சொல்லலாம். அதில் ஒரு பாய்ன்ட் இருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கமோ மக்களுக்கு ஒரே கவர்ன்மெண்ட்தான். ஆகவே விலைவாசியைப் பொருத்த வரையில் ஏதாவது பண்ணும்படி கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்தபடியாக வீடு கட்டும் திட்டம். வீடு கட்டுவதற்கு நல்ல ஸ்கிம் போட்டிருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகள் என்று போன வருடம் சொன்னார்கள். ஆனால் என்ன செய்திருக்கிறார்கள்? சென்ற ஆண்டில் நாம் ஸ்கீம் போட்டோம். என்ன பண்ணியிருக்கிறோம்? ஒன்றும் செய்யவில்லை. நன்றாக ஸ்கீம் போடுகிறீர்கள். ஆனால், அதை அமுல்படுத்துவதில்லை. அது நல்ல திட்டம். அதை நடைமுறையில் செய்ய வேண்டும். கோவில்பட்டியில் தீப் பெட்டித் தொழிலாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். 10,000, 15,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காகத் தனியாக வீடு கட்டும் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, மாவட்டங்களைப் பிரித்தார்கள், திருநெல்வேலியை இரண்டாகப் பிரித்தார்கள். சிதம்பரனார் மாவட்டம் என்றும் நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம் என்றும் பிரித்தார்கள். இதிலே குருவிக் குளம் ஒன்றியத்தை சிதம்பரனார் மாவட்டத்தில் சேர்க்கவில்லை. நாங்கள் கோவில்பட்டியை ஒட்டித்தான் வாழ்கிறோம். எல்லா விஷயங்களுக்கும் கோவில் பட்டியை நம்பியிருப்பதால் குருவிக்குளம் ஒன்றியத்தை சிதம்பரனார் மாவட்டத்தில் இணைக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எட்டயாபுரத்தை தாலுக்காவாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டும். எட்டையாபுரத்தை தாலுக்காவாக்கி பாரதி தாலுக்கா என்று பெயரிட வேண்டுகிறேன்.

அடுத்து, வறட்சி பற்றிப் பேசுகிறோம். அரசு வறட்சி என்று ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அறிவிக்கவில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கோவில்பட்டி பகுதி ஏற்கெனவே வறட்சிப் பகுதி. இப்போது அது கடும் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவித்து, நிவாரண வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாதவர்களுக்கெல்லாம் நிவாரணம் தருகிறோம். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கும், பி.ஏ., படித்தவர்களுக்கும் நிவாரணம் தருகிறோம். பாக்கி பேர்களுக்கு நிவாரணம் தருவதில்லை. மகாராஷ்டிர மாநிலத்தில் யார் யாருக்கு வேலையில்லையோ அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கிறார்கள். அதைப்போல் இங்கேயும் கொடுங்கள், அப்போதுதான் அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு தருவதற்கான முயற்சிகளை எடுக்க வாய்ப்பு வரும். அதைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கவர்னர் உரையில் தொழிலாளர்கள் பற்றி ஒன்றும் இல்லை. அதற்காக வருத்தப்படுகிறேன். நாட்டிலே எல்லாவற்றையும் தொழிலாளர்கள்தான் உற்பத்தி செய்கிறார்கள். அதைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை? அதில் அக்கறை இல்லையா? தொழிலாளர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். ரெங்கசாமி] [1987 மார்ச் 3

அடுத்து, லஞ்ச ஊழல் ஜாஸ்தியாகிவிட்டது. எல்லா ஊரிலும் இது இருக்கிறது. இருந்தாலும் தமிழ் நாட்டில் ஜாஸ்தியாக இருக்கிறது. முதலமைச்சரவர்கள் நல்ல மனிதர், நல்ல எண்ணம் உடையவர்கள். இருந்தாலும், எங்கே பார்த்தாலும் லஞ்சமாகிவிட்டது. ஊழல் ஜாஸ்தியாகிவிட்டது. இதில் கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொண்டு, லஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்யும்போது, அந்த நிவாரணம், மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இப்போது எல்லாம் கான்ட்ராக்ட்காரர்களுக்கு போய்ச் சேருகிறது. அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒரு பங்களா கட்டுகிறார்கள். எனவே அப்படியில்லாமல், அந்த நிவாரணம் மக்களுக்குப் போக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, எங்கள் பகுதியில் தண்ணீர் கிடையாது. ஆனால் மரம் நடுகிறார்கள். எப்படி நட முடியும் நடுவதாகச் சொல்லி, ஏமாற்றுகிறார்கள். இது முக்கியமானது. அங்கே தண்ணீர் கிடையாது. மரம் நட முடியாது. இந்த நேரத்தில் மரம் நடுகிறோம் என்று சொல்லி, ஏமாற்றுகிறார்கள். இதை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வெ. சோ. பஞ்சவர்ணம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னை ஆளாக்கிய தமிழகத்தினுடைய இதய தெய்வம் அவர்களுடைய பாதம் தொட்டு வணங்கி, 27-2-1987 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் தமிழகத்தினுடைய வரலாறுமிக்க பேரவையில் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கே. சமரசம் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நானும் வழி மொழிந்து என்னுடைய கன்னிப் பேச்சை தொடங்குகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழகத்தினுடைய மக்கள் வாழ்வுக்காக, ஏழை எளியவர்களுடைய வாழ்வுக்காக, கள், சாராயக் கடைகளை தமிழகத்தின் முதலமைச்சரவர்கள் ஒழித்திருக்கிறார்கள். அந்தக் கள், சாராயக் கடைகளை ஒழித்ததோடல்லாமல், கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காக நம்முடைய இதய தெய்வம், தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள், உதவி செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 மார்ச் 3] [திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்]

அது போல, குழந்தைகளுக்கு காலணி வழங்குகின்ற திட்டம். ஏழையெளிய குழந்தைகளுக்கு, பள்ளிக்குச் சென்று வருகின்ற நேரத்தில், அவர்கள் மதியத்திலே வெய்யிலிலே, 4 மணிக்குப் பள்ளியை விட்டு திரும்புகிற நேரத்தில், அவர்களுடைய கால்களிலே சூட்டினால் கொப்பளம் வருகிறது என்பதை உணர்திருந்த காரணத்தினால், நமது தமிழக முதல்வர் அவர்கள் இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். செருப்புத் தைக்கின்ற தொழிலாளர்கள் முன்னேறவும் வாய்ப்புள்ள ஒரு திட்டமாக இதைக் கொண்டு வந்தார்கள். ஏழையெளிய தாய்மார்களுக்கு காலணி கொடுக்கும் திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டம். ஏழையெளிய விவசாயத் தொழில் செய்பவர்களையும் தொழிற்சாலைகளுக்குச் சென்று வேலை செய்கின்றவர்களையும், வெய்யிலைப் பொருட்படுத்தாது நஞ்சை, புஞ்சை நிலங்களில் வேலை செய்கின்றபோது சூரிய வெப்பத்தினால் நிலத்தில் இருக்கும் உஷ்ணம் அவர்கள் பாதங்களைத் தாக்கும் என்று உணர்ந்து, தாயுள்ளம் கொண்ட புரட்சித்தலைவர் அவர்கள் இந்த காலணித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த காலணித் திட்டம் ஒரு வரவேற்கக்கூடிக் திட்டம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளய கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, தாய்மார்களுக்கு சத்துணவுத் திட்டம் என்று தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஏழைத் தாய்மார்களுக்கு கிடைக்கின்ற திட்டம் சத்துணவுத் திட்டம். அவர்கள் ஒருவேளை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் இருக்கின்றார்கள். இப்படி எத்தனையோ குடும்பங்கள் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தாய்மார்கள் ஒரு நேரமாவது நல்ல உணவு உண்ணவேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தத் தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 400 கோடி ரூபாயை தமிழகத்தினுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அள்ளி வழங்கி இருக்கின்றார்கள். அப்படியிருந்தும் அந்தத் திட்டத்தைப் பெரு நோக்கோடு யாரும் ஒப்புக்கொள்ளாது மாற்றுக் கட்சியினர் குறை சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்படித்தான் சத்துணவுத் திட்டத்தை தமிழகத்தினுடைய இதய தெய்வம் கொண்டுவந்த நேரத்தில் குறை சொன்னார்கள். அதை பிச்சைக்காரத் திட்டம் என்றார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே இல்லாத நேரத்தில் வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் தேர்தல் நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் எல்லாம் நாங்கள் வந்தால் இந்த சத்

[திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்] [1987 மார்ச் 3

துணவுத் திட்டத்திலே இலை போட்டு சோறு போடுவோம் என்று ஒத்துக் கொண்டு தேர்தல் நேரத்திலே பிரச்சாரம் செய்தார்கள். அதுபோல இந்தத் திட்டத்தையும் ஒரு காலத்திலே அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

மலை வாழ் மக்களுக்கு கிலோ அரிசி ரூ. 1.40 காசுக்கு கொடுக்க தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏழையெளிய மக்கள், மலை வாழ்ப் பகுதி மக்கள், மலையிலே வாழ்க்கை நடத்துகின்றவர்கள் அரிசியே கண்டிருக்க மாட்டார்கள் என்ற காரணத்தினால் தமிழகத்தினுடைய விடிவெள்ளியாகத் திகழ்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் அவருடைய காலத்திலேயாவது நல்ல உணவு உண்ணவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு கிலோ அரிசி ரூ. 1.40 காசுக்குக் கொடுக்கவேண்டும் என்று இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள்.

அதுபோலவே, புதிய அனல் மின்சார நிலையம் தொடங்கும் திட்டத்தை, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் வருகின்ற காரணத்தினாலே மின்சாரப் பற்றாக்குறை நிவர்த்தியாகும். அதற்காக இந்தத் திட்டம் தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இது ஒரு புரட்சிகரமான திட்டம் என்பதை இந்த நேரத்திலே மிக்க மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் ஏரிகள் பாசனம், ஏரிகள் மராமத்து திட்டம் உலக வங்கி உதவி ஆதரவோடு செயல்பட இருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு ரூ. 400 கோடி ஒதுக்கப்படுகிறது. அது ஒரு பாராட்டப்படவேண்டிய திட்டம். இந்தத் திட்டத்தினால் பல ஏழையெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதோடு, நிரந்தரமான ஏரிப்பாசனங்களைக் கொண்டு வரவும் இந்தத் திட்டம் உறுதுணையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே மெத்த மகிழ்வோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சிப் பணிகளை உடனடியாக தொடங்குவதற்காக போர்க் கால நடவடிக்கையாக தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ரூ. 28 கோடியை அள்ளி வழங்கியிருக்கின்றது. அப்படி அள்ளி வழங்கியிருக்கின்ற காரணத்தினால் பூமிக்கு அடியிலே இருக்கின்ற தண்ணீரை குழாய்க் கிணறுகள் மூலம் கொண்டுவருகின்றார்கள். ஒவ்வொரு



[1987 மார்ச் 3] [திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்]

மாவட்டத்திற்கும் செய்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல, அங்கே உதவியை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்வோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொங்கல் போனஸ் வழங்கும் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள். அவர்கள் ஒரு புரட்சிகரமான திட்டத்தை இந்த ஆண்டு அளித்திருக்கின்றார்கள். அந்தப் புரட்சிகரமான திட்டத்தைப் பொது மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

பெரிய மாவட்டங்களைப் பிரித்து நிர்வாகத்தைச் சீராக முன்றப்படுத்த திட்டம் வகுத்திருக்கின்றார்கள். அது ஒரு வரவேற்கப்படவேண்டிய திட்டம். நாட்டுமக்களுடைய பாச உணர்வில் பங்குகொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிய திட்டம் அது. அந்தத் திட்டத்தை நாம் வாழ்த்தி வரவேற்க வேண்டும். இந்தத் திட்டம் நிறைவேற புரட்சித் தலைவர் அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு கொடுக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

(பிற்பகல் 12–40)

அருப்புக்கோட்டை தொகுதியானது நரிக்குடி, திருச்சுழி, காரியாப்பட்டி ஆகிய மூன்று ஒன்றியங்களும் உள்ளடங்கிய தொகுதி. இந்த மூன்று ஒன்றியங்களிலும் எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. விவசாயத்தைத் தவிர வேறு மாற்றுத் தொழில் கிடையாது. ஆகவே, பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தபோதும் சரி, இப்போது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் பிரிக்கப்பட்ட காமராசர் மாவட்டத்திலேயே மிக மிக பின்தங்கிய பகுதி, வறட்சி அதிகமாக உள்ள பகுதி, ஆண்டாண்டுக் காலமாக நோஞ்சான் பிள்ளையாக உள்ள பகுதி அருப்புக்கோட்டை தொகுதி. அந்தத் தொகுதி மக்கள் விவசாயத்தை நம்பி, வானம் பார்த்த பூமியை நம்பி, விவசாயம் செய்து, அவர்கள் செய்த விவசாயப் பயிர்கள் எல்லாம் செத்துக் கருகி சாம்பலாகிவிட்டன. மூன்றாண்டுக் காலமும் பஞ்சத்தை சந்தித்து, இந்த ஆண்டும் நான்காவது ஆண்டாக பஞ்சத்தைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். வானிலை ஆராய்ச்சித் துறையினர் அந்தப் பகுதி பற்றி [illegible] தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள். சாத்தூர், விருதுநகர் ஆகிய இடங்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அரசு அதிகாரிகள் சொல்லியும்

[திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்] [1987 மார்ச் 3

உண்மைக்குப் புறம்பாக வானிலை ஆராய்ச்சித் துறையினர் கொடுத்த் தகவலின் அடிப்படையில் வறட்சி இல்லாத இடங்கள் என்று அறிவித்திருக்கின்றார்கள். சாத்தூர், விருதுநகர் தாலுக்காக்கள் வறட்சியான பகுதிகள் என்று மாவட்ட ஆட்சியரும் மற்றும் வருவாய்த் துறையினரும் ஏற்கெனவே திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அங்கே நான் சென்று பார்த்த நேரத்தில் சாத்தூர், விருதுநகர் வட்டாரங்களில் எல்லாம் நல்ல மழை பெய்தது என்று வானிலை ஆராய்ச்சித் துறையினர் கூறியது உண்மைக்கு மாறானது என்றும் ஆடுமாடுகளுக்குக் குடிக்கக்கூட சொட்டு தண்ணீர் இல்லாத நிலை இருந்ததைக் கண்டேன். ஆகவே சாத்தூர், விருதுநகர் வட்டாரங்களையும் சேர்த்து காமராசர் மாவட்டம் முழுவதுமே வறட்சியான பகுதி என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அருப்புக்கோட்டை தொகுதியில் பண்டைக்காலமாகவே கிருதமால் நதித் திட்டம் என்ற திட்டம் இருக்கிறது. "வைகை கிருதமால் மாலை அணிந்தது" என்று ஒரு பாடல் உண்டு. அது வைகையிலிருந்து தனியாகப் போனபோது மதுரையிலிருந்து வீட்டுக்கு ஒருவர் போய் அதைக்கட்டினார்கள். அதற்குப்பின்னாலே மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வைகையிலிருந்து விருதுநகருக்கு ஒரு புதிய கால்வாய் திட்டத்தைத் தொடங்கினார்கள். அடிக்கல் நாட்டப்பட்டு அதற்காக தமிழக அரசிலிருந்து மத்திய அரசுக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டெப்பாசிட் கூட செய்தார்கள். அந்தப் பணியின் ஒரு பகுதியாக உள்ள நெடுஞ்சாலையில் இருக்கிற பாலம் கட்டும் பணி இன்னும் முடியவில்லை. ஆகவே இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். உபரியாக இருக்கும் நீரை அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கி, சீரோடும் சிறப்போடும் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னம்பட்டி அணைக்கட்டு திட்டம் வேண்டு நெடுங்காலமாக அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக சென்னம்பட்டி அணைக்கட்டு திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கம்பிக்குடிக்கு நிலையூர் கால்வாய் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். இத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் 28 கிராமங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். எனவே இத் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.



1987 மார்ச் 3] ]திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்]

அதுபோல் சீமைக்கால்வாய் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தனை திட்டங்கள் இருந்தும் அந்தத் தொகுதி இன்றைக்கும் நோஞ்சான் பிள்ளையாகத் தான் இருக்கிறது. இந்நிலையிலிருந்து மீள, அருப்புக்கோட்டை தொகுதிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும், தமிழக அரசும் நான் சொல்லியுள்ள அனைத்துத் திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அருப்புக்கோட்டை தொகுதி முதன் முதலில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைக் கோட்டைக்கு அனுப்பிய தொகுதி. கோட்டையில் கொலு வீற்றிருக்கின்ற எங்கள் தங்கத் தலைவரை அன்றைக்குத் தேர்ந்தெடுத்த தொகுதி அருப்புக்கோட்டை தொகுதி. இன்றைக்கு அந்த மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைச் சமாளிக்க இன்றைக்கு 100 ஏக்கருக்கு மேற்பட்ட கண்மாய்கள் சுமார் 362 பொதுப்பணித் துறையின் கீழ் இருக்கின்றன. 100 ஏக்கருக்கு மேற்பட்ட இந்த 362 கண்மாய்களையும் உடனடியாகச் செப்பனிட்டு, மராமத்து செய்து ஏரிகளை நவீனப்படுத்த வேண்டும். அது போல் 100 ஏக்கருக்குக் குறைவாக உள்ள கண்மாய்கள் சுமார் 700 இருக்கின்றன. இவை அனைத்தும் மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் இருந்து கொண்டிருக்கின்றன.

இந்த மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலேயும் இருக்கின்ற அந்தக் கண்மாய்களையும் நம்முடைய அரசு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் எடுத்துக் கொண்டு, ஊருணிகளை ஆழப்படுத்துதல், சாலை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையாது. அருப்புக் கோட்டை தொகுதியில் மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அப்படி மூன்று ஒன்றியங்கள் இருக்கின்ற அந்தப் பகுதியில், நரிக்குடி ஒன்றியத்தில் ஒரு கூட்டுறவு மில்லும், திருச்சுழி ஒன்றியத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையும், காரியாபட்டி ஒன்றியத்தில் ஒரு சிமிண்ட் தொழிற்சாலையும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் அங்கே கிடைக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு, நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களை மையமாக வைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையிலே நல்ல பல திட்டங்களைச் செயலாக்கும் திறனையும், செயலாக்கக்கூடிய தன்மையையும் பற்றி விளக்கிக் கூறியிருந்தாலும், அதிலே போற்றுதலுக்குரிய விரைவுப் போக்குவரத்துத் திட்டம், கரூர்-திண்டுக்கல்-தூத்துக்குடி அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம், நெய்வேலி மூன்றாவது சுரங்கம் வெட்டும் திட்டம், சேது சமுத்திரம் திட்டம், கடலோரத் துறைமுக மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமெனத் தமிழக அரசின் சார்பிலே பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நானும் அந்தக் கருத்தோட்டத்திலே கலந்து கொண்டு, அந்தச் செயல் திட்டங்களை விரைவு படுத்த வேண்டும், செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இலங்கை வாழ் தமிழர்கள் இனப் படுகொலை சம்பந்தமாகத் தமிழக அரசு எந்தக் கண்ணோட்டத்தில் செயலாற்றிக் கொண்டு இருக்கிறதோ அதற்கு எங்கள் பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் துணை நின்று செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செயல் திட்டத்திற்கு நாங்களும் உறு துணையாக இருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும் நமது தமிழக அரசின் செயல் திட்டங்கள் பல இருந்தாலும், வீடு கட்டும் திட்டம், ஏழைகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும் காலணி வழங்கும் திட்டம் என்று இப்படிச் செயலாற்றிக் கொண்டு இருக்கும்பொழுது அதிலே கூட்டுறவுத் துறையிலே அமைத்து அவர்கள் மூலமாகச் செயலாற்ற இருக்கிறோம் என்பதைப்போல கூறப்பட்டிருக்கிறது. அங்கே தான் எங்களுக்கும் சில ஐயப்பாடுகள் எழுகின்றன. காரணம் என்னவென்று கேட்டால் ஏற்கனவே கூட்டுறவு மூலமாகக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காத சூழ்நிலையில் இப்படிப் பல



கூட்டுறவுச் சங்கங்களை உற்பத்தி செய்து வந்தாலும் அதனால் கிராமப்புற மக்களுக்கு நற்பயன் விளையுமா என்றுதான் நாங்கள் சந்தேகிக்கிறோம். காரணம் என்னவென்று கேட்டால், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறவில்லை. அதை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எதிர் காலத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் செயல் திறன் மிக்கவையாக இருந்தால்தான் அதன் பலன் கிராமப்புற மக்களுக்குச் சென்றடையும். கூட்டுறவிலே அக்கறை கொண்ட கிராமப்புற மக்கள் இந்தத் தேர்தல்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தான் அதன் முழுமையான பலன் அந்தக் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கும். அப்படிப்பட்ட செயல் திட்டங்களுக்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில், கட்டுமான பணியில் பயனடைவோரையும் ஈடுபடச் செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது என்று கூறப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் நல்ல திட்டமாக இருந்தாலும் செயல் முறைக்கு வருகின்றபொழுது காலங்கடத்தும் திட்டமாக இருக்குமோ என்று கருதுகிறோம். அதை விரைவுபடுத்தி உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–50]

அதுமட்டுமல்லாமல், பல திட்டங்களிலே மின்சாரத் திட்டம் முக்கியமான திட்டமாகத் தமிழகம் எங்கும் பறைசாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதுவும் சென்னை மாநகரத்தைச் சுற்றி பல மின்சாரத் திட்டங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. எங்கள் மதுரை மாவட்டத்திலே மின்சாரப் பற்றாக்குறை நாள் தோறும் இருந்துகொண்டே இருக்கிறது. அங்கே சிறுசிறு தொழில்கள்தான் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகள் அமையும் வாய்ப்பை அங்கே நாங்கள் பெறவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், அங்கே நீர் வளம் இல்லை; மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்றெல்லாம் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட தருணத்திலே மதுரை மாநகரம் பல இலட்சம் மக்களைக் கொண்ட பெரிய நகரமாக வளர்ந்து கொண்டே இருக்கிறது. கிட்டத்தட்ட 11 இலட்சம் மக்களைக் கொண்ட பெரிய நகராக இருந்தாலும், பக்கத்தில் 200 பேர்கள், 250 பேர்கள்தான் வேலை பார்க்கின்ற வாய்ப்பைப் பெறுகிறார்கள். படித்த இளைஞர்களும் பட்டதாரிகளும் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அங்கு ஒரு கனரக தொழிற்சாலை உருவாக்க உறு துணையாக இருக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, பெரிய மின் திட்டங்களை, அனல் மின் திட்டங்களை, அனல் மின் நிலையங்களை அமைக்கவும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கிருக்கிற சமய நல்லூர் மின் திட்டம் செயல்படாமல் இருக்கிறது அதையும் செயல் படுத்துவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று' கேட்டுக் கொள்கிறேன். அப்படி மின் திட்டங்களைச் செயல்படுத்தினால்தான் எதிர் காலத்திலே இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும். அந்த வகையில் நல்ல திட்டங்களாக அமையும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறை, மதுரை மாநகரைச் சுற்றி, வேளாண்மைதான் பிரதானமானதாக, முக்கியமானதாக ஒரு கால கட்டத்தில் இருந்தது. ஆனால், இன்று வறட்சி. இந்த வறட்சி பொதுவாக நிரந்தரமாக இருந்தாலும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக, பலபல இன்னல்களுக்கு விவசாயிகள் ஆளாகிறார்கள். சென்ற ஆண்டு துங்கர நோயினால் அவதிப்பட்டார்கள். நீர் பற்றாக்குறையால், மலைவாழ் மக்களும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய முற்போக்கான செயல்திறனுக்கு வறட்சி தடைக்கல்லாக இருந்து கொண்டிருக்கிறது. காரணம் நிலச் சுவான்தார்கள் நிலத்திலே பயிர் செய்து, பாதியிலே அந்தப் பலன் கிடைக்காமல், கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாத சூழ்நிலை உருவாகிறது. தண்ணீர் பற்றாக்குறையினால், ஏழை விவசாயிகள் போட்ட பணத்தை எடுக்க முடியாமல், அதுவும் நட்டமாகப் பொய்விட்டது. முன்பு மழை பெய்யவில்லையென்றால், பயிர் செய்யாமலே இருந்து விடுவார்கள். ஆனால் இப்பொழுது பணம் செலவு செய்து, பயிர் செய்து வறட்சியின் காரணமாக பயிர் காய்ந்து அவர்களுக்குப் பலன் கிடைக்காமல் போய்விட்டது. ஆகவே, அவர்களுக்கு இரண்டு விதமான நட்டம் வந்துவிட்டது. அந்தக் காரணத்தால், அவை முன்னவர் அவர்கள் இரண்டு மாதத்திற்கு முன்பாக, பயிர்க் கடன் வசூலை, இரண்டு மாதங்களுக்கு ஒத்தி வைப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஆனால், அந்த இரண்டு மாதங்களும் இடர்ப்பாடுகள் வந்து விட்டன. ஆகவே, 1 வருட காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதையும் நான் அவருடைய சிந்தனைக்குக் கொண்டு வருகிறேன். அப்படி இருந்தால்தான் விவசாயிகள் வாழ முடியும். ஏற்கனவே ஒரு நட்டத்தைத் தாங்கி, மறுபடியும் இன்னொரு நட்டத்தைத் தாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இப்பொழுது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அடிமேல் அடி வந்து கொண்டேயிருக்கிறது. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற நிலையில் விவசாயிகள் பெரும் துயரை அடைந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் துயரைத் தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அது மட்டுமல்ல, மதுரை மாநகரத்தைப் பொறுத்த மட்டில், பல இன்னல்களிலே அந்நகரம் சுழன்று கொண்டிருக்கிறது. குடி தண்ணீர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு, தமிழக அரசு பல முயற்சிகளிலே ஈடுபட்டாலும், அந்த முயற்சி இனி காலம் தாழ்ந்து போய் விடக் கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சியிலே வீடுகளிலே பொருத்துகின்ற குழாய்களிலே மீட்டர் பொருத்த வேண்டுமென்று அறிவித்து இருக்கிறார்கள். இந்தக் கால கட்டத்திலே அங்கே மீட்டர் பொருத்தினால், அக்கம்பக்கத்திலே இருக்கிற ஏழை மக்கள் தண்ணீர் பெற இடைஞ்சலாக இருக்கும். ஆகவே, அந்தக் குழாய்களுக்கு மீட்டர் பொருத்துவதை உடனடியாக நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாநகரத்திலே பல சிறு வியாபாரிகள் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சிறு வியாபாரிகளுக்கு மொத்த குத்தகையாக ஏலம் விடப்படுகிறது. அந்த ஏலத் தொகையை பலாத்காரமாக, 2 மடங்கு, 3 மடங்காக உயர்த்துகின்ற சூழ்நிலையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் கான்ட்ராக்ட்காரர்கள். அந்த கான்ட்ராக்ட்காரர்களுக்கு அவற்றை தொகைக்குக் கொடுக்கின்ற காரணத்தால் இவ்வாறு ஏலத் தொகையை 2 மடங்கு, 3 மடங்கு உயர்த்தி, சிறு வியாபாரிகளை கசக்கிப் பிழிந்து, கிட்டத்தட்ட 10, 15 ஆயிரம் வியாபாரிகள் வாழ்க்கையைக் கெடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆகவே, அந்த ஏலத்தை நிறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அங்கே பல மார்க்கெட்டுகள் இருக்கின்றன. சென்டர் மார்க்கெட், தெற்குவாசல் மார்க்கெட், திண்டுக்கல் மார்க்கெட் என்று இப்படி பல மார்க்கெட்டுகள் உண்டு. மொத்த வியாபாரிகளாக இருக்கிறவர்கள், கான்ட்ராக்டர்கள் இந்த மார்க்கெட்டுக்களை வைத்துக்கொண்டு அங்கே இருக்கிற சில்லரை வியாபாரிகளாக இருக்கிறவர்கள்மீது சுமையை வைத்து, அதிகமான இலாபம் சம்பாதிக்க முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை ஒரு பெரிய நகரம், பிரசித்திப் பெற்ற நகரம், அதனுடைய அருமை பெருமைகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். அந்தச் சீரும் சிறப்பும் குறையாத வகையில் பொலிவோடு இருக்க தமிழக அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

[.987 மார்ச் 3

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே உவந்தளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கிற வகையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி விடைபெற எண்ணுகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி இந்தத் தமிழ் மண்ணில் பூத்த பிறகுதான் ஏழை எளிய மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு சமுதாயப் பள்ளத் தாக்கிலே கிடக்கிற மக்களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்கின்ற சட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறார் கள் என்பதைச் சில புள்ளிவிவரங்களோடு சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த ஆளுநர் உரையிலே பாராட்டு வதற்கு ஒன்றும் இல்லை என்பதைப் போல சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் இதைச் செய்தாரா, அதைச் செய்தாரா என்று சொல்லுகின்றபோது வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை தருகிறோம் என்று சொன்னார்களே, தந்தார் களா என்று கேட்டார்கள். அதைத் தரவில்லை என்று அவர் களுக்கு உரிய பாணியில் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்ற இளைஞர்களைக் கேட்டால் சொல் வார்கள். வேலை தேடி வேலை வாய்ப்புத் துறையில் பதிவு செய் திருக்கின்ற இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டி ருக்கிறது; உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல மூடிக்கிடக்கின்ற ஆலைகள் எல்லாம் திறக்கப் பட்டிருக்கின்றனவா என்று கேட்டார்கள். மூடப்பட்ட ஆலை கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் திறக்கப்பட்டவை 9; ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூடிக் கிடந்த ஆலைகளில் ஏறத்தாழ 17 ஆலைகள் திறக்கப்பட்டிருக் கின்றன; மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தாய் உள்ளம் திறந்து வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், லோட்டஸ் கோவை; சக்தி டெக்ஸ்டைல்ஸ், பொள்ளாச்சி; பிரகாஷ் [illegible] கோவை; தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்; இ[illegible] மில்ஸ், மதுரை, அக்மா மில்ஸ், சென்னை; இந்தியா மீட்டர்ஸ், சென்னை; சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ், சென்னை; சோம சுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ், முத்தானந்தா மில்ஸ் போன்ற ஆலைகள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலை வர் அவர்களுடைய ஆட்சியிலே திறக்கப்பட்டிருக்கின்றன என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 மார்ச் 3] [திரு. க. சோலைராசு]

இன்றைக்குப் பேசிய அருமை நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் வறட்சி, வறட்சி என்று சொன்னார்கள். அவரைப் பொறுத்தவரையில் வாழ்க்கையில் விரக்தியடைந்தவரைப்போல எப்போதுமே விரக்தியாகவே பேசுகிறார். அந்த விரக்தியிலே தான் இங்கே பேசும்போது வறட்சி, வறட்சி என்றார். அவரு டைய பேச்சிலேதான் வறட்சி என்று நான் குறிப்பிட விரும்பு கிறேன். அவர் இந்த ஆளுநர் உரையில் 25-வது பக்கத்தைப் பார்த்தால் தெரியும். நிலத்தடி நீரைப் பெற இந்த ஆட்சி என்ன செய்கிறது; எதிர்காலத் திட்டம் பற்றி என்ன செய்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. சுப்பராயன் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். தவறான தகவல் இந்த அவை யின் குறிப்புகளில் பதிவாகக்கூடாது என்பதற்காகச் சொல் கிறேன். அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு பெருமை சேர்த்துக் கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் உண்மைக்குப் புறம்பான தகவல் இடம் பெறக்கூடாது என் பதற்காக, ஒரு திருத்தத்திற்காகச் சொல்கிறேன். இந்த ஆட் சியிலே மூடிக்கிடந்து திறக்கப்பட்ட ஆலைகளின் பட்டியலைச் சொல்லும்போது தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் திறக்கப்பட் டிருக்கிறது என்று சொன்னார்கள். மூடப்பட்ட அந்த ஆலை இன்னும் திறக்கப்படவே இல்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு : அருமை அண்ணன் திரு. சுப்ப ராயன் அவர்கள் இந்த ஆட்சி செய்து வருகின்ற பணிகள் பற்றி சரியாகத் தெரியாத காரணத்தால் வறட்சி, வறட்சி என்று சொல்கிறார்கள். வறட்சியைப் போக்க இந்த அரசு என்ன செய்கிறது என்று கேட்கிறார்கள். ஆளுநர் உரையில் 25-வது பக்கத்தில் நிலத்தடி நீரைப் பெறுவதற்கு என்ன செய்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1955-ல் இருந்து குளங்களை எந்த ஆட்சியும் தூர் எடுக்கவில்லை. தூர் எடுக்காததால் குளங்கள் எல்லாம் மண் மேடிட்டு தூர்ந்து போயிருக்கின்றன. இதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, திரா விட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி, தூர் எடுக்கும் திட்டங்களை யாரும் போடவில்லை. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதிலே இருக்கின்ற நுட்பத்தைத் தெரிந்துகொண்டு, தூர் எடுப்பதற்காக 400 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். 25-வது பக்கத்தில் இந்த விவரத்தைப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன் :** துணைத் தலைவரவர்களே, 400 கோடி ரூபாய் என்பது உற்பத்தி சாராத, தமிழ்நாட்டின் ஒட்டு மொத்தச் செலவில் அடங்குவது. (குறுக்கீடு) சரியான தகவலுக்காகச் சொல்கிறேன். அந்தப் பணம் ஒதுக்கப்படவில்லை திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1—00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 25-வது பக்கத்தில் ஏரிதூர் வார 400 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒதுக்கீடு என்பது பட்ஜெட்டிலே வரும். இப்போது அரசினுடைய கொள்கையைப் பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அமரவேண்டும்.

**திரு. க. சோலைராசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் அதிகமான விளக்கம் சொல்ல விரும்பாததுபோல் நானும் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. வறட்சி வறட்சி என்று சொல்கிறார்கள். அவர்கள் 25-ஆம் பக்கத்தைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறேனே தவிர வேறல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலைநாடுகளில் ஒன்று சொல்வார்கள் Customs and Convention என்று சொல்வார்கள். அதாவது வழக்கம் மற்றும் வழக்காறு என்று சொல்வார்கள். அதாவது எழுதப்படாத சட்டங்களாக அவை இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டில் அது அப்படியே தலைகீழாக மாறுகிறது. இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உலகம் போற்றும் உன்னதத் திட்டங்கள் நாட்டு மக்களின் நன்மைக்காக வருவது வழக்கம். ஆனால் எதிர்க்கட்சிக்கு இது ஒரு வழக்காறு. இந்தத் திட்டம் நிறைவேறாது, நிறைவேற்றுவதற்கு எவ்வளவு ரூபாய் இருக்கிறது, இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டாலும் உபயோகமாக இருக்காது என்ற வகையில் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் கொண்டுவரும்போதும் சொன்னார்கள்; இலவச சீருடைத் திட்டம் கொண்டுவரும்போதும் சொன்னார்கள்.. இப்படி சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அது ஒரு வழக்காறுபோல் அதாவது அவர்கள் சொல்லியே ஆகவேண்டும், சொன்னால்தான் எதிர்க்கட்சி என்ற வகையில் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

காலணியை ஏழை எளியவர்களுக்குத் தரவேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். தொலை நோக்கோடு இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. புராணங்களில் கூட குறிப்பிடப்பட்டு



இருக்கிறது. காஞ்சிபுராணம் என்பது ஒரு புராணம். அதிலே இந்து தர்மத்தில் 64 வகையான தானங்களும் 32 வகையான அறங்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்துவாக இருக்கக்கூடியவர்கள் 64 தானங்களையும், 32 அறங்களையும் செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதிலே காலணி அளிக்கக்கூடியது என்பதை மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும், பார்வதி தேவியாரே இதைச் செய்து இருக்கிறார் என்று சொல்கிறார்கள். நான் இப்படிக் கூறுகிறபோது மரியாதைக்குரிய நாஞ்சிலார் போன்றவர்கள் சிரிப்பார்கள். அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் புராணத்தில் இறங்கிவிட்டார்களே என்று கருதக்கூடும். அப்படி இருக்கக் கூடிய அவரைப் போன்ற எண்ணம் கொண்டவர்களுக்கு மற்றொன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

நபிகள் நாயகம் நற்குணத்தின் தாயகம், ரசூலே கரீமே, ஸல்லல்லாஹு அலைஹிய வஸ்சலம் என்று போற்றப்படுவதற்குரியவர். அப்படிப்பட்ட நபிகள் நாயகம் ஹதீஸ்-லே சொல்லியிருக்கிறார்கள். அந்த ஹதீஸிலே செருப்பு போடாதவர்களின் சாட்சியத்தை சபையில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல பல்வேறு கருத்துக்களை நபிகள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிற கருத்துக்களை எல்லாம்கூட அன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறபோது இதையும் ஒரு கருத்தாகச் சொல்லி அதற்கு விளக்கமும் சொல்லியிருக்கிறார்கள். செருப்பணியாதவனின் காலில் கற்களும், முட்களும் கரடுகளும் குத்தி இருக்கிற காரணத்தால் அவர்களுடைய நரம்புகள் பாதிக்கப்பட்டு அவர்களுடைய நினைவாற்றல் குறையும் அவர்களுக்கு ஞாபக மறதி அதிகமாக இருக்கும். அப்படிப்பட்டவர்களை பஞ்சாயத்திலே சாட்சியாக வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள் நபிகள் நாயகம். அந்த நபிகள் நாயகம் சொன்னதை இன்றைக்கு ஒரு திட்டமாகக் கொண்டு வந்து புரட்சித்தலைவர் அவர்கள் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தத் திட்டத்தை போடுவதற்கு முன்னுதாரணம் இருக்கிறது. நபிகள் நாயகம் போன்றவர்களும், காஞ்சிபுராணத்தை எழுதியவர்களும் இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் அன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள். அவர்கள் மூன்று, நான்கு மாதத்திற்கு முன்பு ஒரு கருத்தைச் சொன்னார்கள். என்னுடைய பெயருக்குப் பின்னால் டாக்டர் பட்டம் போடக்கூடாது; அவ்வாறு அழைக்க

வேண்டாம் என்று சொன்னார்கள். அதை நினைவுபடுத்த விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் என்று சொல்லித்தான் நாடு முழுக்க சுவரொட்டி ஒட்டப்பட்டது. டாக்டர் கலைஞர் பேசுகிறார் என்றுதான் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. ஆகவே நடைமுறையில் டாக்டர் கலைஞர், கதாசிரியர் கலைஞர் என்று நாட்டுமக்கள் சொல்லக்கூடிய நிலைமை வந்துவிட்டது.

தன்னுடைய சுய அனுபவங்களையே காசாக ஆக்கிக் கொள்ளக்கூடிய வகையில் கதை வசனம் எழுதுகிற ஆற்றல் படைத்த கலைஞர் அவர்களை, வளர்கிற தலைமுறையினர் இவர் அழகாகக் கதை வசனம் எழுதுகிறார் என்று சொல்கிறார்கள். பாலைவன ரோஜாக்கள் என்று எழுதுகிறார்; ஒரு மலர் பூத்தது என்று எழுதுகிறார். அதாவது அவர் ஒரு தலைவர் என்பதை மறந்து கதாசிரியராக வரக்கூடிய நிலைமை வந்துவிட்டதற்குப் பிறகு, நாட்டுமக்கள் தலைவர் என்று சொல்லவில்லை, எனவே நம்முடைய கட்சிக்காரர்களும் நம்மை மறந்துவிடுவார்கள், போட்டிக்குப் பேராசிரியர் அவர்கள் வந்துவிடுவார்கள். நாஞ்சிலார் அவர்கள் வந்துவிடுவார்கள் என்ற எண்ணத்தோடு அவர்கள் சொல்கிறார்கள். அந்த வகையில் கலைஞர் அவர்கள் டாக்டர் பட்டம் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அந்த டாக்டர் பட்டம் பெறுகிறபோது எங்களைப் போன்ற இளைஞர்கள் இரத்தம் எவ்வளவு இந்த நாட்டிலே சிந்தப்பட்டது, எவ்வளவு வன்முறைகள் நாட்டிலே தலைவிரித்தாடியது? அப்படி சிரமப்பட்டு பெற்ற டாக்டர் பட்டத்தை இன்றைக்கு வேண்டாம் என்று சொல்கிற ஞானோதயம் வந்துவிட்டது. அதற்குக் காரணம் என்ன? டாக்டர் நாவலர் அவர்களுக்குப் பட்டம் தந்துவிட்டார்கள். அண்ணா அவர்களே சொன்னார்கள் 'தம்பி வா, தலைமை தாங்க வா' என்று. அத்தகைய ஆற்றல் மிக்க நாவலர் அவர்கள் அந்தப் பட்டத்திற்குத் தகுதியானவர்கள்தான். அண்ணன் காளிமுத்து அவர்கள் முத்தமிழ் வித்தகர். அவர் படித்தாய்ந்து அறிந்து அந்த பட்டத்தைப் பெற்றார். இன்றைக்கு புரட்சித் தலைவருடைய தாயுள்ளத்திற்கும், கருணை உள்ளத்திற்கும்தான் அந்தப்பட்டம் வழங்கப்பட்டு இருக்கிறது.

இத்தகையவர்களுக்கு எல்லாம் டாக்டர் பட்டம் கொடுத்துவிட்டார்களே இனி நமக்கு வேண்டாம் என்று சொல்வதன் சாரம் என்ன? அப்படிச் சொல்வது என்று சொன்னால் முத்தமிழ் வித்தகர் காளிமுத்து அவர்களுக்குக் கொடுத்த அன்று மாலையே சொல்லியிருக்க வேண்டும். அல்லது அன்பிற்குரிய மாண்புமிகு நிதியமைச்சருக்கு கொடுத்த மறு நாள் சொல்லி இருக்க வேண்டும். அல்லது புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுத்த ஒரு வார காலத்திலாவது சொல்லியிருக்க வேண்டும். அப்போதெல்லாம் சொல்லாது நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு சொல்லுகிறார் என்று சொன்னால் தன் இயக்கத்தில் இருக்கிற தொண்டர்கள் கூட தம்மைத் தலைவர் என்று அழைக்க மாட்டார்களோ என்ற கருத்திலேதான் டாக்டர் கலைஞர் அவர்கள், டாக்டர் என்று இனி போட வேண்டாம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு வருகிற சுவரொட்டியை பார்க்கிறோம் 'தலைவர் கலைஞர் பேசுகிறார்', 'தலைவர் கலைஞர் தொடங்கி வைக்கிறார்கள்' என்று போட்டு வருகிறார்கள். ஆகவே அவருடைய கட்சிக்காரர்களுக்கே தலைவர் என்று நினைவுபடுத்த வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறார்கள்.





ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கொள்கையிலே குழப்பம் என்று சொன்னார்கள். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். முரசொலி பத்திரிகையை நாங்களும் படித்துக் கொண்டிருக்கிறோம். அந்த முரசொலி பத்திரிகையிலே இன்னின்ன ஊரிலே இன்னின்னார் எரிக்கிறார்கள் என்று பட்டியல் போட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படி பத்திரிகையிலும் வெளியிடப்பட்டு, அவர்களும் எரிக்கிறார்கள். அப்படி எரித்த பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொல்கிறார். நாங்கள் காதல் கடுதாசியை எரித்தோம் என்று சொல்கிறார். காதல் கடுதாசியை எரிப்பதாக இருந்தால், காதலிலே தோல்வியுற்ற அந்தப்புரத்திலே இருந்து எரித்துக் கொள்ளுங்கள்; அல்லது அறையிலே போய் முடங்கிக் கொள்ளுங்கள். ஆனால் ஆயிரக்கணக்கான பேர்களை ஊர்வலமாக அழைத்துக் கொண்டு வந்து எரித்த பிறகு இப்படிச் சொல்வது வீரம் என்று போற்றக் கூடிய அளவிற்குத் தரம் தாழ்ந்து விட்டதா இந்த தமிழ் நாட்டிலே என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அன்பிற்குரிய சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு பேசுங்கள். முழுமையாக வேண்டுமானால் சொல்லுங்கள். இப்போது நான் ஈல்டு ஆகவில்லை. (குறுக்கீடு) நீங்கள் இல்லை இல்லை என்று சொல்வீர்கள். நான் இருக்கிறது இருக்கிறது என்று சொல்வேன். ஆகவே, நான் முடிந்த பிறகு சொல்லிக் கொள்ளுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இடையிலே வேண்டாம். பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்பு கொடுக்கிறேன். இப்போது உட்காருங்கள்.

திரு. க. சோலைராசு: துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் இந்தி வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அங்கே இரட்டைக் குழல் துப்பாக்கியைப் போல் இருக்க வேண்டிய திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்திலே உரையாற்றுகிறபோது புரட்சித் தலைவரின் கருத்து என்றாவது சொல்ல வேண்டாம்? ராணுவத்திலே உயர்வு கொடுக்க வேண்டும் என்றாவது சொல்ல வேண்டாமா அந்தக் கருத்து, புரட்சித் தலைவர் பேசிய கருத்து அதைச்

சொல்லுகிறோம் என்றாவது சொல்ல வேண்டாமா. நாடாளு மன்றத்திலே சி. டி. தண்டபாணி அவர்கள் மாறாக பேசியிருக்கிறார்கள். அது அங்கே பதிவாகியிருக்கிறது. இதிலே என்ன கொள்கையிலே முரண்பாடு உங்களுக்கு என்று கேட்கிறேன்.

அது போல உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள் கலைஞர் ஆட்சிக் காலத்திலே. கொண்டு வந்த சட்டத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு அதை மறுபரிசீலனை செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். அதிலே என்ன குழப்பம்? இந்தக் குழப்பங்களை விடவா நாங்கள் குழப்பம் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது சாதனை இது இல்லையா, இது இல்லையா என்றெல்லாம் கேட்டார்கள். நான் கேட்க விரும்புகிறேன். 24 மாதங்களில் 480 நாட்கள் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்து. தொழிலாளர்களின் வயிற்றிலே பாலை வார்த்தாரே அது சாதனை இல்லையா?

அது போல உச்ச நீதிமன்றம் 1981 ஆம் ஆண்டு தீர்ப்பின் படி 240 நாட்கள் குறையாமல் பணி செய்து இருந்தால்தான் போனஸ் என்று சொன்னபோது, அதைத் திருத்த வேண்டும் என்று 22 மாநிலங்களும் கேட்டன. மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளித்துத் திருத்துகிறேன் என்று சொன்னது. ஆனால் திருத்த வில்லை. ஆனால் அவர்களின் திருத்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் 17–11–1983-இல் சட்டத்தைத் திருத் திக் கொண்டு வந்தார்களே அது சாதனை இல்லையா?

தொழில் தகராறு பிரச்னை வந்தால் இடைக்கால நிவாரணம் கொடுத்து, கதவடைப்பு ஆலை மூடுதல் போன்றவற்றை தடுக்கும் வகையில் 10(பி) என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்களே அது சாதனை இல்லையா? தென்னை, பனைமரம் ஏறும் தொழிலாளர் கள், மற்றும் கட்டிடத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் பணிக் காலத்தில் இறந்தால் உதவிப் பணம் கொடுக்க சட்டம் கொண்டு வந்தார்களே. அது சாதனை இல்லையா? தக்காவி கூட்டுறவுக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்து கொண்டு வந்தார்களே அது இமாலயச் சாதனை அல்லவா? பெண்களுக்கென்று தனி பல்கலைக் கழகம் கொண்டு வந்தார்களே அது பற்றி என்ன சொல்கிறீர்கள்? நகரங்களைப் போலவே கிராமங்களும் முன் னேற வேண்டும் என்ற எண்ணத்தில் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்தார்களே அது சாதனை இல்லையா? விவசாயி களுக்கும், குடிசையில் வாழ்பவர்களுக்கும் இலவச மின்சாரம் கொண்டு வந்தார்களே அது சாதனை இல்லையா. ஒரு பைசா



குறைக்க வேண்டும் என்று போராடிய விவசாயத் தொழிலாளர்களை துப்பாக்கியால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சுட்டார்கள். ஆனால் இன்றைக்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொண்டு வந்திருக்கிறார்கள். அது சாதனை இல்லையா?

(பிற்பகல் 1-10)

இன்னும் ஒரு கருத்தை, ஒரு புள்ளி விவரத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். 1977 வரை வீட்டு மனைப் பட்டாக்களை தமிழகத்திலே பெற்றவர்களின் எண்ணிக்கை 2,17,589. ஆனால் 1986 வரையில் பெற்றவர்கள் 10,27,926; 372.43 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அதைப் போல குடிநீர்க் குழாய் வசதியை வீடுகளுக்குக் கொடுப்பதில் 1977 வரை 7,645, அதாவது தி.மு.க. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1986 வரையில், 22,496 அதிக சதவிகிதம் 194.26. அதைபோல மானிய விலையில் அரிசி வழங்கப் பட்டது. 1977 வரையில் 4.96 சதவீதம் தி.மு.க., காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். ஆனால் இன்றைக்கு அண்ணா தி.மு.க. ஆட்சி காலத்திலே 13.23 சதவிகிதம். அதைப்போல நியாய விலைக் கடைகள் 9,287 கடைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் ஆட்சியில் இருந்தன. இன்றைக்கு 20,723 கடைகள் இந்த ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிராமப் புறத்தில் இருக்கிற மக்கள் நியாயமான விலையில், தரமான பொருள்கள் அந்தப் பகுதியிலேயே பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இத்தனை அதிகமான கடைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் துவங்கியிருக்கிறார்கள்.

அதைபோல ரூரல் டிஸ்பென்சரி என்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 138தான் இருந்தன. இந்தக் கிராம மருந்தகங்கள் இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 7,795 இருக்கின்றன. அடுத்து கட்டி முடிக்கப் பட்ட பள்ளிகள். (மணியடிக்கப் பெற்றது). இப்படிப் புள்ளி விவரங்கள் பலவற்றை சொல்ல முடியும். அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தங்களிடம் ஒரு தீர்ப்பைப் பெற விரும்புகிறேன். எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் இங்கே குறிப்பிட்ட சில விவரங்களை பேசுகிறபோது, அது கோர்ட் சம்பந்தப்பட்ட விவரங்கள், அது பற்றி பேசக்கூடாது என்று சொல்கிறீர்கள். அதைப்போல வெளியில் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் சொல்லக் கூடாது என்று சொல்கிறீர்கள். இங்கே பேசிய

மாண்புமிகு உறுப்பினர்களின் பேச்சுக்களை நீங்கள் கவனித்துக் கொண்டு தான் வருகிறீர்கள். ஒன்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்கிறேன். நீதிமன்ற வழக்கைப் பற்றிப் பேசக்கூடாது என்றால், எங்களுடைய டைரக்டர் ராஜேந்தர் வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்களின் பேச்சு குறிப்புகளில் ரெக்கார்ட் ஆகி இருக்கிறது. நீங்கள் அனுமதிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேற்றைக்கு நீங்கள் பேசிய போது அதனுடைய மெரிட்ஸ்குள்ளே போனீர்கள். * * மெரிட்ஸ்குள்ளே போய் நீங்கள் டிஸ்கஸ் பண்ண முடியாது. வழக்கின் பேக்ட்சை சொன்னால் அனுமதிக்கப்படும். நீங்கள் சொன்னீர்கள். ** என்று. இப்போது நான் கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். நீங்கள் அப்படி பேசுவதனால்தான் நான் தலையிட்டு நீக்குகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடமிருந்து தீர்ப்புதான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசியபோது, அடித்தார், உதைத்தார், அண்ணா பெயரைச் சொல்கிறவர்கள் ராஜேந்தருக்காக வாதாடலாமா என்று வழக்கினுள் போய் அவரைத் தவறு செய்த ஒரு குற்றவாளி என்று சபையில் சொல்லி அது ரெக்கார்ட் ஆகிறது..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வழக்கின் பேக்ட்சை மட்டும் சொல்லும்போது அவற்றை அனுமதிக்கிறோம். நீங்கள் அந்த பேக்ட்சை டிஸ்கஸ் பண்ண ஆரம்பித்தால் அதைத் தடுக்கிறோம். வழக்கு பெண்டிங்கில் இருக்கிறபோது அது குறித்து மெரிட்சை டிஸ்கஸ் பண்ணக்கூடாது என்றுதான் சொல்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** அதைத்தான் துணைத் தலைவர் அவர்களே, தெரிந்து கொள்ள விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உண்மைகளைச் சொல்லலாம். வழக்கின் மெரிட்ஸ், டிமெரிட்ஸ் பற்றி டிஸ்கஸ் பண்ண முடியாது. அதுதான் என்னுடைய தீர்ப்பு.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே. நான் சொல்வதைத் தாங்கள் தவறாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நான் கேட்கும் கேள்வி அதுவல்ல......

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் நினைப்பதைப் போல நான் தீர்ப்பு சொல்ல முடியாது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து கொண்டு நீங்கள் விரும்புவதையெல்லாம் பேசக்கூடாது. நான் தங்களை அனுமதிக்கவில்லை. உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை பற்றி எல்லா கட்சியினரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையிலும் ஆளுநர் உரையானாலும் சரி, ஆண்டு கொண்டிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, நாட்டு மக்களைப் பற்றி எள் அளவும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் சைக்கிளைக் கொடுத்தால் நான் அயர்ன் பாக்சை கொடுப்பேன். அவர் வேஷ்டி கொடுத்தால் நான் சேலை கொடுப்பேன். அவர் கண்ணாடி வழங்கினால் நான் செருப்பு வழங்குவேன் என்று இப்படி அவர் ஒன்று செய்தால் அதற்குப் போட்டியாக நாம் ஒன்று செய்யவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் செய்கிறீர்களே தவிர நாட்டு மக்களுக்குப் பயன்படுகிற விதத்தில் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் ஆட்சியை உங்கள் கண் முன்னால் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். பெருந்தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தமிழகத்தின் வருமானம் 45 கோடி ரூபாய். அவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகச் செல்கிறபோது தமிழகத்தின் மொத்த வருமானம் 152 கோடி ரூபாய். இந்த வருமானத்திலே அவர் கட்டிய அணைகள் எத்தனை? அவர் கட்டிய பள்ளிகள் எத்தனை? அவர் கட்டிய தொழிற்சாலைகள் எத்தனை? ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களோடு போட்டிப் போடுவதை விடுத்து, பெருந் தலைவர் காமராசர் அவர்கள் ஆட்சியின் போது எத்தனை அணைகள் கட்டினார்கள், எங்களுடைய ஆட்சியில் அதைவிட 10 அணைகள் கூட இருக்க வேண்டுமென்று அந்த வகையில் எண்ணுவீர்களானால் உண்மையில் அது பாராட்டத்தக்கதாகும். மாறாக, அவர்களுக்குப் போட்டியாக, அவர்கள் கண்ணாடி, கொடுத்தால், நான் செருப்பு கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். கருணாநிதி அவர்கள் நான் செருப்பாகத் தேய்வேன் என்று சொன்னால், நீங்கள் செருப்பையே வாங்கிக் கொடுத்துவிடுகிறீர்கள். இப்படி நீங்கள் மாறி மாறி வேடிக்கையாகச் செய்து கொண்டிருந்தால்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மார்ச் 3

தமிழகத்தின் வருமானம் என்ன ஆகும்? கிட்டத்தட்ட 3,500 கோடி ரூபாய் வருமானம் வந்து கொண்டிருக்கிற இந்த அரசில் மக்களுக்காக அமைக்கப்பட்ட அணைகள் எத்தனை என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். அதேபோல் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினீர்கள். எப்படி? தனியார்களுக்குக் கொடுத்தீர்கள். அதைப் போல் பாலிடெக்னிக்கு களையும் தனியார்களுக்குக் கொடுத்தீர்கள். இப்படித்தான் செய்கிறீர்களேயல்லாமல், மாணவர்கள் டொனேஷன் கொடுத்துத் தான் படிக்க வேண்டிய நிலைமையை நீங்கள் உருவாக்கித் தந்திருக்கிறீர்களேயல்லாமல், இலவச கல்விக்கான வாய்ப்பை, நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறீர்களா என்று கேட்க ஆசைப் படுகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே அமைக்கப்பட்ட அந்தக் கல்லூரிகளிலேதான் ஏழை எளிய மாண வர்கள் இன்றைக்குப் படித்து முன்னேற வேண்டுமே தவிர, கழகங்களை நம்பி எந்தக் கல்லூரியிலும் படிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. 20 ஆண்டுக் காலமாக தமிழகத் திற்கு வந்த தலைக்குனிவு போதும் என்று மக்கள் எண்ண ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று தமிழகத்திற்கு வருகின்ற வருமானத்தை முன் வைத்து, இங்கே அருமைச் சகோதரர் அவர்கள் பேசுகிறபோது 25-ஆம் பக்கத்தைப் பாருங்கள் என்று சொன்னார்கள். அதிலே 400 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதனுடைய வாசகத்தைப் பார்த்தால், முன் னால், முதலிலிருந்த நிலவரத்திற்கு, அதாவது சுமார் 20 ஆண்டு களுக்கு முன்பாக இருந்த நிலவரத்திற்குத் தமிழகத்தைக்கொண்டு வருவதற்காகத்தான் நீங்கள் 400 கோடி ரூபாயைச் செலவு செய்கிறீர்களே அல்லாமல், புதிதாக எந்தத் திட்டமும் இல்லை. முதலில் இருந்த நிலைக்கு கொண்டு வருவதற்கே 400 கோடி ரூபாய் என்று சொன்னால், இத்தனை ஆண்டுக் காலம் ஆட்சி செய்த நீங்கள் விவசாய முன்னேற்றத்திற்கு ஏதாவது அக்கறை கொண்டவர்களாக இருந்திருக்கிறீர்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே வறட்சி வந்த நேரத்திலே, நீங்களும் எங்களோடு சேர்ந்து கொண்டு வறட்சி, வறட்சி என்று சொல்கிறீர்களேயல்லாமல், நிரந்தரத் தீர்வு காண்கின்ற வகையில் ஏதாவது செயல் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டால் இல்லை.

அதேபோல் இங்கே சத்துணவைப் பற்றிச் சொன்னீர்கள். கருவுற்ற தாய்மார்களுக்கு உணவு வழங்குவதைப் பற்றிச் சொன் னீர்கள். இதற்கு 400 கோடி ரூபாயை உலக வங்கியிடமிருந்து கடனாகக் கேட்டிருக்கிறீர்கள். கடன் வாங்கி நீங்கள் சாப்



1987 மார்ச் 3] [டாக்டர் தே. குமாரதாஸ்]

பாட்டைக் கண்டிப்பாகப் போட்டுத்தான் தீரவேண்டுமா? இந்தக் கடனை நாளைக்கு அடைப்பது யார்? 400 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்று, ஏழை எளிய மக்களுக்கு நாங்கள் உணவு போடப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். உலக வங்கியிட மிருந்து கடன் வாங்கப் போகிறோம் என்று சொல்ல உங்களுக்குக் கேவலமாக இல்லையா? வருகின்ற பணத்தை வைத்து நல்ல பல திட்டங்களைச் செய்வதற்குப் பதிலாக, கடன் வாங்கி சோறு போட்டோம் என்ற பெயரை எடுப்பதற்காக இப்படிச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்த கவர்னர் உரையில் எதை எடுத் துப் பார்த்தாலும், மைய அரசு அனுமதி தரும், மைய அரசு உதவி தரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் செயலாற்றுவோம் என்று சொல்கிறீர்களேயல்லாமல், சுயபுத்தி யுடன் செயலாற்றக் கூடிய ஒரு நல்ல திட்டம் உண்டா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இப்படி உங்களைப் பற்றி இந்த அரசைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால் அதற்கே அதிகமான நேரம் போகும் என்ற காரணத்தால், அவை பற்றி சொல்லாமல் மக்களுடைய பிரச்சனையைப் பற்றி நான் சொல்ல விரும்பு கிறேன். அதன் மூலமாக அவைகளுக்கு ஒரு தீர்வு காண முடியும் என்ற அடிப்படையில் ஒன்றிரண்டு பிரச்சனைகளைச் சொல்ல விரும்புகிறேன். முடிந்தால் செய்து தாருங்கள், இல்லாவிட்டால் எல்லோருக்கும் கிடைப்பதைப் போல கோவிந்தாவாக இருக் கட்டும், அதை நாங்கள் அனுபவிக்கிறோம் என்று சொல்லி, எங் கள் தொகுதியினுடைய குறைகளை உங்கள் முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையைப் பற்றி கவர்னர் உரை யிலே மிக்க வருத்தப்பட்டு, அதுவும் கடைசியில் '1.25 இலட்சம் அகதிகள் பாதுகாப்புடனும், கண்ணியத்துடனும் அவர்கள் நாட் டிற்கு திரும்புவர் என்று நம்புகிறோம்' என்று சொல்லியிருக் கிறீர்கள். வீட்டிற்கு வந்த விருந்தாளியை, வெளியே போ என்று சொல்வதற்கு ஆரம்ப கட்டமாக, போய் விடுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப் படிப் போகாவிட்டால், நீங்கள் தள்ளிவிடப் போகிறீர்களா? இது தான் கவர்னர் உரையில் நீங்கள் சொல்லியிருக்கிற விளக்கமா? ஆகவே உங்களை நம்பி வந்த தமிழர்கள் எல்லாம் சின்னாபின்ன மாகப் போய் விட்டார்கள். சரி, போகட்டும். உங்களை நம்பி வந்ததால், அவர்கள் அதை அனுபவிக்கிறார்கள். அதைப் பற்றி நான் அதிகம் சொல்வதற்கு இல்லை.

5–12–1986 அன்று தமிழகத்தில் உள்ள மீனவர்கள், குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கேரளப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற காரணத்தால், அங்கே மீன் பிடிக்கக் கூடாது என்று சொல்லி 6–12–1986 அன்று அங்கேயிருக்கிற மீனவர்கள்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மார்ச் 3

தடுத்திருக்கிறார்கள். 8–12–1986 அன்று கேரள முதலமைச்சர் மாண்புமிகு மரியாதைக்குரிய கருணாகரன் அவர்கள், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே மீன் பிடிக்கக் கூடாது என்று அங்கே உள்ள பத்திரிகையில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 500 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு உங்களுக்கு நேரம் இல்லை.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பகுதியில் பாலங்கள் அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் றாம். அதை கவனித்துச் செய்வதற்கு உங்களுக்கு நேரம் லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், திருப் ரப்புப் பகுதியையும், களியக்காவிலைப் பகுதியையும் இணைக்கக் கூடிய தெற்குக் கடவுப் பாலம், அதேபோல் கணபதியான் கடவுப் பாலம் போன்ற இந்த பாலங்களுக்கு எல்லாம் எஸ்டிமேட் எடுக்கப்பட்டு, செய்து தருவார்கள் என்று சொல்லப்பட்டு, பின்பு கை கழுவப்பட்டது.

(பிற்பகல் 1–20)

இவை எல்லாம் கிட்டத்தட்ட 25 ஆயிரம், 50 ஆயிரம் மக்களுக்குப் பயன்படக்கூடிய மிக முக்கியமான பாலங்கள். அவற்றை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல் வறட்சி, வறட்சி என்று சொல்லி ஆண்டுதோறும் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்வதற்குப் பதிலாக கன்னியா குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாம்பழத் துறை அணை, பரளியாறு அணை, பள்ளிக் குப்பம் அணை இப்படிப் பட்ட அணைகளை நீங்கள் கட்டித் தருவீர்களானால் அந்தப் பகுதியில் நிரந்தரமான ஒரு வறட்சியை சமாளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். புதிதாக போர்வெல், கிணறுகள் அமைப் பதன் மூலமாக மட்டும் வறட்சியை நிவர்த்தி செய்து விட முடியாது. இந்த மூன்று அணைகளை நீங்கள் அமைத்துத் தந்தால் மூன்று பகுதிகளிலும் நிரந்தரமாகத் தண்ணீர் தேங்கி அதன் மூலமாக வறட்சியை சமாளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். எனவே அந்த அணைகளை அமைத்துத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பற்றி சொல்லுகிறபோது கன்னியாகுமரி மாவட் டத்தை மட்டும் உங்கள் நினைவுக்குக் கொண்டு வர விரும்பு கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியில் கட்டப் பட்ட பள்ளிகள். ஆனால் இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற



1987 மார்ச் 3] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அ.இ.அ.தி.மு.கழக அரசினால் அந்தப் பள்ளிகளுக்கு ஓலை போடுவதற்கு கூட நாதி இல்லை என்று சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். நீங்கள் எபபடி தான் இந்த மக்களின் வறட்சியை இன்றைக்கு போக்க போகிறீர்கள் என்று கேட்க ஆவலாக இருக்கிறேன்.

அதேபோல் வேளாண்மைத் துறையில் இருக்கின்றவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றக் கூடிய காவலர்கள் அவர்களுக்கு பதவி உயர்வு வேண்டும் என்று கேட்கிறார்கள். பதவி உயர்வு வேண்டும் என்று சொன்னால் ஆபீஸர் போஸ்ட் அல்ல. அவர்கள் கேட்பது அலுவலக உதவியாளர் பதவி. 1980 ஆம் ஆண்டு வரைக்கும் பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றியவர்கள் வேளாண்மைத் துறையில் பணியாற்றியவர்களாக பதவி உயர்வு கொடுத்து இருக்கிறார்கள். அதேபோல் இவர்களுக்கும் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்து, தமிழ், தமிழ் என்று சொல்லுகிற நாம் தமிழக அரசின் கீழ் செயல்பட்டுக் கொண்டு இருக்கிற அரசு ரப்பர் தோட்டத்தில் பணியாற்றக் கூடிய கிட்டத்தட்ட மூன்று ஆயிரம் தொழிலாளர்கள் பொங்கல் தினத்தன்று கூட வேலைக்குச் செல்ல வேண்டும் என்று கட்டாயத்தில் இருக்கிறார்கள். காரணம் அன்று வேலைக்குச் சென்றால் தான் அவர்களுக்கு சம்பளம் கிடைக்கும். ஆகவே தமிழன் மேல் பற்றுக் கொண்ட நீங்கள் சம்பளத்தோடு கூடிய விடுப்பை பொங்கல் திருநாள் அன்று அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு மருத்துவ மனைகளில் வழங்கக் கூடிய மருந்துகளின் தரத்தைப் பார்த்தால் மருந்து பெயருக்குத்தான் கொடுக்கப்படுவதாக இருக்கிறதே அல்லாமல் நோய்களுக்கு பயன்படக்கூடிய தரத்தில் இருக்கிற மருந்தாக ஒன்று கூட இல்லாத சூழ்நிலையில் இருக்கிறது.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இப்போது பொதுவாக கிட்டத்தட்ட மாவட்ட மக்களில் 30 சதவீதம் என்று சொல்லலாம் யானைக்கால் வியாதியால் அவதிப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதைப் பற்றி கடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கூட நான் சொன்னேன். ஆனால் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகளைப் பார்த்துக் கேட்கிற நேரத்தில் அவர்கள் சொல்லுவது நகராட்சிப் பகுதிகளில்மட்டும் பத்மநாபபுரம், கொளச்சல், நாகர்கோயில் ஆகிய பகுதிகளில் மட்டும் தனியாக அலுவலகங்கள் திறந்து இருப்பதாகவும் மற்ற பகுதிகளில் திறக்க எங்களுக்கு உத்திரவு வரவில்லை என்றும் சொல்லுகிறார்கள். மாவட்டத்தில் பெருவாரியான பகுதிகளில் கிராமங்கள் தோறும் இந்த யானைக்கால் வியாதி பரவிக் கொண்டிருக்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மார்ச் 3

கிறது. சுகாதாரக் கேட்டின் காரணமாக பரவக்கூடிய இந்த வியாதியை தடுக்க உடனடியாக எல்லா பகுதிகளிலும் முகாம் இட்டு, போர்க்கால நடவடிக்கை மாதிரி நீங்கள் செயல்பட்டால் தான் இதைத் தடுத்து நிறுத்து முடியும். எனவே அந்த மாவட்ட மக்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் 200 கோடி ரூபாயில் ஒரு டைட்டானியம் தொழிற்சாலை வருவதாக இருந்தது. இந்தத் தொழிற்சாலைக்கு எல்லாவிதமான ஆக்க பூர்வமான பணிகளும் மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் யாரும் விரும்பாத மதக் கலவரம் நடக்கிறது என்ற காரணத்தைக் காட்டி 135 கோடி ரூபாயை ஒரிசா மாநிலத்திற்கும், 65 கோடி ரூபாயை நெல்லை மாவட்டத்திற்கும் அந்தப் பணத்தை பங்கிட்டு கொடுத்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வர இருந்த 200 கோடி ரூபாய் தொழிற்சாலை தடைபடுத்தப்பட்டு இருக்கிறது. தமிழக அரசு விழிப்புடன் இருந்து செயல் பட்டு இருக்குமானால் 200 கோடி ரூபாய்க்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருவதாக இருந்த தொழிற்சாலை தடைபட்டு இருக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இன்னும் காலம் கடந்து விடவில்லை. நீங்கள் முயற்சி செய்தால் இன்னும் அந்த தொழிற்சாலையை கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு வரமுடியும். எங்கள் மாவட்டத்தின் மேல் அக்கறை கொண்டு அந்த தொழிற்சாலையை பெறுவதற்கு உண்டான வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நெசவாளப் பெருங்குடி மக்களைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறீர்கள். மத்திய அரசு நிர்ணயித்ததை விட அதிகமாக நாங்கள் சாதித்து விட்டோம் என்றும் கூட்டுறவு சங்கங்களை அமைத்து விட்டோம் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். எதற்காக நீங்கள் இவ்வளவு மார் தட்ட வேண்டிய அவசியம்? 1983–84 லிருந்து இதுவரைக்கும் கொடுக்கப்பட வேண்டிய தள்ளுபடி ரிபேட் தொகை இன்னும் வழங்கப்படவில்லை. நெசவாள மக்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்தால் அல்லவா அவர்கள் நிம்மதியாக வாழ முடியும்? அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தர தவறிய நீங்கள் எதற்காக அதிகமாக கூட்டுறவு சங்கங்களை அமைக்கிறோம், தள்ளுபடி அளிக்கிறோம் என்று பெருமை அடைகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.



1987 மார்ச் 3] [டாக்டர் தே. குமாரதாஸ்]

கன்னியாகுமரி மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம். உங்களால், இந்த அரசால் அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த மாவட்டத்திற்கு அனைத்து வரிகளையும், அனைத்து கடன்களையும் ரத்து செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளை எடுக்கின்ற சமாசாரத்தை பெரிதாகப் போட்டிருக்கிறீர்கள். 1— 1— 1987க்குப் பிறகு உங்களால் சொல்லப்பட்ட அந்த பிராந்தியைத் தவிர, வேறு எந்த விதமான கள்ளோ, சாராயமோ தமிழகத்தில் இல்லாத மாதிரி கூறியிருக்கிறீர்கள். உண்மையிலேயே ஒரு கமிட்டியைப் போட்டுப் பார்த்தால் முன்பு இருந்ததைவிட பல மடங்கு அதிகமான கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள், தெருவுக்கு ஒன்றாக உரிமம் பெற்று விற்றவன், இப்போது 10-ஆக விற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலை நிலவுகிறது இதைத் தடுத்து நிறுத்துவதற்கு * * அரசாங்கத்திற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இதைப் போய் என்ன சாதனை என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * *

என்ற வார்த்தைகளை நீக்கி விடுமாறு உத்தரவிடுகிறேன்.
(குறுக்கீடுகள்)

*திருமதி ஏ, எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் கருதுகிறேன்.

முதலில் இங்கே நேற்றைய தினம் பேசிய கனம் அங்கத்தினர்கள் மறுபடியும் மறுபடியும் இந்த இந்தியைப் பற்றியே பேசுவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. காரணம், 1950 ஜனவரி மாதம் 26-ஆம் தேதி நாம் குடியரசுப் பிரகடனம் பண்ணும்போது இந்தி தான் ஆட்சி மொழி, பாக்கி எல்லாம் அவர்கள் மொழி வழி மாகாணத்தில் அந்தந்த மொழியை ஆட்சி மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றி, அது மட்டுமல்லாமல் 15 ஆண்டுகளுக்கு என்று ஒரு காலக்கெடு நிர்ணயித்திருந்தார்கள். அது 1965-ஆம் ஆண்டோடு ஆங்கிலத்தை அகற்றிவிட வேண்டுமென்ற நிலைமை இருந்தது. பெருந்தலைவர் காமராசர் அவர்கள் 1957-லே நேரு பெருமகனாரிடத்திலே சொல்லி இந்த மாதிரி நிலைமை இருக்கக் கூடாது. இதற்கு இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்பிறகு 1967-லே நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருந்த இந்திரா காந்தி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, அதை ஒரு மசோதாவாக நிறைவேற்றி, 1967-ல் எந்த மாநிலம் ஆங்கிலம் வேண்டாம் நாங்கள் இந்தியைத்தான் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்லக் கூடிய நிலைமை வந்தாலொழிய நாங்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று நமக்கு உத்திரவாதம் கொடுத்திருக்கிறார்கள். இப்பேற்பட்ட சூழ்நிலையில் மறுபடியும் மறுபடியும் இந்தி வருகிறது.

நவோதயாப் பள்ளி வேண்டாம் என்று சொல்லப்படுகிறது· நவோதயாப் பள்ளி வேண்டாம் என்று சொன்னால், யார் வேண்டாம் என்று சொல்லுகிறார்களோ, அவர்கள் படிக்க வேண்டாம். ஆனால் மத்திய அரசாங்கம் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ரூபாய் 5 கோடி ஒதுக்கி, ஒரு பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று கருதுவார்களேயானால், அதை நாம் தடுப்போமேயானால், அது நியாயமாகப் படவில்லை. நன்றாகவும் இல்லை. நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் நம்முடைய மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே மிகவும் அபிமானம் வைத்து இருக்கிறார்கள். அவர்கள் சொல்லக் கூடிய காரியங்களை அவர்கள் முடித்துக் கொடுக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நவோதயா பள்ளி வேண்டாம் என்று சொன்னால், அது நம்முடைய எதிர்கால சந்ததிகளை மிகவும் பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர்ந்து அதை இத்தோடு விட்டு விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொளள விரும்புகிறேன்.

இங்கே கவர்னருடைய உரையில் கள், சாரகை் கடைகளை எடுத்தது பற்றி நான் பாராட்டுகிறேன். ஆதாப் பொறுத்த வரையில், யார் கள், சாராயத்தைக் காய்யச்சுகின்றர்களோ, அவர்களுக்கு ஓராண்டும், யார் குடிக்கின்றார்களோ அவர்களுக்கு 3 ஆண்டுகளும், ஜெயில் தண்டனை கொடுக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவோமேயானால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கள், சாராயக் கடைகளினால் பாதிக்கப்பட்ட மரம் ஏறுபவர்களுக்கு, அந்தத் தொழிலினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 2,000 அளிப்பதென்பது உண்மையிலேயே எல்லோராலும் பாராட்டப் படக் கூடிய ஒன்றாகும். அந்தக் குடும்பங்கள் வாழ்வதற்கான வழி செய்வதற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அத்தோடு அண்ணா மாவட்டத்தை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும். காரணம், அண்ணா மாவட்டம், திண்டுக்கல் பகுதி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில், மோசமாக இருக்கிறது. அங்கே தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்





டிருக்கிறார்கள். எனவே அதை வறட்சிப் பகுதியாக அறிவித்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீருக்காக 265 போர் போடுவதற்காக சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். 265 போர்களிலே எங்கேயெல்லாம் தண்ணீர் இல்லாமல் இருக்கிறதோ, அங்கேயெல்லாம 'டீப் போர்' 200, 300 அடி போட்டு ஜெட் பம்ப் வைத்து, மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

[பிற்பகல் 1–30]

பாலாறு-புரந்தலாறு திட்டத்திற்கு ஏற்கனவே 10,000 ஏக்கரோடு புதிய ஆயக்கட்டு 9,000 ஏக்கர்களாகும். அந்த இடங்களில் ஓல்ட் ஆயக்கட்டிலே 4,500 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதிலே, கிட்டத்தட்ட பாதிதான் விளைந்ததே தவிர, மீதியெல்லாம் விளையவில்லை. ஆகையால் அதை நாம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கு, கண்மாய்களை செப்பனிடுவதற்கு, கண்மாய்களை நவீனமயமாக்குவதற்கு அரசு 4 கோடி ஒதுக்கியிருக்கிறது. அதுவும் பராட்டக்கூடிய ஒன்றாகும். பல ஆண்டுக்காலமாக அந்தக் கண்மாய்களில் தூர் எடுக்காமல் அப்படியே கிடக்கின்றன. ஆகவே, வெகு விரைவிலே அந்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது சப்ளை சேனல். வாய்க்கால்களில் தூர் எடுப்பதற்கு ரூ. 140 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 140 கோடி ரூபாயை வெகு விரைவிலே செலவு செய்து, மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பை பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியில் புது ஆடக்குடி—வரதாப்பட்டிணம் (வழி) பெரியகுளம் கண்மாய் கரைரோடு போடுவதற்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக 200 குடும்பங்களுக்கு வேலை கிடைக்கக் கூடிய நல்ல வாய்ப்பு இருக்கும். அவைகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் மதிய உணவு திட்டத்திற்கு அரசாங்கம் 400 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி செலவு செய்ய இருக்கிறது. காலணிகள் கொடுப்பதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. பணம் அரசாங்கம் செலவு செய்கிறது என்றால், அதற்கு திரும்ப இலாபம் கிடைக்க வேண்டும். அதிலிருந்து என்ன வருமானம் வரும் என்பதை நினைத்துப் பார்க்க

வேண்டும். அந்த அளவிலே நாம் காலணி கொடுப்பதை வேண்டாம் என்று சொல்லாவிட்டாலும் கூட, இவையெல்லாம் இந்த நாட்டிற்கு தேவைதானா என்பதை மாண்புமிகு அமைச்சரவை சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதே அளவில் 400 கோடி ரூபாய்க்கு நீங்கள் தொழிற்சாலைகளை உருவாக்கவேண்டும், அந்தக் காலத்தில், காங்கிரஸ் காலத்தில், திருச்சியிலே பெல் தொழிற்சாலை, கிண்டியிலே தொழிற்பேட்டைகளைஉருவாக்கியதினால் தான் இலட்சக்கணக்கான குடும்பங்கள் இன்றைக்கு பிழைத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையிலே நாம் திட்டங்களைப் போட வேண்டுமே தவிர, நாம் போட்ட திட்டங்களினால் அரசாங்கத்திற்கு வருமானம் இல்லாமல், ஏதோ நாம் திட்டம் போட்டுவிடுகிறோம் என்று நாம் நினைத்ததைச் செய்துகொண்டு இருப்போமேயானால், அது நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் உகந்தது அல்ல. நாட்டிலே, எதிர்காலத்திலே வேறுவிதமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழிற்துறையில், தனி உயர் வெப்ப செங்கற்களை தயார் செய்வதற்காக தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், தொழிற்சாலை ஒன்றை நிறுவ, ரூ. 52 கோடி ஒதுக்கப்போவதாக அறிகிறேன். அதையும் சீக்கிரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1980ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்திற்கு ஒரு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் போடவேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்தது. இதுவரை ஏதோ பேப்பர் போய் வந்துகொண்டிருக்கிறதே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற்சாலை அமைப்பதிலே சற்று கண்ணும் கருத்துமாக இருந்தால்தான் எதிர்காலத்தில் இந்த நாட்டை ஒரு சுபிட்சமான நிலைமைக்குக் கொண்டுபோக முடியும் என்பதை அமைச்சர்கள் மனதிலே வைத்து இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி. இந்த கைத்தறியில் மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. அதில் 3.84 இலட்சம் கைத்தறியாளர்களை கூட்டுறவிலே இணைத்திருக்கிறீர்கள். பாக்கி உள்ளவர்களை இணைக்கவில்லை. அவர்கள் மாஸ்டர் வீவர்களிடம் மாட்டிக்கொண்டு, பிழைப்பதற்கு வழி இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்க வேண்டும். அவர்கள் வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்படவில்லை. அவர்களையும் விரைவில் சேர்த்து, அவர்களும் பயன் அடையச் செய்ய வேண்டும்.





அடுத்தது விவசாயம். இன்றையதினம் விவசாயிகளுக்கு உண்மையிலேயே சோதனைக் காலமாக இருந்துகொண்டிருக்கிறது. சொட்டு நீர்ப்பாசனம் என்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். அது பாராட்டத்தக்கது. அதிலே கூட நீங்கள் சிறிய விவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள் என்று நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். பாவம் சிறிய விவசாயியால் எவ்வளவு பணம் செலவழிக்க முடியும்! அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அதிநடுத்தர, மத்திய விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டும். அதிகப் பரப்பளவுள்ள விவசாயிகளுக்கும் இந்த சொட்டு நீர்ப்பாசனத்தை ஏற்படுத்திக் கொடுப்போமேயானால், நாம் உணவு உற்பத்தியில் அதிக அளவில் முன்னுக்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதன் பிறகு, வீடுகள் கட்டுதல். அதாவது ஒரு சட்டமே, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு கான்டிராக்ட் விடக்கூடாது என்று சொல்லி, ஏற்கனவே காங்கிரஸ் காலத்தில் இருந்தது. இன்றைக்கு நம்முடைய அமைச்சரவர்கள் அதை மாற்றி பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எல்லாம் கான்டிராக்ட் கொடுத்து, அது ரொம்ப மோசமாகக்கூடிய அளவிலே இருக்கிறது. சில இடங்களில் நன்றாக நடக்கிறது. ஆனால் சில இடங்களில்—இதற்கு உதாரணம் ஒன்று சொல்கிறேன். என்னுடைய பழனி தொகுதியில், எருமைநாயக்கன்பட்டி என்ற ஊர். ** பஞ்சாயத்து இருக்கின்றது. தயவு செய்து, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு, ஏற்கனவே சட்டம் இருக்கிறதே—நாம் நாமினேஷன் போடும்போதே கான்ட்ராக்டராக இருக்கிறாரா என்று தெரிந்துதான் போடுகிறோம். அப்படி கான்ட்ராக்டர்களாக இருந்தால், அதை ரத்து செய்துவிட்டுத்தான் நாமினேஷன் தாக்கல் செய்ய வேண்டும்.—அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கி பஞ்சாயத்துத் தலைவர்களிடம் கொடுக்காமல்— நாங்களும் கேட்க முடியவில்லை; அந்த டிபார்ட்மென்ட் ஆட்களும் கேட்க முடியவில்லை; அமைச்சர் அவர்கள் சென்றாலும் கேட்க முடியாது: ஆகவே, அந்த வீடுகள் கட்டுவதில் நல்ல முறையில் கட்ட வேண்டும் என்பதையும் நான் கூறி, அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய அந்தக் காண்டிராக்ட் விஷயத்தை தயவு செய்து நிறுத்துங்கள் என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது அல்லாமல், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், நாம் அந்த வீடுகள் கட்டுவதிலே கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது அரிசனங்களுக்கு மாத்திரமா? அல்லது ஜாதி இந்துக்களுக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குமா என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தத் திட்டம் —ஓடு, மரம் செங்கல் இவைகளை அவர்களுக்கே கொடுத்து, அந்த மக்களில் யார் பெனிபிஷியரியோ, யார் பயன் அடைபவர்களோ, அவர்களாகவே செய்து கொள்ளலாம் என்ற நிலைமையை உருவாக்கக்கூடிய வகையிலே இருக்கிறது. இது பாராட்டுக்குரியது தான். ஆனால், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள், மற்ற இதர ஜாதிகளிலேயும் ஏழைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பு செய்து, நாம் அதிக அளவில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் வாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பேரவையிலே முன் மொழியப் பெற்றிருக்கிற......

திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே பேசிய, மாண்புமிகு உறுப்பினர்,**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எப்படி கிளாரிபிகேஷன் ஆகும்? கான்ட்ராக்ட் விடவேண்டாம் என்று தான் ஜெனரலாகச் சொன்னார்கள். நீங்கள் எதிர்க் கேள்வி போட முடியாது. (குறுக்கீடு) நீங்களும் சொல்ல வேண்டாம். அவர் சொன்ன பதிலும் வேண்டாம். அவற்றை நீக்கி விடுகிறேன். (குறுக்கீடு).

*திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: ஆளுநர் உரையை முன் மொழிந்து இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் வறட்சியின் கொடூரத் தாண்டவம் இருந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், இன்றைக்கு சட்டமன்ற நடவடிக்கைகளிலே மிக அதிகமாக, வறட்சியின் பக்கமாக இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் அத்தனை பேருடைய கவனமும் இருக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையைச் சொல்லி, இந்த நிலையிலே இன்றைக்கு தமிழக அரசும் பல நிவாரணத் திட்டங்களை இங்கே வகுத்துக் கொடுத்து, இன்னும் மத்திய அரசிடத்திலே எல்லாம் வேண்டுதல்கள் சமர்ப்பித்தும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(பிற்பகல் 1-40)

ஆனால் இதைப் போல் சென்ற ஆண்டில் கூட பார்க்கிற போது, இதைக் காட்டிலும் அதிகமான வறட்சி தமிழகத்திலே நிலவி வருகின்ற நேரத்திலேகூட இங்கே நம்முடைய கவனக் குறைவின் காரணமாக வறட்சிப் பணிகள் காலம் தாழ்த்தி அங்கே வந்து, அந்தப் பணிகளுடைய முழுமையான பலன்கள் மக்களுக்குக் கிடைக்காத ஒரு நிலை இருந்தது. அந்த நிலையின் காரணத்தாலேதான் இந்த ஆண்டு தொடர்ந்து வந்த வறட்சியின் கொடுமையால் இன்றைக்கு அதிகமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டாவது கூடிய விரைவிலே மாவட்டங்களிலே இருந்து அறிக்கைகளைப்பெற்று, மாநிலத்திலே செய்யப்படவேண்டியவைகளையும், மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்படவேண்டியவைகளையும் கூடிய சீக்கிரத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னாலும், எடுத்துச் சொல்லியிருக்கிற வேகத்திலேயே அந்த மத்திய கமிட்டி அத்தனையும் இங்கே வந்து பார்வையிட்டு, அதற்கான ஒதுக்கீடுகளை மிகச் சீக்கிரமாக ஒதுக்கவேண்டும்.

அதற்கான பணிகளைத்தான் மிக முக்கியமாகச் செய்யவேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தி அப்படி செய்கின்ற நேரத்திலேதான் இன்றைக்கு விவசாயத்திலே அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற அந்த விவசாய கூலிகள் அத்தனைபேரும் எங்கள் பகுதியிலே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே அதிகமாக விவசாய பாதிப்பின் காரணமாக, தொடர்ந்து நான்கு ஆண்டுகள் வறட்சியின் காரணமாக குடிபெயர்ந்திருக்கிற ஒரு நிலைமையெல்லாம் இன்றைக்கு இருக்கிறது. ஆரம்பகாலத்திலே, குடிபெயர்ந்திருக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லுகிற நேரத்திலே, அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் இல்லை இல்லை என்று சொன்னாலும், அதற்குப் பின்னாலே வரக்கூடிய காலகட்டத்திலே அதையும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு கடுமையான வறட்சி அங்கே இருக்கிறது. இந்த நேரத்திலே அந்த விவசாயக் கூலிகள் அத்தனை பேரும் தஞ்சை மாவட்டம் மற்றும் இன்னும் பல்வேறு மாவட்டங்களுக்கெல்லாம் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கு வாழ்வதற்கு போதிய வசதி இல்லாத காரணத்தால் மீண்டும் திரும்புகின்ற நிலை இருக்கிற நேரத்தில் அந்த வறட்சிப் பணிகள் அவர்களுக்கு கை கொடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்தத் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சியிலே வாடுகின்ற அந்த மக்களை, மின் கட்டணத்தைப் பொறுத்தமட்டிலே 1982-83 ஆம் ஆண்டுகளிலே அவர்கள் கட்டத் தவறிய பணத்தை ஒரு போராட்ட காலத்திலே அவர்கள் செய்த தவறுக்கெல்லாம் அவர்கள் அந்தக் கடன் தொகையையெல்லாம் கட்டியதற்குப் பின்னாலே, அந்தத் தொகைக்கான தண்டத் தொகையை இன்றைக்கு அறிவித்து, அதை உடனடியாக கட்டவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். ஒரு விவசாயி எந்தவித விவசாயமும் இல்லாமல், மோட்டார் பம்ப் செட்டில் எந்தவித இயக்கமும்

இல்லாமல், கடந்த ஈராண்டு காலம் முடிந்ததற்குப் பின்னாலும் மீண்டும் இப்போது உடனடியாக நீங்கள் அந்தப் பணத்தையும், அந்த தண்ட வட்டித் தொகையையும் கட்டவேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில், அந்த விவசாயிகள் எந்தப் பணத்தை வைத்து அதை சமாளிப்பார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தமாதிரியான தண்டத் தொகைகளை யெல்லாம் வசூலிப்பதிலே, எத்தனையோ கடன்களை இன்றைக்கு 'ரைட் ஆப்' பண்ணி இருக்கிற இந்த நேரத்தில் அந்தத் தொகையையும், அந்த மக்களிடத்தில் வசூலிப்பதை நிறுத்தவேண்டுமென்று சொல்லி, மேலும் இன்றைக்குக் கூட்டுறவு கடன்களுக்கு நல்லதொரு வாய்ப்புக்கொடுத்து அந்த வட்டி வீதத்தையெல்லாம் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால் தள்ளுபடி செய்ததற்குப் பின்னாலே, வறட்சி தொடங்கி இருக்கிற காரணத்தினாலே மக்கள் அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே இதற்கு மேலாக அந்த மக்கள் விவசாயம் இல்லாத காரணத்தினாலேதான் அந்தப் பணத்தைச் செலுத்த முடியவில்லை என்ற எண்ணத்தின் அடிப்படையிலே மேலும் ஒரு 12 மாதங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற அந்த முதல் தவணையைத் தள்ளிக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த மாதிரி நேரங்களிலேதான் வறட்சிப் பணிகள் பட்டுமல்லாமல் இன்னும் இந்தப் பகுதியிலே எந்த நிரந்தரப் பணிகளைச் செய்தால், எந்த நிரந்தரச் சூழ்நிலை ஏற்பட்டால் மக்கள் குடிபெயராமல் நல்ல நிலைக்கு அங்கே வர முடியும்; அடிப்படை வசதிகளை, அடிப்படை உணவு வகைகளைக்கூட பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்ற அடிப்படையிலே எங்கெங்கே ஆலைகள் பெருந் தொழில்கள் இல்லையோ அந்த மாதிரி இடங்களிலெல்லாம் ஆலைகள் நிருவப் படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மதுரை மாவட்டத்தை எடுத்துப் பார்க்கிறபோது, வறட்சியால் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற அந்த மாவட்டத்திலே அதிகமான ஆலைகள் இல்லாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. எங்களுடைய உசிலம்பட்டி தாலுக்காவை எடுத்துக் கொள்கின்ற நேரத்தில், உசிலம்பட்டி—திருமங்கலம் தாலுக்காவிலே அதிகமான வறட்சி இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. பிரிக்கப்பட்ட மதுரை மாவட்டத்திலே, இப்பகுதிகளில் இன்றைக்கு அதிகமான வறட்சி. இந்தப் பகுதியிலே பார்க்கிறபோது ஆலைகள் குறைவாக இருக்கின்றன. உர ஆலைகள் மத்திய அரசின் மூலமாக கிட்டத்தட்ட 15 ஆலைகள் ஏற்படுத்தப் போவதாக நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்துகின்ற அந்த 15-லே ஒன்று தமிழகத்திற்கு வர இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒன்று நிச்சயமாக எங்களுடைய உசிலம்பட்டி தாலுக்காவிற்கு வருமேயானால், நாங்கள் நிச்சயமாக உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருப்போம்.



அப்பேர்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தினால்தான் இனியும் வருங்காலத்திலே வறட்சி இருக்கும் என்ற ஒரு நிலை இருந்தாலும் மக்களுக்கு, விவசாயக் கூலிகளுக்கு, தங்களுடைய பணியினை சற்று மாற்றி அமைத்துக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் தமிழகத்தில் மது விலக்கை அரசு அமுல் செய்திருக்கிறது. ஆனால் அதற்குப்பிறகும் கள்ளச் சாராயத்தின் பெருக்கத்தைப் பார்க்கிறபோது, மிக அதிகமாக இருக்கிறது. கள்ளச் சாராயத்தைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றாலும் அது எப்படி இருக்கிறது என்றால், பெரும் பணக்காரர்களும் முதலாளிகளும் ஒட்டுமொத்தமாகக் கள்ளச் சாராயத்தைத் தயாரித்து விற்பனை செய்து லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் பிடிபடவில்லை. ஆனால் எங்கோ ஒரு மூலையில் பானை வைத்துக்கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுகிற ஒரு சாதாரண விவசாயக் கூலி அதுவும் அவன் வேலையற்ற நிலையில்தான் அதைத் தன்னுடைய வயிற்றுப் பிழைப்புக்காக செய்கிறான்— பிடிக்கப்படுகிறான். அவனுடைய பிழைப்பில் மட்டுமே மண்ணைப்போடுகிற நிலைமை இருக்கிறது. இதற்காக அந்த விவசாயக் கூலியை நாம் ஆதரிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பெருமளவில் தயாரிக்கிற அந்தப் பண முதலைகளுக்கும், பணக்காரர்களுக்கும் பாதுகாப்பு அளிக்காமல் அவர்களைக் காலி செய்கிற நிலை, அவர்களுடைய பிழைப்பிலே மண்ணைப் போடுகிற நிலைமை உருவாக வேண்டும். அப்போதுதான் சிறு வியாபாரிகளும் ஆதரவு இல்லாமல் இருப்பார்கள். அவர்களும் அந்தப் பிழைப்பைக் கைவிட வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே, வறட்சி நேரத்தில் எந்த மாதிரியான திட்டம் போட்டாலும் மக்களுக்கு ஒரு நிரந்தரமான நிவாரணம் தருவதாக இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, சேலம் போன்ற மாவட்டங்களில், அதிக வறட்சி உள்ள பகுதிகளில் பால் வளத்துறை மூலம் பால் மாடுகளை வழங்கி அவற்றை வளர்ப்பதன் மூலமாக ஏழை மக்களுக்கு உதவி செய்கிறார்கள். அதைப் போலவே எங்களுடைய மதுரை மாவட்டத்திலும் அதைப் போன்ற ''டையரி'' திட்டங்களை ஏற்படுத்தி, செயல்படுத்துவதன் மூலமாக மக்களுடைய பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாநிலம் முழுவதும் தற்போது உதவி மருத்துவர்கள் பலரும் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாகவே மருத்துவர்களின் பல்வேறு கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. நியாயமான கோரிக்கைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான்

[திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்] [1987 மார்ச் 3

கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே நாம் இரண்டொரு கோரிக்கைகளை ஏற்றுத் தீர்த்திருந்தாலும், முழுமையாக அவர்களுடைய கோரிக்கைகளை நாம் ஏற்று தீர்த்து வைத்தால்தான் நாட்டு மக்களுக்கும், இந்த அரசுக்கும் மருத்துவ. சமுதாயம் கடமைப்பட்டிருக்கும். நாட்டு மக்களுக்கும் நல்ல மருத்துவ உதவியும் கிடைக்கும்.

அதைப் போலவே கிராமப்புறத்தில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமே மத்திய அரசின் திட்டம் மூலமாகத் தற்போது வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற நிலை இருக்கிறது என்று அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். நகர்ப்புறத்தில் வாழ்கிற ஆதி திராவிட மக்களுக்கும் கட்டாயமாக நிதி வசதி அளித்து அவர்களுக்கும் அந்தவீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், வறட்சி நிலைமை இருந்தாலும் ஓரளவுக்கு நெல் சாகுபடி நடந்திருக்கிறது. வருங்காலத்தில் இதே மாதிரியான நிலை இருக்கும் என்று நாம் நிச் யமாகச் சொல்ல முடியாது. எனவே காவிரி நீர்ப் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்தி தஞ்சை மாவட்டத்தை நல்ல முறையில் செழிப்பாக இருக்கச் செய்ய வேண்டும். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசின் மெத்தனப் போக்குக் காரணமாக கருநாடக அரசு ஆற்றின் இடையிலே அணைக்கட்டப் போகிறோம் என்கிறது. அப்படிப்பட்ட நிலை உருவாகாத வகையில் நம்முடைய கோரிக்கையை வைத்து, ஸ்திரமான கொள்கைப் பிடிப்போடு காவிரி நீர்ப்பிரச்சினையை அணுக வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதனையும் மீறி அவர்கள் அணை கட்டுகிற நிலை ஏற்படுமானால், நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி கட்டாயமாக போராட்டம் நடத்தி அணைக் கட்டுவதைத் தடுக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் போலீஸ் இலாக்காவைப் பொறுத்த வரையில் ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பெரிய போலீஸ் அதிகாரிகள் மட்டத்திலிருந்து சாதாரண போலீஸ் கான்ஸ்டபிள் வரை எல்லோருக்கும் இலவச சீருடையை அரசு வழங்குகிறது. ஆனால் அந்தச் சீருடையை தைப்பதற்கு ஆகும் பணத்தைப் பார்க்கும்போது மிக அதிகமான அளவுக்கு இருக்கிறது. சாதாரணபோலீஸ் கான்ஸ்டபிள்களைப் பொறுத்த வரையில் கீழ் மட்டத்தில் இருக்கிற அவர்களால் ஏற்க முடியாத நிலை இருக்கிறது. ஆனால் அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஸ்டிச்சிங் சார்ஜஸ் கொடுக்கப்படுகிறது. குறைந்த ஊதியம் பெறுகிற கான்ஸ்டபிள்களுக்கு தையல் கூலியையும் அரசு சேர்த்து வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



136503
600 008

1987 மார்ச் 3] (திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்)

அவர்களுடைய வீடுகளுக்கும் இலவச மின்சாரம் வழங்குகிறார்கள். அதாவது 16 யூனிட் அளவுக்குத்தான் செலவு செய்ய வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. வரையறை இருப்பதன் காரணமாக அதிகமாக மின்சாரம் செலவிடப்பட்டதாகச் சொல்லி, அதன் காரணமாக அதிகமாகப் பணம் கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இதுபோன்ற நிலைமையை மாற்றி அவர்கள் பயன்படுத்துகிற மின்சாரத்திற்கு மட்டுமே பணம் கட்டுவதற்கு அவர்களுக்கெல்லாம் தனித் தனி மீட்டர் பொருத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–50)

இந்த மாதிரியான நிலைமையிலே இன்றைக்கு வறட்சியின்மீது அதிகமான அக்கறை கொண்டு தமிழகத்திலேயுள்ள விவசாயக் கூலிகள் அத்தனை பேரும் வறட்சியின் கொடுமையிலிருந்து மீண்டுவர நல்ல பணிகளைச் செய்து தர வேண்டுமென்றுசொல்லி, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

டாக்டர் த. முகமது சலீம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 27ஆம் தேதியன்று இந்த மாமன்றத்திலே உரையாற்றிய மேதகு ஆளுநரின் உரைக்கு நன்றி சொல்லும் முகத்தான் சில கருத்துக்களை நான் சார்ந்துள்ள அகில இந்திய அண்ணா தி.மு.க. சார்பாக சொல்லி முடிக்கவிருக்கிறேன்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

என்பதற்கேற்ப எங்களுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், முதன் முதலாக சத்துணவுத் திட்டத்தை தைரியமாகக் கொண்டுவந்தார்கள். அடுத்தபடியாக முதியோர்களுக்கு பென்ஷன் தருவதைப் பற்றியும், விதவைத் தாய்மார்களுக்கு, ஏழைகளுக்கு உதவி செய்வது பற்றியும், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களைப் பற்றியும் எண்ணியெண்ணி துணிந்து அக்கறை செலுத்தி அதைக் கொண்டு வந்து வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள்.

நேற்றைய தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் 'வெளிச்சம் இல்லாத விளக்கு' என்றும், காலணி கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் பேசும்போது, 'தாவணி கூட கொடுக்கலாம்' என்றும் கூறினார்கள். தாவணி கொடுத்து கொடுத்து அவருக்குப் பழக்கம்போல் இருக்கிறது. அதனாலேதான் அவர் அந்த தாவணியை நினைத்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

(டாக்டர் த. முகம்மது சலீம்) [1987 மார்ச் 3

(சிரிப்பொலி). காலணியை எதற்காக கொடுத்திருக்கிறார்கள் என்று எனது அருமை நண்பர் சோலைராஜ் அழகாக விளக்கினார். அதற்கு முன்பு பேசிய டாக்டர் சமரசம் அவர்களும் சொன்னார் கள். செம்மலை அவர்களும் சொன்னார்கள். ஏழை தாய்மார் களுக்கும், ஐந்து வயதுக்கும் 9 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்களுக்கும் காலணி கொடுத்து அவர்களையும் சுகாதார முறையில் வளர்க்க வேண்டுமென்ற காரணமாகத்தான் அறிவித் தார்கள். எங்களது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு படத்திலே பாடினார்கள். '' நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி என்று''. இந்த நாட்டின் வருங்காலம் இந்த நாட்டினுடைய தலைவிதி இங்கே வளருகின்ற சிறு குழந்தைகளைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல, வீடு கட்டும் திட்டத்திலேயும், ' காண்ட் ராக்ட் முறையில் விடுவதை விட்டுவிட்டு, கூட்டுறவு முறை யில் நிலைக் கதவு, சுண்ணாம்பு, மற்ற சாதனங்கள், சாமான் கள், ஆகியவற்றை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வகையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதனால், கடன் வாங்குகிற அந்த ஏழைகள் அந்தப் பணத்தைச் செலவு செய்துவிட்டு வீடு கட்ட முடியாமல் அரைகுறையாக விட்டுவிடுவது தவிர்க் கப்படுகிறது. எனவே இப்படிப்பட்டதொரு திட்டத்தைக் கொண்டு வந்தது பாராட்டத் தக்கதாகும்.

வறட்சி, வறட்சி என்று கூறினார்கள். இயற்கையின் சீற் றத்தாலும், கடந்த பல ஆண்டுகளில் பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தாலும், தமிழ்நாட்டிலே வறட்சி ஆங்காங்கே பரவிக் கொண்டிருக்கிறது.

ஆனால், குடிக்கும் நீருக்கான திட்டங்களை நல்ல முறையில் வகுத்து, அதற்காக கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கி, நல்ல திட்டங்களைக் கூறினால்கூட இங்கே குறை சொல்லு வதற்கென்றே ஒரு சிலர் இருக்கிறார்கள். ஏனென்றால், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் என்பதற்காக குறை சொல்லித் தான் ஆகவேண்டும் மென்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு, நம்மை சார்ந்திருக்கிற இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் இருந்தாலும் அவர்கள் வறட்சி நிவாரணப் பணியில் என்ன செய்திருக் கிறார்கள் என்று கேட்கிறார்கள். இதை தெளிவாக கவர்னர் உரையில் கூறியிருக்கிறார்கள். நிலத்தடி நீருக்கு எவ்வளவு ரூபாய், எந்தெந்த இடங்களில் கிணறு வெட்ட வேண்டும், எந்தெந்த இடத்திற்கு தண்ணீர் விட வேண்டும் என்று மிகாக, தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிற நேரத்தில்,



1987 மார்ச் 3] [டாக்டர் த. முகம்மது சலீம்]

ஏதோ அவர்களே வருண பகவானைப் போன்று மழையை உடனே கொண்டு வந்துவிட வேண்டுமென்று நினைத்து. கங்கையையும் கன்னியாகுமரியையும் உடனே சேர்த்துவிட வேண்டுமென்று சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். அமெரிக் காவிலே அப்படிச் செய்தார்கள். ரஷ்யாவிலே இப்படிச் செய்தார்கள் என்றால் அங்கே போய் பார்த்தால்தான் தெரியும். அதற்கு அழகாக மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். முடிவாக மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள், சொல்லியதை ஏற்றுக் கொண்டு, இப்படிச் செய்யும் திட்டம் கஷ்டமானது என்பதையும் விளக்கிக் காட்டினார்கள்.

கடைசியாக ஒரு சில வார்த்தைகள் எனது தொகுதியைப் பற்றி நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கொடைக் கானல் டி.வி. நிலையத்தை பொங்கல் பரிசாக அளித்தார்கள். அதற்காக நான் மத்திய அரசுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அந்த தொலைக்காட்சி நிலையத்தின் ஒளி பத்புர திறன் குறைவாக இருக்கிற காரணத்தால் கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கீழக்கரை, நெல்லை, போன்ற பகுதிகளில் பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அதன் திறனை அதிகரித்துக் கொடுத்து, அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் அனைவரும் நல்ல பயன் அடைய ஆவன செய்ய வேண்டுமாய் மத்திய அரசை மாநில அரசின் மூலமாக வற்புறுத் திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள் கூறியதுபோல, அண்ணா மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மதுரை மாவட்டத்தில் ஒருசில பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்து, அங்கே யுள்ள மக்களுக்கு எல்லாம் குடிநீர் கிடைக்கும் அளவுக்கு நல்ல முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. மா. சுந்தர்தாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆளுநர் உரையின்மீது ஒருசில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையைப் பார்க்கும்போது, ஏதோ, கள், சாராயக் கடைகள் எல்லாம் இப்போதுதான் மூடிவிட்டது போலவும், அவை எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தது போலவும் தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியிலும் தான் இந்தக் கடைகள் திறக்கப் பட்டன. அவை மூடப்பட்டிருக்கின்றன. அப்படி மூடப்பட்

டிருக்கின்றனவா என்றால் இல்லவே இல்லை. மது என்று சொன்னால் அதில் பிராந்தி, விஸ்கி, பீர் ஆகியவை சேருமா, சேராதா ? இதை வசதி படைத்தவர்கள் சாப்பிட்டுக் கொள்ளலாம். ஏழை, எளியவர்கள் விஷச் சாராயம் குடிக்க லாம் என்று சொல்லும் அளவுக்குத் தான் இருக்கிறது. மது என்றாலே அது போதைப் பொருள். அப்படி என்றால் 'பிராந்தி' விஸ்கி குடித்தால் போதை வராதா ? வசதி படைத்தவர்கள் அதைக் குடிக்கலாம். முன்னால் ஊருக்கு ஒரு சாராயக் கடை இருந்தது. இப்போது எங்கே பார்த்தாலும் சாராய மயம். சாராய ஓடை ஓடிக்கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு எந்த இலாக்கா இருக்கிறதென்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. வி. வி. வி சுவாமிநாதன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பொத்தாம் பொதுவில் இப்படிச் சொல்வது சரியல்ல. குறிப்பிட்டு எந்தெந்தத் தெருவில் கடை நடக்கிறது என்று ரகசியமாக எழுதிக்கொடுத்தாலும், 24 மணி நேரத்தில் கைது செய்யப் படுவார்கள். ஓர் உறுப்பினர் சொல்கிறார், பணக்காரர்களை விட்டுவிடுகிறார்கள். ஏழைகளை, விவசாயிகளை பிடிக்கிறார் கள் என்று. பெரிய பணக்காரர்களை குடும்பத்துடன் பிடித்து விலங்கு போட்டிருக்கிறோம். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், இந்த மாநிலத்திற்கு மட்டும் என்று ஒரு கொள்கை உண்டா அல்லது 22 மாநிலங்களுக்கும் கொள்கைகள் உண்டா? எல்லா மாநிலத்திற்கும் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து கொள்கை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி நாம் முன்பே வெகு விரிவாகப் பேசி, கேள்வி கேட்டு, பதில் சொல்லியிருக்கிறோம். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நாம் மற்ற மாநிலங்களைப் பின் பற்றி உதாரணம் காட்டுகிறோமே, ஏனைய விஷயங்களிலும் மற்றைய மாநிலங்களைப் பின்பற்றலாமே. அது ஒருபுறம் இருக்கட்டும். நான் சொல்ல விரும்புவது, நாம் இந்த அவைக்குத் தான் பொறுப்பானவர்கள். ஏன் தமிழ்நாடு முன் மாதிரியாக இருக்கக் கூடாது? நான் முன்பே சொன்னேன். தமிழன் என் றொரு இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு என்று சொன்னேன். நாம் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகம் முன் மாதிரியாகத்தான் இருக்கிறது பல வழிகளில். அதற்கு நான் பின்னாலே வரு கிறேன். ஆனால் இப்போது கட்சி பற்றிச் சொன்னதால், 'தி.மு.க.', 'அ.இ.அ.தி.மு.க.' என்று சொன்னதால், காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதால், காங்கிரஸ் கட்சிக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறதா? அகில இந்தியாவுக்கும் ஒரு கட்சிதானே. தமிழகத்திற்கு என்று தனிக் கட்சியா? அதற்கு என்று ஒரு கொள்கை உண்டா? அல்லது இந்தியா முழுவதற் குமா? அல்லது பகுதிக்கு ஒரு கொள்கையா?

(பிற்பகல் 2-00)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத் திலே பூரண மதுவிலக்கு கொண்டு வந்து, அதன் மூலமாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் முன்னுக்கு வந்து பார்த் திருக்கிறோம். நாடும் பார்த்திருக்கின்றது. அந்த அடிப்படை யிலேதான் கேட்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அகில இந்திய அளவிலே பேசவில்லை. ஆளுநர் அவர்கள் பேருரையிலேதான் பேசுகின்றேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் முன் அனுமதியுடன், உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கின்ற வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் 2 நிமிடங்களில் முடித்து விடவும்.

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் எதற்காகக் கூடுகிறது என்று தெரிய வில்லை. நேரத்தைக் குறைத்து விட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் அவை நேரத்தைப் பற்றி இங்கே பேசக் கூடாது. பி.ஏ.சி.யில் பேசிக் கொள்ளலாம். உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையிலே 30 ஆயிரம் பனைத் தொழிலாளர்களுக்கு ரூ. 2,000 கொடுப்பதாகச் சொல் லப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யாருமே அந்த தொழில் செய்யாதவர்

இல்லை. எக்சைஸ் டிப்பார்ட்மென்டில் பனை ஏறுவதாகப் பதிவு செய்ய வேண்டும் என்று அந்த ஆணையில் இருக்கின்றது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அனைத்துத் தொழிலாளர்களும் கள் இறக்கும் தொழிலில்தான் இருந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் 3, 4 பேர்கள் தான் பதிவு செய்து இருக்கின்றார்கள். நான் 'பாம் புராடெக்ட்ஸ்' இலாகாவிலே போய் பார்க்கின்றபோது, அங்கே ஒரு எக்சைஸ் தாசில்தாரிடம், 2, 3 பேர்தான் பதிவு செய்ததாக இருந்தும், ஏறத்தாழ 5,000 தொழிலாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந்தார்கள். நான் மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஏறத்தாழ கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற 5,000 தொழிலாளர்களுக்கும் நிச்சயமாக முதலமைச்சர் அவர்களுடைய ரூ. 2,000 கொடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்றவேண்டும். அவர்கள் பதிவு செய்யவில்லை என்று சொன்னாலும், அவர்களுக்கும் நிச்சயமாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினை. அதே போன்று ஆளுநர் உரையிலே 29 வது பத்தியிலே சொல்லப்பட்டிருக்கிறது.

" .... The Government of India have also been requested to step up their allocation for various central projects in Tamil Nadu like the Mass Rapid Transit System, Karur-Dindigul-Tuticorin .... ".

இதைப் பொறுத்தவரையில், இப்போது மத்திய அரசு புதிதாக உருவாக்கியிருக்கிறது. பழைய ஆக்ட், 1819 ஆம் ஆண்டு ஆக்ட்-ஐ ரெப்பீல் செய்து, 'ரெயில்வே செலக்ட் கமிட்டி' என்று 1986 இல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த திட்டத்தின் கீழ் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் உருவாக்கியது போல, நாம் ஒரு ரெயில்வே கார்ப்பரேஷன் உருவாக்குவதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு கேட்டிருக்கலாம். ஆனால் மத்திய அரசிடம் மாநில அரசால் கேட்கப்படவில்லையே என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதே போன்று எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வறட்சி என்பது இதுவரையில் இல்லாத வரலாறு. 82 ஆண்டுகளுக்கு பிறகு இன்றைக்கு எங்கள் மாவட்டம் வறட்சியைச் சந்தித்திருக்கிறது. அந்த வறட்சிக்கு ஆக்க பூர்வமான பணியினைச் செய்யவில்லை. நேற்றையதினம்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் சீஃப் செக்கரட்டரியிடம் சென்றோம். அவர்கள் சொன்னார்கள். ரூ. 16 இலட்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். 16 இலட்சம் ரூபாய் எதற்காக ஒதுக்கினார்கள்? எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் குடம் தண்ணீர் எடுப்பதற்கு 5 கிலோ மீட்டர் போகவேண்டியிருக்கிறது. அது மலையோரப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால் தண்ணீர் கிடையாது. அதுபோல தொழிலாளர்களுக்கும் வேலை கிடையாது.



அதுபோன்று இதுவரை, ஏறத்தாழ 8 மாத காலமாக எங்கள் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நில வரி இதுவரை ஒத்திப்போடப்படவில்லை. விவசாயிகள் வாங்கிய கடன்கள் ரத்து செய்யப்படவில்லை. விவசாயிகளுக்கு மாற்றுவேலை கொடுக்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. வறட்சிப் பகுதி என்று அறிவித்து விட்டார்கள். அவர்களுக்கு சலுகை கொடுக்கப்படவேண்டும். ஆனால் அங்கு நெல் சாகுபடி செய்யப்படவில்லை. ரப்பர், தேங்காய் போன்ற பொருள்களுக்கு வருவாய் கிடையாது. ஆனால் எந்த ஒரு போர்க்கால நடவடிக்கையும் வறட்சிக்காக எடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், ஒவ்வொரு மாவட்டத்திற்கு பணம் ஒதுக்கீடு செய்யும்போது எங்கள் மாவட்டத்திற்கு அதிகமாக பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஹைரோட்ஸ், பராமரிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. அதற்குத் தயாராக இல்லை. என்னவென்று சொன்னால், என்னுடைய பகுதியிலே அறுகாணி-ஆலஞ்சோலை என்ற பகுதியிலே ரூ. 46 இலட்சம் 1983லே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த ரோடு இதுவரையில் சரி செய்யப்படவில்லை. அங்கே இருக்கின்ற இன்ஜினியர்களுக்கும் அங்கே இருக்கின்ற ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையில் தகராறு இருந்து கொண்டிருக்கிறது. அந்த காரணத்திற்காக 1983லே ஒதுக்கப்பட்ட பின்னரும் அந்த வேலை செய்யப்படவில்லை என்பதைப் பார்க்கும்போது, நிச்சயமாக அந்த அதிகாரிகளை அங்கே வைத்திருப்பது சரியல்ல என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் பல்வேறு பாலங்களின் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. 4,5 ஆண்டுகளுக்கு முன்னர் வேலைகள் தொடங்கியிருந்தும்கூட, அந்தப் பாலங்களின் வேலைகள் முடிவு பெறவில்லை. ஆகவே நான் கேட்டுக் கொள்வது, எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற, அந்த ஹைவேஸ்ல் இருக்கின்ற அனைத்து இன்ஜினியர்களை எல்லாம் மாற்றிவிட்டு வேறு புதிய இன்ஜினியர்களைக் கொண்டு வந்தால்தான் நிச்சயமாக அங்கே அரசின் வேலைகள் நடக்கமுடியும்.

குறிப்பாக ஆலஞ்சோலை—அறுகாணி சாலைக்காக ரூ. 14 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஏறக்குறைய 50 ஆயிரம் மக்கள் பயன்படுத்துகின்ற அந்த சாலை சரியாகப் பராமரிக்கப்படவில்லை. நிச்சயமாக நான் சொல்கிறேன். இது அரசின் குறை அல்ல, அங்கேயுள்ள அதிகாரிகளின் அணுகுமுறையால் ஏற்பட்ட குறை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4–3–1987) காலை 10–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

7. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் (சிவில்) சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1983–84) முப்பத்தி நான்காவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 F. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]ghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 16–9–1987 Issued 16–9–1987

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன் கிழமை மார்ச் 4, 1987—தொகுதி 32 எண் 4
Wednesday the 4th March 1987—Volume 32 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

**4—3—1987**

உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 399— 341 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) சென்னையில் ஏற்பட்ட மின்வெட்டு | 341—342 |
| (ஆ) உறுப்பினர்கள் திருவாளர்கள் இரா. தாமரைக்கனி மற்றும் கா. வே. கந்தசாமி ஆகியோர் இடம் மாறி அமர்ந்திருப்பது குறித்து | 417—418 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடி ஊழியர்களை நிரந்தரமாக்குதல். | 343—345 |
| 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி). | 345 |
| திரு. சைதை சா. துரைசாமி | 345—350 |
| திரு. கே. அன்பழகன் | 350—354 |
| திரு. அ. பிரணவநாதன் | 355—360 |
| திரு. ஏ. தங்கராசு | 360—364 |
| திரு. கு. ரமணி | 364—379 |
| திரு. மா. சின்னராசு | 389—390 |
| திரு. மா. கதிர்வேலு | 391—398 |
| திரு. வே. இரா. ஜெயராமன் | 400—405 |
| திரு. வை. பாலசந்திரன் | 405—411 |
| திரு. மு. பாண்டுரங்கன் | 411—414 |
| திரு. எஸ். டேனியல்ராஜ் | 414—417 |
| திரு. ஆர். செங்காளியப்பன். | 417—420 |
| 5. விதி 110-இன் கீழ் சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் அறிக்கை— | |
| மின் உற்பத்தி, கட்டுப்பாடு குறித்து | 398—399 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 420 |


டி 3 எ 2—1

2957

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 4, புதன் கிழமை.

மாசி 20, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு''.

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமலிருக்க வேண்டும்; அதுபோல் துன்பம் வந்தபோது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கலப்பு மணத் தம்பதிகளுக்கு வேலை வாய்ப்பு.

41—(*வினா எண். 4840) திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்பு மணத் தம்பதியர்களுக்கு வேலைவாய்ப்பை உத்திரவாதப்படுத்தும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத் தம்பதியினருக்கு வேலை வாய்ப்பை உத்திரவாதப்படுத்தும் திட்டம் பற்றி குறிப்பாக ஆணை ஏதுமில்லை. எனினும் அரசாணை நிலை எண். 939, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணியாளர். ஆர்) துறை, நாள் 24—9—1986-ல் அரசாணை நிலை எண் 188, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள் 28—12—1976-ல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் முன்னுரிமை பட்டியல் II(i)-ல் கலப்பு மணம் செய்து கொண்ட தம்பதியர்களில் ஒருவர் ஆதிதிராவிடராகவோ அல்லது பழங்குடியினராகவோ இருந்தால், அந்த தம்பதியினருக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வேலை வாய்ப்பளிப்பதற்கு முதல் முன்னுரிமை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1987 மார்ச் 4

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தற்போது தமிழகத்தின் சமூகச் சூழ்நிலைமையை பார்த்தால் ஜாதீய உணர்வு மேலோங்கி இருப்பதை அறிவோம். பொதுவாக ஜாதிகளிடையே ஒரு நல்லிணக்கம் வர வேண்டுமென்ற கருத்து நடைமுறையில் அமல் ஆக்கப்படாமல் இருக்கின்ற இந்த நேரத்தில் ஜாதீய ஒழிப்பு தலையாய அவசியம் என்பதை உணர்ந்து, ஜாதீய ஒழிப்புக்கு மிக முக்கியமாக உதவக்கூடியது வேலைவாய்ப்பு என்பதால், கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குக் கட்டாயமாக வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதை சட்டமாக்க அரசு முன்வருமா? இனி மேலாவது அதைப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்து கொள்கிறவர்களுக்கு கட்டாயம் வேலைவாய்ப்பு தர வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க இயலாது. அந்தக் கலப்பு மணம் என்கின்றபொழுது யாரேனும் ஒருவர் ஆதிதிராவிடராகவோ அல்லது பழங்குடியினராகவோ இருந்தால்தான் அது கலப்பு மணம் என்ற இலக்கணத்தின் கீழ் வந்து அதற்கு வேலைவாய்ப்பகத்தில் முதல் உரிமை தர வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அந்த முறை தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத்தை ஊக்குவிக்கின்ற முறையில் பயன் உள்ள பொருத்தமான சில சலுகைகளை—தற்போது இருக்கின்ற சலுகைகளைக் காட்டிலும் புதிய சலுகைகள் சிலவற்றைப் பரிசீலித்து அரசு அறிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, புதிய சலுகைகள் எந்தெந்த அளவிலே வருகின்றன என்று பலவகைகளிலே கேட்கிறார்கள். அதையெல்லாம் பரிசீலனை செய்து, அது நடைமுறைச் சாத்தியப்படுகின்ற அளவிலேயும் இருந்தால், அதிலே ஏமாற்றுதல் போன்றவைகள் இல்லாமல் இருந்து உள்ளபடியே ஜென்யூனாக இருக்குமேயானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கலாம்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம் சமுதாயத்து மக்களிடத்தில் எதிர்ப்பையும் ஏற்றுக்கொண்டு கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான வயது வரம்பை உயர்த்தித் தருகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விதிமுறைக் குறிப்புகள் எப்படியிருக்கின்றன என்று தெரியவில்லை. அதுபற்றித் தனியாகக் கேள்விபோட்டால் அதனுடைய நடைமுறைகளை அறிந்து சொல்லலாம்.



1987 மார்ச் 4]

**திரு. இரா. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் செய்து தமிழ்நாட்டில் இதுவரையிலேயும் கலப்புத் திருமணம் செய்து இருக்கின்ற மக்களுக்கு கொண்டவர்களில் ஆதி திராவிடர்களாக இருக்கின்ற மக்களுக்கு அளிக் இது நாள் வரையில் எத்தனை பேர்கள் முன்னுரிமை அளிக் கப்பட்டு, வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம் பதியினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை அளிப் பதற்கு அரசு ஆணைப் பிறப்பித்துள்ளதாகச் சொன்னார்கள். அந்த ஆணை பிறப்பித்த பிறகு கலப்பு மணத் தம்பதிகள் எவ் வளவு பேர்கள் வேலைக்காக விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்? அப்படி விண்ணப்பம் செய்ததற்குப் பிறகு அவர்களுக்கு அந்த வேலைக்கான உத்தரவாதம் அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றித்தான் நான் முதலிலே சொன்னேன், தனிக் கேள்வி போட்டால்—எல்லா வேலை வாய்ப்பகங்களிலிருந்தும் அது பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும்—சேகரித்துத் தரலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்து கொள்கின்றவர் களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளைப் பள்ளியிலே சேர்க்கும் போது என்ன ஜாதி என்று கேட்கிறார்கள். அவர்கள் தந்தை வழி வந்த ஜாதியைச் சொல்லிச் சேர்க்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் சேர்க்கும்போது கலப்பு மணம் என்பது அடி பட்டுப் போய் விடுகிறது. ஆகவே, கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு, என்ன ஜாதி என்பதைக் கேட்காமல் கலப்புமணம் செய்தவர்கள் என்ற ஜாதியைச் சொன்னால், சலுகை வழங்க சரியாக இருக்குமே, அதை நடைமுறைப்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை ஏற்கனவே இரண்டு மூன்று வழிகளிலே வந்து, அந்தக் குழந்தை, தாய் தந்தையரிலே எந்த ஜாதி வழி என்று குறிப்பிடுகிறதோ, அந்த ஜாதியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறை வகுக்கப்பட்டு, தந்தை உயர்ந்த ஜாதியாக இருந்து தாய் தாழ்ந்த ஜாதியகா

[1987 மார்ச் 4

அல்லது ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்து, தான்
ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்தான் என்று சொல்லு
மானால், அந்த வகுப்பு குறிப்பிடப்பட வேண்டுமென்ற அளவுக்கு
ஆணை திருத்தப்பட்டு அந்த அடிப்படையிலே ஆங்காங்கே குறிப்பு
கள் தரப்பட்டிருக்கின்றன.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கலப்பு மணம்
செய்து கொண்டவர்களுக்கு வேலையில் முன்னுரிமை தரப்படும்
என்று சொன்னார்கள். வேலை அளிக்கின்ற நேரத்தில் தாழ்த்தப்
பட்டவர்களுக்கு 18 சதவீதம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50
சதவீதம் என்று ஒதுக்கீடு செய்து விட்டு, மீதியெல்லாம் ஓ. சி.
என்று வைத்துவிட்ட காரணத்தாலே, இவர்களுக்கு எந்த விகிதத்
தில் ஒதுக்கீடு இருக்கிறது? பிற்பட்ட சமுதாயத்தில் இருக்கிற
ஒதுக்கீடா அல்லது மற்ற கம்யூனிட்டியில் வருகிறதா, அல்லது
தாழ்த்தப்பட்டவர்களில் வருகிறதா, எந்தப் பிரிவில் கலப்புத்
திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஒதுக்கீடு இருக்கிறது
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத்
தலைவர் அவர்களே, அதற்கென்று தனி ஒதுக்கீடு இல்லை.
ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு 5 இடங்கள் இருந்து, 500
பேர்கள் விண்ணப்பித்திருப்பார்களானால், அந்த 500 பேர்
களிலே கலப்பு மணம் செய்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

**ஊட்டியில் கூட்டுறவு மத்திய வங்கிக்கு புதிய கட்டிடம்.**

42—(*வினா எண் 9358) **திரு கே. உச்சி :** மாண்புமிகு
நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டியில், கூட்டுறவு மத்திய வங்கிக்கு புதிய
கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள
கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட வங்கி
நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கே. உச்சி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப்
புதிய கட்டிடத்திற்கு எவ்வளவு தொகையில் எஸ்டிமேட் தயாரிக்
கப்பட்டுள்ளது ? அந்த வேலைகள் துவக்கப்பட்டுள்ளனவா ?
கடந்த 8—10—1986 அன்று அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
வேலை எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?



1987 மார்ச் 4]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெறுகின்ற
மத்திய கூட்டுறவு வங்கி, 1954-லிருந்து அங்கே நடைபெற்று
வருகிறது. அதனை விரிவு செய்து, வேறு பல வசதிகளைச்
செய்வதற்கு மேல் மாடி கட்டலாமா என்று யோசித்த நிலையில்,
இப்பொழுது இருக்கிற கட்டிடம் தாங்காது என்ற நிலை ஏற்
பட்டபொழுது அதை இடித்து விட்டு, புதிய கட்டிடம் கட்டு
வதற்கு ரூ. 50 இலட்சம் மதிப்பீடு தொகை ஆகும் என்று
சொன்ன நிலையில், இப்பொழுது உடனடியாக அதைச் செய்ய
வேண்டும் என்ற நிலையில், தற்போது ஒரு மாடியுடன் கூடிய
புதிய கட்டிடம் கட்ட ரூ. 50 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு
கட்டுமான மேற்பார்வைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு,
வங்கியின் கட்டிட நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் போக, எஞ்சிய
ரூ. 45 இலட்சம், தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து,
கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து கடனாகப் பெற முடிவு எடுக்கப்
பட்டு, மத்தியக் கூட்டுறவு வங்கியின் முன் மொழிவு தமிழ்நாடு
கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு
இருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கடன் அனுமதித்த
பின்னர் கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்படும். ஆகவே
மத்திய வங்கியிலிருந்து ரூ. 5 இலட்சமும், கூட்டுறவு ஒன்றியத்
திலிருந்து பெறப் போகிற ரூ. 45 இலட்சமும் சேர்த்து, ரூ. 50
இலட்சத்திலே கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு
இருக்கிறது.

(முற்பகல் 10-10).

**திரு. கே. உச்சி :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே
கேட்டிருக்கிறபடி பழைய கட்டிடம் காலியாக இருக்கிறது. அங்கே
புதிய கட்டிடம் கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் என்
பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்
களே, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியக் கட்டிடம் கட்டும் பணி
அனுமதி பெற்ற பின்னால் தொடங்கப்படும் என்று விவரம்
சொல்லப்பட்டிருக்கிறது. கடன் அனுமதிக்கப்படுகிற நிலை
மையைப் பொறுத்திருக்கிறது. அதன் பின்னர் உரிய நட
வடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. கல்லன் :** தலைவரவர்களே, அந்தக் கட்டிடம்
உதகையின் மையப் பகுதியில் இருக்கிறது. பல அலுவலர்கள்
அங்கே அமர்ந்து பணியாற்றக் கூடிய அளவுக்கு வசதி இல்லை ;
சிறியதாக இருக்கிறது. ஆகவே, பெரிய கட்டிட ாக ஒன்று
கட்டி, மற்ற அரசு அலுவலகங்களுக்கும் போதுமான இடம்
கொடுக்க அரசு முன்வருமா ?

[1987 மார்ச் 4

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 2, 3 மாடி கட்ட வேண்டுமென்றால், முதல் கட்டமாக முதல் மாடி கட்டப்பட வேண்டும். அதற்கு 50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு, 5 இலட்சம் ரூபாய் வங்கியிலிருந்து பெற்று, 45 இலட்சம் ரூபாய் கடனாகப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் அனுமதி பெற்று கட்டுமானப் பணி தொடங்கப்பட இருக்கிறது என்று முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டம், அரூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்தல்

43—(*வினா எண். 9592) **திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பிரிக்கப்படும் பகுதிக்கு பாபிரெட்டிபட்டி தாலுகா தலைமை இடமாக ஏற்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இச்செயற் குறிப்பு தற்போது வருவாய் நிருவாக ஆணையரின் ஆய்விலுள்ளது. அது இன்னும் அரசுக்கு வர

(ஆ) வினாவிற்கு இப்பொழுது இடமில்லை.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** தலைவரவர்களே, நம்முடைய அரசு பெரிய மாவட்டங்களையும் பெரிய வட்டங்களையும் பிரித்து அமைப்பதான ஒரு புதிய கொள்கையை, நல்ல கொள்கையை வைத்திருக்கிறது. இன்றைக்கு தர்மபுரி மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாக இருக்கிறது. சில வட்டங்களும் பெரிதாக இருக்கின்றன. இப்போது சில வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் நேரத்தில், சித்தேரி, தும்பை போன்ற மலைப் பகுதிகளை உள்ளடக்கி இருக்கிற பெரிய வட்டமான அரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு ஆய்வு செய்வதோடு, அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் தக்க ஆணையும் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பாபிரெட்டிபட்டி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு



1987 மார்ச் 4]

முன்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரப்பெற்று, பின்னர் சிறப்பு ஆணையர் சில ஐயப்பாடுகளை எழுப்பி, மறுபடியும் அதனைப் புதுப்பித்து அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்கப்பட்டிருக்கிறார். புதுப்பிக்கின்ற செயற் குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வருவாய்த்துறை சிறப்பு ஆணையருக்கு வந்திருக்கிறது. வருவாய்த் துறை சிறப்பு ஆணையர் அதனை ஆய்வு செய்து, அரசுக்கு அனுப்பி வைப்பார். அதன் பிறகு அரசு ஆராய்ந்து தக்க முடிவினை மேற்கொள்ளும்.

**திரு. ப. தீர்த்தராமன் :** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பற்றிக் கேட்டிருப்பதால் இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன். பாலக்கோடு தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கின்ற செயற் குறிப்பு அரசிடம் இருப்பதாக அறிகிறேன். அப்படிப் பிரிக்கும்போது காரியமங்கலத்தை மையமாகக் கொண்டு ஒரு தாலுக்காவை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது அரூர் வட்டம் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, அரூர் வட்டத்தை இரண்டாகப் பிரிப்பது பற்றிக் சொன்னார்கள். அரூர் ஒரு பெரிய தாலூகா, மலைப் பகுதியாக உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சித்தேரி, தும்பை மலைப் பகுதிகளும் அதிலே அடங்கியிருக்கின்றன. ஆகவே, நல்ல முறையில் ஆய்வு செய்து, பாபிரெட்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுக்காவை உருவாக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முறைப்படியான அறிக்கை அரசுக்கு வந்த பிறகு, ஆய்வு செய்து தக்க முடிவு மேற்கொள்ளப்படும்.

**திரு. டி. எம். வெங்கடாசலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அரூர் வட்டத்தினை இரண்டாகப் பிரிக்கிற நிலைமை குறித்து அரசின் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதுபோல் தர்மபுரி மாவட்டத்தில் வேறு எந்தெந்த தாலுக்காக்கள் இரண்டாகப் பிரிக்கிற வகையில் ஆய்வில் இருக்கின்றன என்பதையும், அதிலே கிருஷ்ணகிரி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து போச்சம்பள்ளியைத் தலைநகராக ஆக்கி மற்றொரு தாலுக்கா அமைப்பது குறித்து அரசின் ஆய்வில் இருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

வாக இருக்கின்றன. அங்கே பெருவாரியான மீனவப் பெருங்குடி மக்கள் இருக்கின்ற காரணத்தால் விகிதாச்சார அடிப்படையில் அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளித்து அதிகமான விசைப்படகுகளை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அது அவரவர்கள் போடுகிற மனுவைப் பொறுத்து இருக்கிறது. வங்கிகள் கொடுக்கிற கடனைப் பொறுத்தும் இருக்கிறது. அரசுடைமையாக்கப்பட்ட, வங்கிகள் கடன் உதவி தர முன்வராத காரணத்தால்தான் மானியத் தொகை ஒதுக்கியும்கூட, அதைப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்றாண்டுகளில் அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு? நடப்பு நிதியாண்டில் அரசு மானியம் கோரியும் அது சரியாக அனுமதிக்கப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. அது உண்மையா? இதுவரையில் இந்த ஆண்டு எவ்வளவு மானியத்தொகை செலவாகி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1982–83, 1983–84, 1984–85 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான மானியத் தொகை எவ்வளவு என்பதற்கான புள்ளி விவரங்கள் இப்போது இல்லை. தனிக் கேள்வி கேட்டால் அதனைச் சேகரித்துத் தருகிறேன். இப்போது 80 சதவீதம் கடனாகவும், 20 சதவீதம் மானியமாகவும் 1981–82 முதல் 1984–85 முடிய அதாவது டிசம்பர் முடிய 190 கண்ணாடி இழைப் படகுகளுக்கு அரசு ஒப்பளித்தது. ஆனால் மானியத் தொகை ஒதுக்கியும்கூட பயன்படவில்லை. தேசியவுடைமையாக்கப்பட்ட வங்கிகளோ, கூட்டுறவு வங்கிகளோ கடனுதவி தர முன்வராத காரணத்தால்தான் பயன்படுத்த முடியாமல் போய்விட்டதே தவிர, வேறல்ல.

### வேலூரில் அரசு மருத்துவமனை.

50—(*வினா எண் 7516) **திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனை அமைந்துள்ள இடம் குறுகிய இடமாகவும் சுகாதாரமற்ற நிலையிலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த மருத்துவமனையை நகருக்கு வெளியே விரிவான முறையில் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது மருத்துவமனை அமைந்துள்ள இடம் குறுகியதாக இருப்பினும், நல்ல சுகாதாரமான நிலையில் பராமரிக்கப்பட்டு நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 10-20)

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் அரசு மருத்துவமனை குறுகிய இடத்தில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அரசு மருத்துவமனையைப் பார்க்கும் போது குறுகிய இடத்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல் நெருக்கடியான கட்டிடங்களோடு நல்ல சுகாதாரம் இல்லாத நிலையிலும் இருப்பதாக எண்ணுகிறேன். அந்த வேலூர் மருத்துவமனைக்கு அருகிலேயே டி.பி. ஹாஸ்பிடலும் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நெருக்கடி நிலைமைகளை உணர்ந்து அந்த இடத்திலே புது மருத்துவமனை கட்டி அதை எக்ஸ்டென்ஷன் செய்து தர அரசு முன் வருமா? அதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த யோசனை தற்போது இல்லை.

**திரு. கோ. இரகுபதி:** தலைவர் அவர்களே, அத்தோடு மட்டுமல்லாமல் அங்கே அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தை மேலும் உயர்த்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்றாலும் இனியாவது அங்குள்ள நெருக்கடியை உத்தேசித்து அந்தத் திட்டத்தைத் தீட்டித் தருவதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாடிக் கட்டிடம் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

### நெல்லை மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் சாம்பவர் வட கரையில் அரசு மருத்துவமனை.

51—(*வினா எண் 9185) **திரு. தெ. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் செங்கோட்டை ஒன்றியத்தில் உள்ள ''சாம்பவர் வடகரை'' பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இயங்கி வந்த அரசு மருந்தகத்தை செப்டம்பர் திங்கள் 1986-ல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதி.**

52—(*வினா எண். 4384)—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலக வளாகத்திற்குள் தரமான உணவு விடுதி அமைக்க அரசு திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தலைமைச் செயலகத்தில் உணவு விடுதிகள் வேண்டப்படுவதில்லை. சிற்றுண்டி விடுதிகளே தேவைப்படுகின்றன. அவை தற்போது உள்ளன என்பதால் வேறு உணவு விடுதிகள் புதிதாக அமைக்கும் திட்டம் எதுவுங் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே அமைந்திருக்கிற சிற்றுண்டி விடுதி குறிப்பிட்ட நேரத்திற்கு திறக்கப்படுவதே இல்லை. தரமான உணவு வழங்கப்படுவதும் இல்லை. சில அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருக்கும் அறையிலேயே ஸ்கூட்டரில் வந்து விடுகிறார்கள். அந்த ஆபத்தை தடுப்பதற்கும் தரமான உணவு வழங்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மிக அவசரமாக இருக்கிற காரணத்தால் ஸ்கூட்டரிலேயே வந்து சாப்பிட்டு விட்டு போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இங்கே ஏறத்தாழ 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. இந்த 13 சிற்றுண்டி விடுதிகள் போதும் என்ற காரணத்தால் தனியாக உணவகம் தேவையில்லை என்று சொன்னேன். அதை முறைப்படுத்த வேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கலாம்.



**திரு. வி. பி. சிந்தன்:** அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொது ஜனங்களுக்கும் தொழிலாளர்களுக்கும்—போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஊழியர்களுக்கு நல்ல உணவு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அது தலைமை அலுவலகத்திற்கும் செய்யப்பட வேண்டியதுதானே. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்தைப் பார்த்தால் உணவகமாக இல்லாமல், சிற்றுண்டி விடுதிகள் மட்டும் அமைந்திருக்கிறதோ என்ற எண்ணம் இருக்கிற காரணத்தாலே அதை தெளிவுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது தலைமைச் செயலகத்தில் வைத்திருக்கிற உணவு விடுதிகளைப் பொறுத்தது. இங்கே வருகிற தொழிலாளர்களுக்கு ஏற்பதான் அவை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இங்கே 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. தனியாக உணவு விடுதியும் தேவையில்லை என்று உணரப்படுகிறது. அதைத்தான் குறிப்பிட்டேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 13 சிற்றுண்டி விடுதிகள் இந்த வளாகத்தில் இருப்பதாக தெரிவித்தார்கள். அதிலே உணவு விடுதி என்று ஒன்று கூட இல்லை. இப்போது பேரவையை காலை 10விருந்து மதியம் 2 மணிவரை என்று வைத்திருக்கிறோம். சில நேரங்களிலே கால் மணி நேரம் தாமதமாகச் சென்றால் அங்கே ஒன்றுமே கிடைக்க வாய்ப்பு இல்லை. அத்தோடு சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் நேரத்தில் சாப்பிடாவிட்டால் அதனால் பல நோய்களுக்கு ஆளாகும் உடல் நிலை இருக்கிறது. இதையெல்லாம் யோசித்துப் பார்த்து ஒரு தரமான உணவு விடுதியை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இங்கே 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. அவற்றில் எல்லா விதமான தரமான உணவுகள் கிடைப்பதாகத்தான் தெரிகிறது. பிரியாணி முதற் கொண்டு கிடைக்கிறது. அப்படி இருக்கும்போது தனியாக ஒரு உணவகம் தேவைதானா என்று யோசிக்க வேண்டி இருக்கிறது. சட்டமன்ற விடுதிக்குள்ளேயே ஒரு உணவகம் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே என்று இருக்கிற காரணத்தால் நீங்களே சொல்லி நீங்கள் வருகிற நேரத்தில் இருக்கும்படி எடுத்து வைக்கச் சொல்லலாம். நீங்கள் அங்கு போய் சாப்பிட ஆரம்பித்தால் அவர்களும் எடுத்து வைப்பார்கள், உணவும் தரமானதாக ஆகிவிடும். பெரும்பாலும் சாப்பிடுவது இல்லை என்ற காரணத்தால்தான் அவர்கள் எடுத்து வைப்பதில்லை. இல்லையென்றால் எடுத்து வைத்திருப்பார்கள். எனவே அந்த முறையை உறுப்பினர்கள் கடைப்பிடித்தால் நல்லது. அது தானே தவிர, சட்டமன்ற நேரத்திற்கு மட்டும் ஒரு உணவு விடுதியை திறப்பது என்பது சரியாக இருக்காது.

[1987 மார்ச் 4

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்ற வளாகத்தில் சுற்றுலாத் துறை மூலமாக உணவுப் பொட்டலங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொடுக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் தரமாக இருந்தது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவதற்கு வசதியில்லாமல், நின்றுகொண்டு சாப்பிட வேண்டிய நிலை உள்ளது. எனவே, தற்காலிகமாக உட்கார்ந்து கொண்டு உணவு அருந்துவதற்கான வசதியை ஏற்பாடு செய்து தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தரமான உணவு கொடுக்கப்பட்டது என்று சொன்னால், அதுவே நல்ல விளம்பரமாக அமைந்திருக்கிறது. திரு. சோலைராசு அவர்கள் சொல்லியதை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இடப் பற்றாக்குறை இருப்பதினால், நின்று கொண்டு சாப்பிடுகின்ற முறையில் வைத்திருக்கிறார்கள். உட்கார்ந்து கொண்டு சாப்பிடக்கூடிய வசதியை செய்து கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்கலாம். இந்த 13 சிற்றுண்டிகளை நானே நேரில் பார்த்து என்னென்ன மாற்றங்கள் செய்தால் பொருத்தமாக இருக்குமோ, அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கலாம்.

**அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி.**

53—*(வினா எண். 9302) **திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1978—க்குப் பின் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1978-க்குப் பின் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1987 மார்ச் 4]

**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னால் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதாகச் சொன்னார்கள். இப்போது தருவதில்லை. கிடைக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்தி, மீண்டும் அந்த வசதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டுக்குப் பின்பு சேர்ந்த தொழிலாளர்களுக்கு அரசு மருத்துவ மனையில், ஒவ்வொரு தொழிலாளருக்கும் போக்குவரத்துக் கழகமே ரூ. 120 கட்டி, தேவையான அனைத்து மருத்துவ வசதிகளையும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. என்.ஜி.ஓ.க்கள் பெறுவதைப் போல் இந்தத் தொழிலாளர்களும் அரசு மருத்துவ மனைகளுக்குப் போய் அனைத்து வசதிகளையும் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** தலைவர் அவர்களே, அந்தப் பணம் கட்டினார்களா என்பது தெரியவில்லை. எப்போது அந்தப் பணம் கட்டப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 1-1-1978 அன்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அன்றிலிருந்து புதிதாக சேருகின்ற தொழிலாளர்களுக்கு, அவசியம் ஏற்படுகின்றபோது பணம் கட்டப்படுகின்றது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இருக்கின்ற சிற்றுண்டிச் சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் இந்த மருத்துவ வசதியும், மற்றும் பல வசதிகளும் செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கடந்த செப்டம்பரில் ஏற்பட்ட ஒப்பந்தத்திலே ஒரு முடிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே அவர்கள் சில கன்டிஷன்களோடு, நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே, அப்படி வருகிறபோது எல்லா வாய்ப்பும், வசதியும் அவர்களுக்கு கிடைக்கும். விதிவிலக்கு இருக்காது.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு அரசு மருத்துவ மனையில் எந்த அளவில் சலுகை முறையில் மருத்துவ வசதி செய்து தரப்படுகிறதோ,

[1987 மார்ச் 4

அதே போன்று தனியார் பஸ் கம்பெனிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி செய்து தர அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தொழிலாளர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை தொழிலாளர் நலத் துறை பார்க்கிறது. போக்குவரத்துத் துறைக்கு சம்பந்தமில்லை. அந்தத் துறையைக் கேட்டால், அது நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே சில தனியார் மருத்துவமனைகளில் வைத்திய உதவி செய்யப்பட்டு வந்தது. ஆனால், 1978-க்குப் பிறகு தொழிலாளர்களுக்கு அங்கே வைத்திய வசதி செய்து கொடுக்காமல் இருப்பது சரியாக இருக்காது. அவர்களுக்கும் ஒரே சர்வீஸ் கன்டிஷன்தான். தொழிலாளர்களாக இருப்பதன் காரணமாக, 1978-க்குப் பிறகு வேலைக்கு எடுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் அங்கே வைத்திய வசதி செய்து தரப்படுமா? நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காதரின் ஆஸ்பத்திரியில் கொடுக்கப்பட்டு வந்த மருத்துவ வசதியை நிறுத்துவதற்கு யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட நடவடிக்கையை போக்குவரத்துக் கழக நிர்வாகமே எடுக்குமானால், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—30)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்களின் கொள்கைப்படி எதுவுமே அரசுடைமையாக இருந்தால்தான் நன்றாக இருக்கும், தனியாரை எப்போதுமே அவர்கள் விரும்ப மாட்டார்கள். அந்த அடிப்படையில் 1978—க்கு முன்னாலே இருந்தவர்கள் தனியார் துறையிலே இன்றைக்கு மருத்துவ வசதி பெறுகிறார்களே அவர்களை அரசாங்கத்திற்கு மாற்றவேண்டுமென்று ஏற்கனவே அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. பாதியிலே நின்று கொண்டிருக்கிறது. தொழிற் சங்கத்தோடு அமர்ந்து பேசி அந்த நடவடிக்கையை எடுக்கலாம். ஒரு போல இருக்க வேண்டுமென்பது தங்களுடைய நோக்கம். அரசு மருத்துவ மனையில் மருத்துவ வசதி பெறுகிற அந்த வாய்ப்பை ஏற்படுத்தி விட்டால் அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன்.



1987 மார்ச் 4]

**திரு. கி. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாக முழு நேர மருத்துவ மனைகள் அந்தத் தொழிலாளர்களின் வசதிக்காக அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புற நோயாளிகளுக்கு மட்டும் பெரும்பாலான இடங்களில் அந்தந்த டெப்போக்களில் மருத்து வர்களை போக்குவரத்துத் துறையின் சார்பாக அமர்த்தி மருத்துவ உதவி செய்யப்படுகிறது. ஆனால் உள் நோயாளிகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இப்போது செய்யப்படவில்லை. தமிழகத் திலே முதல்வர் அவர்கள் ஒரு கல்லூரியை தொழிலாளர்கள் சார்பாக துவக்குவதற்கு ஏற்பாடு செய்து வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வருகிறபோது அந்தத் தொழிலாளர்கள் 15, 20 நாட்கள் தங்கி தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டுமென்ற நிலை இருக்குமானால் எங்கே இருந்தாலும் அங்கே கொண்டு சென்று அந்த வசதியைப் பெறு வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே அவர்களுக்கென்று ஒவ்வொரு பகுதியிலும் தனியாக மருத்துவ மனை வரவேண்டும் என்பது இந்த அரசினுடைய கொள்கை.

**நாகர்கோவில் — கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.**

54—(*வினா எண். 9573) **திரு. கோ. பெருமாள் பிள்ளை,** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் கரியமாணிக்கபுரம் பக்கத்தில் இருக்கும் பதினெட்டாம்படி என்னும் இடத்தில் அமைந்துள்ள இரயில்வே கிராசிங்கில் மேம் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இரயில்வேயினால் முடிவு செய்யப்பட்டு, மேம்பாலம் கட்டும் பணி தொடங்கு வதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[1987 மார்ச் 4

**திரு. கோ .பெருமாள் பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி போடும்போது வேலை தொடங்கப் படவில்லை. தற்போது வேலை தொடங்கப்பட்டுவிட்டது. ஆகவே அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 90 லட்ச. ரூபாய்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளிலே எல்லா இடங்களிலும் அந்த மாதிரி அமைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? எல்லா இடங்களிலும் பஸ்கள் மற்றும் வேறு நெருக்கடிகள் ஏற்படுகின்றதே அதற்கு ஏதாவது திட்டம் வைத்து அனுப்பியிருக்கிறார்களா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 இடங்களில் மிக அதிகமான நெரிசல் இருக்கிறது என்று மத்திய அரசுக்கு நாம் பரிந்துரை செய்திருக்கி றோம். மத்திய அரசிற்கு இருக்கிற நிதி நெருக்கடியால் எல்லா இடங்களிலும் அவர்களால் உடனடியாக எடுத்துக்கொள்ள முடிய வில்லை. 7 இடங்களிலே கட்டலாம் என்று அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அடுத்த பரிந்துரையில் நாம் இன்னும் 10,15 இடங்களைச் சேர்த்து அனுப்புவோம். அவர்கள் சில நார்மஸ் வைத்திருக்கிறார்கள். குறைந்த பட்சம் 50 ஆயிரம் முறைகள் டிரெயின் அந்தப் பக்கமாக கடந்தாக வேண்டுமென்ற கணக்கை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கு மேலே இருப்பதைத் தான் அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். எனவே, அந்த வகை யில் எந்த எந்த இடங்கள் அதற்கு உள்பட்டு வருகிறதோ அந்த அடிப்படையில் அதையெல்லாம் மத்திய அரசாங்கத்திற்குப் பரிந் துரை செய்து எதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ அதை வைத்து நாம் செய்து கோண்டிருக்கிறோம். எல்லா இடங்களிலும் போடுவதற்கு சாத்தியக்கூறு இருக்காது, காரணம் நிதிப் பிரச் சினைதான்.

**திரு கோ. பெருமாள் பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலங்கள் கட்டும்போது வருங்காலத் தேவையை உணர்ந்து டபுள் டிராக் போடுவதற்கு வசதியாக வடிவமைப்பு போடப்படுகிறதா? அப்படியில்லையானால் மேம்பாலம் கட்டப்படுகிறபோது டபுள் டிராக் போடுவதற்கு வசதியாக வடிவமைப்புகள் அமைக்கப்படுமா ?



1987 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இரயில்வேத் துறையின் பொறுப்பு. இரண்டு டிராக் வரவேண்டுமென்ற நிலை இருக்குமானால் அதற் கான டிசைனை அவர்கள் செய்து கொடுக்கவேண்டும். எந்த இடத்திலே ஓவர் பிரிட்ஜ் வேண்டுமென்று நாம் கேட்கிறோமோ அதற்கேற்ப அவர்கள் வடிவமைத்துக் கொடுக்கிறார்கள்.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 7 இடங்களில் அப்படிப் பாலங்கள் கட்டுவதற்குத் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரி வித்தார்கள். அதிலே வடகோவை மேம்பாலமும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இருக்கிறது. அவர்கள் சொல்வது கோவை மாநகராட்சி எல்லையில் 0.2 கி.மீ. இல் கிராஸ் கட்சாலை என்று கருதுகிறேன். அது இருக்கிறது. அவர்கள் ஊருக்குப் போகிற வழியில் இன்னொன்று இருக்கிறது. அது இன்னும் வர வில்லை. (சிரிப்பு).

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னு டைய பதிலிலே குறிப்பிடுகிறபோது இரயில் எத்தனை முறைகள் போகிறதோ அந்த அடிப்படையில் மேம்பாலங்கள் கட்டப்படு கின்றன என்று சொன்னார்கள். நான் சென்ற ஆண்டே கேள்வியை கேட்டேன். புதுவைக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையே செல்கிற பாதை எங்கள் பகுதியிலே உள்ள திருவண்ணாமலை வழியாகச் செல்கிறது. ஆனால் அங்கே காட்பாடிக்கும் விழுப் புரத்திற்கும் செல்கிற இரயில் பாதை இருக்கிறது. நான் இங்கே பல முறை கேட்ட பொழுது அது அரசின் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது நம்முடைய உறுப்பினர் திரு. பெரு மாள் பிள்ளை அவர்கள் நன்றி சொன்னதைப் போன்று—திரு வண்ணாமலையிலும் மேம்பாலத்தை அமைத்துக் கொடுத்தால் நாங்களும் நன்றி சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப் பைத் தருவார்களா? கர்நாடக மாநிலத்திற்குச் செல்கிற சாலையை இன்னும் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்காமல் வைத்திருக்கிறார்கள் ஒரு மாநிலத்தையும் இன்னொரு மாநிலத்தை யும் இணைக்கிற பாதையை நெடுஞ்சாலையாக அமைக்காததற்கு என்ன காரணம்? இனிமேலாவது அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அவர்களுக்கு நன்றி சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு பரிசீலனையில் இருப்ப தாக, அமைச்சர் ஏற்கனவே சொன்னதாகச் சொன்னார்கள்.

இப்பொழுதும் அதில் மாற்றம் ஒன்றும் இல்லை, அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த நெடுஞ்சாலையைப் பொறுத்த வரை, தேசிய நெடுஞ்சாலையாக்க வேண்டுமென்றால், மத்திய அரசாங்கத்திற்குச் சிலவற்றை நாம் பரிந்துரை செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், இப்பொழுது அவர் கேட்கிற குறிப்பிட்ட பாதையினுடைய குறிப்பு என்னிடத்தில் இல்லை. அது பரிந்துரையில் இருக்கிறதா, என்ன சூழ்நிலையில் இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை. இருந்தாலும், இப்பொழுது நீங்கள் சொன்னதையே ஒரு கோரிக்கையாக ஏற்றுக் கொண்டு மத்திய அரசாங்கத்திற்கு மீண்டும் நினைவுபடுத்துவதற்கு நிச்சயமாக நான் தயாராக இருக்கிறேன். மேம்பாலத்தைப் பொறுத்த வரை, அதனுடைய நிலை என்ன என்பதைப் பொறுத்து சரியான ஏற்பாடு எடுப்பதற்கு வழி செய்யலாம்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 7 மேம்பாலங்கள் மத்திய அரசின் மூலமாக அனுமதி அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த 7 மேம்பாலங்களில் ஒன்றாக தஞ்சைக்கு மேம்பாலம் உண்டா? ஏற்கனவே, ரூ. 72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூட அங்கே விளம்பரங்கள் எல்லாம் செய்யப்பட்டு அதற்காக நம்முடைய தமிழக முதல்வர் எல்லாம் அழைக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது அறிவித்துள்ள 7-ல் அது ஒன்றா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், அந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் எனக்கு எடுத்துக் கொண்டதாக நினைவு. ஒருவேளை, பணி துவங்கப்பட்டிருந்தால் அந்தக் குறிப்பு இதிலே இருக்காது. அதைப் பார்த்துவிட்டு நான் தனியாகச் சொல்கிறேன்.

திரு கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் அளித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டங்கள் என்ன, என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தப் பட்டியல் நீளமாக இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னேன். கோவை மாநகராட்சி எல்லையில் கிராஸ்கட் ரோட்டில் ஒரு மேம்பாலம், சென்னை பரங்கிமலை ரெயில் நிலையம் அருகில் ஒரு சுரங்கப் பாதை, சென்னை பழவந்தாங்கல் ரெயில் நிலையம் அருகில் ஒரு சுரங்கப் பாதை, சென்னை சைதாப்பேட்டை ஜோன்ஸ் ரோடில் ஒன்று, வடசென்னையில் மணியக்





காரச் சத்திரம் அருகில் ஒன்று, தேசிய நெடுஞ்சாலை-7-ல் 427 கிலோ மீட்டரில் சமயநல்லூர் அருகில் ஒன்று, சேலம் நகரிலுள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் ஒன்று, ஆக 7 இடங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தல்.

55—(*வினா எண். 12434)—திரு எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல் துறைமுகம் விரிவுபடுத்தும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் பணிகள் தொடங்கப்பெற்று முதற் கட்டமாக உள்ளமைப்புப் பணிகளான துறைமுகத்திற்கு அணுகுசாலை அமைத்தல் ஆர். சி.சி. பாலம் கட்டும் பொருட்டு சீஸ்மிக் சர்வே, நிலத்தினைத் துளையிடுதல் முதலிய பணிகள் ரூ. 5.05 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மற்ற கருத்துக்களான சரக்குக் கொட்டகை கட்டுதல், இழுவைப் படகுகள் வாங்குதல் முதலியவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்துகிற பணியில் புதிதாக திருத்தப்பட்ட மதிப்பீடு ஏதேனும் இவ்வாண்டு தயாரிக்கப்பட்டதா ? மணவாளக்குறிச்சியில் மணல் ஆலை நிர்வாகம் குளச்சல் துறைமுகத் திட்டப் பணிகளுக்கு, திட்ட மதிப்பீட்டில் பாதித் தொகை அரசுக்கு வழங்குவதற்குத் தயார் நிலையில் இருப்பதால், திருத்திய மதிப்பீடு ஏதேனும் இவ்வாண்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ரூ. 83 இலட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பாதித் தொகையை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டபொழுது, ஏற்கனவே போட்ட மதிப்பீட்டில் அது குறைவாக இருக்கிறது, இது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்பதிலேபேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அதிலே ஒரு முடிவு இன்னும் தெரியவில்லை.

(முற்பகல் 10–40)

திரு எப். எம். இராசரத்தினம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய துணைக் கண்டத்தில் தென்கோடி முனையில் இருக்கிற குளச்சல் துறைமுகம் ஒரு இயற்கை

[1987 மார்ச் 4

துறைமுகம். கரை அருகில் கப்பல் நிறுத்துவதற்கு அதிக வசதி வாய்ப்புள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம். எனவே அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதியும், குமரி மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களின் வளர்ச்சியைக் கருதியும், நடப்பு நிதியாண்டிலாவது குளச்சல் துறைமுகம் திட்டம் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி தான் இவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே தொடர்ந்து நிலைமைகளுக்கேற்ப, நிதிப் பிரச்சினை, மற்ற எல்லா பிரச்சினைகளையும் அடிப்படையாக வைத்து இந்தப் பணியைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்கும்.

**துறையூர் வட்டம் பச்ச பெருமாள்பட்டியில் கூட்டுறவு ஆடு வளர்க்கும் சங்கம்.**

56—(*வினா எண். 6980)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டம், பச்ச பெருமாள்பட்டி தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கென கூட்டுறவு ஆடு வளர்க்கும் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே (அ) துறையூர் வட்டம் பச்சபெருமாள்பட்டியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கென ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரி விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**நெல்லிக்குப்பம் தொகுதி, திருவந்திபுரத்தில் சுற்றுலா விடுதி.**

57—(*வினா எண். 9356)—திரு துரை அன்பரசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் அருள்மிகு தேவனாதசுவாமி ஆலயம் அமைந்துள்ள திருவந்திபுரத்தில் சுற்றுலா விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.



1987 மார்ச் 4]

திரு கூடலூர் இ. வி. வேலு: தலைவர் அவர்களே, எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்தில் இருக்கும் சாத்தனூர் அணைப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வந்து போகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் சென்னையில் இருக்கிற சினிமா கம்பெனிகளும் அங்கே படக் காட்சிகளையெல்லாம் அவ்வப்போது எடுக்கிறார்கள். எனவே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்துபோகிற அந்தப் பகுதியில் சுற்றுலா வாரியத்தின் மூலமாக ஓட்டல் கட்டுகிற திட்டம் இருப்பதாக சென்ற ஆண்டில் குறிப்பிட்டார்கள். அத்திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு வை. பாலசந்திரன்: தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற திருக்கோவில்கள் அருகில் சுற்றுலா விடுதிகள் அமைக்க அரசு முன் வருமா? இப்போது நான்காம் நாள் திருவிழா நடந்துகொண்டிருக்கும் மண்டைக்காடு திருக்கோவில் அருகில் ஒரு சுற்றுலா விடுதி கட்ட அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு க. நரசிம்ம பல்லவன்: தலைவர் அவர்களே, சுற்றுலா மையம் அமைக்க என்னென்ன சூழ்நிலைகள் இருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சுற்றுலா மையம் அமைக்க அந்தப்பகுதி பெரிய திருத்தலமாக இருக்க வேண்டும். அல்லது பலபேர் வந்து போகிற மலை வாசஸ்தலம், நீர்வீழ்ச்சி போன்ற இடமாக இருக்குமானால் அப்பகுதிதான் சுற்றுலா மையம் அமைக்க தகுந்த இடமாகும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் நடராஜர் கோவில் அருகில் இருக்கிற பிச்சாவரம் சுற்றுலா மையத்தை இன்னும் நல்ல முறையில் விரிவாக்கம் செய்து நாடு முழுவதும் இருக்கிற சுற்றுலாப் பயணிகள் வந்து போகிற அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய மாஸ்டர் பிளான் இப்போது தயாரிப்பு நிலையில் உள்ளது.

திருமதி டி. யசோதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது மிகப்பெரிய தெய்வ ஸ்தலமாக இருந்தால் சுற்றுலா மையம் அமைக்க ஏதுவாக இருக்குமென்று சொன்னார்கள். அப்படியானால் இராமானுஜர் ஆலயம் இருக்கிற ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மீது ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிதம்பரம் தொகுதியில் உள்ள திருமுஷ்ணம் பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு பூவராகவ சுவாமி திருக்கோயில் திருத்தலத்தை சுற்றுலா தலமாக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசிலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விடையளிக்க இயலும்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கல்ராயன் மலைப்பகுதி சுற்றுலா மையமாக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருந்தார்கள். எனவே இந்த ஆண்டில் கல்ராயன் மலைப்பகுதியினை சுற்றுலா மையமாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆய்ந்து வருகிறது

திரு. கே. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழகத்தில் நடுத்தர சுற்றுலாப் பயணிகளுக்காக ஓட்டல்கள் கட்டுவதற்கு அனுமதித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அனுமதித்து இருக்கிறது. இதற்கு விவரம் பெற தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் தீர்த்தமலை என்று மிகப் பெரிய தலம் இருக்கிறது. மலை மீது 30 அடி உயரத்தில் நீர்வீழ்ச்சி ஒன்று இருக்கிறது பல மாவட்டங்களிலிருந்தும்



யாத்ரீகர்கள் அங்கே வருகிறார்கள். இதனை சுற்றுலா திருத்தலமாக்க மலைப் பாதை அமைக்க வேண்டுமென்றும், சுற்றுலா விடுதி இருக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள்.

அரசு அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுத்து, தீர்த்த மலையில் ஒரு சுற்றுலா விடுதி கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர்மபுரி மாவட்டம் போனபோது அதற்காக அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ச. சங்கரலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது பெரிய ஆலயங்களாகவும், நீர் வீழ்ச்சிகளாகவும் உள்ள இடங்களை சுற்றுலா மையமாக ஆக்கலாம் என்று சொன்னார்கள். திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அதிக வருமானம் உள்ள சங்கர நாயனார் ஸ்வாமி கோவில் தேவஸ்தானம் 30 இலட்ச ரூபாய் வருமானத்தை ஈட்டி, நெல்லை மாவட்டத்திலேயே அதிகமான வருமானம் உள்ள ஆலயமாக உள்ளது. மேற்படி திருத்தலத்தை சுற்றுலா ஸ்தலமாக ஆக்குகின்ற எண்ணம் அரசின் பரிசிலனையில் உள்ளதா? அதை அரசு சுற்றுலா மையமாக்க முன்வருமா?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையம் ஏற்படுவதற்கு பெரிய திருத்தலங்கள் இருக்க வேண்டும் என்பது ஒரு காரணமே தவிர வேறல்ல. அத்தனை திருத்தலங்களையும் சுற்றுலா மையமாக்க வேண்டிய அவசியம் இல்லை. போதுமான அளவிற்கு நிதி வசதி இருந்தால், சிறப்பாக பலர் வரும்படியாகவும் வருபவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவும் இந்த அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்கும்.

திரு வி. கோ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற நேரத்தில் பெரிய திருத்தலமாக இருந்தால் அதை சுற்றுலா மையமாக ஆக்கலாம் என்று கூறினார்கள். அவர் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருவந்திபுரத்தினுடைய சிறப்பை அவர் அறிவார். ஏன் என்றால் திருப்பதிக்கு வேண்டுதல் செய்தவர்கள் திருவந்திபுரம் வரலாம். ஆனால் முதலில் திருவந்திபுரம் வேண்டுதல் செய்தவர்கள் திருப்பதிக்குச் செல்லக்கூடாது என்று ஒரு சம்பிரதாயம் இருக்கிறது. அது அவருக்கு நன்றாகத் தெரியும். எனவே இதை மீண்டும் பரிசீலனை செய்து, அதைச் சுற்றுலா மையமாக்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக நெல்லிக்குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டதற்கு நான், தற்போது இல்லை என்றுதான் சொன்னேன். அண்மையில் அந்த ஆலயத்தை நானே நேரிடையாகப் பார்வை யிட்டேன். சிவன், விஷ்ணு, பிரம்மா என்று இந்த மூன்று உருவத்திலும் ஒரே ஆண்டவன் இருப்பதும், உலகத்தில் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு 'ஹ்யக்ரீவர்' என்று ஒரு தெய்வம் இருப்பதும் அங்குதான். அதை எப்படி சுற்றுலா மையமாக ஏற்படுத்தலாம் என்பது பற்றி ஆய்வு செய்யும்படி சொல்லப்பட்டு இருக்கிறது.

**திரு ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தமிழகத்தில் உள்ள முக்கியமான திருத்தலங்களைச் சுற்றுலா மையமாக்கலாம் என்று சொன்னார்கள். வடலூர் வள்ளலார் வாழ்ந்த பகுதியில் ஏற்கனவே சுற்றுலா மையம் அமைப்பதற்கு சர்வே செய்து, ஆய்வுக் குழுவினர் எல்லாம் வந்து பார்த்தார்கள். அது தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை மாண்புவுகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா,

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவரவர்களே, வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் ஜீவமுக்தி அடைந்த அந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆக்கிரமிப்பில் உள்ளன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தனியார் ஒருவர் பல இலட்சம் ரூபாய் கேட்கிறார். அந்த ரூபாயை எப்படிவசூல் செய்து கொடுப்பது என்ற முறையில் அரசு அதை ஆய்வுசெய்து, அந்த நிலத்தை ஆக்கிரமிப்பில் இருந்து அகற்றவும், அதைச் சுற்றுலா மையமாக ஆக்கி மேம்பாடு செய்யவும், நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாட்டுக்காரர்கள், அதாவது Foreigners கோடை ரோடிலே வந்து இறங்கி கொடைக்கானலுக்கு அதிக அளவில் செல்கிறார்கள். எனவே அங்கே ஒரு சுற்றுலா மையம் அமைக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு நான் சொல்லி. அதற்கு அமைச்சர் அவர்களும் ஒப்புதல் அளித்திருந்தார்களே, அது இந்த ஆண்டு நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா? அதேபோல் பழனி மலை, யாத்திரிகர்கள் நிரம்ப வரக்கூடிய இடமாக இருக்கிறது. அங்கே பல நாட்கள் வந்து தங்குகிறார்கள். எத்தனை லாட்ஜுகள் இருந்தாலும் அங்கே தங்குவதற்கு இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மேலும் முக்கியமானவர்கள் எல்லாம் அங்கே வருகின்ற காரணத்தாலே, அங்கேயும் ஒரு சுற்றுலா மையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோடை மலைக்குப் போகிற அந்தக் கோடை இரயில்வே ஸ்டேசனுக்கு எதிரிலுள்ள ஒரு பங்களாவை எடுத்து,



பயணிகள் வந்து தங்குவதற்கு உதவியாக ஏற்பாடு செய்யலாமா என்பதைப் பற்றி இப்போது முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

பழனியைப் பொறுத்தவரையிலும் மேலும் தங்குவதற்கு பல அறைகள் கொண்ட ஹோட்டல்கள் வேண்டுமென்றால், அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசத்தைச் சேர்ந்த அகஸ்தியர் கோவிலையும், அங்குள்ள அகஸ்தியர் அருவியையும் மாவட்ட சுற்றுலா ஸ்தலமாக ஆக்க, அரசு ஏறத்தாழ சுமார் 5 இலட்சம் ரூபாய் வரை செலவிட்டு, சுற்றுலா பயணிகள் வரத்தக்க அளவில் செய்துள்ளது. ஆனால் அந்த இடத்திற்குப் போக வேண்டுமென்றால், வனத்துறை இடத்தைக் கடந்துதான் போக வேண்டியுள்ளது. வனத்துறை அதிகாரிகளால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தச் சுற்றுலா ஸ்தலத்திற்குப் பொதுமக்கள் எளிதில் செல்வதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—50)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி வனத்துறையுடன் கலந்து பேசி இடைஞ்சல் இல்லாமல் ரோடுகள் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ஆ. சிவக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள சமயநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட வண்டியூரில் உள்ள கண்மாயை நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு அந்தக் கண்மாய் சுற்றுலா மையமாக ஆக்கப்படும் என்றும் அதில் உணவகம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். அதனுடைய வேலை எப்போது துவங்க இருக்கிறது, அதனுடைய மதிப்பீடு என்ன என்பதை, மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விருப்பப்படி வண்டியூர் கண்மாயைச் சிறந்த இடமாக மாற்றுவதற்கு நேற்றுதான் மத்திய அரசிடமிருந்து 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுக்கு அனுமதியைப் பெற்று இருக்கிறோம்.

[1987 மார்ச் 4

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டிணத்தில் உள்ள வேளாங்கண்ணி மாதா கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவில். அந்தக் கோவிலுக்கு இந்தியா முழுவதிலும் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் மக்கள் வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் தங்க வேண்டும் என்றால் நாகப்பட்டிணத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படி வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கு வருகிறவர்கள் தங்குவதற்கு வசதியாக சுற்றுலா விடுதியைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு வி, வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டிணத்தில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதி கட்டுவதற்கு நேற்றைய தினம் தான் அதற்கும் மத்திய அரசிடமிருந்து அனுமதி வந்திருக்கிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதாக இருந்த கேள்வியை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. உத்திராபதி அவர்கள் கேட்டுவிட்ட காரணத்தால் நான் கேள்வியை கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன கேள்வியைக் கேட்கப் போகிறீர்கள் என்று என்னிடம் சொல்லிவிட்டா கையைத் தூக்கி கேள்வியைக் கேட்கிறீர்கள்.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புக்குரிய ராஜா தேசிங்கு வாழ்ந்த செஞ்சிக்கு பல்லாயிரக்கணக்கான பேர் வந்து போகிறார்கள். ஆகவே, அதை ஒரு சுற்றுலா மையமாக அமைக்க அரசு முன் வருமா என கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தேசிங்கு ராஜா அவர்கள் இருந்த இடம். அது மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வின் நிர்வாகத்தில் இருக்கிறது. அவர்கள் அனுமதித்தால் தான் அதை சுற்றுலா மையமாக மேம்பாடு அடையச்செய்ய முடியும்.

திரு, ஜி. ஜே. ஜெ. பாரதி : மாண்புமிகு தலைநாயகர் அவர்களே, சென்னை மாங்காட்டில் அமைந்து இருக்கும் காமாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு பல்வேறு வரலாற்று சிறப்புடன் வாழ்பவர்களும் பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் வந்து போகிறார்கள். அங்கே சுற்றுலா மையம் அமைத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். ஆகவே, அதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி தனியாகக் கேள்வி போடும்படி தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு அ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லும்போது கோடை ரோட்டை சுற்றுலா மையமாக ஏற்படுத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து தொகை ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அங்கே சுற்றுலா மையம் ஏற்படுத்தப் போகிறீர்களா அல்லது பயணிகள் தங்குவதற்கு வசதியாக சுற்றுலா வாரியத்தின் மூலம் தங்கும் ஓட்டல் ஏற்படுத்தப் போகிறீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினா போடும்படி தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகெங்கையை தலைமையிடமாகக் கொண்டு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தொடங்க வந்த போது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பசும்பொன் கிராமத்திற்கு வந்து பசும்பொன் கிராமத்தைச் சுற்றுலா மையமாக அறிவிக்கிறேன் என்று சொல்லி அறிவித்துவிட்டு வந்தார்கள். ஆனால், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைப்பற்றி அரசு பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால் அது நிச்சயமாக நடக்கும். அப்படி சொல்லியிருந்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

திரு ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகவும் தொன்மையும், அழகும் வாய்ந்த அழகிய சிற்பங்கள் இருக்கக்கூடிய இடமாக திண்டுக்கல் தொகுதியில் உள்ள தாடிக்கம்புவில் அருள்மிகு சௌந்திரராஜா பெருமாள் கோவில் இருக்கிறது. மக்கள் அதிகமாக அங்கேவந்து பயன்பெற்று போகிறார்கள். மேலும், திண்டுக்கல் தொகுதியில் சிறுமலை மிகவும் நல்ல கோடைவாசஸ்தலமாக இருக்கிறது.

இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எங்கெங்கு சுற்றுலா மையங்களை ஏற்படுத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள்

பல்வேறு கருத்துக்களை ஆர்வமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் சொல்லும் கருத்துக்களை எனக்குத்தெரிவித்திருந்தால், முன்கூட்டியே பதில் சொல்வதற்குத் தயாராக இருந்திருப்பேன். எனவே, தனியாக வினாக்கள் போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா உறுப்பினர்களும் அமைச்சரிடம் வேண்டுகோளை கொடுத்துவிடுங்கள்.

**புதுக்கோட்டை மாவட்டம், செவலூர் அருள்மிகு பொன்னாங்குருந்துடை அய்யனார் ஆலய திருப்பணி.**

*58—(*வினா எண். 10183)* **திரு த. புஷ்பராஜ் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் செவலூர் அருள்மிகு பொன்னாங்குருந்துடை அய்யனார் ஆலயம் திருப்பணி எப்போது முடியும் ?

(ஆ) இத்திருக் கோயிலுக்கு அறநிலையத் துறை மூலம் எவ்வளவு நொகை வழங்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் செவலூர் அருள்மிகு பொன்னுங்குருந்துடை அய்யனார் ஆலயத் திருப்பணி முடிக்க ஏறக்குறைய ஓராண்டு (அக்டோபர் 1987) ஆகும்.

(ஆ) ரூ. 75,000 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையால் அரசு மானியமாக வழங்க 29–10–1985இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**சென்னை மற்றும் புதிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையம் அமைத்தல்.**

*59—(*வினா எண்.994)* **திரு டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன் : :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் புதிதாக துவங்கிய மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?





**மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு தனித்து ஒரு மாவட்டத் தொழில் மையம் துவங்கும் உத்தேசம் இல்லை. சென்னை நகரத்தின் தொழில் தேவைகள் சென்னையில் உள்ள மண்டல துணை தொழில் வணிக இயக்குநரால் கவனிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்ததனால் ஏற்பட்ட புதிய மாவட்டங்களான பசும்பொன் முத்துராமலிங்கம், மற்றும் காமராசர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் 21–4–1986இல் அமைக்கப்பட்டு அவை முறையே 7–5–1986, 15–5–1986லிருந்து இரண்டும் செயல்படத்துவங்கியுள்ளன.

அண்ணா மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் 14–7–1986இல் அமைக்கப்பட்டு, அவை முறையே 1–8–1986, 28–7–1986 ஆம் நாட்களிலிருந்து செயல்பட துவங்கியுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததனால் ஏற்பட்ட புதிய மாவட்டமான சிதம்பரனார் மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையம் அமைக்க மைய அரசின் அனுமதி கிடைக்கும் வரை, அம்மாவட்டத்தில் ஒரு கிளை மாவட்டத் தொழில் மையம் அமைக்க 19–9–1986இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும், மாவட்ட தொழில் மையம் அமைக்க மத்திய அரசு அனுமதித்து 14–2–1987இல் கடிதம் வரப்பெற்றது.

**திரு டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக அங்கே வருகின்ற அப்ளிகேஷன்களையெல்லாம் ஸ்க்ரூட்டினைஸ் செய்து, வங்கிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு கடன் வழங்கும்படி அனுப்பியும் கூட, சில வங்கிகளில், மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்குக் கடன் வழங்குவதில் கடுமையான கால தாமதமும், சில சமயம் அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாத நிலையும் இருக்கிறது. இதைப் பற்றிய புகார் அரசுக்கு வந்திருக்கிறதா, அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** தலைவர் அவர்களே, சென்றமாதம் 20 ஆம் தேதி மாவட்டத் தொழில் மையங்களின் மேலாளரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், வங்கிஉயர் அதிகாரிகளையும் அழைத்து, இது சம்பந்தமாகப் பேசினோம். அவர்கள் அத்தனை பேரும் 31–3–1987-க்குள் கொடுத்து முடிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதுவரையில் நாம் பொறுத்துப் பார்க்க வேண்டும்.

[1987 மார்ச் 4

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத் தொழில் மையங்களுக்கு எந்த அடிப்படையில் தொகைகள் வழங்கப்படுகின்றன ? அதை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு ஆனூர் பு.கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்கள், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் ரூ. 4 இலட்சம் என்று அவர்கள் ஒதுக்குகிறார்கள். ஆனாலும்கூட 50 சதவீதம் மாநில அரசும் போட்டு ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. சில இடங்களில் ரூ. 8 இலட்சத்திற்கும் மேலாக ஆனாலும்கூட, மாநில அரசே கூடுதலாகும் செலவையும் ஏற்கிறது.

திரு என். எஸ். வி. சித்தன் : இதற்காகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இதைத் துவங்குவதில், பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகத் தொகை கொடுக்க அரசு முன்வருமா ? மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு தாக்கீது போகுமானால், அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு கடன் வழங்குவதற்கு துணையாக, இனி வருங்காலங்களிலாவது மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து அந்த வேலை தேடி, தொழில் தேடி வருபவர்களுக்கு தாக்கீது போகுமானால், வங்கிகளிலே மறுக்கப்படாத அளவிற்கு இனியாவது தொகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 இலட்சம் என்று சொல்வது மாவட்ட தொழில் மையங்கள் இயங்குவதற்காக மத்திய அரசு வழங்குகின்ற தொகை. ஆனால் கடன் வழங்குவதற்காக ஒரு தனிப்பட்ட முறையிலே குறியீடு அமைக்கவில்லை. அந்தந்த மாவட்டத்தை பொறுத்தவரையில் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதை சென்ற ஆண்டிலிருந்து கணக்கிட்டு ஏறக்குறைய தமிழ்நாடு பூராவும் 18,100 பேர்களுக்கு தரவேண்டுமென்று இறுதியாக முடிவு எடுத்துக் குறியீடு நிர்ணயித்திருக்கிறோம். அந்தக் குறியீடுபடி நடந்து வருகிறது.

[முற்பகல் 11-00]

**கோத்தகிரி யூனியன் தங்குமரஹடாவில் சிறு தொழில்கள்.**

60—(†வினா— எண். 11868)திரு எம். சிவக்குமார் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி யூனியனை சேர்ந்த தெங்குமரஹடா என்னும் பகுதியில் சிறுதொழில்கள் நிறுவ அரசு ஏதாவது திட்டம் ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

**சென்னையில் மின் வெட்டு.**

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order சில நாட்களுக்கு முன்னாலே நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே மேலும் மின் வெட்டு வராது. தற்போது ஆலைகளுக்கு வழங்கியிருக்கின்ற மின்வெட்டைக் கொண்டு அடுத்த மழைக்காலம் வரை சமாளிக்கலாம் என்று சொன்னதாக நான் செய்தியினை பார்த்தேன். ஆனால் இன்றைக்கு காலையிலே சென்னை நகரம் முழுவதும் மின் வெட்டு இருந்தது. ஏன் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேகூட. மின்வெட்டு காரணமாக 3 மணி நேரம் நாங்கள் எல்லாம் குளிக்க முடியாமல் கஷ்டப்பட்டோம். சட்டமன்றம் நடக்கின்ற நேரத்திலே சென்னையிலே இந்த நிலை என்று சொன்னால் தமிழ்நாட்டில் இருக்கின்ற தொலை தூரங்களில் உள்ள கிராம மக்களின் நிலை என்ன என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது Point of order இல்லை, Point of information.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : Sir I am on a point of information. நான் உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது தற்போதுள்ள மின்வெட்டைக் கொண்டே வருகின்ற மழைக் காலங்களை சமாளிக்க முடியுமா ? தற்போது மின்சாரம் எவ்வளவு உற்பத்தியாகிறது? எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்னை தென் பகுதியில் காலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின் தட்டுப்பாட்டை வைத்து தமிழ்நாடு பூராவும் உள்ள மின்சாரத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றி நான் அவையில் நிச்சயமாக அறிக்கை வைக்க தயாராக இருக்கிறேன். காலையைப் பொறுத்தவரைக்கும் நான் தகவல் கேட்டு இருக்கிறேன். வந்தவுடன் அதுபற்றி இந்த அவையில் வைக்கிறேன்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : முன் வரிசையில் உள்ளவர்களுக்குத்தான் பாயிண்ட் ஆப் இன்பர் மேஷன் என்ற ஒரு முடிவை அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்திருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஒரு முக்கியமான பிரச்சனை........

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, மின் தட்டுப்பாடு, கட்டுப்பாடு, வெட்டு எல்லாவற்றை பற்றியும் அவை முன் வெகு விரைவில் அறிக்கை வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம்** : தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதியிலே மின்வெட்டைப் பற்றி சித்தன் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற விடுதியிலேயே இந்த கதி என்று சொன்னால், நாட்டிலே இருக்கக்கூடியவர்கள்.... ..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நாட்டு மக்களுக்கு எந்தக் குறைபாடு இருக்கிறதோ நிச்சயமாக அந்தக் குறைபாடு உங்களுக்கும் வாலாம்; அதைப்பற்றி யோசியுங்கள், உங்களைப் பற்றி யோசிக்கா தீர்கள். மக்களைப் பற்றி பேசுங்கள். நாம் சாப்பிட்டால் போதுமா ?

**திரு. ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம்** : சட்டமன்ற விடுதியிலே இந்த மாதிரி ஒரு தட்டுப்பாடு இல்லாமல் செய்வதற்கு இந்த அரசு உறுதி தருமா ? குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் சரிபார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன்** : தலைவரவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் இதனால் பாதிக்கப் பட்டார்கள் என்பதல்ல. பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அதனால்தான் மொத்தமாக சென்னை தென் பகுதி என்று சொன்னேன். டிரான்ஸ்பார்மரில் தடை ஏற்பட்டதாகச் சொன்னார்கள். முழு விவரத்தையும் இந்த அவை முன் வைக்கிறேன். இனி இம்மாதிரி நடக்காமல் இருப்பதற்கு உறுதி அளிக்கிறேன்.





## 3. கவன ஈர்ப்பு.

### திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடி ஊழியர்களை நிரந்தர மாக்குதல்.

**திரு கே. சுப்பராயன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடியில் பணியாற்றுகின்ற 17 ஊழியர்களை ஆறு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியும், இதுவரை நிரந்தரம் செய்யப்படாமல் இருப் பது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடியில் அவசரத்
தேவையினைக் கருத்திற்கொண்டு 17 நபர்கள் பொட்டலம் கட்
டும் பணிக்கு தினக்கூலி அடிப்படையில் அமர்த்தப்பட்டார்கள்.
அவர்கள் அனைவரும 31-12-79 தேதிக்கு பிறகு வேலை வாய்ப்பு
அலுவலகம் மூலமின்றி நியமனம் செய்யப்பட்டார்கள். அவர்கள்
இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து 480 நாட்களுக்கு மேலாக
பணியாற்றியுள்ளதால் அவர்களது பணியை தமிழ்நாடு நிறுவன
(ஊழியர்களுக்கு நிரந்தர தகுதியளிக்கும்) சட்டம் 1981-ன் பிர
காரம் நிரந்தரமாக்கவேண்டும் என்று அரசுக்கு பதிவாளர் கருத்
துரு அனுப்பியுள்ளார். தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்கு
வராத பதவிகளுக்கு 31-12-79 தேதிக்கு முன்பு வேலைவாய்ப்பு
அலுவலக மூலமின்றி நியமிக்கப்பட்ட நபர்களின் பணியை சிறப்
பினமாகக் கருதி நிரந்தரம் செய்யலாம் என்றும், மேற்படி
தேதிக்குப் பின்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமின்றி நிய
மிக்கப்பட்ட நபர்களை உடனே பணி நீக்கம் செய்ய வேண்டும்
என்றும் அரசு ஆணை நிலை எண். 126, வேலைவாய்ப்புத்
துறை, நாள் 19-3-84-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி
17 நபர்களை முறைகேடாக நியமனம் செய்யப்பட்டதால் அவர்
களுக்கு தமிழ்நாடு தொழில் நிறுவன ஊழியர்களுக்கு நிரந்தரத்
தகுதியளிக்கும் 1981ம் வருடச் சட்டம் பொருந்தாது என்றும்
அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் வேலை
வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கூறியுள்ளார். மேற்
படி நபர்கள் 31-12-79 தேதிக்குப் பின்பு வேலைவாய்ப்பு அலு
வலகம் மூலமின்றி நியமனம் செய்யப்பட்டதினால் மேற்படி அர
சாணையின்படி அவர்களை பணி நீக்கம் செய்து, காலியிடங்
களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்ப வேண்டும்
என்று வேலைவாய்ப்புத் துறை கூறியுள்ளது.

மேற்படி 17 நபர்களின் பணியை நிரந்தரம் செய்வதில் சட்ட நுணுக்கப் பிரச்சினைகள் இருப்பதால், அவைகளை வேலை வாய்ப்புத் துறை மற்றும் சட்டத் துறையுடன் கலந்து முடிவு எடுக்கப்படும்.

**திரு கே. சுப்பராயன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டிருக்கிற 17 தொழிலாளர்களும் 6 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்கள் என்ற அடிப்படையில் கருணை உள்ளத்தோடு, மனிதாபிமான அடிப்படையிலும் சட்ட விதிகளை நடைமுறையில் தளர்த்தி அந்த 17 தொழிலாளர்களையும் நிரந்தரமாக்குவதற்குரிய இலாக்கா பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, 17 நபர்களின் பணியை நிரந்தரம் செய்வதில் சட்டப் பிரச்சினை, விதிமுறைகள் இப்போது இடம் தரவில்லை. ஆனால், அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, 6, 7 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்து இருக்கிறார்கள் என்ற நிலையிலும், அவர்களுக்கு வேறு வித தகுதிகளும் இருக்கின்றன என்ற நிலையிலும் அவர்கள் வேலைவாய்ப்பகத்தைக் கலந்து கொள்ளாமல் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தையொட்டி வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற சூழ்நிலையில், அந்த விதியைத் தளர்த்த வேண்டும் என்று அந்தக் கூட்டுறவு அமைப்பிலிருந்து செயற்குறிப்பு வருமேயானால், அதுபற்றி அரசு கவனிக்கலாம், அங்கிருந்து அது வரவேண்டும். வந்தால், அது பற்றி அரசு கவனிக்கும்.

**திரு. கே. சுப்பராயன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டதற்கும், 7 ஆண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்றியதிலேயும், தனிப்பட்ட முறையில் இன்றைக்கு பாதிக்கப்படுகிற அந்த 17 தொழிலாளர்கள் எந்த வகையிலும் அதற்குக் காரணமாக அமைவதில்லை. அவர்களுக்கு சட்ட விதியைப் பற்றியோ, மற்ற விஷயங்களைப் பற்றியோ, தெரிந்து கொள்வதற்குரிய வாய்ப்பற்ற நிலையில் வேலை வாய்ப்பகத்தின் மூலம் அல்லாது அவர்கள் பணியில் சேர்க்கப்பட்டிருக்கிற இன்றைய நிலையில் அவர்கள் வெளியேற்றப்பட்டுவிடுவார்களேயானால், வேறுவேலைவாய்ப்புஅவர்கள் இனி மேல் தேடிக் கொள்வதற்கான வாய்ப்பே கிடையாது. எனவே, அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் நிரந்தரம் ஆக்குவதற்கிடையில் நிறுத்தப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழியை அரசு தர வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்வதோடு, கீழ் மட்டத்திலிருந்து வருகின்ற அந்தப் பரிந்துரையின் அடிப்படையில், குறுகிய கால வரம்பிற்குள் அவர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகளை பரிவுணர்ச்சியோடு கேட்டுப் பெற்று மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, உறுதி மொழி தருவதற்கில்லை. ஆனால், அங்கிருந்து அவர்கள் விண்ணப்பம் செய்வதன் மூலம் கீழ் நிலையிலிருந்து பரிந்துரை செய்யலாம். பரிந்துரையை அரசு கவனித்து கருணையுள்ளத்தோடு வேண்டுமானால் விதியைத் தளர்த்த வேண்டும். சில வகைகளில், சில நேரங்களில், இருக்கிற சூழ்நிலையையொட்டி, அவைகளின் தன்மையையொட்டி, இந்த ஒரு விதியை மட்டும் தான் தளர்த்த வேண்டியது அவசியம் என்று ஏற்படுகிறபோது, கருணையினுடைய அடிப்படையில் தளர்த்தலாம். ஆனால் அது பற்றி அரசு பரிசீலிக்கும். அங்கிருந்து வரவேண்டும். அல்லது இந்த 17 பேர்களும் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தினுடைய அடிப்படையில் ஆராயச் சொல்லி, அங்கிருந்து வர வேண்டும்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. *சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில், ஆளுநர் உரையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சிக்காக, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைக்கு முதலிலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடுமையான வெள்ளச் சோதனையும், வறட்சிப் பெருக்கால் ஏற்படுகின்ற சோதனையும் மாறி மாறி, வந்தாலும், அந்தச் சோதனைகளையே சாதனைகளாக மாற்றி, மக்களைக் காப்பாற்றுவதில் புரட்சித் தலைவர் அரசு ஒரு மக்களாட்சி அரசு என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அது எந்தச் சோதனையாக இருந்தாலும், அந்தச் சோதனைகளை சாதனைகளாக்கி மக்களது நம்பிக்கையைப் பெற்று இன்றைக்கு இந்த அரசு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

கள்-சாராயக் கடைகளை மூட வேண்டும் என்று முதலிலே சொன்னார்கள், தமிழகத்தினுடைய நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமான, ஆழ்ந்த பிடிப்பு கொண்டவர் என்பதை நாம் கடந்த காலத்தில் அறிய முடியும்.

குடித்தால் ஆறு மாதம் தண்டனை என்று சட்டம் கொண்டு வந்து, நாட்டில் யாருமே மது அருந்தக்கூடாது என்ற கொள்கைக்கு வலிவு சேர்த்தார்கள். ஆனால், அப்போது சொன்னார்கள், 'என்ன மிகப் பெரிய பாவம் இது ? குடித்தால் தண்டனையா,

கொலை செய்தாரா, கொள்ளை அடித்தாரா, அவர்களுக்கு எல்லாம் சிறைத் தண்டனை கொடுக்கலாம். ஆனால் தான் உழைத்துச் சம்பாதிக்கின்ற பணத்தில், மாலை நேரத்தில் ஓய்வுக்காக குடிப்பவர்களுக்கு சிறைத் தண்டனையா என்று அன்றைக்குக் கேட்டார்கள். புரட்சித் தலைவர், இந்த மதுவிலக்குக் கொள்கையினை தளர்த்தியபோது, மது விலக்கைத் தளர்த்தலாமா, இது நியாயமா? தாய் மீது சத்தியம் செய்தாரே, முறைதானா இது, என்று மது விலக்கைத் தளர்த்தியபோது சொன்னார்கள்.

இன்றைக்கு கள்-சாராயக் கடைகளை மூடிய பிறகு, இது என்ன பெரிய விஷயம், ஒயின் ஷாப்புகளை திறந்து வைத்திருக்கிறீர்களே என்று சொல்கிறார்கள்.

மதுவிலக்குக் கொள்கையில் என்ன நிலை இருக்க வேண்டும், கள்ளச்சாராயம் பெருகுவதை எப்படித் தடுக்க வேண்டும், மது விலக்குக் கொள்கையை இந்த முறையில் நடைமுறைப்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று அரசுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும். இன்றைக்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையைப் பாராட்ட வேண்டும். 200 கோடி ரூபாய் இழப்பில் மது விலக்கை ஆண்மையோடு புரட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால், அதை நீங்கள் பாராட்டினீர்களா? மது விலக்கைத் தளர்த்திய போது எதிர்த்தீர்கள்.

[முற்பகல் 11-1..]

இன்றைக்கு மது விலக்கை கொண்டுவந்த போது எதிர்க்கிறீர்கள் என்று சொன்னால் யார் இரட்டைவேடம்போடுவது? இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் மது விலக்கு அமலில் இல்லாத போது தமிழகத்தில்தான் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணல் காந்தி அடிகளின் கொள்கையை நனவாக்க அதைக் கொண்டு வந்தார்கள். அதை நிறைவேற்றுவதற்காக 1980 ஆம் ஆண்டு கடுமையான சட்டம் கொண்டு வந்தார்கள். எல்லோரும் எதிர்த்தார்கள்; தளர்த்தினார், குறை சொன்னார்கள். இன்றைக்கு மது விலக்கைக் கொண்டு வந்திருக்கிறார், ஆதரிக்க வேண்டுமா, வேண்டாமா யார் போடுவது இரட்டை வேடம்? நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். நாட்டு மக்களுக்குத் தெரியும். புரட்சித் தலைவர் அவர்கள் எப்படிப்பட்ட நடைமுறைகளை இன்று நாட்டு மக்களுக்கு நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த ஆளுநர் உரை தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

காலணி வழங்கப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள சமூகப் பார்வையோடு சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிற அதிலும் இந்த சமுதாயத்திலே யாரும் கவனிக்கப்படாத அந்த மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய





வேண்டுமென்பதில் அவர் முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு நேற்று அல்ல, திரைப்படங்களிலும் சொல்லியிருக்கிறார். ஆகவேதான், நெடுஞ்சாலை பணித்துறையில் சாலைபோடுகின்ற அந்தத் தொழிலாளர்கள் கோணிப்பைகளை காலிலே கட்டிக் கொண்டு தார் ரோடு போடுவதைப் பார்த்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு மாற்றுத்திட்டமாக, உடனடியாக தார் சாலைப் போடும் தொழிலாளர்களுக்கு காலணிகள் வழங்க வேண்டுமென்று அன்றைக்கே உத்தரவிட்டார். நாட்டிலே, சமுதாயத்திலே குக்கிராமங்களில் கடுமையான வெயிலில், வேகாத வெயிலில் முட்கள் மிகுந்த காடுகளில், வயல் காடுகளில் செல்லுகின்ற தாய்மார்கள், மாணவ சிறார்கள் காலிலே காலணி இல்லாமல் செல்லுகின்ற அந்தக்கொடுமையைப்போக்குவதற்காக இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கின்ற 5 கோடி பேர்களில் கால்வாசிப் பேர், ஏறத்தாழ 1 கோடி பேர்கள் பலன் பெறுகிறார்கள். சமுதாயப் பார்வையோடு இன்றைக்கு இந்தத் திட்டத்தினை கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவேதான் யாரும் கவனிக்காத, இந்தியத் துணைக் கண்டத்திலேயே யாருக்கும் வராத, அந்தச் சமுதாயப் பார்வை, தாயுள்ளம் கொண்டவர் புரட்சித் தலைவர் என்பதை இந்தத் திட்டம் இன்றைக்கு நிருபித்து காட்டிக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் புரட்சித் தலைவர் அரசுக்கும், அவருக்கும் எந்தச் சோதனைகள் வந்தாலும் அவைகளைச் சாதனைகளாக மாற்றிக் கொண்டிருக்கிறார். சமுதாய நோக்கம், பொது மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சோதனைகள் வரத்தான் செய்யும். எந்தச் சோதனையாக இருந்தாலும் அந்தச் சோதனைகளை சாதனைகளாக மாற்றி வருகிறோம்—ஏனென்றால் எங்களிடத்திலே உள்ளத் தூய்மை இருக்கிறது; எங்களிடத்திலே நேர்மை இருக்கிறது; எங்களிடத்திலே உண்மை இருக்கிறது. ஆகவே எந்தச் சோதனையாக இருந்தாலும், அந்தச் சோதனைகளை முறியடித்து சாதனைகளாக மாற்றி மக்களது நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம் ஆகவேதான் இன்றைக்கு கிராமப்புறங்களில் உள்ளவர்களும், படித்தவர்களும் அத்தனைபேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் ஆகவேதான் புரட்சித் தலைவர் அவர்களின் நோக்கமானது. ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, சத்துணவு, இலவச சீருடை, இலவச பாட புத்தகம், இலவச காலணி என்கின்ற சமுதாயப் பார்வையோடு ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவர் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவேதான் எங்களுக்கு முன்பாக பேசிய அத்தனைபேரும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள் அதைத் தொடர்ந்து பல விவரங்களைச் சொல்லி இருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் எனது தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் சொல்லி எனது உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகின்றேன். நீண்ட காலமாக இந்த

மன்றத்திலேகூட பலமுறை பேசும்போது சைதாப்பேட்டை
ஜோன்ஸ் சாலையில் சுரங்கப்பாதை அமைக்க பலமுறை வலி
யுறுத்தி வந்தேன். இன்றைக்கு மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சர் அவர்கள் அந்தத்திட்டம் நிறைவேற்றப்
பட்டுள்ளதாக அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே நான் அரசுக்கு
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல் ஈக்காட்டுதாங்கல்
பகுதிக்கு குடிநீர் வழங்கவேண்டும். சென்னை மாநகராட்சியிலே
ஏறத்தாழ 50 ஆண்டுகாலமாக அந்தப் பகுதி இருக்கிறது.
அந்தப் பகுதிக்கு குடிநீர் வசதி இல்லை. ஆகவே கிண்டி லேபர்
காலனி அருகேயுள்ள பழைய பம்பிங்ஸ்டேசனில் இருந்து குடிநீர்
வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். சென்னை மாநகரத்தில் இண்டியா மார்க்-2
என்கிற ஆழ்துளை கிணறுகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை
போடப்பட்டிருக்கின்றன. அவைகள் சரியாகப் பராமரிக்கப்
படாமல் இருக்கின்றன. அவைகளை விரைந்து பராமரித்து
சென்னை மாநகர மக்களது குடிநீர் பிரச்சினையை தீர்த்துவைக்க
அதுவே போதுமான ஒன்றாக இருக்கின்ற காரணத்தால், அதற்
கென்று தனியாக ஒரு செயற் பொறியாளரை நியமித்து அந்தப்
பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர்
அவர்கள் அறிவித்த தனியார் தெருக்களுக்கும் அடிப்படை
வசதிகள் செய்து தரப்படும் என்ற திட்டம் எல்லாவிதமான
ஆய்வுப் பணிகளும் முடிவடைந்த பிறகும் இன்னும் தொடங்கப்
படாமல் தாமதப்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்காகத்
தேவையான நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் அந்தப் பணிகளைச்
செய்து முடிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரில் மட்டுமில்லாமல் தமிழகம்
முழுவதுமே இன்றைக்கு ''ரியல் எஸ்டேட்'' என்ற பெயரில்
தனி நபர் வருமானத்தை பெருக்கி, பொதுமக்களைச் சுரண்டுகிற
நிலைமை இருந்து வருகிறது. ரியல் எஸ்டேட் சொந்தக்காரர்
கள் விவசாய நிலங்களையெல்லாம் வீட்டுமனைகளாக போட
எடுத்துக்கொள்கிறார்கள். விவசாயத்திற்கே இடமில்லாமல்
போகிற அளவுக்குக்கூட இன்றைக்கு ரியல் எஸ்டேட் வளர்ந்து
கொண்டிருக்கிறது. அப்படி போடப்படுகிற வீட்டு மனைகளுக்கு
அடிப்படை வசதிகள்கூட செய்யப்படாமல் இருக்கின்ற
காரணத்தால் இத்தகைய ரியல் எஸ்டேட் என்று செயல்படுபவர்
களைத் தடை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.
வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வழங்கப்படுகிற மனைகளைத்
தவிர. தனியார் யாரும் ரியல் எஸ்டேட் போடுவது கூடாது
என்று தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இந்த
நேரத்தில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதைப் போலவே, சென்னை நகரில் பிற மொழிப்படங்கள்
திரையிடப்படும்போது அவற்றின் பெயர்களையெல்லாம் மிகவும்
''செக்சியாக'' வைக்கிறார்கள். வியாபார நோக்கத்தில் அப்
படிப்பட்ட செக்சியான பெயர்களை இன்றைக்குப் பிறமொழிப்
படங்களுக்கு சூட்டப்படுகின்றன. திரைப்படங்களைத் திரை
யிடுவதற்கு முன்பு எப்படி சென்சார்போர்டு அனுமதி தருகிறதோ
அதைப் போலவே பிறமொழிப் படங்களுக்கு இங்கே பெயர்
வைக்கும்போதும் சென்சார்போர்டுதான் அனுமதி அளிக்க
வேண்டும் என்றும் அதற்குப் பிறகுதான் பிறமொழிப் படங்களைத்
திரையிடலாம் என்றும் ஒரு முறையைக் கொண்டு வர வேண்டும்
என்று இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரில் போக்குவரத்து நாள்தோறும்
பெருகிக் கொண்டே வருகிறது. அதிலும் காலையிலும் மாலை
யிலும் அலுவலகத்திற்கு செல்லுகிற அலுவலர்களும் மாணவர்
களும் பயணம் செய்கிற நேரத்தில் லாரிகள் மற்றும் மாட்டு
வண்டிகள் ஆகியவை அதிக அளவில் செல்வதின் காரணமாக
போக்குவரத்தில் அதிக நெருக்கடியும் நெரிசலும் ஏற்படுகிறது.
எனவேதான் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட நேரத்தில்
இதுபோன்ற வாகனங்களின் போக்குவரத்தைத் தடை செய்ய
வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மற்ற நேரங்களில்
இத்தகைய போக்குவரத்துகள் அனுமதிக்கப்படலாம். ஆனால்
பீக் அவர்ஸ் நேரத்தில் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட
நேரங்களில் இத்தகைய வாகனங்களின் போக்குவரத்தைத் தடை
செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நகரில் ஈக்காடுதாங்கல் பகுதியில் ஏற்கெனவே
இருந்து வந்த சுடுகாட்டுப் பகுதி இப்போது அடையாறு ஆறு
பாலத்தை அகலப்படுத்தப்படுகின்ற காரணத்தால் அது அழிக்கப்
பட்டுவிட்டது. ஆகவே அதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள்
சுடுகாடு இல்லாமல் பிணங்களை புதைப்பதற்கு ஈமகிரியைகளை
செய்வதற்குக்கூட இட வசதி இல்லாமல் சிரமப்படுகிறார்கள்.
ஆகவே அதற்கு அருகில் இருக்கிற காலியிடத்தை மாநகராட்
சியே கையகப்படுத்தி உடனடியாக அந்தப் பகுதி மக்களின்
தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்
கிறேன்.

அதைப்போலவே சென்னை நகரில் இன்றைக்கு குடிசைகள்
மிகப் பெரிய அளவில் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.
கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அடையாறு ஆறு
ஆகிய பகுதிகளில் உள்ள சுற்றுப்புறங்களும் கரையோரங்களும்
அசுத்தமான முறையில் இருப்பதால் அங்கே உற்பத்தியாகிற
கொசுக்கள் தற்போது அடிக்கப்படுகிற மருந்துகளுக்கும் கட்டுப்
படாமல் மிகப் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

எனவே கொசுக்களின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் தடுப் பதற்கான முறையில் புதிய மருந்துகளைக் கண்டு பிடித்து இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

இறுதியாக குடிசை மாற்று வாரியம் தொடர்பான ஒன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தற்போது அடையாறு ஆற்றின் கரையோரமாக உள்ள குடிசைகளை எல்லாம் வெள்ள அபாயத்தில் இருந்து காப்பாற்ற அப்புறப்படுத்தி அவர்களையெல்லாம் மேடான பகுதியில் குடியமர்த்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அதன் அடிப்படை யில் குடிசை மாற்று வாரியமும், அறநிலையத்துறைக்கு சொந்த மான சில இடங்களை எடுத்து அந்த இடத்தில் குடிசைகளை அப்புறப்படுத்துல பணிகளைச் செய்து வந்தார்கள். முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், குடிசை மாற்றுவாரியத் தலைவரும் அறநிலையத்துறை ஆணையர் அவர்களும் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளும் கலந்து பேசி அதன் அடிப்படை யில அறநிலையத்துறையின் இடத்தை குடிசை மாற்று வாரியம் ஏற்று கட்டிடம் கட்டிக் கொடுக்க ஒப்புக்கொண்ட பிறகு அது வெள்ள நிவாரணப் பணிப் பகுதியாக இருப்பதால் அந்தப் பணியை விரைந்து செய்ய வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது. அந்த வகையில அந்த இடத்தில் வேலை நடந் கொண்டிருக்கும்போது அறநிலையத்துறையின் துணை ஆணையர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அதற்கு ஒரு தடை ஆணையை வாங்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக வேலை தடைப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அறநிலையத் துறையின் துணை ஆணையர் தடை ஆணை வாங்கியிருப்பதை ரத்து செய்து குடிசை மாற்று வாரியம் அந்தத் திட்டத்தை செயல்முறைப்படுத்த நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே அற்புதமான வகையில் நல்ல சமுதாய நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிற இந்த ஆளுநர் அவர்களின் உரையைப் பாராட்டி (குறுக்கீடு) நீங்கள் என்றைக்கும் ஆளுநர் உரையைப் பாராட்டியதும்இல்லை. இந்த அரசை வாழ்த்தியதும் இல்லை என்றாலும் வாழ்த்துகிறவர் கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அவர் களுடைய வாழ்த்துக்களோடு இந்த அரசு பீடு நடை போடும் என்று சொல்லி என்னுடைய நன்றியை சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–20.)

திரு. கே. அன்பழகன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரி விக்கும் தீர்மானத்தின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன்.





இன்றைய தினம் மேதகு ஆளுநர் உரையில், பள்ளிக் குழந்தை களுக்கும் ஏழை தாய்மார்களுக்கும் இலவசக் காலணி வழங்கும் திட்டம் அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய அம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமார் 400 கோடி ரூபாய் செலவில் வகுக்கப்பட்டுள்ள ஒருங் கிணைந்த சுகாதார மற்றும் சத்துணவுத் திட்டத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

சென்ற நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட, மூன்றாண்டு களில் 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த கட்டுமான பொருள்கள் தயாரிப்பு கூட்டுறவுச் சங்கங்களை அரசு அமைக்க முன் வந்திருப்பது வரவேற்கக் கூடியதாகும்.

கள், சாராயக் கடைகளை அரசு மூடியிருப்பது சிறப்பான நடவடிக்கையாகும். காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் எங் களது இதயபூர்வமான பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

வறட்சி நிவாரணத் திட்டங்களுக்காக ரூபாய் 105 கோடி செலவிட்ட தமிழக அரசை நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல பூம்புகார் கப்பல் நிறுவனத்திற்கு வாங்கப்பட்ட கப்பலுக்கு '' கர்மவீரர் காமராஜர் '' அவர்களின் பெயரை வைத்ததற்கும் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு '' மணி மண்டபம் '' அமைக்க முன் வந்ததற்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு காங்கிரஸ் சார்பில் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல கொடைக்கானலில் தொலைக்காட்சி ஒளி பரப்பு நிலையத்தை தொடங்கி வைத்த மத்திய அரசை காங்கிரஸ் கட்சியின் சார்பில் பாராட்டுவதோடு, ஊட்டியில் ரூபாய் 170 கோடி செலவில் '' எக்ஸ்ரே பிலிம் தயாரிப்பு தொழிற்சாலையை '' நிறுவ அனுமதியை அளித்தமைக் காகவும், மணலியில் ரூபாய் 600 கோடி செலவில் '' அரோ மாட்டிக் சேர்மங்கள் '' தயாரிப்பு தொழிற்சாலைக்கு இசைவு அளித்தமைக்கும் மத்திய அரசை தமிழக மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசின் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு ரூபாய் 31 கோடி ஒதுக்கீடு செய்ததை நான் இந்த நேரத் தில் வரவேற்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையில் பல்வேறு முரண்பாடுகள் இருந்தாலும் அவற்றில் ஒன்று இரண்டினை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கிராமப்புறங்களில் வாழும் ஏழை யெளிய மக்களின் பொருளாதார வாழ்வினை சீர்குலைக்கும் கள்-சாராயக் கடைகளை அரசு மூடியிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம் என்று அறிவித்துவிட்டு ஒயின் கடைகளைத் திறப்பது வேடிக் கைக்குரியது மட்டுமல்ல, வேதனைக்கும் உரியது என்பதை காங்கிரஸ் கட்சியின் சார்பாக சுட்டிக்காட்ட கடமைப்பட்டி ருக்கிறேன். கள் சாராயத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கள்-சாராயக் கடைகளை மீண்டும் திறப்பதற்கான நிர் பந்தமான சூழ்நிலையை சில சமூக விரோதச் சக்திகள் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத னாலே, காவிரி ஆறு கூட வறண்டு கிடந்தாலும் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது என்பதை அரசின் கவ னத்திற்கு கொண்டுவருவது எங்களது கடமையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுவிலக்கை அமுல்படுத்து வதற்கு காங்கிரஸ் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒயின் கடைகளைத் திறந்து விட்டதற்கு சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் நியாயம் கற்பிப்பது, அதுவும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி போன்றவர்கள் நியாயம் கற்பித்துப் பேசுவது முரண்பட்டதாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

17–6–1967-இல் இதே சட்டமன்றத்தில் அன்றைய முதல்வராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மது விலக்கு சம்பந்தமான கேள்விக்கு பதில் அளித்த நேரத்தில் கூறியதை கோடிட்டுக் காட்டுவது ஆளும் கட்சி உறுப்பினர் களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்தாவது ''என்னைப் பொறுத்த வரையில் மதுவிலக்கு நீடிக்க வேண்டும் என்ற அபிப்பிராயந்தான். அதிகமான பணவசதி கிடைக்கும் என்று ஆசை காட்டப்பட்டும் அதற்குப் பலியாகாதது. மதுவிலக்குக் குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் மதுவிலக்கு தோற்றுப் போய்விட்டது என்று கருதுவது சரியான வாத மாகாது. மற்ற மாநிலங்கள் செய்கிற தவறான நடவடிக்கை களை இந்த அரசாங்கம் பின்பற்றாது. மதுவிலக்குப் பிரச் சினையை சர்க்கார் லாப நஷ்ட பிரச்சினையாகக் கருதவில்லை'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்ததோடு அவர் உயிரோடு இருந்த காலத்திலே மதுவிலக்குக் கொள்கையில் மிக உறுதியாக இருந்தார் என்பதை ஆளும் கட்சி நண்பர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமி ழகத்திலே காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்த வரை மதுவிலக்குக் கொள்கையில் எந்தவிதமான தடுமாற்றமும்





கிடையாது. கள் சாராயக் கடைகளைத் திறந்து விட்டு, கிராமப்புற மக்களுக்கு எத்தனை சமூக நலத் திட்டங் களைப் போட்டாலும், அவை பாழ்பட்டுப் போகும் என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், காங்கிரஸ் கட்சியும் உணர்ந்ததால்தான் மது விலக்கைக் கடுமையாக அமுல் படுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அகில இந்தியாவுக்கும் வழி காட்டக்கூடிய மாநிலமாக தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக மது விலக்குக் கொள்கை யிலும் இந்த அரசு விளங்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினரான மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், அந்த வகையிலே 1–4–1987 முதல் ஒயின் கடைகளையும் ஒழித்து, பூரண மது விலக்கைக் கொண்டு வர வேண்டு மென்று தமிழக அரசை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கி றேன்.

அடுத்து, மரியாதைக்குரிய ஆளுங் கட்சி உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சமரசம் அவர்கள் பேசும்போது ஒன் றைச் சொன்னார்கள். தேசீய சக்திகளிலே சில தீய சக்திகள் புகுந்துகொண்டு, தமிழகத்திலே திடீர் தேர்தல் வரும் என்று சொல்லுகின்றன. அவைகளைக் களை எடுக்க வேண்டு மென்று சொன்னார்கள். திடீர் தேர்தல் வருமென்று யார் அந்த வதந்தியைப் பரப்பினார்கள்? தமிழகத்திலே இருக் கக்கூடிய பாஸ்கரராவ்களை மிரட்டத்தான் அந்த வதந்தி பரப்பிவிடப்பட்டது என்பது தமிழகத்தில் உள்ள சாதாரண மக்களுக்கும் தெரியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தீய சக்திகள் களை எடுக்கப்பட வேண்டு மென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. தீய சக்திகள் எங்கே உள்ளன—** என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(டாக்டர் கே. பி. இராமலிங்கம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் கேட்கலாம்.

திரு. கே. அன்பழகன்: அடுத்து, என்னுடைய தொகுதி யைப் பற்றிய பிரச்சினைகள் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனது ஒமலூர் தொகுதி மிகவும் வறண்ட தொகுதியாகும். கடுமையான வறட்சி அங்கே இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஆழ் துளைக் கிணறுகளை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

அதிகமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
டால்மியா மேக்னசைட் குடிநீர் திட்டத்தை மாநில அரசு
நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
எந்தவித பாசன வசதியும் இல்லாத காடையாம்பட்டி ஒன்றி
யத்திற்கு கணவாய் புதூர் பெரும்பள்ளம் ஏரி கட்டித் தரும்
திட்டத்தினை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். காடையாம்பட்டி ஒன்றியம் ஒண்டிவீரனூரில்
புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டு
மென்று 14–12–1985-ல் பொதுமக்கள் ரூபாய் 10,000 கட்டி
உள்ளார்கள். தேவையான நிலத்தைத் தரத் தயாராக
இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு சுகாதார அமைச்ச
ரவர்கள் ஒண்டிவீரனூரில் புதிய சுகாதார நிலையம் ஒன்றை
அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு மாக்னசைட்டில் பணிபுரியும் தொழி
லாளர்களின் நீண்டகால கிராஜுவட்டி பிரச்சினையைத் தீர்த்து,
அவர்களுக்கு உடனடியாக பணிக் கொடை வழங்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். வேப்பாடி ஆற்றின் குறுக்கே
உயர் மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே மாநிலத்தில் இயன்ற
அளவுக்கு புதிதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க மாநில அரசு
முயன்று வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது
தொழில் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டதற்கு முரண்
பாடாக இருக்கிறது. தமிழகத்திலே 30 சர்க்கரை ஆலைகள்
தொடங்குவதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து, மத்திய
அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாக கொள்கைக் குறிப்பின்
9-ஆம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய தினம்
புதிய சர்க்கரைக் கொள்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த
நிலையில் அந்த 30 சர்க்கரை ஆலைகள் நிலை என்ன என்பதைப்
பற்றி மாநில அரசு விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, நம்முடைய மின்சார வாரியம் பெருத்த நட்டத்தில்
இயங்கி வருவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.
அந்த நட்டத்தை ஈடு கட்டி, மின்சார வாரியத்தை சீரமைப்
பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தெரி
வித்துக் கொள்கிறேன். இன்று பெருகி வரும் வேலையில்லாத்
திண்டாட்டத்தைப் போக்குவதற்கான வழி வகைகள் காணப்
படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு,
பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு அவைத் தலைவருக்கு
நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்.





(முற்பகல் 11–30).

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ** என்றெல்லாம் திரு. கே.
அன்பழகன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசியதில்
குறிப்பிட்டு எதையாவது சொல்ல வேண்டும். மேலெழுந்த
வாரியாகப் பேசிவிட்டுச் செல்லக் கூடாது. ** (கூச்சல்
குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவை ஸ்வீப்பிங்
அலிகேஷன்களாக இருக்கின்றன. எனவே, திரு. அன்பழகன்
பேசியபொழுது ** என்பது தொடர்பாகப் பேசியவைகளும்,
டாக்டர் இராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபொழுது ** என்பது
தொடர்பாகப் பேசியவைகளும் அவைக் குறிப்பிலேயிருந்து
நீக்கப்படுகின்றன.

திரு அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை மீது
நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்
பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மேதகு
ஆளுநர் அவர்கள் வாசித்தளித்துவிட்டுச் சென்ற அறிக்கையில்
முன்னுரிமை கொடுத்துச் சொல்லியிருப்பது, தமிழகத்தினுடைய
அரசு கள், சாராயக் கடைகளை மூடியதனுடைய பெருமையைச்
சொல்லிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே
தமிழகத்திலே நடந்து கொண்டிருப்பது என்ன என்பதை நான்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு அறிவித்தபடி, ஏற்கனவே இருந்த கள்ளுக்கடைகளும்,
சாராயக் கடைகளும் அடைக்கப்பட்டிருப்பது உண்மைதான்.
ஆனால் அதற்கடுத்தாற்போன்று, ஒரு சாராயக் கடை இரண்டு
மூன்று சாராயக் கடைகளாகவும், ஒரு கள்ளுக்கடை இரண்டு
மூன்று கள்ளுக் கடைகளாகவும், பிராந்திக் கடைகளாகவும்,
விஸ்க்கி கடைகளாகவும் இப்படிப் பல்வேறு கடைகளாக அதிக
மாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை.
ஏற்கனவே இதை ஒழிப்பதற்காக இருந்த மதுவிலக்குக் காவல்
துறையின் கருணையால், அங்கிருக்கின்ற காவல் துறையினரின்
அரவணைப்போடு இன்றைய தினம் ஜாம் ஜாம் என்று வியா
பாரம் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான்
உண்மையே தவிர, ஆளுநர் உரையில் சொல்வது முழுக்க
முழுக்க தவறான கருத்து என்பது நடை முறையிலே நாம் கண்
டறிந்த ஒன்று. ஆளுநர் அவர்கள் சொல்லுகின்ற சட்டம்,
கள், சாராயக் கடைகளை ஒழித்து விட்டோம் என்ற சட்டம்,
கூவம் ஆற்றினுடைய மனத்தை—வீச்சத்தை ஒழித்து விட்டோம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

என்று சொல்வது எப்படித் தவறானதோ அதைப் போலத்தான்
கள்ளுக்கடைகளையும், சாராயக் கடைகளையும் ஒழித்து
விட்டோம், மது விலக்குத் திட்டத்தை நாங்கள் கொண்டு
வந்து விட்டோம் என்று சொல்வதும் இருக்கிறது என்பதைச்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறியைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்
கள் மிகப் பெரிய பொருளாதாரக் கொள்கையாகச் சொல்லி
யிருக்கிறார்கள். கைத்தறியைப் பொறுத்தவரையில், காமரா
ஜர் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரத்தில்
நூற்றுக் கணக்கான நெசவாளப் பெருமக்கள் அங்கே தொடர்ந்து
உண்ணாவிரதம் இருந்தார்கள். 61 இலட்சம் ரூபாய் அள
விற்கு அரசு கொள்முதல் செய்து விட்டு இன்றைய தினம்
பணம் கொடுக்காத காரணத்தினால் அவர்களுக்குக் கிடைக்க
வேண்டிய 16 இலட்சம் ரூபாய் ரிபேட் கூடக் கிடைக்காமல்
ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் குடும்பங்கள் இன்றைய
தினம் பட்டினி கிடக்கின்ற இந்த நேரத்தில் கைத்தறியைப்
பற்றி மிகப் பெரிய பொருளாதாரக் கொள்கையை இந்த அரசு
தொடர்ந்து நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறது என்று
தம்பட்டம் அடிப்பது நியாயம் அல்ல என்பதைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தாற்போல், தொழிற் சாலைகளைப்பற்றி ஆளுநர்
அவர்களின் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். தொழிற்
சாலைகளைப் பொறுத்தவரையில், ஏனைய அரசுக் காலங்
களில் மூன்றாவது இடத்தில் இருந்த தொழிற்சாலைகள் தமிழ
கத்திலே இன்றைக்கு 13-வது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது
என்பது தான் உண்மையான நிலை. ஆனால் மக்கள் மன்றத்
திலே இரண்டாவது இடத்திலிருந்து நாங்கள் 13—வது இடத்
திற்கு உயர்ந்திருக்கிறோம் என்று நீங்கள் சொன்னால் கூட
அதையும் ஒப்புக் கொள்ளும் நிலையில் மக்கள் இருக்கிற கார
ணத்தினால்தான் அதையும் தைரியமாக சொல்கிறீர்கள்.
ஆனால் என்னைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இருக்கின்ற
தொழிற்சாலகளையாவது உருப்படியாக காப்பாற்ற வேண்டு
மென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். காரணம்
எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கத்தில்
சால்ட் கார்ப்பரேஷன் இருக்கிறது. அதை இரண்டாண்டு
களுக்கு முன்பு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.
திருநாவுக்கரசு அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். அது போல்
நடப்பாண்டில் மாண்புமிகு அமைச்சர் திரு. இராசாராம் அவர்
கள் பார்வையிட வந்திருந்தார்கள். இந்த இரண்டு அமைச்சர்
களும் அங்கு வந்து பார்வையிட்டுசென்ற பிறகு ஏற்கனவே
தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருந்த வேலையும் இன்
றைய தினம் நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் மெக்னீசியம்





பிளான்ட் உற்பத்தி செய்து கொண்டிருந்தது இந்த ஆண்டு நிறுத்
தப்பட்டிருக்கிறது. கப்பல் துறைமுகம் ஆரம்பிக்கப்பட்டு இப்
பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. கல் உடைக்கும் தொழிற்
சாலை துவங்கப்பட்டு அதுவும் கூட நிறுத்தப்பட்டிருக்கிறது.
ஆகையால் தான் புதிய தொழிற்சாலைகளை இந்த அரசு ஆரம்
பிக்காவிட்டாலும கூட ஏற்கனவே இருக்கின்ற தொழிற்சாலை
களையாவது மூடிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமானது குடிநீர் பிரச்சினை. குடிநீர்
பிரச்சினை குறித்து இந்த மன்றத்திலே பேசிய அத்தனை உறுப்
பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும், மாற்றுக் கட்சி
களைச் சார்ந்த உறுப்பினர்களும் இங்கே இன்றையதினம் விஸ்வ
ரூபம் எடுத்துக் கொண்டிருக்கிற நிலைமையைக் குறித்து பல்
வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இன்றைய
தினம் 12 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்
கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 12 மாவட்டங்களிலும்
போர்க் கால நடவடிக்கையாக குடிநீர் பிரச்சினையை தீர்க்க
நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருவதாகச் சொல்லப்பட்டிருக்
கிறது. எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து
4 ஆண்டுகளாக மழை பெய்யாத காரணத்தால் பெண்கள் 4,
மைல், 5 மைல் தூரம் நடந்து சென்று ஒரு குடம் தண்ணீர்
எடுத்து வர வேண்டிய அவல நிலை, கோரக் காட்சி அன்றாடம்
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1977 ஆம் ஆண்டு மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் முதன் முதலாக அரியாசனத்தில்
அமர்ந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு
முன்னால் பதவிப் பிரமாணம் எடுக்கும்போது சொன்ன கருத்துக்
களை இங்கே நினைவு படுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.
"முன்பு இருந்த அரசுகள் ஏழையெளிய மக்களுக்குமிகவும்அத்தியா
வசியமாக உள்ள குடிநீர் திட்டத்தை கூட சரிவர நிறைவேற்ற
வில்லையே" என்று அங்கலாய்த்தார்கள். ஆனால் அதே
முதலமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகள் ஆன பிறகாவது குக்கிரா
மங்களிலும், நகரங்களிலும் மிகவும் தேவையாக இருக்கிற
குடிநீரையாவது மக்களுக்கு கொடுத்திருக்கின்றாரா என்றுஆளும்
கட்சி உறுப்பினர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இன்று மிகவும் முக்கியமாக இருப்பது
குடிநீர்ப் பிரச்சினை. அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் சவாலாக எடுத்துக் கொண்ட இந்தப் பிரச்சினை
குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இங்கே பதில்
சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆழ் குழாய்க் கிணறுகள் என்கிற பெயரில் பல்வேறு
மாவட்டங்களிலும், பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கான
ஆழ் குழாய்க் கிணறுகளை போடுவதாக இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இவற்றைப் போடும்
போது மிகப் பெரிய மோசடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டுவதை என்னுடைய கடமை
யாகக் கருதுகிறேன். காரணம் ஓர் ஆழ் குழாய் கிணறு 200
அடி ஆழத்திற்கு போடப்பட வேண்டுமென்றால் அங்கே 100
அடி, 50 அடி ஆழத்திற்கு மட்டும் பைப்புகளை போட்டுவிட்டு
200 அடி ஆழத்திற்கு பைப் போட்டதாக கணக்குக் கொடுத்து,
பில் போட்டு தொகையையும் வாங்கி விடுகிறார்கள். ஆனால்
உண்மையிலேயே அவர்கள் போடும் பைப் 50 அடி ஆழத்
திற்குதான். ஆனால் கணக்கில் காட்டி தொகை வாங்கியிருப்
பதோ 200 அடிக்கு. இப்படி மோசடியாக தமிழகத்தில் பல்
வேறு இடங்களில் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
என்பதற்கான ஆதாரத்தைக் காட்டத் தயாராகயிருக்கிறேன்.

(முற்பகல் 11–40)

**திரு. மா. சின்னராசு :** துணைத் தலைவரவர்களே, தவறான
தகவல்களைச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்தில் 50 அடி ஆழத்திற்கு
குழாய் இறக்கிவிட்டு, 200 அடிக்கு அசெஸ் செய்கிறார்கள்
என்று சொன்னார்கள். அதற்கு ஆதாரம் இருப்பதாகவும்
சொன்னார்கள். எந்த இடத்திலே அப்படி நடந்தது என்று
அவர்கள் திட்டவட்டமான, தெளிவான விவரத்தைத் தர
வேண்டும். பொதுவாக எல்லா இடங்களிலும் 50 அடி குழாய்
போட்டுவிட்டு 200 அடிக்கு கணக்கு எழுதுகிறார்கள் என்று
சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏதாவது குறிப்
பிட்ட இடத்தில் இப்படி நடந்திருந்தால் அதுபற்றிச் சொல்ல
வேண்டும்; ஒட்டு மொத்தமாக குற்றச்சாட்டு சொல்லக்
கூடாது.

**திரு அ. பிரணவநாதன் :** துணைத் தலைவர் அவர்களே,
என்னுடைய தொகுதியில் முதுகுளத்தூர் தாலுகாவில் இப்படிப்
பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டு
களாக கடுமையான வறட்சியை நாம் சந்தித்துக்கொண்டிருக்
கிறோம்; வறட்சியால் வாடிக் கொண்டிருக்கிறோம். சென்ற
ஆண்டு, 1985 நவம்பர், டிசம்பர் மாதங்களில் மழை பொய்த்து
விட்டது. ஆனால் மாநில அரசு மத்திய அரசுக்கு 1986 ஆகஸ்ட்
மாதத்தில்தான் அறிக்கை அளித்தது என்பதை இந்த மாமன்
றத்தில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள்.
1985-ல் வறட்சி ஏற்பட்டு, 8 மாதங்களுக்குப் பிறகுதான்
மத்திய அரசுக்கு மாநில அரசு அறிக்கை அனுப்புகிறது என்றால்
இந்த நாட்டு மக்கள்மீது இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை
கொண்டிருக்கிறது! என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். ஆகவே,
மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கள் இந்த ஆண்டிலாவது,
அதாவது இந்த நடப்பாண்டிலே மார்ச்சு மாதத்திலே எல்லா
மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அழைத்து வறட்சிநிலை





பற்றி விவாதிக்க வேண்டும். 12 மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று பார்த்து, அங்கே நிலவுகின்ற
கோரக் காட்சிகளை, குடிநீர் இல்லாத காட்சிகளை நேரில் கண்டு
அந்த 12 மாவட்டங்களையும் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க
வேண்டுமென்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள்.
எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்......

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு
வறட்சியின்போது எத்தனை கடிதங்கள் எழுதப்பட்டன. எப்
போது எவ்வளவு தொகை வேண்டுமென்று கேட்கப்பட்டது
என்ற விவரங்கள் இந்த அவையில் சொல்லப்பட்டிருக்கின்றன.
8 மாதம் கழித்துதான் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது
என்று சொல்வது ஒரு தவறான தகவல். அவ்வப்போது இருந்த
நிலைமைகள், சூழ்நிலைகள் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டன.
இப்போது இருக்கிற வறட்சி நிலையை மதிப்பிட்டு, இவ்வளவு
தொகை அனுப்புங்கள் என்று கேட்டுவிட முடியாது. இருக்கிற
நிலைமைகளை அவ்வப்போது அறிவித்துக்கொண்டே வர
வேண்டும். நான் பதில் சொல்லும்போது இருக்கிற நிலைமை
களை எல்லாம் தெளிவாகச் சொல்லவிருக்கிறேன். இந்த
மாதம் இவ்வளவு, இதற்கு அடுத்த மாதம் இவ்வளவு, அதற்கு
அடுத்த மாதம் இவ்வளவு என்று மதிப்பீடு செய்து, மாதத்திற்கு
மாதம் எவ்வளவு கூடியிருக்கிறது, வித்தியாசம் என்ன, நமக்கு
அதிகமாக எவ்வளவு உதவி தேவைப்படும் என்கின்ற விவரங்கள்
எல்லாம் இன்னும் 2, 3 மாதங்கள் கழித்து பார்க்கும்போதுதான்
தெரியும். இப்போதுள்ள கணக்கை வைத்துப்பார்த்தால்
குறைந்த அளவுக்குத்தான் வரும். அதன் பிறகு மறுபடியும்,
மறுபடியும் இவ்வளவு தேவை என்று கேட்டால் கிடைப்பது அரிது.
இதை எல்லாம் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். ஒரே ஒரு
அறிக்கை, 8 மாதம் கழித்து அனுப்பப்பட்டது என்பது சரியல்ல.
அவ்வப்போது அனுப்ப வேண்டியதை அவ்வப்போது அனுப்பிக்
கொண்டிருக்கிறோம். அரசின் சார்பாக மாதம் ஒரு ரிப்போர்ட்
அனுப்பப்படும். ஆளுநர் மூலமாக அது அனுப்பப்பட்டு வரு
கிறது. மழை இருந்தாலும் இல்லாவிட்டாலும், வறட்சி இருந்
தாலும் இல்லாவிட்டாலும் அனுப்பப்பட வேண்டிய அறிக்கை
அனுப்பப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அதுபற்றிய முழு
விவரங்களையும் என்னுடைய பதில் உரையில் தருகிறேன்.

**திரு அ. பிரணவநாதன் :** துணைத் தலைவரவர்களே,
என்னுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நேரிலே
பேசும்போது, அரசுக்கு அறிக்கை அனுப்பிவிட்டதாகச் சொன்
னார்கள். அதன் அடிப்படையில்தான் நான் மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைச் சொன்னேன்.

அடுத்து, இன்னும் ஆறு மாத காலத்திற்கு கிராமப்புறங்களில் எந்தவிதமான வேலைவாய்ப்புக்கும் இடமில்லை. அந்த அளவுக்கு தொடர்ந்து வறட்சி இருந்துகொண்டிருக்கிறது. எந்தவிதமான வேலையும் இல்லாமல் இன்றைக்கு கிராமப்புற மக்கள், ஏழை எளிய மக்கள் வாழ வழியின்றி திகைத்து நிற்கிறார்கள். எனவே, 10, 15 ஆண்டுகளாக தூர் வாராத கண்மாய்களை தூர் வாருவது, சாலை வசதி இல்லாத சின்ன சின்ன ஊர்களுக்கு சாலை போடுவது போன்ற பணிகளை வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் எடுத்து செயல்படுத்தி, தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆண்களுக்கு 10 ரூபாயும், பெண்களுக்கு 7 ரூபாயும் கூலி கிடைக்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே வானளாவப் புகழப்படும் ஒரு புதிய திட்டம் காலணி வழங்கும் திட்டம், செருப்பு வழங்கும் திட்டம். கிராமப்புறத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும் ஒவ்வொருவரும் காலணி போடுகிற போது அளவு கொடுத்துதான் செருப்பு தைத்துப் போடுவது வழக்கம் ; அப்படியானால்தான் காலணி போட முடியும். அளவற்ற முறையில் செருப்பை வாங்கி காலிலே மாட்டிக் கொள்வதாக இருந்தால் செருப்பு காலை கடித்துவிடும். 2, 3 நாளில் கடித்த இடம் வீங்கும் ; பின்னாலே அந்த இடத்தில் புண் வந்துவிடும். இப்படிப்பட்ட நிலையில் முழுக்க, முழுக்க ஓட்டு மொத்தமாக காலணிகளைத் தைத்து குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் கொடுத்தால் அது உண்மையிலேயே முதலமைச்சர் பெயரால், முதலமைச்சர் வழங்கினார் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே விளம்பரத்திற்காகக் கொடுக்கப்பட்ட திட்டமே தவிர நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

* திரு. ஏ.தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். மேதகு ஆளுநர் உரைமீது இங்கே பேசியவர்கள் எல்லாம் இந்த அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்றும், ஆளுநர் உரையில் ஒன்றும் இல்லை என்றும், திட்டம் இல்லை என்றும், இந்த அரசாங்கம் சொல்வதைச் செய்வதில்லை என்றும், இதற்குத் திறமையே இல்லை என்றும் சொன்னார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அவர்கள் செய்வதைத்தான் சொன்னார்கள், சொன்னதைத்தான் செய்திருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் எல்லாம் மத்திய அரசாங்கம் என்றும், மாநில அரசாங்கம்





என்றும் பேசினார்கள். மத்திய அரசாங்கமானாலும், மாநில அரசாங்கமானாலும் அவற்றை மக்கள்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த மக்கள் தேர்ந்தெடுத்த பிறகுதான் மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் செயல்படுகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாநில அரசாங்கத்தின் மூலமாகத்தான் நிதிகள் மத்திய அரசுக்குச் செல்கிறது. மத்திய அரசாங்கத்தின் மூலமாக நமக்கு வேண்டிய நிதியாதாரங்களைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறோம். ஆகவே தென் மாநிலமானாலும், வட மாநிலமானாலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது மத்திய அரசு. ஆகவே மத்திய அரசுதான் நாம் இந்தத் தமிழகத்தில் இருக்கிற காரியங்களைச் செயல்படுத்துவதற்குரிய வகையில், எண்ணிப் பார்க்கக்கூடிய அளவில் அரசியல் அமைப்பு அமைந்து இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், அதற்குப் பின்னால் புரட்சித் தலைவர் அவர்களும் இந்த ஏழை, எளிய மக்கள்பால் கொண்ட அன்பின் காரணமாகத்தான் அவர்கள் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதை ஏழை, எளிய மக்கள் ஏற்றம் பெறுவதற்காகவும், கைத்தறி நெசவாளர்கள் வாழ்க்கையில் உயர்வதற்காகவும், பின்தங்கிய சமுதாயத்தினரின் நிலைமையை உயர்த்துவதற்காகவும் உரிய வாய்ப்புக்களை அளிக்கின்ற வகையில்தான் கொண்டுவந்தார்கள். அந்த வகையில்தான் புரட்சித்தலைவர் அவர்கள் தொடர்ந்து செய்துவருகிறார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தில் செய்கின்ற காரியங்களால் கிராமப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள் வாழ்க்கையில் உயர்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

புரட்சித்தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகுதான் கைத்தறி நெசவாளர்கள் ஏற்றம் பெற்றிருக்கிறார்கள் ; கட்டிடத் தொழிலாளர்கள் வாழ்க்கையில் உயர்ந்து இருக்கிறார்கள் ; பல்வேறு வகைகளில் தமிழகம் முன்னணியில் முன்னேறி இருக்கிறது என்று இங்கே மத்திய அமைச்சர்கள் வந்தபோதும் சொல்லியிருக்கிறார்கள். பல நேரங்களில் அவர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் சாராயக்கடைகள் பற்றிப் பேசினார்கள். இப்படி குறைகளைச் சொல்லிப் பேசுகிறார்களே தவிர நல்ல வழிவகைகளை இந்த அரசாங்கத்திற்குச் சொன்னார்களா என்றால் இல்லை என்றுதான் என்னால் உணர முடிகிறது. பேசுகிறவர்கள், இப்படிச் செய்தால் இந்த நிலைமை ஏற்படும், அதனால் தமிழக மக்களுக்கு நன்றாக அமையும் என்பதை எடுத்துச் சொன்னால் அதை இந்த அரசு

[திரு. ஏ. தங்கராசு] [1987 மார்ச் 4

ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. மாற்றான் தோட்டத்து
மல்லிகையும் மணக்கும் என்ற வகையில் இந்த ஆட்சியில் எதைச்
சொன்னாலும் அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை
நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆகவே அந்த
அடிப்படையில் இன்றைக்கு இந்த அரசாங்கம் வந்தபிற்கு
தான் கட்டிடத் தொழிலாளர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்
திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, பல தொழிலாளர்கள்
நிரந்தரமான நிலைமையைப் பெற்றிருக்கிறார்கள் ; உயர்ந்து
இருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் பல முன்னேற்றம்
அடைந்திருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்பு
கிறேன்.

[முற்பகல் 11-50]

அடுத்தபடியாக இந்த ஆளுநர் உரையில் பள்ளி சிறார்
களுக்கும் ஏழை தாய்மார்களுக்கும் காலணிகள் வழங்குவது
பற்றி கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். நான் அதன்மீது
இருக்கும் ஒரு வினாவிற்கு பதிலாக சொல்ல விரும்புகிறேன்.
இந்த திட்டத்தினால் கிராமப் பகுதியில் இருக்கும் ஏழை எளிய
மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய மக்களும்
பயன் அடையக் கூடிய ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது. எப்படி
சத்துணவு திட்டம் கிராமப் பகுதியில் நல்ல வரவேற்பையும்,
நல்ல வாய்ப்பையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியதோ, எப்படி
அதனால் நல்ல பலன் மக்களுக்கு கிடைத்திருக்கிறதோ, அதே
அடிப்படையில் இந்த காலணி வழங்கும் திட்டமும் ஒரு அருமை
யான திட்டமாக அமைந்திருக்கிறது. இந்த திட்டத்தை செயல்
படுத்துகிறபோது, அந்த பகுதியில் உள்ள மக்கள் பயனுற அந்தந்த
பகுதியிலேயே செயல்படுத்த வேண்டும், அந்தக் காலணிகள்
செய்யும் வாய்ப்பை அங்கேயே ஏற்படுத்தித் தரவேண்டும்.
அந்த வாய்ப்பைத் தந்தால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற
தொழிலாளர்களும், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களும்,
அந்தப் பகுதியிலே இருக்கிற பின்தங்கிய சமுதாயமும் பயன்
அடையக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதைச்
சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, அந்தந்தப் பகுதியிலே
இருக்கிற மக்களுக்கே அந்த வாய்ப்பைத் தர வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பின்னாலே இந்த ஆளுநர் உரையிலே கேட்பா
ரற்று இருக்கின்ற பொது மக்கள், வாழ்க்கையில் நலிந்தவர்
கள், வாழ்க்கையில் நலிந்து இருக்கிற ஓய்வு பெறாத, ஓய்வு
பெற்ற மக்களெல்லாம் பயனுற, அவர்களிடம் குறைகளைக்
கேட்பது சம்பந்தமாக ஒரு அறிவிப்பையும் கோடிட்டுக் காட்டி
யிருக்கிறார்கள். அதற்காக ஒரு பிரிவையே ஏற்படுத்தப்
போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த அறி
விப்பை நல்லதொரு வரவேற்கத் தக்க விஷயமாக நான் கருது
கிறேன்.



1987 மார்ச் 4] [திரு. ஏ. தங்கராசு]

அதற்குப் பின்னாடி கடலூரிலே 210 மெகாவாட் உற்பத்தி
செய்கிற ஒரு மின்சார பிரிவை படிப்படியாக ஏற்படுத்தப் போவ
தாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலையை பாராட்டி
நான் வரவேற்கிறேன். மகிழ்ச்சியடைகிறேன்.

அதற்குப் பின்னாலே விரைவு போக்குவரத்துத் திட்டம்.
கரூர்-திண்டுக்கல்-தூத்துக்குடி அகல இருப்புப்பாதை அமைக்கும்
நெய்வேலி 3வது சுரங்கம் கட்டும் திட்டத்தையும், சேது சமுத்திர
வாய்க்கால் திட்டத்தையும், கடலூர் துறைமுக மேம்பாடு
திட்டத்தையும் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை
செய்து அனுப்பியிருக்கிறார்கள் என்று கோடிட்டுக் காட்டியிருக்
கிறார்கள். அவைகளை நான் வரவேற்கிறேன்.

அதற்குப் பின்னாடி 2 ஆயிரம் கோடி செலவில் நிறை
வேற்றக் கூடிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தயார்
செய்து இருப்பதாகவும், அதற்குப் பின்னாலே 800 கோடி செல
வில் பெருநகர் மேம்பாடு திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.
அதே போல 400 கோடி செலவில் ஏரிகளை நவீனப்படுத்தி
விவசாயிகள் பயன் அடையக் கூடிய வகையில் கொண்டு வருவதற்
கான திட்டத்தையும், அதே முறையில் 140 கோடி செலவில்
பெருநகர் மற்றும் மாநகர நீர்வழிகளை மேம்படுத்துவதன் மூலம்
சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தும் திட்டத்தையும் வகுத்துக்
கொண்டு வந்திருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இவைகள்
அத்தனையும் சேர்த்து அனுமதிக்காக மத்திய அரசுக்கு அனுப்பி
இருப்பதாக இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.
ஆகவே மத்திய அரசை நான் கேட்டுக் கொள்வதெல்லாம்
தமிழகத்தின் ஒட்டு மொத்தமான வளர்ச்சியின் கண்ணோட்
டத்தில் எடுத்துக் கொண்டு உடனடியாக இவ்வினங்களுக்கு
அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பின்னாலே வட ஆற்காடு மாவட்டத்தை இரண்
டாகப் பிரிக்கப் போவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள்.
அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தையும் 2 ஆகப் பிரித்து
கடலூரை தலை நகரமாக வைத்து அதற்கு வள்ளலார்
மாவட்டம் என்று பெயரிட்டு விரைவிலே ஏற்படுத்த வேண்டும்
என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து நெய்வேலியிலே இருக்கிற ஒரு மத்திய
அரசின் நேரடியான பார்வையில் நடத்தப்படுகிற நிறுவனம்
ஆகும். அதில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்களுக்கு
மேல் நிரந்தரம் செய்யப்படாமல் பணியில் இருக்கிறார்கள். பதவி
களில் 10 ஆண்டுக்காலம், 11 ஆண்டுக் காலம், 8 ஆண்டுக்
காலம் என்று நிரந்தரமாக்கப்படாமல் குறைந்தது 5 ஆண்டு
களுக்கு மேலாகவே பகுதிபகுதியாக பணிபுரிகின்றவர்கள்
இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கான்டிராக்ட் லேபர்கள்

என்று வைத்துக் கொண்டு அந்தப் பொது நிறுவனம் நடத்திக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களை உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்தி, என் பேச்சை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பல முக்கியமான விஷயங்களை இந்த மன்றத்தில் முன்வைத்து நமது சகோதர உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் சொல்ல வேண்டிய பல காரியங்கள் சொல்லப்படாமல் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நான் எடுத்துக்கொள்கிற முயற்சியாக உள்ளது.

இந்த அறிக்கையில் பெரும் சாதனைகள் என்றெல்லாம் புகழ்வதற்கு விஷயங்கள் இல்லையென்பது எங்களுடைய கருத்து. இது சம்பிரதாயமான ஒரு உரை தான். எந்தவிதமான திட்டமும் சொல்லாது ஒரு உரை இருக்க முடியாது. இதில் அதிகமான அளவிற்கு சொல்வதற்கு ஒன்றுமில்லை. சமுதாயத்தில் அடிப்படை மாற்றங்களை கொண்டு வருகிற புதிய கொள்கைகள்; திட்டங்கள் இதிலே என்ன இருக்கிறது ? அதைச் சுட்டிக் காட்டினால் நாம் விவாதிக்கலாம். அது இல்லை. நிலச் சீர்திருத்தத்தை அமல் நடத்த நில உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதை நிறைவேற்ற வேண்டும். இந்த மாநிலத்தில் அப்படி சட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு என்ன வழி ? நிலத்தை அபகரித்து கையில் வைத்திருக்கிறவர்களிடமிருந்து அந்த பினாமி நிலங்களை எடுக்க வேண்டும். அதற்காக ஒரு சட்டத்தை இந்த அவையில் நிறைவேற்றி ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலம் கிடைக்குமென்று அனுப்பி வைத்ததற்கு நமக்கு மத்திய அரசிலிருந்து அனுமதி கிடைக்கவில்லை. அந்த நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு என்ன திட்டங்கள் இதிலே உள்ளன ? அல்லது புதிய சட்டங்களாவது கொண்டு வருவதற்கு ஏற்பாடு உள்ளதா என்றால் இல்லை. சிறு தொழில்கள் இன்னும் பல தொழிற்சாலைகள் மேம்பாடு பற்றி பல புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டு இதிலே சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் பற்றி சொல்லும்போது எண்ணிக்கையை தான் அதிகமாக குறிப்பிடுகிறார்கள். இத்தனை தொழிற்சாலைகளுக்கு ரெஜிஸ்ட்ரேஷன் பண்ணப்பட்டுள்ளது என்று நான் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் முழுவதும் இயங்குவதற்கு இருக்கிற உத்தரவாதம் என்ன ? அது சொல்லப்படாமல் இருக்கிறது. வேலையின்மையால் தவிக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், படித்த இளைஞர்கள், விவசாயத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு வேலை கொடுக்க உத்தரவாதம் செய்யும்படியான நிரந்தர ஏற்பாடு எதுவும் இந்த உரையில் இல்லை. மிகப்பெரிய விஷயம் அது. அதுபற்றி இந்த உரையில் இல்லை.





தினசரி தேவைப் பண்டங்கள், உணவுப் பொருள்கள் இன்னும் இதரப் பண்டங்கள் விலையேற்றத்தைத் தடுக்க எந்தத் திட்டமும் இந்த உரையில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை.

பெண்களுக்கு எதிரான கொடுமைகள், கற்பழிப்பு, வரதட்சிணை கொலைகள் அதிகரித்து வருவதைத் தடுக்க உறுதியான யோசனைகள், திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கான எந்த உத்தரவாதமும் இந்த உரையில் கொடுக்கப்படவில்லை.

அடுத்து, நாட்டின் ஒற்றுமைக்கு எதிராக தலை தூக்குகிற பிளவு சக்திகள் தேசிய ஒற்றுமை என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இன்றைக்கு நாடு முழுவதும் தேசிய அளவில் கட்சி வேற்றுமை, அரசியல் வேற்றுமையின்றி ஒன்று சேர்த்து உருவாக்கப்பட வேண்டிய விஷயம். அப்படிப்பட்ட ஒற்றுமைக் கான அறைகூவல், மக்களை ஒன்றுபடுத்துவதற்கான யோசனைகள் எதுவும் இந்த உரையில் சொல்லப்படவில்லை. இந்த உரையின் முக்கியமான பலவீனங்கள் இவை என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். அது பேசவேண்டிய, தர்க்கம் பண்ணவேண்டிய, உண்மையைக் கண்டறிய வேண்டிய விஷயம். எங்கள் கட்சியின் சார்பில் பரிசீலிக்கிறபோது எங்களுக்கு படுகிற கருத்துக்கள் இவை. சில முக்கியமான விஷயங்களை மட்டும்தான் நான் இப்போது எடுத்துச் சொல்ல முடியும். அந்த அளவிற்குதான் அவகாசம் இருக்கும்.

வறட்சியை எப்படி சமாளிப்பது என்ற பிரச்னையை இங்கே எல்லா உறுப்பினர்களும், அரசாங்கமும் பேசிக்கொண்டு வருகிறோம். எங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தடவை ஏற்பட்டிருக்கிற வறட்சி என்பது இதுவரையில் வந்த வறட்சியையெல்லாம் விடக் கொடுமையானது என்பதாகும். இது எங்களுடைய கருத்து. பஞ்சப் பிரதேசமாக தமிழகம் அறிவிக்கப்பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இப்போது ஏற்பட்டிருப்பது கடுமையான வறட்சி. இதனுடைய ஆழத்தை உரிய அளவிற்கு அதிகாரிகளும், அரசும் உணரவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. வறட்சியின் கடுமையான அபாயத்தையும் சரிவர உணர்ந்தாக வேண்டும். இந்த அறிக்கையில் வறட்சி பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அளவிற்கு அது ஆழமாக பார்க்கப்படவில்லை.

[நண்பகல் 12-00]

மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பல்வேறு அறிக்கைகளை நாம் பார்த்தால் போதும். அவர்கள் சொல்வதில் குறைபாடுகள் இருக்கலாம். அவர்கள் கூடச் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர்களே சில இடங்களில் பேசியிருக்கிறார்கள். இது நல்லதல்ல. அவர்கள் சொல்வதில் குறை இருக்கிறது என்றால், அதைச்

[திரு. கு. ரமணி] [1987 மார்ச் 4

சரி செய்வதற்கு நீங்கள் ஆலோசனைகளைச் சொல்லவேண்டும். ஆனால் அதைவிட்டுவிட்டு, சாடுவது என்பது வேறு விதமான நிலைக்குக் கொண்டுபோய்விடும். இப்படிச் செய்தால் அவர்கள் சொல்லவே பயப்படுவார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன்.

பிப்ரவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரை இருக்கும்படியான அந்த மாதங்களில் இந்த வறட்சி வெகு வேகமாக வளர்ச்சி அடைந்து என்ன நிலையை உருவாக்குமோ என்று கிராமப்புறங்களில் உள்ள மக்களும் சரி, நகர்ப்புறங்களில் உள்ள மக்களும் சரி, பயத்தோடு இருக்கிறார்கள். குடிநீர் சப்ளை, மாட்டுத் தீவனம், கிராமங்களில் நிவாரணப் பணி இவைகள்தான் இந்த வறட்சியினுடைய தாக்குதலிலிருந்து மக்கள் உயிர்களை பாதுகாக்க இருக்கும்படியான உடனடிப் பணிகள். காண்ட்ராக்ட்காரர்கள் கொள்ளையடிக்கக்கூடிய முறையில் அரசினுடைய பணம்செலவழிக்கக்கூடாது. அதற்கு ஏற்ற உத்தரவாதத்தை அளிக்கவேண்டும். இப்போது தற்காலிகப் பணிகள் மிகவும் முக்கியம். குடிக்கத் தண்ணீர் இல்லாமல் ஒரு மனிதன் கூட உயிர் விடக்கூடாது என்ற அந்த நோக்கத்தோடு நம்முடைய பணிகள் செல்லவேண்டும். தமிழ்நாட்டில் நீர் நிலைகள் எங்கெல்லாம் இருக்கின்றவோ, அங்கிருந்தெல்லாம் நீர் இல்லாத இடங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதற்கு, அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடிய சகலவிதமான வாகனங்களை, போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தவேண்டும். அது இல்லாமல், நாம் நினைக்கிற மாதிரி அவ்வளவு சுலபமாக இந்த வறட்சியை நாம் தாண்டிச் செல்ல முடியும் என்று நினைக்கக்கூடாது. இதுமட்டும் போதாது. இந்த வறட்சிப் பிரச்சனை நமக்குத் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. அதற்கு எதிர்க்கட்சியினரைச் சாடிப் பிரயோசனம் இல்லை. எதிர்க்கட்சியினர் சொல்கிற விஷயங்கள் பற்றி உங்களுக்கு ஒப்புதல் இல்லாமல் இருக்கலாம். அல்லது அவைகள் சொல்கிற வழிமுறைகள் புதிய வழிகாட்டுதல்களாக இல்லாமல் இருக்கலாம். அல்லது அவைகள் சொல்வது உத்தமமான யோசனைகளாக இல்லாமல் இருக்கலாம். எதிர்க்கட்சிகள் சொல்வதை எதிர்த்துக் கூறுவது என்று சாட ஆரம்பித்தால் அதற்குப் பிறகு என்ன பேசுவது. பிறகு எப்படித்தான் குறைகளைச் சுட்டிக் காட்டுவது. எனவே இதில் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும்.

நேற்றையதினம் இங்கே இதைப்பற்றி விவாதம் நடந்தது. மாண்புமிகு சுகாதாரஅமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் இதைப் பற்றி கொஞ்சம் பேசினார்கள் நாம் அந்த விஷயத்தைப் பற்றி ஒரு சரியான விவாதத்தை இந்தச் சபையிலே நடத்தவில்லை. நான் பாராளுமன்றத்திலே இருந்த காலத்திலே, டாக்டர் கே. எல். ராவ்,—உலக ரீதியாகவே செல்வாக்கு பெற்ற ஒரு பெரிய என்ஜினியர் என்று பெயர் பெற்றவர், நீர்ப்பாசன விஷயத்திலே,— அவர் சொன்னார்.



1987 மார்ச் 4] [திரு. கு. ரமணி]

அந்தத் திட்டம் சாத்தியப்படும் என்று. ஆன ஆயிரம் கோடி பணம் செலவழிப்பது என்பதுதான் பிரச்சனை. ஏன் என்றால் சில இடங்களில் தண்ணீரை லிப்ட் பண்ணவேண்டியது வரும். இதெல்லாம் அதிசயமல்ல. எனவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி நாம் யோசிக்கவேண்டும். ஆனால் இப்போது அதையெல்லாம் வைத்து தமிழ் நாட்டினுடைய பிரச்சனையை தீர்க்க முடியாது. தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை ஆறுகளையும் பயன்படுத்தவேண்டும். நாம் மற்ற மாநிலங்களிலிருந்து தண்ணீரைக் கேட்டு கேட்டு பெற்றுக்கொண்டு இருக்கிற நிலையில் இருக்கிறோம், நாமாக சாத்தியப்பட்டதை எவ்வளவு செய்யமுடியுமோ அந்த அளவிற்கு செய்திருக்கவேண்டும். மழை பெய்கின்ற போது ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வீணாகாமல், ஒரு பெஸ்ட் 'வாட்டர் கன்சர்வன்சி மேனேஜ்மென்ட் ஸ்கீமை' நம் ஆட்களைக் கொண்டு நாமே தயாரிக்காமல் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படாது. இப்படியே நாம் தொடர்ந்து போய்க்கொண்டிருப்பது நல்லதல்ல. இன்றைக்குள்ள ஏரிகளிலும், குளங்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை தயவுதாட்சண்யம் இல்லாமல் அப்புறப்படுத்தி, அவைகளை ஆழப்படுத்த வேண்டும். ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அவைகளிலிருந்து வீணாக வெளியே போவதற்கு வழியில்லாமல் செய்யவேண்டும். ஏராளமான புதிய குளங்களையும், குட்டைகளையும் உருவாக்க வேண்டும்.

உதாரணமாகச் சொல்கிறேன், கோவையில் எங்களுக்கு ஓர் அனுபவம். 20, 25 வருடங்களுக்கு மேலாக, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து, சங்கனூர் பள்ளத்தைத் தடுக்கவேண்டும், குளம் அமைக்க வேண்டும் என்று திட்டம் போட்டால், அந்தச் செலவு பணத்திற்கு ரேசியோ பார்த்தால், லாபம் கிடைக்காது என்று அதிகாரிகள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அதிகாரிகள் மட்டுமல்ல, அமைச்சர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு $3\frac{3}{4}$ கோடி அளவிற்கு செலவிடப்படுகிறது. இந்தத் திட்டம் இப்போது நடைமுறையாகிக் கொண்டிருக்கிறது. 200 ஏக்கரிலே ஒரு பெரிய குளம். அதிலே தண்ணீர் வந்தால், 600 ஏக்கர் நஞ்சை பூமிக்கும் 50 கிராமங்களில் உள்ள கிணறுகளிலும் தண்ணீர் கிடைக்கும். அது பூராவும் மலைமேலேயிருந்து ஓடுகிற தண்ணீர். அங்கே அதைத் தடுத்து நிறுத்த முடியாது. இப்படிப்பட்ட குளம் குட்டைகளை நீர் நிலைகளை, ஆழமான நீர் நிலைகளாக அமைத்து, தண்ணீரைச் சேமிக்கிற அளவிற்கு நம்முடைய நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். மேலும் மற்ற மாநிலங்களிலிருந்து தண்ணீரை நாம் கோரிக் கோரி பெறுவதற்கு ஒரு சகோதரபூர்வமான அணுகுமுறையோடு காரியங்களைச் செய்து, அதிகப்படியான தண்ணீரைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இதைத்தான் இப்போது தமிழ்நாடு இருக்கிற நிலையில் நாம் சொல்ல முடியும்.

[திரு. கு. ரமணி] [1987 மார்ச் 4

மற்ற பெரும் திட்டத்தைப் பற்றி நாம் பிறகுபேசுவோம். எந்த
அளவுக்கு வாதாடி பெறமுடியும் என்று நாம் பார்க்கவேண்டும்.
28 கோடி ரூபாய் இன்றைக்கு இதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது
என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கோவையில் இருக்கக்கூடிய
டி.டி.சி. மீட்டிங்கில் நாங்கள் பேசியபோது 18 கோடி ரூபாய்க்கு
திட்டம் தீட்டி அங்கே அந்த ஆலோசனையை மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்களும் மற்ற அதிகாரிகளும் முன்வைத்தார்கள். இது
ஒட்டுமொத்தமாக 28 கோடி ரூபாய் என்பது எங்கே காணும்.
காணாது. அப்படியானால் இன்றைக்கு ஒரு பெரும் பொறுப்பு
மத்திய அரசுக்கு உண்டு. அவர்கள் இந்த மாதிரி காரியத்தில்—
—என்னைப் பொறுத்தவரையில்—இதனுடைய செலவு முழு
வதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். அது தான்
கரெக்ட்டாக இருக்கும். மாநில அரசுகளின் கஜானாக்கள் காலி
யாகி இருக்கிறது பலயிடங்களில். அவர்கள் நோட் அடிக்கவும்
முடியாது. அவர்கள் எப்படி பணத்தை உண்டாக்க முடியும்.
ஆனால் அந்த மாதிரி இருக்கக்கூடிய பிரச்சனை பற்றிய விவா
தங்களுக்கு வேண்டியநடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா?
ஆனால் நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறோம், கேட்டுக்
கொண்டு இருக்கிறோம் என்று சொன்னால் எப்படி. நீங்கள்
கேட்காமல், கடிதம் எழுதாமல் இருந்தால் நாங்கள் என்ன
செய்வது என்று அவர்கள் திருப்பிக்கேட்பார்கள். அதற்காக
அமைச்சர்கள் உண்ணாவிரதம் இருக்கவேண்டும். சத்தியா
கிரகம் இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. தமிழ்
மக்களைத் திரட்டி அவர்களுடைய ஒரு நிர்பந்தத்தைக் கொண்டு
இந்தக் காரியத்தை நாம் மத்திய அரசுக்கு வற்புறுத்தி
உணர்வை ஊட்ட வேண்டியிருக்கிறது, தெரிவிக்க வேண்டியிருக்
கிறது. நமக்கு கிடைக்கவேண்டிய இந்த தேவைகளை நாம்
பெற்று ஆகவேண்டும்.

அதேபோல் தொழில் வளர்ச்சியைப் பற்றி சொல்லும்போது
உண்மையான நிலைமையை தைரியமாக நாம் சொல்லவேண்டும்
என்பதுதான் என்னுடைய கருத்தாகும். தொழில் வளர்ச்சி
அல்ல இப்போது ஏற்பட்டு இருப்பது. தொழில் நெருக்கடி மேலும்
மேலும் ஆழமாக போய் கொண்டிருக்கிறது. ஒரு தொழில் மூடப்
படும்போது இன்னொரு தொழில் உருவாகும். ஒரு மனிதன்
இறந்து சுடுகாட்டுக்கு போகும்போது வேறு ஒரு மனிதன் பிறப்
பது இல்லையா? அந்த மாதிரி நடக்கிறது. அது நம்முடைய
முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் சாபக்கேடு ஆச்சே.
அந்த முரண்பாட்டை நீங்கள் எப்படி தீர்க்கமுடியும்? உங்க
ளுடைய சொந்த முரண்பாட்டை நான் சொல்லவில்லை.
நீங்கள் மத்திய அரசின் பொருளாதார திட்டத்தை அவர்களுடைய
ஆலோசனையை பூரணமாக ஏற்றுக்கொண்டு இருப்பவர்கள்.
என்ன செய்வது? நீங்கள் அதிலிருந்து என்று தப்புவீர்களோ
தெரியவில்லை, அது தான் பிரச்சினை. என்ன சொல்லப்படு
கிறது இந்த அறிக்கையில்? 77,382 பர்மனென்ட் ரிஜிஸ்ட்ரேஷன்
கொடுத்தாகி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே



1987 மார்ச் 4] [திரு. கு. ரமணி]

எத்தனை தொழிற்சாலைகள் ஓடுகின்றன? எத்தனை தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன? எவ்வளவு உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது? அந்தக் கணக்குகளை நீங்கள் எடுத்து வைத்துப் பார்த்தால் எங்களுக்கு விவாதத்திற்கு மட்டும் அல்ல, அரசு அந்த கணக்கை பார்த்தால் அப்போது தெரியும் தொழில் வளர்ச்சி நிலைமை என்ன என்று. ஆகவே தொழில் நெருக்கடி வெகு வேகமாக வளர்கிறது. ஒரு லட்சத்திற்கு மேற்கொண்ட தொழிற்சாலைகள் சிறியதும், மத்திய தரமானதும், சில பெரிதும் கூட—உதாரணத்திற்கு, பின்னி இஞ்சினீயரிங் என்பது ஒரு பெரிய ஆலை—மற்றும் எத்தனையோ பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. மத்திய அரசின் அமைச்சருக்குச் சொந்தமான ஒரு பஞ்சாலை கூட மூடிக்கிடக்கிறது. 4, 5 மாதமாக தொழிலாளர்களுக்கு சம்பளம் இல்லை. எப்படி இவைகளை எல்லாம் தீர்க்கப் போகிறீர்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு நடவடிக்கை என்ன? எண்ணிக்கையை மட்டும் பார்த்தால் போதாது, மற்ற கணக்குகளையும் எடுத்துப் பார்க்கவேண்டும். இதற்கு ஒரு முடிவு கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும். நீங்கள் முடிவு கட்டி விடுங்கள் என்று நான் சொல்லவில்லை. இதற்கு முடிவு காணுவதுதான் இந்திய பொருளாதார வாழ்க்கையினுடைய பிரதான பிரச்சினை. அதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும். அவர்களுக்குத்தான் முழு சக்தியும் இருக்கிறது. 50 ஆயிரம் 60 ஆயிரம் கோடி ரூபாய் அங்கே வருமானத்தை திரட்டி மற்றவர்களுக்கு வரி போட்டு பணம் எடுக்கக்கூடிய சக்தி அவர்களுக்கு இருக்கிறது. அதிலே அவர்கள் செலவிட வேண்டும். அதற்கு நம் அரசும் தமிழ் மக்களும் எந்த அளவுக்கு தீவிரமாக நிர்பந்திக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நிர்பந்தம் செய்யவேண்டும். அப்படி வரும்போது நமக்கு இருக்கக்கூடிய அரசியல் உறவை வைத்து அதைத் தீர்க்கப் போனால் நிலைமை வேறுவிதமாகப் போய்விடும். மக்கள் நலம்தான் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு முடிவுகட்ட முடியுமே தவிர மற்றவையால் சாதிக்க முடியாது. அதுதான் இருக்கிற பிரச்சினை. இதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று நான் இருந்தேன். இருந்தாலும் ஒரு சின்ன விஷயம். தொழில் துறை பற்றி விளக்கமாகப் பேசினார்கள். குறைகளைச் சொல்லுவது அவர்களுடைய கடமை. அப்படிச் சுட்டிக்காட்டுவதற்குத்தான் எதிர்கட்சிகள் இருக்கின்றன. நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் திரு. ரமணி போன்ற பெரும் தலைவர்கள் பேசும்போது தொழிற்சாலைகளை தேசியமயம் ஆக்கியிருக்கிறோமே, அதையாவது கொஞ்சம் பாராட்டக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[1987 மார்ச் 4

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பாராட்டுக்களை எப்போதும் கேட்டு வாங்கு வதற்கு நீங்கள் முற்படவேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

[பிற்பகல் 12–10]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாராட்டுக்களைக் கேட்டு வாங்குகின்ற அந்தப் பஞ்சப் புத்தி உங்களிடம் இருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன்.

திரு. கு. ரமணி : அப்படிப்பட்ட புத்தி கம்யூனிஸ்ட் இயக் கத்திற்கு கிடையாது. வேறு ஏதாவது இயக்கங்களைப்பற்றிச் சொல்லுங்கள். சொல் ஒன்று செயல் ஒன்று என்று தத்துவ மாக ஊறிப் பிறந்திருக்கக் கூடிய உங்களுடைய புத்தியாக அது இருக்கும். எங்களுக்கு அது இல்லை. உதாரணமாக இதே மன்றத்தில்............(குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரு. ரமணி அவர்களிட மிருந்து நான் எதிர்பார்த்தது " பாராட்டத்தக்கது " என்ற வார்த்தையைச் சொல்வாரா என்றுதான். பாராட்டைக் கேட்டு வாங்குவதாக அவர் சொன்னார். அதனால்தான் நான் திரும்பச் சொன்னேன். நான் சொன்னது தவறாக இருந் தால், திருத்திக் கொள்கிறேன். ஆனால் ரமணி அவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளைப் பற்றி பாராட்டு வதில் என்ன சங்கடம் ? அதிலுள்ள சங்கடத்தைச் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகக் கேட்கிறேன்.

திரு. கு. ரமணி : நமது அமைச்சரவர்கள் ரொம்ப அவசரப் படுகிறார். இதே மன்றத்தில் கோவையிலே மூடிக் கிடக் கின்ற பஞ்சாலைகளை—உங்களுடைய மதிப்புமிக்க தலைவராக இருந்த மாண்புமிகு அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆவதற்கு முன்னாலே 22 பஞ்சாலைகள் பூட்டிக் கிடந்ததை திறக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தி, உங்களால் திறக்க முடியாது, எங்களோடு சேர்ந்து போராடுங்கள் என்று கேட்டோம். அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். நாங்களும், அவர்களும் நீங்களும் சேர்ந்துஅன்று இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஓரே கட்சி, போராடித்தான் இந்த அரசாங்கம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு இந்த நிர்வாகத்தை எடுப்பதற் காக 'Reli f undertaking Act' ஒன்று நிறைவேற்றப் பட்டது. அந்த ஆக்ட்டை அமலாக்கும்பொழுது பல கஷ்டங் கள் தொழிலாளர்களுக்கு உபத்திரவங்களைத் தந்தது. இருந் தாலும் ஒரு கேள்வி கேட்க இடமுண்டு. அரசு எடுத்தது நிர் வாகத்தை மட்டும்தான், சொத்துக்களையும் சேர்த்து எடுக்க அதிகாரம் இல்லை. 'It is not a property alienation'.



1987 மார்ச் 4] [திரு. கு. ரமணி]

அதற்குப் பிறகு 1969-ல் பாராளுமன்றத்திலே சட்டம் நிறை வேற்றி அந்தத் தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்பட்டன. அது நல்ல நடவடிக்கை, நானும் இதை இதே மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி கொஞ்சம், பழைய ரெக் கார்டுகளைப் பார்த்தால் இவ்வளவு நேரம் போய் இருக்காது. ஆகவே நல்லதைச் செய்தால் நல்லது செய்திருக்கிறது என்பதை திட்டவட்டமாகச் சொல்லக் கூடிய கட்சி எங்களுடைய கட்சி. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இல்லை என்று சொல்ல வில்லை.

இந்தத் தொழில் நெருக்கடியைப் பற்றி எதற்காகச் சொல் கிறேன் என்றால், உங்களைக் குற்றம் சொல்ல வேண்டும் என் பதற்காக அல்ல. உங்களுடைய பக்கத்திலிருந்து இந்த நெருக் கடியைத் தீர்ப்பதற்கு இன்னது செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளை கூர்மையாக மத்திய அரசுக்கு வைத்து— நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஒரு உறுப்பினர்—அங்கே அதற்குப் போராட வேண்டும். அதைச் செய்ய வேண்டும். அதற்கு ஜனங்கள் நமக்கு ஆதரவு அளிக்க வேண்டும். சகல கட்சிகளின் ஆதரவும் வேண்டும். தமிழகத்தினுடைய மொத்த வளர்ச்சிக்கு அது தேவை. அதைத் தான் நான் சொல்கிறேன். அப்படிப்பட்ட முறையில் நாம் பார்க்க் வேண்டும். தற்போது மூடிக்கிடக்கிற பஞ்சாலைகள் மூடப்பட்டு—நீண்ட நாட்களுக்குபின் அவர்களோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமைச்சரவர்களும், மற்றும் அத்தனை பேரும் தானே ஏற்றுக் கொண்டு செய்தார்கள் ? இரண்டே இரண்டு சின்ன தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மற்ற தொழிற்சாலைகள் இன்று வரையில் திறக்கப்படவில்லை. அதற்குப் பிறகு பல ஆலைகள் மூடப்பட்டுவிட்டன.

அதுமட்டுமின்றி என்ஜினியரிங் தொழில்களுக்கான மூலப் பொருள் கிடைக்கவில்லை. எத்தனையோ சின்ன தொழிற் சாலைகள் பூட்டப்பட்டு வருகின்றன. அதைப் பார்க்க வேண்டும். 10-பி சட்டத்தைப் பற்றி நேற்றைக்கு மாண்புமிகுஉறுப் பினர்களால் இங்கு பேசப்பட்டது. அற்புதமான இந்தச் சட்டத் தைத்தான் தன் காலால் போட்டு மிதித்தார் அந்த பின்னி முத லாளி. அந்த முதலாளி பேரில் நடவடிக்கை எடுத்து அவரைக் கைது செய்து, சிறையில் வைப்பதற்கு நீங்கள் சட்டம் போட வில்லை. அதுதானே பிரச்சினை. அங்கே இருக்கின்ற, மறியல் செய்த தொழிலாளர்களைக் கைது செய்து சிறையில் போட போலீஸ் சட்டம் இருக்கிறது. அதுதான் பிரச்சினை. வர்க்க ஆட்சி என்று நாங்கள் சொல்வதன் காரணம் அதுதான். ஆகவே அதை மாற்றச் சொல்லி மத்திய சர்க்காரை வற் புறுத்த வேண்டும். அதைச்செய்தால் போதும், நான் உங்களுக்கு மட்டுமே பொறுப்பு என்று சொல்லவில்லை. உங்கள் பங்கை நீங்கள் செய்யவேண்டும். நாங்கள் எங்கள் பங்கை செய்கிறோம்.

[திரு. கு. ரமணி] [1987 மார்ச் 4

அதே மாதிரி நிலச் சீர்திருத்தம். இதுபற்றி மூச்சு விடாமல்
இருப்பது எப்படி சரியாக இருக்கும் ? இந்திய நாட்டில் காங்
கிரஸ் அரசாங்கம் வந்த பிறகு, சுதந்திரம் கிடைத்த பிறகு,
4 கோடி ஏக்கர் நிலங்கள் மிச்சம் கிடைக்கும் என்று அன்றைக்கு
ஆய்ந்து சொன்னார்கள். கொஞ்ச காலம் போனதற்குப் பிறகு
40 இலட்சம் ஏக்கர் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால்
இந்த மிச்ச நிலத்தையும் எடுத்து விநியோகிப்பதற்கு மத்திய
சர்க்கார் எந்தச் சட்டத்தையும் செய்யவில்லை. அவர்கள்
என்ன சொல்கிறார்கள் ? மாநில சர்க்காரின் கன்ட்ரோலில்
இருக்கிறவர்கள் இதைச் செய்யலாம் என்று சொல்கிறார்கள்.
நீங்கள் கொண்டுவந்த அந்தச் சட்டத்தில் இங்கே ஒரு லட்சம்
ஏக்கர் பினாமி நிலம் கிடைக்கிறது. என்று சொல்லி—காது
குத்தல் நிகழ்ச்சிக்கு போன இடத்தில் கறி வாங்கப் போன
மாதிரி நாம் இங்கே ஒரு சட்டத்தை உருவாக்கினோம். அதற்குக்
கூட அவர்கள் நமக்கு அனுமதி தரவில்லை. இதுதான் நடந்தது.

இன்னொரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன்,
தயவுசெய்து எங்களுடைய ஆட்சியினுடைய பெருமைக்காக
நான் சொல்கிறேன். என்று கொஞ்சம் கூடக் கருதக் கூடாது. ஒரு
உண்மை—'ஃபேக்சுவல்' விஷயத்தை நான் சொல்கிறேன். பினாமி
நிலத்தை எடுத்து அதைத்தான் விநியோகம் செய்யவேண்டும் என்று
சொல்லி—இந்த பினாமி நிலங்கள் எல்லாம் வசதி படைத்தவர்
கள் கையில் இருக்கிறது. ஏராளமாக இருக்கிறது. எனக்கு
என்ன சந்தேகம் ஏற்படுகிறது என்றால், நீங்கள் அவர்களைக்
கண்டு பயப்படுகிறீர்கள். நிலச்சுவான்தார்களும், மிட்டா
மிராசுதார்களும், பாளையக்காரர்களும், பட்டயக்காரர்களும்,
முடிசூடா மன்னர்களும் நிலங்களை வளைத்துக் கொண்டு கையில்
வைத்திருப்பதை, அதை எடுக்கப் போனால் கொஞ்சம் ரசா
பாசம் ஏற்படுமோ என்று பயப்படுகிறீர்களா ? பயப்படக்
கூடாது. கிராமங்களிலே இந்த நிலை ஏற்படும், நாங்கள் அதை
'ஃபேஸ்' பண்ணியிருக்கிறோம். எதிர்த்து நின்றிருக்கிறோம்.
மேற்கு வங்காள அரசாங்கம் ஒரு சின்ன சேவையைச் செய்திருக்
கிறார்கள். பெரிதல்ல 1977-க்குப் பிறகு என்ன செய்தார்கள்
தெரியுமா? ஏற்கெனவே காங்கிரஸ்காரர்களால் கொண்டு வந்து
நிறைவேற்றப்பட்ட 25 ஏக்கர் உச்ச வரம்புச் சட்டத்தை அங்கே
திட்டவட்டமாக அமலாக்குவது என்று திட்டம் போட்டார்கள்.
இங்கே உங்களுக்கு 15 ஏக்கர் சட்டம் இருக்கிறது. முன்பு 30
ஏக்கர் என்று இருந்தது. பின்னர் 15 ஆக மாற்றிவிட்டார்கள்.
ஆனால் நிலம் யாருக்கும் கிடைக்கவில்லை. இங்கே நீங்கள்
அதை அமுலாக்கவில்லை. அங்கே அமுலாக்கினார்கள். பெரிய
போராட்டம்தான் நடந்தது. 12,67,819 ஏக்கர் நிலத்தை
எடுத்தார்கள், அதை வெஸ்டட் லேண்டாக கையிலே வைத்தார்
கள். ஆனால் அதை எதிர்த்து பல பேர் கோர்ட்டுக்கு போனார்
கள். இதிலே 7,90,754 ஏக்கர் விநியோகம் பண்ணப்பட்டது.
அதிலே 15,21,578 பேர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நிலம்
பங்கிட்டு கொடுக்க முடிந்தது. அதில் மக்களுக்கு ஒரு
திருப்தி. அதனால்தான் அங்கே கிராமப்புறங்களில் இருக்கின்ற



1987 மார்ச் 4] [திரு. கு. ரமணி]

விவசாயிகள் மத்தியில் எங்களுடைய கட்சியைப் பற்றி மதிப்பு
ஏற்பட்டது. இதற்கு பல பேர் உயிர் துறக்க வேண்டியிருந்தது.
நிலச்சுவான்தாரை பட்டா எங்கே கொண்டுவா என்று கேட்டால்
அவர்களிடம் பட்டா இல்லை. பினாமியாக வைத்திருந்த
நிலத்தில் நிலம் இல்லாதோர் உழுதார்கள். அப்படி நடவடிக்கை
எடுக்கக்பட்டு பினாமி நிலம் மீட்க்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத்தலைவர் அவர்
களே, உறுப்பினர் அவர்கள் நிலச் சட்டத்தைப் பற்றி விரிவாக
பேசுகிறார்கள். தமிழ்நாட்டில் நிலச் சட்டம் உருவாக்கும்போன்
அந்தச் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றியவன் நாது
தான் என்பதை நினைவுப்படுத்துகிறேன். 15 ஸ்டாண்டர்டு ஏக்
கரா என்பதை கொண்டு வந்து நிறைவேற்றினோம். அதன்
பிறகு, இப்போது பினாமி நிலம் வைத்திருப்பவர்களைக் கண்டு
பயப்படுகிறார்களா என்று கேட்கிறார்கள். எந்த நிலச்சுவான்
தாரரையும் கண்டு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பயப்
படுவதற்கு காரணம் இல்லை. நான் தங்கள் மூலம் கம்யூனிஸ்ட்
கட்சித் தலைவரிடம் கேட்டுக் கொள்வது, எந்த நிலச்சுவான்
தாரரிடத்தில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக்கு மேலாக இருக்கிறது
என்ற விவரத்தை சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்
கிறோம். யாரிடமாவது 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு மேல்
இருந்தால், அதைத் கொஞ்சம் ஆதாரப் பூர்வமாக எழுதிக்
கொடுப்பார்களானால் இந்த அரசாங்கம் தங்கு தடையின்றி
உடனடியாக நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஒன்றும் கேள்வியே
கிடையாது. நாங்களும் நிலத்தை எடுக்க வேண்டும் என்று தான்
கருதுகிறோம். ஒருவேளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு
வராமல் யாராவது நிலத்தை வைத்திருப்பார்களானால், யார்
வைத்திருக்கிறார்கள்—எந்த குடும்பத்தைக் கண்டு நாங்கள் பயப்
படவேண்டிய அவசியம் இருக்கிறது—என்ற விவரத்தை எடுத்துச்
சொல்வார்களானால் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு கே. சுப்பராயன் :** துணைத் தலைவர் அவர்களே,
சம்பந்தப்பட்ட விஷயத்தை ஒரு தகவலுக்காகச் சொல்ல
விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரசு பயப்
படுகிறது என்று அவர் சொன்னார், பயப்படவில்லை, யார்
என்று எழுதித்தாருங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்
கிறார். நீங்களும் முடிந்தால் எழுதித் தாருங்கள். அதில்
தவறு இல்லை.

**திரு கே. சுப்பராயன் :** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு மிக முக்கியமான
நல்ல வரவேற்கத்தகுந்த ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்
கள். அவர் அறிவித்தபடி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுப்
பொறுப்பு எடுத்து இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய உபரி

நிலங்களைப் பற்றிய பட்டியல்களை முழுவதுமாக அரசுக்கு தரத்
தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அப்படி உபரி
நிலங்கள், பினாமி, மோசடி எங்கெங்கே நடைபெற்றது என்
பதை அடையாளம் காட்டியதற்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது
307 போடப்பட்டிருக்கிறதே, அந்தகைய நடவடிக்கைகளை அரசு
ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். (கூச்சல்—
குழப்பம்).

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, என்னை
காப்பாற்றுங்கள். எனக்குக் கொஞ்சம் கருணை காட்டுங்கள்.
சற்று நேரம் தாருங்கள். நீங்கள் கேட்ட கேள்வி இருக்கிறதே,
அது ஒரு சரியான கேள்வி, இது ஒன்றும் கஷ்டமான பதில்
இல்லை. உங்கள் ரெவின்யூ டிபார்ட்மெண்டை தயார் பண்ணச்
சொல்லுங்கள் பாளைய கோட்டை பட்டயக்காரர்களுக்கு பூமி
எவ்வளவு என்று சொல்லி நாங்கள் நோட்டீஸ் வெளியிட்டு
இயக்கங்கள் நடத்தி இருக்கிறோம். **. (கூச்சல்—குழப்பம்).

(பிற்பகல் 12—20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பெயரை
நீக்கிவிடுங்கள். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு) நீக்கியாகிவிட்
டது. (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சர் பேசுவார்.
(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,
நான் கேட்டது, சட்டப்படி ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்
டர்டு ஏக்கர் என்ற கணக்கு வைத்திருக்கிறோம். அந்தச்
சட்டத்திற்குப் புறம்பாக, யார் பெயரிலாவது, எந்தக் குடும்
பத்திலாவது அப்படி நிலம் இருக்குமானால், (குறுக்கீடு) நான்
சொல்வது, விவரமாகவே சொல்கிறேன். நான் சொல்வது,
ஒரு வேளை புரிய வைக்க முடியவில்லை என்றால், அது
என்னுடைய பலவீனமாக இருக்கலாம். விவரமாகவே நான்
சொல்கிறேன், சக்திக்கு எட்டிய வரையில் பட்டயக்காரரோ,
இன்னொருவரோ, யார் பெயரில் இருந்தாலும், குறிப்பிட்ட
அந்தப் பெயர், அந்தக் குடும்பத்தில்—குடும்பம் என்றால்
என்ன என்று சட்டத்திலே வரையறை வைத்திருக்கிறோம்.
அதிலே குறிப்பிட்ட ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் நிலம்
அவர்கள் வைத்து இருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டால்,
யாராக இருந்தாலும் இந்த அரசாங்கம் நிலத்தைக் கையகப்
படுத்தத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் (குறுக்கீடு)
கேள்வியை நான் கேட்டு நீங்கள் பதில் சொல்லவேண்டும்.
என்னை கேட்டு அர்த்தமே இல்லை. விவாதத்தை வளர்த்துக்
கொண்டு போக விரும்பவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.





இதில் கம்யூனிஸ்டு கட்சிக்கும், அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கருத்து மாறுபாடே
கிடையாது. இங்கே இருக்கின்ற யாருக்கும் இருப்பதாகவும்
நான் நினைக்கவில்லை. யாரிடத்தில் அதிகமாக நிலம் இருக்கிற
தோ, அதைக் கையகப்படுத்தவேண்டும். அதை நிலம் அற்றவர்
களுக்குக் கொடுக்கவேண்டும். அந்தக் கருத்தில் மாறுபா
டான கருத்தே கிடையாது. அதை விவரமாக திரு. சுப்ப
ராயன் அவர்கள் எழுதிக் கொடுக்கிறேன் என்று சொன்
னார்கள். அதை எழுதிக் கொடுத்தால் அதற்குரிய வருவாய்த்
துறை அமைச்சருக்கு அனுப்பி, அதைப்பற்றி முழு பரிசீலனை
செய்து, இந்த அவைக்கே அறிக்கை வேண்டும் என்றால் கூட
வைப்பார்கள்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நாங்கள் எழுதிக் கொடுத்ததற்கு மட்டும் அவருடைய
நடவடிக்கை என்பது அல்ல எங்களுடைய கோரிக்கை. நாங்கள்
சொல்வதைச் சொல்கிறோம். எழுதிக் கொடுப்பதைக் கொடுக்
கிறோம். அதற்காக நாங்கள் நிலத்திலே இறங்கி, கைது செய்
யப்பட்டு, ஜெயிலுக்குப் போயிருக்கிறோம். இன்னும் போகிறோம்.
பிரச்சினை என்னவென்றால், ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று
நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அந்த ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு
மேல் நிலம் வைத்து இருக்கிறவர்கள், பட்டா போட்டு பெட்டி
யிலே வைத்திருப்பார்களா? அவர்கள் என்ன அவ்வளவு ஏமாந்
தவர்களா? அந்த நிலத்தைக் கண்டுபிடிக்கக்கூடிய இடங்களை
நாம் சொல்லிக்காட்டமுடியும். ஊர் ஜனங்களிடமிருந்து விவ
ரங்களைத் தரமுடியும்.

நான் கேட்கிறேன், மேற்கு வங்காளத்தில், 25 ஏக்கருக்கு
மேல் நிலம் வைக்கவில்லையா? துப்பாக்கியை எடுத்துச் சுட்
டார்கள், அந்த நிலத்திலே போய் இறங்கி உழுதபோது, பட்
டாவைக் காட்டச் சொல்லி அரசினர் அவர்களைக் கேட்டார்கள்.
நிலச்சுவான்தார்களையே கேட்டார்கள். அவர்களிடம் பட்டா
இல்லை. ஆகவே, அந்த நிலத்தை மற்றவர்களுக்கு பட்டா
கொடுக்க முடிந்தது. அது பெரிய பிரச்சினையாகும்.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சட்டப் பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சட்டப்படி இன்னொரு
வருக்கு பட்டா செய்யப்பட்டு விட்ட நிலத்தை இன்னொரு
வருக்குச் சொந்தம் என்று எப்படி நாம் கையகப்படுத்தித் தர
முடியும்? அது அரசால் முடியாது. நான் கேட்பது, அப்படி ஒரு
பெயரில் இருக்குமானால், குடும்பத்தில் இருக்குமானால்,
எந்தக் குடும்பமாக இருந்தாலும், நமக்கு கவலையே கிடை
யாது. எந்தக் கட்சியாக இருந்தாலும் கவலையே கிடையாது.
நில உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்து இருப்பார்களானால்
இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

[1987 மார்ச்!

திரு. கே. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே'
ஆதாரப் பூர்வமாக தஞ்சை மாவட்டத்தில் நிரூபித்து இருக்
கிறோம். அதன் மீது அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?
(குறுக்கீடு).

திரு. கு. ரமணி : நான் பேசி முடித்துவிடுகிறேன். துணைத்
தலைவர் அவர்களே, இதற்கு அரசு சட்டபூர்வமாக ஒரு
விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அந்த விசாரணைக்கு
முன்னால் பொதுமக்களையும், நிலத்தை வைத்திருக்கிறவர்களது
நிலத்தைப் பற்றிச் சொல்லக்கூடிய சாட்சியங்களையும் உங்
களுக்கு முன்னால் அளிக்கத் தயார். நீங்கள் அந்த ஏற்பாட்
டைச் செய்யுங்கள். அதில் எவ்வளவு நிலம் கிடைக்குமோ,
நாம் பார்க்கலாம். அந்த முறையில் இந்தக் காரியத்திற்கு
அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறோம். அது
பற்றி எல்லோருக்கும் தெரியும், அந்த நிலம் பல அளவில் பலர்
கையில் இருக்கிறது என்று. ரகசியம் ஒன்றும் இல்லை. ஆனால்
சட்டப்படி பிடிக்கமுடியாமல் திண்றிக் கொண்டிருக்கிறோம்.

தலைவர் அவர்களே, இதே மாதிரி முக்கியமான பிரச்சினை
தான் விலைவாசியேற்றம். அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன
வழி? விலை ஏறிக்கொண்டேயிருக்கிறது. நம் கன்ட்ரோலிலே
இல்லை. அரசினாலேயே கட்டுப்படுத்தமுடியவில்லை என்றால்
அதற்கு என்ன வழி என்பது ஆளுநருடைய உரையிலே இருக்க
வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையானது அத்தியாவசிய,
அன்றாட தேவை பண்டங்கள் விலை ஏறாமல் ஒன்று கூட
பாக்கி கிடையாது, காய்கறியிலிருந்து கற்பூரம் வரைக்கும்,
உப்பிலிருந்து கற்பூரம் வரைக்கும், ஒரு பொருள் கூட, ஒன்றுக்கு
நான்கு மடங்கு, ஐந்து மடங்கு, பத்து மடங்கு விலை ஏறாத
பொருளே கிடையாது. இங்கே விவாதத்திலே வரும்போது
சில மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன சொன்னார்கள் என்றால்,
'நமது நியாய விலைக் கடைகளில் பொருட்கள் எல்லாம் கிடைக்
கிறது. அதனாலே நல்ல சந்தோஷமாக இருக்கிறார்கள், விலை
குறைந்திருக்கிறது' என்று. அது உண்மையா ?

நியாய விலைக் கடைகளில் அரிசி கிடைக்கும். கோதுமை
கூட எல்லா கடைகளிலேயும் கிடைப்பது இல்லை. ரவை
கிடைக்கிறது. சர்க்கரை கிடைக்கிறது. 2 மாதம், 3 மாதத்
திற்கு ஒரு தடவை பாமாலின் எண்ணெய் கிடைக்கிறது.

கொத்தமல்லி என்ன விலை? பருப்பு என்ன விலை? வெல்
லம், பூண்டு என்ன விலை? உணவுப் பொருட்கள், எண்ணெய்
இவைகளின் விலை என்ன? உயிர் காக்கும் மருந்துகளின் விலை
என்ன? இந்தப் பொருட்கள் எல்லாம் கன்ட்ரோல் விலைக்கே
இன்றைக்கு மக்களுக்கு கிடைக்கும்படியான நல்ல ஒரு சிஸ்டம்
இல்லை. அப்படிப்பட்ட ஒரு சிஸ்டம் வேண்டுமென்று



சென்டிரல் கவர்ன்மெண்ட்டில் பிரதமராக இருக்கக்கூடிய ராஜீவ்
காந்தி அவர்கள் Public Distrilution System shoild be sting hened
என்று தொடர்ந்து சொல்லி வருகிறார். எப்படி stengthend
செய்வது? இவ்வளவையும் பர்ச்சேஸ் செய்து சப்ளை பணணக்
கூடிய ஒரு பூதாகாரமான அமைப்பு இல்லாமல் அது சாத்தியம்
இல்லை. இங்கு அப்படி இல்லை. அதனால் ஜனங்கள் திண்டாடு
கிறார்கள். அந்த நிலையை மாற்றுவதற்குரிய விவரங்கள் இதிலே
செரல்லப்படவில்லை. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நமக்கு
தேவை. தற்போது நம் முன்னால் இருக்கிற நிலைமை, இந்த
விலைவாசியேற்றம். இந்த விலைவாசி ஏற்றம் இன்னும்
தீவிரமாகப் போகிறது. அதையும்கூட இதிலே எடுத்துக்காட்டி
இருக்க வேண்டும். அதுவும் இல்லை. உதாரணமாக, நம்முடைய
மத்திய பட்ஜெட் பற்றாக்குறை மட்டும் 6,056 கோடி ரூபாய்
அவர்களின் கணக்கு பிரகாரம் இப்போது வந்திருக்கிறது. இதி
லே 368 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்கள். பாக்கி இருக்கிற
பணம் பற்றாக்குறை. ஏற்கனவே இருந்ததைவிட இப்போது
தாண்டிப் போய்விட்டது. இனிமேல் 10 ஆயிரம் கோடிக்கு
மேல் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. டெபிசிட்
பைனான்ஸ் பற்றி உங்கள் எல்லோருக்கும் என்னைவிட
அதிகமாகத் தெரியும். எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்த
முடியும்? நீங்கள் இன்றைக்கு கொடுக்கிற சம்பளத்துக்கு
நாளைக்கு மதிப்பு இருக்காது. அரசாங்கக் கணக்கு பிரகாரம்
இரண்டு, மூன்று வருடத்திற்கு முன்னால் 1 ரூபாய்க்கு 0.14
பைசா மதிப்பு. இந்த நிலைமையிலேதான் இந்த மாநில சர்க்
கார் வேலை செய்து கொண்டு வருகிறது. இப்படி இருந்தால்
ஜனங்களுக்கு எப்படி திருப்தி உண்டாக்க முடியும்? போட்ட
திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்பதைப்பற்றி சிந்
திக்க வேண்டும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு,
மிகப் பெரிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது.
இந்த விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு
மத்திய அரசை வற்புறுத்தியதாக வேண்டும். நமது சபையின்
சார்பிலே இதை வற்புறுத்தியாக வேண்டும். அதற்கு தகுந்த
நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசும் மக்களும் உதவ
வேண்டும். நான்கு மாதங்களுக்கு முன்னாலே ரயில்வேயிலே
சரக்கு கட்டணத்தை உயர்த்தியாகி விட்டது. இப்போதைய
பட்ஜெட்டில் 69 கோடி உபரி என்று சொல்கிறார்கள். இந்த
வருடத்திற்கு 960 கோடிக்கு சரக்கு கட்டணம், பார்சல்
கட்டணம் ஏற்கனவே உயர்த்தியாகி விட்டது. இப்போது
69 கோடி மிச்சம் இருக்கிறது. இப்போதாவது திண்டுக்கல்-
தூத்துக்குடி அகல இரயில் பாதைக்கு பணத்தை ஒதுக்குவார்
களா? ஒதுக்க வில்லை. இதுதான் நிலமை.

திரு. டி. ஆர், வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
ரமணி அவர்கள், திண்டுக்கல்-தூத்துக்குடி பாதைக்கு பணம்
ஒதுக்கவில்லை என்று கூறுவது சரியான தகவல் அல்ல. இந்த

பட்ஜெட்டிலே 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்
பதை இந்த அவையின் மூலமாக அவருக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய வேங்கடரமணன் அவர்
கள் சொல்வது உண்மையா? அப்படியானால் நான் சந்தோஷப்
படுவேன்; அது நடைமுறையிலே வரட்டும். அதேமாதிரி
இந்த கடுமையான வறட்சி. இந்த வறட்சி காலத்தில் திட்டங்
கள் நிறைவேற்றி இருப்பதாவும், அரசு நடவடிக்கை எடுத்
திருப்பதாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இரண்டாயிரம்
கோடி ரூபாய் செலவுக்கு பல திட்டங்கள் போடப்பட்டு என்ன
நடந்து இருக்கிறது? அதற்கு ஏற்கெனவே மத்திய சர்க்காரிடம்
அனுமதி கேட்கப் பட்டிருக்கிறது. சத்துணவு, சுகாதார திட்டத்
திற்கு உலக வங்கியிடம் உதவி கேட்டுக் கொண்டிருக்கிறது.
பெருமளவு வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசிடம்
உதவி கேட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குமேலே 800
கோடி செலவிலான பெருநகர் மேம்பாட்டுத் திட்டம். அது
என்ன ஆயிற்று? அதற்கும் நிதி கேட்டுக்கொண்டிருக்கிறது.
400 கோடி செலவிலே ஏரி குளங்களை எல்லாம் நவீனப்
படுத்தக்கூடிய திட்டத்திற்கு நிதி உதவி கேட்டுக் கொண்டிருக்
கிறது. 140 கோடி ரூபாயில் மாநகராட்சி நீர் வழியை மேம்
படுத்தவும் சுற்றுச் சூழல் ஒழுங்குபடுத்துவதற்கும், இப்படி
போட்டுக்கொண்டிருந்தால் அதுவே ஒரு 3,000, 4,000
கோடிக்கு வரும். இவையெல்லாம் எந்தக் காலத்திலே முடியும்?
இப்படிப்பட்ட நிலைகள் ஏற்பட்டு வருவது—நீங்கள் ஆளுநர்
உரையிலே சொல்வது உங்களுடைய கொள்கை, மந்திரி சபை
யிலே தயாரித்துக் கொடுக்கக்கூடிய ஒரு பேச்சுதான். இந்த
அரசு நிச்சயமாக இந்த நெருக்கடியிலே மத்திய சர்க்காரு
டைய ஒட்டுமொத்தமான திட்டத்திற்குள்ளே சிக்கிக்கொண்டு
இந்தக் காரியங்களை செய்ய வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 12–30)

எவ்வளவு கஷ்டங்களுக்கு மக்கள் ஆளாவோம்? கடைசியில் குந்
தகப்படுவது தமிழ்நாட்டில் உள்ள 4½ கோடி மக்கள்தான் என்ப
தைக் கணக்கில் கொண்டு மத்திய சர்க்காரிடம் நமது மாநிலத்
திற்குக் கிடைக்க வேண்டியவற்றை நிர்ப்பந்தப்படுத்தி வாங்குகிற
முயற்சியினைச் செய்ய வேண்டும். அதோடு அதிகமான
நிதி ஒதுக்கீடு கிடைக்கவும் முயற்சிக்க வேண்டும். அதைப்போலவே
தமிழகத்தின் மத்திய திட்டங்கள் பலவற்றைப்பற்றியும் இங்கே
குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கெல்லாம் வேண்டிய பணத்தை
ஒதுக்கீடு செய்யச் சொல்லி அந்தப் பணத்தையெல்லாம் இங்கே
செலவழிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்
டும். அந்த முதலீடுகள் இங்கே செய்யப்பட்டால் அதனால் தமி
ழகம் அபிவிருத்தியடையும். அவைகளெல்லாம் இன்றைக்கு





வெறும் பேச்சளவிலேயே இருக்கின்றன. அவைகளெல்லாம்
இன்னும் முழுமையாகவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை
தொடர்ந்து வருகிறது என்பதால்தான் நான் இதையெல்லாம்
குறிப்பிடுகிறேன்.

அடுத்து நிலச்சுவான்தார்கள் என்று சொல்லப்படுகிற
வெஸ்டட் இன்ட்ரஸ்ட்ஸ் தங்களுடைய சொத்து அந்நியமாக்கப்
படுவதைப் பார்த்தால். அவர்களுடைய கடைசி துளி ரத்தம்
இருக்கும் வரை எதிர்த்துப் போராடத்தான் செய்வார்கள்.
அரசாங்கமும் மக்களும் அதையெல்லாம் எதிர்த்துதான் நின்றாக
வேண்டும். மத்திய சர்க்காருடைய பொருளாதார அமைப்பும்
நடவடிக்கைகளும் அண்டர்ஸ்டேண்டிங்கும் இதுதான், மத்திய
சர்க்காருடைய கொள்கைதான் உங்களுடைய கொள்கை என்று
சொல்கிறீர்கள். உங்களுக்கு வேறு ஒரு கொள்கை இருப்
பதாகச் சொல்லவில்லை, எங்களைப் பொறுத்தவரையில்
எங்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது. அதை நாங்கள்
பகிரங்கமாகச் சொல்கிறோம். அதை நாடு முழுவதும்
அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம், நேஷனல் டெவலப்மெண்ட்
கவுன்சிலிலேயே அதைத் தெரிவித்திருக்கிறோம். எனவே நீங்கள்
அப்படிப்பட்ட மாற்று திட்டங்களையும் கொள்கைகளையும்
வைக்கவில்லை என்றால் மத்திய அரசோடு வெறும் அரசியல்
உறவுக்காக மட்டும் இருந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது
மட்டுமல்லாமல் அவர்கள் கொள்கைகளையேதான் நீங்களும்
செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்—தமிழ்நாட்டில் அதைத்
தான் செய்கிறீர்கள்—என்று சரித்திரம் நிரூபிக்கும். அதைத்
தவிர இப்போது காலணி இன்னும் மற்ற விஷயங்களைப்
பற்றியேல்லாம் பேச நேரமில்லை என்று சொல்லி முடித்துக்
கொள்கிறேன்,

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் உறுப்பினர் தோழர் ரமணி அவர்கள் பேசுகிறபோது
அவர்களுடைய கட்சி ஆட்சி செய்யும் மேற்கு வங்க மாநிலத்தில்
1977 ஆம் ஆண்டில் அவர்கள் பதவிக்கு வந்த போது நில உச்ச
வரம்பு காரணமாக உபரியான 12 லட்சம் ஏக்கர் நிலத்தில்
7 லட்சம் ஏக்கரை அரசு எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக்
கொடுத்ததாக ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னார். எந்த
ஆதாரத்தின் அடிப்படையில் அந்தப் புள்ளி விவரத்தை இங்கே
எடுத்துச் சொன்னார் என்பதை மட்டும் அறிந்து கொள்ள
விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சியின் கையிலேயே
அந்த விவரம் இருக்கிறது. அந்த ரெக்கார்டு, மேற்கு வங்க
அரசாங்கப் பிரசுரமாக மத்திய சர்க்காரின் எம்பளம் போட்டு
அச்சடித்து விநியோகிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுடைய
இன்பர்மேஷன் ஆபீஸ் மௌண்ட் ரோட்டில் இருக்கிறது,
அங்கே போய்கூடக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்

[1987 மார்ச் 4

*திரு. மா. சின்னராசு: மன்றத்தின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, வழி மொழிந்து, என்னுடைய சில கருத்துக்களையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், பெரியவர் திரு. ரமணி அவர்கள் தம்முடைய உரையின் துவக்கத்திலேயே ஆளுநர் உரையில் இவையெல்லாம் சொல்லியிருக்க வேண்டாமா? சொல்லவில்லையே ஏன்? என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் பதில் சொல்வதைவிட இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரையில் மீது உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968 ஆம் ஆண்டில் சொல்லிய கருத்தையே பதிலாக வைக்க விரும்புகிறேன். 1968 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த உடனே ''ஏன் இதைச் சொல்லவில்லை'' என்று கேட்ட எதிர்க் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து ''நான் வெற்றிலைப் பாக்கு கொண்டுவா'' என்றுதான் சொல்வேன். வெற்றிலைப் பாக்கு என்று சொன்னால் சுண்ணாம்பு இல்லை என்று பொருள் அல்ல. வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொள்கிறேன் என்றால் சுண்ணாம்பு தடவாமல் ஒருவர் போட்டுக் கொள்ள மாட்டார் என்பதைப் போல் ஆளுநர் உரை ''வெற்றிலைப் பாக்கு'' என்கிற கொள்கைக் குறிப்பு; அதைச் சொன்ன காரணத்தால் சுண்ணாம்பு தடவாமல் வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொள் கிறோம் என்று பொருள் அல்ல என்பதைப் போல் ஆளுநர் உரையில் அரசாங்கத்தின் எல்லா திட்டங்களையும் குறிப்பிடு வதில்லை'' என்றார்கள். அப்படி ஆளுநர் உரையிலேயே எல்லா வற்றையும் சொல்லி விட்டால் பிறகு பட்ஜெட் உரை என்று ஒன்று தேவையில்லாமலே போய்விடும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த உரையிலே எல்லாமே சொல்லியிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. எல்லா வற்றையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் சொல்லவேண்டிய கொள்கைக் குறிப்புகள் அனைத்தும் இங்கே சொல்லபட்டிருக்கின்றன என்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது இந்த உரையில் ''சிந்தனை வளம இல்லை'' என்று குறிப்பிட்டார்கள். எங்களுக்குச் சிந்தனை வளம் இருக்கிறது. எங்களுக்கு வேண்டிய சிந்தனை வளத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்து விட்டுத்தான் சென்றிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனை வளத்தோடு எங்களால் இயன்றதைச் செய்துதான் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு மூன்றாம் முறையாக வந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் மக்களுக்காகப் பணியாற்றி வருகிறோம். நாங்கள் சிந்தனைப் பற்றாக்குறையின் காரணமாக ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் போய் சிந்தனை இரவல்கேட்டு வாங்கவில்லை.





வாங்க வேண்டிய அவசியமுமில்லை. அந்த அளவிற்குச் சிந்தனை வளம் படைத்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியைத் தொடர்ந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர் கள்....(குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன்: Sir, a p int f cla ific ti n.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாங்கள் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் சொல்லுகிறார். சொந்த மான சிந்தனை இருக்கிறது என்கிறார். ஆகவே இதிலே பிரச்சி னையில்லை. தெளிவாக இருக்கிறது. ஆகவே இதிலே பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷனும் இல்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை. யாரையும் அவர் சொல்லவில்லை. எங்களுக்கே சிந்தனை வளம் இருக்கிறது என்று சொல்லுகிறார். ருஷ்யா வுக்கோ, சீனாவுக்கோ போகவில்லை என்று சொல்லுகிறார்.

திரு. கே. சுப்பராயன்: ருஷயாவைப் பற்றி குறிப்பிட்டதால்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ருஷ்யா கம் யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் சொந்தமில்லை.

திரு. மா. சின்னராசு: துணைத் தலைவர் அவர்களே, திரு சுப்பராயன் வாங்குகிறார் என்று சொல்லவில்லை. நாங்கள் வாங்கவில்லை என்றுதான் சொல்லுகிறேன். எங்களுக்கு வாங்க வேண்டிய அவசியமில்லை.

திரு. கே. சுப்பராயன் எங்களுடைய சிந்தனை உலகளா வியது.

திரு மா. சின்னராசு: தயவு செய்து சொல்லுகிறேன், நீங் கள் வாங்கினீர்கள் என்று சொல்லவில்லை. திரு. சுப்பராயன் அவர்களுக்கு நானே பதில் சொல்லுகிறேன். அவரை கோபத் திற்கு ஆளாக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சிந்தனை வளத்தை நாங்கள் கடன் வாங்கவில்லை. எங்களுக்கு வேண்டிய கொள்கை, சிந்தனை..(குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன்: எங்களைத் தானே சொல்லுகிறார்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்களாக கற் பனை பண்ணிக்கொண்டால் எப்படி?

திரு. கே, சுப்பராயன் கருத்துக்களை மறுத்துச் சொல்லு வதற்குக் கூட சுதந்திரம் வேண்டாமா?

**திரு. மா. சின்னராசு :** நாங்கள் வாங்கவில்லை என்று சொல்
லுகிறேன். நீங்கள் வாங்க வேண்டியது அவசியம் என்று சொல்
வில்லை. நாங்கள் வாங்கவில்லை என்றுதான் சொல்லு
நாங்கள் சிந்தனை வளத்தைக் கடன் வாங்க வேண்டியது அவசியம்
இல்லை என்றுதான் சொல்லுகிறேன். நீங்கள் ஒன்றைப் புரிந்து
கொள்ள வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன் :** நீங்கள் உள்ளூர் பிரச்சினைகளைப்
பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உலகப் பிரச்சினையைப் பற்றி நாங்
கள் சிந்திக்கிறோம். உலகச் சிந்தனை உங்களுக்குக் கிடையாது.

**திரு. மா. சின்னசாசு** எங்கள் சிந்தனையை, எங்களுடைய
கொள்கையை மக்கள் மன்றத்திலே வைத்தபோது, எங்களுடைய
சிந்தனை வளத்தோடு ஒன்றியிருந்தபோது இந்த மன்றத்திலே
13 மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பார்த்தோம். எங்கள்
சிந்தனையோடு ஒன்றி வந்தபோது உங்கள் உறுப்பினர்கள் 10
பேர் இருந்ததைப் பார்த்தோம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சுப்ப
ராயன் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசக்கூடாது. சிந்தனை வறண்டு
போயிருக்கிறது என்று தூண்டிவிட்டார். அப்போது அதை நான்
அனுமதித்தேன். ஒருவர் பேசுகின்றபோது அதற்குரிய பதிலை
அவர் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்போது கருத்துக்களை
மறுத்து கூறலாம். வார்த்தைக்கு வார்த்தை பதில் அளிப்பது
சம்பிரதாயம் இல்லை. இடையிடையே குறுக்கிடக்கூடாது.
முடிந்தால் கட்சியினர் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம்.

**திரு. மா. சின்னராசு :** இந்த ஆட்சிக்கு சிந்தனை உண்டா,
துணிவு உண்டா, உங்களுக்குச் சிந்திக்கிற திறன் இருக்கிறதா
என்று கேட்டபோது, நாங்கள் எழுந்து குறுக்கிடவில்லை. இப்
போது நேரம் வருகிறபோது பதில் சொல்லுகிறேன். இங்கே
என்ன இல்லை என்பதை சுட்டிக்காட்டி நான் சொல்ல விரும்பு
கிறேன். நாங்கள் மக்களோடு ஒன்றுபட்டவர்கள், மக்களுக்காக
சிந்திக்கக் கூடியவர்கள். மக்கள் நலனில் அக்கறை கொண்டதால்
தான் தன்னிறைவுத் திட்டத்தை புரட்சித் தலைவர் கொண்டு
வந்தார். மக்களோடு ஒன்றிவிட்டக் காரணத்தால் தான், மக்க
ளுடைய வறுமையைப் போக்க சத்துணவுத் திட்டத்தை கொண்டு
வந்தார். மக்கள் ''புரட்சித் தலைவர் வாழ்க'' என்று அவரை
வாழ்த்த வருகிறார்கள். தன்னை வாழ்த்த வருகிற தொண்டர்
களின் காலைப் பார்த்த புரட்சித் தலைவர்—சேலத்தில் டாக்டர்
பட்டம் பெற்ற அவருக்கு நடந்த ஒரு பாராட்டுக் கூட்டத்தில்
சொல்லுகிறார்—''புரட்சித் தலைவர் வாழ்க'' என்று வாழ்த்துக்
கூறிக்கொண்டு வருகிற தொண்டனைப் பார்க்கிறபோது அவ
னுடைய உணர்வைப் பார்க்கிறேன். சுடுகிற மணலில் பாதம்
படுகிற வேதனையை எண்ணுகிறேன்'' என்றார். அந்த பாதத்
தின் வேதனை தொண்டனுக்கு மட்டுமல்ல, கட்சித் தொண்ட





னுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள பிஞ்சுக் குழந்தைகளுக்கும்,
ஏழை தாய்மார்களுக்கும் இருக்கக் கூடாது என்ற சிந்தனை வளத்
தின் அடிப்படையிலே கொண்டு வந்த திட்டம்தான் இலவசமாக
காலணி வழங்கும் திட்டம். இந்த சோஷலிச திட்டத்தை
ஏற்றுக்கொள்ள வேண்டாமா ? குழந்தைகளுக்கு சத்துணவு
கொடுத்துவிட்டு, பிறகு சீருடை கொடுத்து, பிறகு புத்தகம்
கொடுத்து பிறகு காலணி கொடுத்து அவர்களை நாட்டுடைமை
யாக்கி இந்த நாட்டின் செல்வங்களை அரசு எடுத்து வளர்க்க
வேண்டுமென்ற தத்துவத்தின் அடிப்படையிலே போடப்பட்டுள்ள
திட்டத்தை வரவேற்க வேண்டாமா? இது சோஷலிச கொள்கை
யல்லவா? ருஷ்யாவில் இருப்பதைப் போல் குழந்தை வளர்க்கும்
முழு பொறுப்பையும் புரட்சித் தலைவர் அரசு ஏற்றுக்கொண்டி
ருக்கிறது என்பதற்காக இந்த அரசைப் பாராட்ட வேண்டாமா
என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே வந்த திட்
டம்தான் இது. முழு அளவில் குழந்தைகளை வளர்க்கும்
பொறுப்பை ஏற்றுக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை
நடைமுறைப்படுத்தி இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களுக்கு
எடுத்துக்காட்டாக உள்ள திட்டம் இந்த திட்டம் என்பதை உணர
வேண்டும். இந்த திட்டத்தைப் பற்றி பேசுகின்றபோது, 'கான்ஸ்
டிட்யூஷனல் ஆப்ளிகேஷன்-ஐ அரசியல் நிர்ணய சட்டத்திலே
உள்ள கடமைகளைப் பற்றி நா' சிறிது எண்ணிப் பார்ப்பது அவ
சியம்.

(பிற்பகல் 12–40)

பல காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பல குறைகளைச் சொன்னார்
கள். நான் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.
மாண்புமிகு புரட்சி தலைவர் அவர்கள் சொல்லும் ஒருங்கிணைந்த
குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்பது, அரசியல் சட்டத்
தினுடைய டைரக்டிவ் பிரின்சிபிளை ஒத்துக்கொண்டால், நாடு
முழுவதும் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டிய திட்டமாகும்
இந்தத் திட்டத்தினால் தமிழகத்திற்கு ஏற்படும் 400 கோடி
ரூபாய் செலவை, திட்டச் செலவாகக் கூட அல்ல, மத்திய அரசின்
முழுப் பொறுப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம்
இருக்கிறது. அரசியல் சட்டத்தில் டைரக்டிவ் பிரின்சிபிளில் சேப்டர்
4-ல் கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய பாரதப் பிரதமர் மறைந்த
அன்னை இந்திராகாந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட திருத்
தத்தின் காரணமாக டைரக்டிவ் பிரின்சிபிளில் அது இருக்கிறது.
நாம் அதை பல ஆண்டுக்காலமாக மறந்துவிட்டிருக்கிறோம். அதில்
சிலவற்றை நிறைவேற்ற 20 அம்சத் திட்டம் பயன்படுகிறதென்று
சொல்லலாம். அரசியல் சட்டம் 39 (f)-ல்

"that children are given opportunities and facilities to develop in a healthy manner and in conditions of freedom and dignity and that childhood and youth are protected against exploitation and against moral and material abandonment.".

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் பிறக்கும் குழந்
தைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது

என்ற அடிப்படைக் கொள்கையின் அடிப்படையில் எழுந்த திட்டங்கள்தான் சத்துணவுத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம் காலணி வழங்கும் திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை முதலிலே புரிந்துகொள்ளவேண்டும்.

Article 38—"State to secure a social order for the promotion of welfare of the people" என்ற கோட்பாட்டினை வலியுறுத்து கிறது. அது மட்டுமல்ல. இன்னொரு மிகப் பெரிய உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். குழந்தைகள் பிறக்கும்போது, வறுமையான குடும்பத்தில் பிறக்கிறார்கள். பெற்றோர்கள் வறுமையில் இருக்கிறார்கள் என்ப தால் அந்தக் குழந்தைகளும் வறுமைக்கு ஆட்பட்டால், நாளை நாட்டைப் பற்றி அவர்கள் சிந்திக்க மாட்டார்கள். அந்தப் பிஞ்சு உள்ளத்திலே நாட்டுப் பற்றை எதிர்பார்க்க முடியாது. நாட்டுப் பற்றை அந்த இளம் உள்ளத்திலே வளர்க்க வேண்டுமென்றால், அந்தப் பிஞ்சு உள்ளம் வறுமையில் வருந்தும் நிலை ஏற்படக் கூடாது. குழந்தைப் பருவத்தில், பள்ளிப் பருவத்தில் நாடு நமக்கு உணவு கொடுத்திருக்கிறது. சீருடை கொடுத்திருக்கிறது, எனவே, இந்த நாட்டுக்காக உழைக்க வேண்டும், இந்த நாட்டுக்காக நம் முடைய கடமையைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு அந்தப் பிஞ்சு உள்ளம் சொல்லிக் கொள்ள வாய்ப்பளிக்கும் இந்தத் திட்டம் ஒரு உன்னதமான திட்டம், ஏற்றுக் கொள்ளப்பட வேண் டிய திட்டம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நல்ல எண்ணம் இங்கேயுள்ள குழந்தைகளுக்கு மட்டுமல்ல; பீகார், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், கேரளா போன்ற மாநி லங்களில் உள்ள குழந்தைகளுக்கும் ஏற்பட வேண்டுமென்றால் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் இந்தப் புனிதமான திட்டத்தைப் பற்றி, நல்ல திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அரசின் மிக முக்கிய குறிக் கோளான நாட்டு ஒருமைப்பாட்டை எதிர்காலத்தில் ஏற்படுத்த பொருத்தமான திட்டமென்று மனதிலே வைத்து, இந்தத் திட் டத்திற்கு உதவியை நல்குங்கள், இந்தத் திட்டத்திற்கு உங்கள் பங்கை நல்குங்கள், என்று நாட்டு நலனில் அக்கறை கொண் டுள்ள நாங்கள் கேட்கிறோம்.

அடுத்து, வெல்பேர் ஸ்டேட் என்ற அடிப்படையிலே நம்முடைய சமுதாய நலத்திற்கு, நாட்டு மக்களுடைய நலத்திற்கு பல்வேறு திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றுகிறது. நாமும் நிறை வேற்றுகிறோம். மாநிலத்திற்கு இருக்கிற நிதி வாயில்களுக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களைத் தந்திருக் கிறார்கள். எத்தனையோ இடர்பாடுகள், இயற்கைச் சீற்றங் களுக்கு மத்தியில், நமக்கு நிலக்கரி இரும்பு ஆகியவை அருகில் கிடைக்காத நிலையில், 1250 கோடி ரூபாய் திட்ட குறியீட்டுக்கு மேல் 200 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்து திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். இந்த ஆண்டு 1500 கோடி ரூபாய்



குறியீடாகக் கொண்டு திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டி ருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டு, நம்மு டைய அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றும் திட்டங்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவில்லை என்றாலும்கூட, குறை சொல்லும் போது ஆதாரமில்லாத குறைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மின்சாரத்திற்கு நம்முடைய திட்டங்களிலே முதலிடம் வழங்கியிருக்கிறோம். நாட்டில் தொழில் வளத்தை மேம்படுத்த இதை விட சிறப்பான திட்டங்களை மாநில அரசு வகுக்க முடியாது. தொழில் இல்லை என்று சொல்லுகிறார் கள். 3 ஆம் இடத்திலிருந்து 13 ஆம் இடத்திற்கு வந்துவிட்டது தமிழகம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது கூட கேட்டார்கள். 3-லிருந்து 13 ஆம் இடத்திற்கு தமிழகம் வந்து விட்டது என்றால் 13 ஆம் இடத்திலிருந்து 3 ஆம் இடத்திற்கு வந்த மாநிலம் எது என்று கேட்டார்கள். நம்மை மிஞ்சிய மாநிலங்கள் இந்தியா விலே எவை இருக்கின்றன என்று யாரும் சொல்லவில்லை. நம்மை மிஞ்சிவிட்ட மாநிலம் பற்றிக் குறிப்பிடாமல், தமிழகம் 3 ஆம் இடத்திலிருந்து 13 ஆம் இடத்திற்கு வந்து விட்டது என்றால், அதை எங்கேயிருந்து கண்டுபிடித்தார்கள் என்று தெரிய வில்லை. அது முதலிடத்தில் தான் இருக்கிறது. டி.ஐ.ஐ.சி. மூலமும், நிதி நிறுவனங்களின் மூலமும், வங்கிகள் மூலமும் தமிழகத்தில் தான் அதிகமாகத் தொழில் மூலதனம் செய்யப் பட்டிருக்கிறது. செய்யப்பட்ட முதலீட்டின் விளைவாக நாம் தொழில்களைப் பொறுத்த வரையில் என்றும் போல் முன்னணி யில் தான் இருக்கிறோம். இன்னும் இயற்கை ஒத்துழைத்தால், மத்திய அரசு தரமான நிலக்கரியை கொடுத்தால், வெளிநாடு களிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி கொடுத் தால்—இன்னும் மின்சார உற்பத்தி அதிக அளவில் ஆவதோடு தொழில் வளர்ச்சியும் பெருகும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கருத்தையும் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக் கிறார்கள். நிர்வாகத்தை செம்மைபடுத்தும் முயற்சியை மாநில அரசு, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப, நிர்வாகத்தை வேகப்படுத்த சிறிய மாவட்டங்களாக பிரிக்கப்பட வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறோம். குறிப்பாக இராமநாதபுரம், திருநெல்வேலி, வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், திராவிட முன் னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் கோரிக்கை இருந்தது.

[திரு. மா. சின்னராசு] [1987 மார்ச்

ஆனால் அந்தக் காலங்களில் செய்யத் தவறியதை எல்லாம் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் பல்வேறு திட்டங்களுக்கு ஏராளமாக தொகை செலவிட்டுக் கொண்டிருக்கும் காலக் கட்டத்தில் அதற்கு மேலாக மாவட்ட பிரிவினைக்காகவும் செலவு செய்து இத் திட்டத்தையும் நடை முறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அந்த வகையில் வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட இருக்கிறது.

அடுத்து, இன்றைய தினம் வளர்ந்து வருகிற தொழில் நுட்ப வளர்ச்சியை பயன்படுத்த ''டேட்டா சென்டர்கள்'' ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது எவ்வளவு முக்கியமான திட்டம், முன் மாதிரியான திட்டம், வேறு எங்கும் இல்லாத நல்ல திட்டம். இதைப் பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டவேயில்லை. இந்த டேட்டா சென்டர் தலைமையிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோப்பு வருகிறபோது, ஒரு திட்டம் நிறைவேற்றப்படுகிறபோது, உள்ளபடியே அதில் காலதாமதம் ஏற்படுமேயானால் எந்தத் தரப்பினராக இருந்தாலும் நாமெல்லாம் வருந்துகிறோம். கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக ''கம்ப்யூட்டர் சென்டர், மானிட்டரி சிஸ்டம்'' முதன் முதலாக சென்னையில் இருக்கிற தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது வரவேற்க கூடாத ஒன்றா?

கால தாமதம் பற்றி இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கோவை மாவட்டத்தில் கரடிமடை, சீளியூர் ஆகிய இரண்டு இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக துறைக்கு தெரிவித்த போது 2 மாதங்களுக்குப் பிறகு ஒரு பதில் தந்தார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான நிலத்தையும், பொது மக்களிடமிருந்து 10 ஆயிரம் ரூபாயை நன்கொடையாக பெற்று அதையும் செலுத்துகிற போது திட்டத்தை எடுத்துக்கொள்வோம் என்று செயலகத்தின் மூலமாக, 2 மாதங்களுக்கு பிறகு பதில் வந்தது. ஆனால் அதற்குத் தேவையான பணமும், நிலமும் கோவை மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட சுகாதார அதிகாரி மூலமாக 28-8-1984-லேயே அனுப்பப்பட்டுள்ளது. அதைக் கண்டுகொள்ளாமல் மேற்கண்ட இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான நிலத்தையும், பணத்தையும் ஒப்படைத்த பிறகு அதற்கான முயற்சியை எடுப்போம் என்று தவறான பதில் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து வருவதற்கு காரணமே இது போன்ற ஒரு கம்ப்யூட்டர் சென்டர், கம்ப்யூட்டர் மானிட்டரி முறை இல்லாததுதான் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட கால தாமதங்கள்



1987 மார்ச் 4] [திரு. மா. சின்னராசு]

தவிர்க்கப்பட வேண்டும். ஏற்கனவே சட்டமன்ற உறுப்பின
ருக்கே பதில் இப்படி என்றால், திட்டங்களை எப்படிநிறைவேற்ற
முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது கேட்கிறபோது
நம்முடைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஏதோ அவர்களை விட
மிஞ்சிய அதிகாரிகள் இல்லையென்ற எண்ணத்தில் செயல்படுகிற
போக்கு இன்றைக்கு நாட்டிலே பல இடங்களில் இருக்கிறது.
இப்படிப்பட்ட நிலையை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும்.

அடுத்து, என்னுடைய அனுபவத்தின் வாயிலாக இன்னும்
ஒன்றை சொல்கிறேன். மேட்டுப்பாளையம் குடிநீர் திட்டத்திற்கு
நிதி ஒதுக்கீடு கேட்டபோது, 1982-லே, $7\frac{1}{3}$ இலட்சம் ரூபாய்
கேட்கப்பட்டது. ஆனால் அதற்கு அண்மையில் நிதி ஒதுக்கம்
செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தத் திட்டத்தை
நிறைவேற்ற வேண்டுமென்றால் 15 இலட்சம் ரூபாய் தேவை.
ஆக, காலா காலத்தில் நிதி ஒதுக்காததால் இன்றைக்கு அந்தப்
பணத்தைக் கொண்டு திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை
ஏற்பட்டிருக்கிறது. நமது முதல்வர் புரட்சித் தலைவர் விரும்பு
வதைப் போல இன்னும் வேகமாக வேலைகள் நடைபெறும்
வகையில் அரசின் நடைமுறை இருக்க வேண்டுமென்று தெரி
வித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் நூற்பாலைகள் பற்றியும் சொல்லி
இருக்கிறார்கள். பவானி மில், ஸ்ரீஹரி மில், ஜோதி மில் இவை
களை எல்லாம் திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்
கொண்டிருக்கிறார்கள். அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த
தொழிலாளர்கள் எல்லாம் வாழ்வு பெற்றுள்ளார்கள். அது
போல் வசந்தா மில், ஜனார்த்தனா மில், ராதாகிருஷ்ணா மில்
போன்ற மில்களை எல்லாம் திறக்க வேண்டுமென்ற கோரிக்
கையை ஏற்றுக் கொண்டு, மத்திய அமைச்சர் அவர்கள் அண்மை
யில் பாராளுமன்றத்தில் சொல்லியுள்ள கருத்துக்கேற்ப இந்த
நூற்பாலைகளை எல்லாம் அரசுடைமையாக்கி தொழிலாளர்
களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். மில்கள் மூடப்பட்ட
தால் பல தொழிலாளர்கள் தற்கொலை கூட செய்துக் கொண்
டுள்ளார்கள். பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல
குடும்பங்கள் வாழ்விழந்து நடுத் தெருவிலே நிற்கிற நிலை இருப்ப
தால் இந்த நூற்பாலைகளை திறப்பதற்கு அரசு தொடர்ந்து
மேற்கொண்டு வருகிற முயற்சியை இன்னும் விரைவுபடுத்த
வேண்டும்.

[பிற்பகல் 12-50].

அடுத்து, நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தி
லுள்ள ஆசிரியர்கள் நியாயமான முறையில் பல காலம் தெரி
வித்து இருக்கின்ற அடிப்படைத் தேவையான கோரிக்கைகளைப்
பற்றி வேளாண்மைய துறை அமைச்சர் அவர்களும், நிதித்துறை

அமைச்சரவர்களும் இணைந்து பேசி விரைவில் ஒரு முடிவெடுத்
துத் தர வேண்டும். 11 ஆம் தேதி முழு வேலை நிறுத்தம்
நடத்த வேண்டுமென்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.
அவர்கள் கோரிக்கை நியாயமாக இருப்பதாக நான் உணர்கிறேன்
ஆகவே, அவற்றை உடனே பரிசீலனை செய்து நிவாரணம் வழங்கி
அவர்களுடைய போராட்டத்தைத் தவிர்க்க உதவ வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்
புகிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ரகுமான்கான் பேசு
கின்றபொழுது, வேண்டுமென்றே பொய் வழக்குகளை நம்முடைய
அரசாங்கம் போடுவதாகவும், ஆகவே திராவிட முன்னேற்றக்
கழகத் தோழர்கள் சித்திரவதை செய்யப்படுவதாகவும் ஒரு
புகாரை ஆதாரம் இல்லாமல் சொன்னார்கள். நான் அவர்
களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைக்கு
மதுரையில் தபாலாபீசில் இறந்து போன தோழர் மணிமாறன்
பற்றி போலீஸ்காரருக்குத் தெரியாது, இறந்த பிறகுதான்
அவர் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர் என்று தெரியும்.
அதைப் போல கோவையிலே தண்டவாளத்தைத் தகர்க்க முயற்சி
செய்தவர் பெயர் வந்த பின்னால்தான் அவர் திராவிட முன்
னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணியிலே இருக்கிறார்
என்பது தெரியும் அதைப் போலத்தான் திருச்சியில் துரை
பாண்டியன், இரயில்வே ஊழியர் ஒருவருடைய மகன், எம்,
சேகர் என்பவர் திரு முத்துச்சாமி என்னும் திராவிட முன்னேற்றக்
கழகப் பிரமுகருடைய மகன் நவாப்ஜான் என்று சொல்லப்
படக் கூடியவர் திராவிட முன்னேற்றக் கழகம்.
நான் சொல்ல வந்தது, இவர்களையெல்லாம், திட்டம் போட்டு
திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களைக் கைது செய்ய
வேண்டும் என்பதற்காக அல்ல. இவர்களையெல்லாம் கைது
செய்வதுதான்......................

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** வழக்கு கோர்ட்டிலே
இருக்கின்றபொழுது அதைப் பற்றி எப்படிப் பேசலாம் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கைது செய்யப்
பட்டிருக்கிறார்கள் என்று தான் சொல்கிறார்.

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** கோர்ட்டிலே வழக்கு
இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கோர்ட்
டிலே வழக்கு இருக்கிறது என்று சொல்கிறீர்கள். பொய்
வழக்கு என்று நேற்று சொன்னீர்கள். அது பேப்பர்களிலும்
போடப்பட்டிருக்கிறது. பொய் வழக்கு போட்டிருக்கிறது என்று
சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது என்றால்,





அவர்கள் பேசுகின்றபொழுது வழக்கு போட்டிருக்கிறது என்று
சொல்லக்கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒரு
வழக்கை பொய் வழக்கு என்று சொல்கிறீர்கள். ஆனால்
வழக்கு போட்டிருக்கிறது. இன்னார் கைது செய்யப்பட்டிருக்
கிறார்கள் என்று இவர் சொல்கிறார்.

**திரு. மா. சின்னராசு :** எல்லா வழக்குகளிலேயும் இருப்பவர்
கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான்
என்று சொல்லவில்லை. பெரும்பாலும் அவர்களே சம்பந்தப்
பட்டுள்ளனர். இங்கே இராஜேந்திரனைக் கைது செய்கிற
பொழுது மோசமான போலீஸ். ரஜினிகாந்த்தைக் கைது
செய்தால் நல்ல போலீசா? இது என்ன வாதம் ? யாரைக் கைது
செய்தாலும், போலீஸ்காரர்கள், இருக்கின்ற வழக்கிலே நியாயத்
தைத்தான் செய்கிறார்கள். பொய் வழக்கு போட வேண்டிய
அவசியமில்லை. நான் சொல்ல வந்ததெல்லாம், பொய்
வழக்கு போட வேண்டுமென்றால், இந்தத் துரை
பாண்டியன், இந்த சேகர், இந்த நவாப்ஜான் இப்படி இவர்கள்
மேலேதான் அரசாங்கம் பொய் வழக்கு போடுமா ? இவர்கள்
தான் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களா ? இவர்களைக்
கைது செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு என்ன இலாபம்
கிடைத்துவிடும்? அல்லது திராவிட முன்னேற்றக் கழகம்
அழிந்து போய் விடும் என்றா நினைக்கிறோம். ஆகவே,
இவர்களெல்லாம் யார் என்பது, கைது செய்யப்பட்டு, திராவிட
முன்னேற்றக் கழகம், என்று சொன்ன பிறகுதான் அவர்கள்
திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பது உங்களுக்கும்
தெரியும், எங்களுக்கும் தெரியும். ஆகவே, இதிலே திராவிட
முன்னேற்றக் கழகம் ஈடுபட்டிருக்கிறது என்பதை மக்கள்
மனத்திலேயிருந்து மறைக்க வேண்டும், மக்கள் மத்தியிலே
யிருந்து மறைக்க வேண்டும் என்பதற்காகப் பொய் வழக்கு
என்று சொல்கிறார்களே தவிர, பொய்யல்ல. உங்கள் தலைவர்
தமிழகம் பஞ்சாப் ஆகும் என்று சொன்னார். பஸ் எரிக்கப்
பட்டது. உங்கள் தலைவர் தீ பரவட்டும் என்று சொன்னார்.
குண்டு வெடிக்கிறது. ஆகவே, இதையெல்லாம் நாங்கள் சொல்
வதற்கு காரணம், பொய் வழக்குகள் போடுகிறார்கள் என்று
சொல்வதில் நியாயம் இல்லை. உங்கள் உணர்வுகளைப்
பிரதிபலிக்கின்ற மாதிரிதான் வன்முறைகள் நடந்திருக்கின்றன.
அதை நீங்கள் தவிர்க்க வேண்டுமேயொழிய, எதையோ
எதிர்க்கிறோம் என்று சொல்லி மக்கள் மத்தியிலே ஒரு குழப்
பத்தை, இதுபோன்ற வன்முறை சம்பவத்தை ஏற்படுத்தி, அமைதி
யாக இருக்கின்ற தமிழகத்தை, நல்ல பொருளாதார வளத்தைக்
காண வேண்டிய தமிழகத்தை நீங்கள் ஒரு தீய வழிக்கு ஆட்படுத்தக்
கூடாது என்பதை மட்டும் சொல்லி அமர்கிறேன். நன்றி,
வணக்கம்.

[1987 மார்ச் 4

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** Point of order மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசுகின்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கநழகத்தவர்கள் இந்த வழக்குகளி லேயெல்லாம் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித் தார்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றபொழுது, அது பற்றிய விவரங்களை இந்த மன்றத்திலே பேசக்கூடாது என்று பலமுறை....

**மாண்புமிகு: பேரவைத் துணைத் தலைவர் :** வழக்கு போட்டிருக்கிறார்கள். என்றுதான் சொல்கிறார். நேற்று நீங்கள் அதன் மெரிட்டை பற்றி பேசினீர்கள். அதை நீக்க வேண்டுமென்று சொல்லியபிறகு கூட, பத்திரிகைகளிலே வந் திருக்கிறது நீங்கள் பேசியதெல்லாம். இந்தச் சபையிலே எக்ஸ்பஞ்ச் செய்தது வருகிறது. நியாயத்தை நான் சொல்ல வேண்டுமல்லவா ? பொய் வழக்கு என்று நீங்கள் சொல்வதை அனுமதிக்க வேண்டும் ; ஆனால் வழக்கு போடப்பட்டிருக்கிறது. என்று இவர் சொல்வதை அனுமதிக்கக்கூடாது என்றால் இதில் நியாயம் எங்கே இருக்கிறது என்று சொல்லுங்கள்.

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * *

**திரு.. மா. சின்னராசு :** துணைத் தலைவரவர்களே, காவல் துறை அதுபற்றி புலனாய்வு செய்து, பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட் டிருக்கிறார்கள் என்று தெரிவித்த காரணத்தால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அறிவிப்பைச் செய்தார்கள். அறிவிப்பு செய்த பின்னால் கைது அல்ல.

**திரு. மா. கதிர்வேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக் கின்ற வகையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துககளைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய திருநாட்டின் எழுச்சிமிக்கத் தலைவர், பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் ஏழை எளிய மக்களுடைய அடிததளத்துப் பிரச்சினைகளை எண்ணிப்பார்த்து (குறுக்கீடுகள்) தண்ணீருக்கும் வீட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்து, இருபது அம்சத் திட்டத்தில் அவற்றை எடுத்துக்கொண்டு, பத்தாயிரம் கோடி ரூபாயை இருபது அம்சத் திட்டத்திற்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மார்ச் 4]

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** வெடிகுண்டு வைத்தார்கள் என்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெடிகுண்டு வைத்தார்கள் என்று அவருக்கு எப்படித் தெரியும் ? நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும். ஆகவே அந்தப் பகுதியை அவைக் குறிப்பி லிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கைது செய்த தாகத்தான் சொல்கிறார்கள். வெடிகுண்டு வழக்கில் கைது செய்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாதா ? அதை நீக்க வேண்டியதில்லை (குறுக்கீடுகள்).

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** நீதிமன்றத்திற்குப் போன பின்னால் நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும். அதுபற்றி இங்கே பேசக் கூடாது. நேற்று முன்தினம் எங்கள் தரப்பிலே சொல்லப்பட்டபோது நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால் நீக்கப்படுகிறது என்று சொல்லி அவைக்குறிப்பிலிருந்து நீக்கி யிருக்கிறீர்கள். இன்றைக்கு அந்தத் தரப்பிலிருந்து சொல்லும் போது நீக்க வேண்டியதில்லை என்று சொல்கிறீர்கள் ** நாங்கள் வெளிநடப்பு செய்ய வேண்டி வரும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது ** ஆகவே இந்தத் தவறான தகவல் பத்திரிகையில் வரக்கூடாது, அவைக் குறிப்பிலும் இடம்பெறக் கூடாது. அதை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (குறுக் கீடுகள்) வழக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. பதிவான வழக்கைப்பற்றித் தான் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) திரு. கதிர்வேலு அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. மா. கதிர்வேலு:** அந்த வகையிலே இந்தியா முழு வதற்கும், பத்தாயிரம் கோடி ரூபாயை இருபது அம்சத் திட்டத் திற்கு ஒதுக்கி, அதிலே 720 கோடி ரூபாயை தமிழ்நாட்டில் இருபது அம்சத் திட்டத்திற்கு ஒதுக்கித் தந்து, கிராமப்புற மக்களின் அடித்தளத்துப் பிரச்சினையை உணர்ந்து ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பெரியவர் ரமணி அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏழை எளிய மக்களின், அடித்தளத்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற மிகப் பெரும் சோஷலிஸ சித்தாந்தமாக மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மா. கதிர்வேலு] [1987 மார்ச் 4

இராஜீவ் காந்தி அவர்கள் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு என்று 720 கோடி ரூபாயைத் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை பெரியவர் ரமணி அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த வரையில், இன்றைய தினம் 30,000 கள் இறக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்கு 2,000 ரூபாய் வீதம் வழங்கப்படுவதும், காலணி வழங்கும் திட்டமும் வரவேற்கத் தக்கவை. அதே நேரத்தில் சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் முப்பது இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்தார்களே, அந்த அறிவிப்பு என்ன வாயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

அதற்குக் காரணம், முப்பது இலட்சம் வீடுகள் என்கிறபோது வீடு ஒன்றுக்கு 10,000 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் மூவாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும். அதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் எந்த வகையில் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இதைத்தான் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை இது எந்த வகையில் சாத்தியமாகும் என்று கடந்த ஆண்டே கேட்டிருந்தது.

இன்னும் சொல்லப் போனால் சொஸைட்டி என்று சொல்கிறீர்கள். கூட்டுறவுச் சங்கங்கள் செங்கல், ஓடுகள், நீர்த்த சுண்ணாம்பு போன்ற கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்யும் என்று அறிவித்திருக்கிறீர்கள். முப்பது இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று சொல்லப்பட்டு, மூன்றாண்டுகளில் ஓராண்டு போய்விட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் முப்பது இலட்சம் வீடுகள் மக்களுக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அருள் கூர்ந்து ஏழை எளிய மக்களுக்கு, சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, மலை வாழ் மக்களுக்கு இரண்டு ஆண்டுகளில் முப்பது இலட்சம் வீடுகள் வழங்குகின்ற திட்டத்திற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1—00)

மேலும் இன்றைய தினம் மதுவிலக்கைப் பொறுத்த வரையில் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் மதுவிலக்கை அகற்றிய போது அரசாங்கத்தினர் கிஸ்தி பெற்றார்கள். ஆனால் இன்றையதினம் காவல் துறையினர் அந்த கிஸ்தியைப் பெற்று கொண்டு, வீதிக்கு வீதி, கிராமத்திற்குக் கிராமம் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அரசாங்கப் பாட்டில்கள் இருப்பதைக்கூட ஏன் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதை நான் மிகுந்த பணிவோடு சொல்ல விரும்புகிறேன்.



1987 மார்ச் 4]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும், ஒட்டு மொத்தமாகச் சொல்ல வேண்டாம். அப்படி ஒட்டு மொத்தமாகச் சொன்னால் அதே நடைமுறையை அனைவரும் கையாள வேண்டி வரும். எனவே அந்தப் பகுதி நீக்கப்படுகிறது.

**திரு. மா. கதிர்வேலு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுவதை முன் வைத்துத்தான் நான் சொன்னேனே தவிர ஆட்சியின் மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. எனவே, நல்ல முறையில் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இம்மாதிரி ஒட்டுமொத்தமாக சொல்லிக் கொண்டு போவது சரியல்ல. அவ்வாறு பேசுவது எல்லோருக்கும்தான் ஆபத்து. எனவே அவ்வாறு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) ஒட்டு மொத்தமாக கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று சொல்வது முறையல்ல.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இறுதியில் நான் பேசுகிறேன். கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுவது என்பது தொன்றுதொட்டு இருந்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எவ்வளவு பேர் பிடிக்கப்பட்டார்கள் என்பது தெரியும். என்ன பண்ணினார்கள் என்பது தெரியும். எனவே கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிறது என்று சொன்னால் அது எவ்வளவு அடி ஆழம், எவ்வளவு அடி அகலம், எங்கே ஓடுகிறது? அதை எக்ஸாஜரேட் பண்ணினால் யாருக்குக் கேடு? காய்ச்சப்படுகிறது என்று சொல்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. பிடித்துக் கொண்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரிகிறது என்றால் ஏன் காட்டவில்லை ? அதை விட்டுவிட்டு ஆறாக ஓடுகிறது, குளமாக ஓடுகிறது, ஏரியாக இருக்கிறது, கடலாக இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? அந்த மாதிரி எக்ஸாஜரேட் பண்ண வேண்டியதில்லை. இருக்கிற குற்றத்தைச் சொல்லுங்கள். நீங்களும், நானும் சேர்ந்து உரியனவற்றைச் செய்ய வேண்டும். வெளியே இருந்து வருகிற சரக்காக இருந்தாலும் அதை நிறுத்தி விடலாம். அப்படி வராது. ஆகவே இருக்கிற நிலைமையை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் ஆறாக ஓடுகிறது, கடலாக ஓடுகிறது என்றால் உங்கள் தொகுதியில் ஓடுகிறதா? ஓடுகிறது என்றால் எங்கே ஓடுகிறது? எவ்வளவு அடிஆழம், எவ்வளவு அடி அகலம்? ஓடுகிற அளவுக்கா எல்லோரையும் விட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? எங்கே தவறுகள் நடக்கின்றன என்று சொல்லுங்கள். இதிலே பொது மக்களுடைய

ஒத்துழைப்பும் வேண்டும். அப்போதுதான் உரிய நடவடிக்கை
எடுக்க உதவியாக இருக்கும். பிடிக்கிறவர்களைக் கூட சுட்டுத்
தள்ளுகிறார்கள். ஐந்தாறு நாட்களுக்கு முன்பு ஒரு தாசில்
தாரையே சுட்டு விட்டார்கள். அவரிடத்திலே இருந்த பணத்தை
யும் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டார்கள்.

இந்தக் கொள்கையை நிறைவேற்ற வேண்டுமா, வேண்டாமா
என்பதைச் சொல்லுங்கள். இந்தக் கொள்கை தேவையில்லை
என்றால் அதற்கான கருத்துக்களைச் சொல்லுங்கள். அதை
விடுத்து எக்ஸாஜரேட் பண்ணினால் உங்களுக்கும் நல்லதல்ல,
ஆட்சிக்கும் நல்லதல்ல. ஆகவே ஓடுது, ஓடுது,
ஆறாக ஓடுது, கடலாக ஓடுது என்று புராணம் மாதிரி போய்க்
கொண்டிருந்தால் நான் பெரிய, பெரிய புராணங்களை எல்லாம்
கொண்டு வந்து விடுவேன். கீழ் ஏழு உலகம், மேல் ஏழு உலகம்,
பெரும், பெரும் கடல்கள், சுறா மீன்கள் எல்லாம் வந்துவிடும்
(சிரிப்பு).

**திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருப்பதைத்
தான் நான்சொன்னேனே தவிர, ஒரு நல்லெண்ணத்தோடு அதைக்
கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னேனே தவிர வேறல்ல.
இதிலே உங்களுக்குத் துணையாக இருப்பதற்குத் தயாராக இருப்
பேன் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து படித்தவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் வேண்டு
மென்றால், அதிகமான தொழிற்சாலைகளைத் தொடங்கினால்
தான் முடியும். இன்றைய தினம் குஜராத்தில், மகாராஷ்டிரத்
தில் உள்ள நிலைமைகளை எடுத்துக் கொண்டால், அங்கே உற்
பத்தியாகிற பொருட்களுக்கு ஒரு சதவீதம்தான் சேல்ஸ்
டாக்ஸ் விதிக்கிறார்கள். அந்தப் பகுதியில் எல்லாம் குடிசைத்
தொழில்கள்போல் தினம் ஒரு தொழிற்சாலை என்ற அளவுக்கு
தொழிற்சாலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இங்கே
நாம் வெளி நாட்டவர்களைத் தொழில் தொடங்க அழைக்
கிறோம்; வேறு மாநிலத்தவர்களைத் தொழில் தொடங்க
அழைக்கிறோம்; என்றெல்லாம் சொன்னாலும் கூட பெரிய
அளவில் தொழில்கள் வரவில்லை. பெரிய அளவில் தொழிற்
சாலைகள் வருவதற்கான வகையில் அவர்களுக்கு உதவ வேண்
டும். அவ்வாறு உதவுகின்ற திட்டங்களை அறிவிக்க வேண்டும்
என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
இன்றைய தினம் இந்தியா முழுமையும் மொபட்-க்கு அதிகமான
வரவேற்பு இருக்கின்றது. ஆனால், தமிழ்நாடு மொபட் நிறு
வனம், ஏன் நஷ்டத்திலே நடக்கிறது என்று அறிய விரும்பு
கிறேன்.





இன்னொன்று. தமிழ்நாடு கெமிக்கல்ஸ் நிறுவனம். அது
இன்றையதினம் இலாபத்திலே நடக்கும்போது ஏன் தனியாருக்கு
விற்கப்படுகின்றது என்பது எனக்குப் புரியவில்லை. இன்னும்
சொல்லப்போனால், கங்கப்பா பேப்பர் மில்ஸ். 1986 ஜூன்
மாதத்திலே மூடப்பட்டது. இன்று வரையிலும் திறக்கப்படாத
சூழ்நிலை இருக்கின்றது. அகஸ்தியா பேப்பர் தொழிற்சாலை
போன்ற ஏழு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.
அவைகளைத் திறக்க வழிவகைகளை அரசு மேற்கொள்ள வேண்
டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்றையதினம் வடஆற்காடு மாவட்டம் மிகக் கடுமையான
வறட்சிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஒரு
பக்கம் தோல் கழிவு நீர் காரணமாக நீர் வறட்சியும், இன்
னொரு பக்கம் மழை இன்மை காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி
யும் காரணமாகும். தோல் தொழிற்சாலைகள் பொறுத்த வரை
யில், ஆண்டுக்கு ஆண்டு நாம் சட்டமன்றத்திலே கூட பேசுவோம்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட எங்களுடைய மாவட்டத்
தினைச் சேர்ந்தவர் அவர்கள்கூட என்னுடைய தொகுதியிலே
வந்து பேசும்போது தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளி
யாகும் கழிவு நீர் கட்டுப்படுத்தப்படவில்லை என்று சொன்னால்,
அவர்களை கைது செய்யப்படுகின்ற சூழ்நிலை வரும் என்று
சொன்னார்கள்.

நான் மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்வது, வட ஆற்
காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் கழிவு நீரைக்
கட்டுப்படுத்தவில்லை என்று சொன்னால், கூட்டுக் குடிநீர் திட்
டம் என்று போடுகின்ற அத்தனை திட்டங்களும், ஏறத்தாழ
காணாத திட்டங்களாகி எல்லாம் இனி உபயோகமற்றதாகி
விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பத்
திரிகையாளர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒத்துக்கொண்
டிருக்கின்றார்கள். காலத்தைக் கடத்துவது என்பது அது நீரோட்
டத்தோடு இணைந்து அந்தப்பகுதி நீரை விஷத்தன்மையாக்கி
விடும். அந்த மாவட்டத்திலுள்ள மக்களை அது பாதிக்கும்.
ஆகவே, நிரந்தரமான முறையில் மக்களை வாழவைக்க அதற்
குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த
நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தோல் கழிவு நீரை
கட்டுப்படுத்துவதற்கு தோல் தொழிற்சாலை உரிமையாளர்கள்
சொசைட்டி என்ற பெயரில் அரசாங்கத்தை ஏமாற்றி
வருகின்றார்கள். அரசாங்கத்தை எப்படி ஏமாற்றுகிறார்கள்
என்று சொன்னால், இன்றையதினம் ரூ. 5 கோடிக்கு மத்திய
அரசின் ரெவின்யூ வருகிறது என்று சொல்கிறார்கள். இவ்வளவு
ரெவின்யூ வருகின்றபோது, அவர்கள் மீது வேறு ஏதாவது வரி
யைப் போட்டு அரசாங்கம் தோல் கழிவுநீரைக் கட்டுப்படுத்து
வதற்கான ஒரு திட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தக்கூடாது
என்பதுதான் எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற சட்டமன்ற
உறுப்பினர்கள் குறிக்கோளாக இருக்கின்றது. வட ஆற்காடு

மாவட்டத்திலே பாலாற்று நீரை நம்பிக்கொண்டிருக்கின்றனர்.
அப்படிப்பட்ட மாவட்டமாக இருக்கின்றது. அந்த பாலாற்றிலே
1986—87 ஆம் ஆண்டு ஒரு துளி தண்ணீர் கூட வரவில்லை.
அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கூட்டத்
திலேசர்வே மூலமாக, அவர் சொன்னார்கள். ஒரு ஏரியிலே
கூட வட ஆற்காடு மாவட்டத்திலே தண்ணீர் இல்லை என்றார்
கள். மிகப் பெரிய வறட்சி நிலை எங்களுடைய மாவட்டத்திலே
இருக்கிறது. கிணறுகளை நம்பி விவசாயம் செய்கின்ற பகுதி
யாக எங்களுடைய பகுதி இருக்கிறது. அங்கு கிணற்றில் 1 அடி,
2 அடி தண்ணீர்தான் இருக்கின்றது. நூற்றுக்கு ஐம்பது கிணறு
கள் வற்றிய நிலையில் இன்றைய தினம் இருக்கின்றன. ஒரு
போகம் பயிர் வைத்தும் இன்னும் வைக்கப்பட வேண்டிய பயிர்
கள் வைக்கப்படாத நிலையிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்
கின்றார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்கின்ற நேரத்தில்
வறட்சிப் பகுதியாக வட ஆற்காடு மாவட்டத்தை அறிவித்து,
என்னுடைய ராணிப்பேட்டை, அரக்கோணம், சோளிங்கர்
தொகுதிகளும் மிகவும் கடுமையான சூழ்நிலையிலே பாதிக்கப்
பட்டிருக்கின்றன என்று அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்
நிலையில் அங்கேயெல்லாம் வரி வஜா செய்ய வேண்டும். கூட்
டுறவுக் கடன்கள் ஒத்தி வைக்கப்பட வேண்டும்.

ஆழ்துளை கிணறுகள் 200 தான் எங்கள் மாவட்டத்திற்கு
என்று கொடுத்திருக்கின்றார்கள். யூனியனுக்கு 5 கிணறுகள் என்று
கூட கணக்கு வரவில்லை. நான் மெத்த பணிவன்போடு சொல்
லிக்கொள்வது, இன்னும் முந்நூறு ஆழ்துளை கிணறுகளை எங்
களுடைய மாவட்டத்தில் அமைக்க வேண்டும். இந்த நேரத்திலே
வறட்சியால் குடிநீர்கூட கிடைக்காது பஞ்சத்தின் எல்லையிலே
நாங்கள் இருக்கிறோம். வறட்சியின் கோரப்பிடியிலே இருக்
கிறோம். குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நீங்கள்
தாராள மனதோடு எங்கள் பகுதியை வறட்சிப் பகுதியாக அறி
வித்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று
இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், எங்களுடைய வேலூர் நகரம், வட ஆற்காடு மா
வட்டத் தலைநகர் அங்கு போக்குவரத்து என்பது, பஸ்-தங்கு
வது என்பது, நெரிசலுடைய உச்சக்கட்டத்தில் இருக்கின்றது.
இன்றைய தினம் பஸ்ஸுக்காக மக்களுக்கு அரைமணி நேரம்
ஆகிறது பஸ்ஸை தேடிப்பிடிப்பதற்கு என்று சொல்லிக்கொள்
கிறேன். எந்தப் பகுதியிலேயும் பார்க்கலாம். மதுரையிலே பார்க்
கலாம். சேலத்திலே பார்க்கலாம். ஈரோட்டிலே பார்க்கலாம்.
ஆனால், வேலூரைப் பார்ப்போமானால் வட ஆற்காடு
மாவட்டத் தலைநகரைப் பார்ப்போமானால், ஒரு தரமான
பேருந்து நிலையம் வேலூரிலே இருக்கின்றதா என்றால் இல்லை





என்ற நிலைமைதான் இருக்கின்றது. மிக நெருக்கடியான சூழ்
நிலையில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலையில்தான்
இருக்கின்றது. மக்கள் போக்குவரத்து பாதிக்கப்படக்கூடிய சூழ்
நிலையில் இருக்கின்றது. எங்களுடைய மாவட்டத் தலைநகர்
இன்றைய தினம் அத்தகைய நிலையில் இருக்கின்றது. அங்கு
போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு விரிவான திட்டத்தை
போட வேண்டும். அதற்கான உத்தரவை உடனடியாக இட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றிய பிரச்சினைகளை நான்
பேச வேண்டும். இன்னும் நேரம் கொடுக்கும்படி கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, விவசாயக் கல்லூரி. தஞ்சைக்குப் பிறகு வட ஆற்
காடு மாவட்டத்திலே இராணிப்பேட்டையில் நவ்லாக்-கிலே
தொடங்கப்பெறும் என்று சென்ற சட்டமன்றத் தொடரிலே
கூட கூறப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை நடைமுறைப்படுத்தப்
படவில்லை. நான் மெத்தப் பணிவன்போடு சொல்லிக்கொள்
வது, இந்த ஆண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்குண்டான
வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஆசியாவிலேயே என்னுடைய தொகுதியிலே கால்நடை நோய்
தடுப்பு ஆராய்ச்சி நிலையம், வட ஆற்காடு மாவட்டத்தில்,
இராணிப்பேட்டையிலே இருக்கின்றது. அங்கே ஒரு கால்நடைப்
பண்ணை உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

30 ஆயிரம் தொழிலாளர்கள் சிப்காட் தொழிற்பேட்டையில்
பணி புரிந்துகொண்டிருக்கின்றார்கள். அங்கே மத்திய அரசு மூல
மாக 100 படுக்கைகள் கொண்ட ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை
வருவதற்கு மத்திய நிர்வாக வல்லுநர்கள் வந்து ஆய்வு செய்
தார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
அவர்களும் அங்கு வந்த நேரத்தில் உடன் நிறைவேற்றுவதாக
அங்கே பத்திரிகையாளர்களிடம் சொன்னார்கள். அது பத்திரிகை
யிலும் வந்திருக்கின்றது.

(பிற்பகல் 1—10)

இந்த ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் தயவு கூர்ந்து
துணை நிற்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.
எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு காகித தொழிற்
சாலை வேண்டும். ஆம்பூரிலே சர்க்கரை மில், திருவலத்திலே
சர்க்கரை மில் என்று சர்க்கரை மில்கள் எங்கள் மாவட்டத்திலே
இருக்கிற காரணத்தால் ஒரு காகித தொழிற்சாலையை நிச்சய
மாக நீங்கள் அளிக்க வேண்டும். பாலாற்றிலே இருந்து தண்ணீர்

கிடைக்கக் கூடிய பகுதிக்குச் சற்று தொலைவிலே சிப்காட் நிறு
வனம் இருப்பதால், நிச்சயமாக ஒரு காகித தொழிற்சாலையை
எங்கள் தொகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்று இந்த
நேரத்திலே சொல்லி, நவோதயா—புதிய கல்வித் திட்டத்தைப்
பொறுத்த வரையில் இந்தத் திட்டத்தை மற்ற எல்லா மாநிலங்
களும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது, ஆனால், தமிழகம் அதைப்
புறக்கணித்து வருகிறது.

பெற்ற தந்தை தன் மகனை விருப்பப்பட்டு படிக்க வைத்
தாலும் அதை தடை செய்ய என்ன காரணம் இருக்கிறது என்று
எனக்குப் புரியவில்லை. கர்நாடகமும் அரசு தான், ஆந்திரமும்
அரசுதான். அங்கே கிளர்ந்து இருக்கிற உணர்வு தமிழ் மண்
ணிலே பிறந்து இருக்கிற நமக்கும் இருக்கிறது, எனக்கும் இருக்
கிறது. ஆனாலும், ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதிலே
நமக்கு என்ன தயக்கம்? இந்தியிலே நடிக்கச் செல்லுகிற
ஸ்ரீதேவியை உங்களால் தடுத்து நிறுத்த முடிகிறதா? அல்லது
ரஜினிகாந்த், கமலஹாசன் இந்தியிலே போய் நடிக்கிறார்கள்
என்று சொன்னால் அப்படி நடிப்பதை தடை செய்ய முடிகிறதா?
அப்படி தடுக்கக்கூடிய போராட்டக்காரர்கள் இருக்கிறார்களா
என்று பார்க்கும்போது இல்லாத சூழ்நிலையை நான் மெத்தப்
பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட பேச்சுக்
களினாலே ஒரு கல்வியை, ஒரு மொழியை கற்றுக்கொள்ள வேண்டு
மென்ற எண்ணத்தை நீங்கள் தடுத்து நிறுத்தலாமா? இன்
றைய தினம் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் புதிய
எண்ணத்தோடு இந்தக் கல்விக் கொள்கையை தருகிறார்கள்
என்று சொன்னால், அனைத்து மக்களும் அந்தக் கல்வியை பெறுவ
தற்கு, அதை தமிழகத்தில் கொண்டு வருவதற்கு, நீங்கள் துணை
யாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு வேண்டாம் என்று
சொல்லவேண்டாம் என்று நான் எங்களுடைய இந்திய தேசிய
காங்கிரசின் சார்பிலே மெத்த பணிவோடு சொல்லி, இந்த
வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி விடை பெறு
கிறேன். நன்றி, வணக்கம்.

**5. விதி 110-ன் கீழ் சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்
துறை அமைச்சரின் அறிக்கை.**

**மின் உற்பத்தி கட்டுப்பாடு குறித்து.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு
சட்டமன்ற பேரவை விதி 110-இன் கீழ் பேரவைக்கு மின் துறை
அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: நெய்வேலி மின்
உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட மின் தடை காரணமாக
இன்று காலை 6-31-க்கு நெய்வேலி அனல் மின்நிலையம் தமிழ்
நாடு மின் இணைப்பில் இருந்து பிரிந்தது. உடனே கல்பாக்கம்





அணுமின்நிலையமும் பிரிந்தது. இதனால் மின் உற்பத்தி வெகு
வாக பாதிக்கப்பட்டு மின் அழுத்தமும் பிரிக்-வென்சியும்
வெகுவாக குறைந்தன. இதனால் சென்னை மின் இணைப்பி
லிருந்து பிரிக்கப்பட்டது. பிறகு ஒவ்வொரு பகுதியாக
இணைத்து 7.35-க்கு எல்லா மின் இணைப்புகளும் ஒன்று சேர்க்
கப்பட்டன. நெய்வேலி அனல் மின் நிலையம் இணைப்பில்
உள்ளது. ஆனால் கல்பாக்கம் அணு மின் நிலையம் வழங்கும்
மின்சாரம் நாளைதான் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
தற்போது 360 மெகாவாட் கல்பாக்கம் உற்பத்தி தடைப்பட்
டுள்ளது. இதனாலேயே குறைந்த மின் அழுத்தம் ஏற்பட்டது.
மின் இணைப்பின் பல இடங்களில் மின்சாரம் தாற்காலிக தடை
ஏற்பட்டு இருக்கிறது. மாலை 4 மணி அளவில் ஒருவித
சீரமைப்பு ஏற்படுத்த சகல நடவடிக்கைகளும் செய்யப்பட்டு
வருகின்றன.

**1—3—87 முதல் 30—6—87 முடிய தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி,
கட்டுப்பாடு பற்றிய விவரமும் விளக்கமும்.**

கடந்த ஆண்டு நிலவிய நீர் வரத்தினை கணக்கில்கொண்டு
தற்சமயம் புனல் மின் நிலையங்களின் நீர் தேக்கங்களில் உள்ள
நீரின் இருப்பு, தற்போது உள்ள பேணுதற் பணிகளை கருத்தில்
கொண்டு அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி அளவு,
கடந்த ஆண்டு கிடைத்த அளவின் அடிப்படையில் நெய்வேலி
முதல் அனல் மின் நிலையத்தில் இருந்து கிடைக்கக்கூடிய மின்
சக்தியின் அளவு மற்றும் நெய்வேலி இரண்டாவது அனல் மின்
நிலையத்தில் இருந்தும், கல்பாக்கம் அணு மின்நிலையத்தில்
இருந்தும், மேற்படி நிறுவனத்தினரின் கணிப்புப்படி நமக்கு
சேர வேண்டிய மின் சக்தியின் அளவு இவற்றை கருத்தில்
கொண்டு 1—3—1987 முதல் 30—6—1987 முடிய உள்ள
காலத்திற்கான தமிழ் நாட்டின் மின்சார உற்பத்தி நிலைமை
ஆய்வு செய்யப்பட்டது.

இப்பற்றாக்குறையினை தற்போது அமலில் உள்ள 40 விழுக்
காடு மின் வெட்டுடன் சமாளிக்க இயலும். இவ்வெட்டு உயர்
மின் அழுத்த சக்தி பெறும் தொழிற்சாலைகளுக்கு மாத்திரம்
தான் பொருந்தும். விவசாயம், வீட்டு இணைப்புகளுக்கு எந்த
வித மின் கட்டுப்பாடும் இல்லை. இனியும் வராது. இந்நிலைமை
1987 ஆம் ஆண்டு ஜுன் திங்கள், தென் மேற்கு பருவ மழை
தொடங்கும் வரை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1987 மார்ச் 4

4. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கதிர்வேலு பேசியதில் எதுவும் நீக்க வேண்டியதில்லை. அவர் பேசியதும் இருக்கும், நிதி அமைச்சர் பேசியதும் இருக்கும். அடுத்து திரு. வே. இரா. ஜெயராமன்.

*திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களால் இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட ஆளுநர் உரையின் மீது, அந்த உரையை வரவேற்று என் கருத்துக்களை எடுத்து வைக்க விழைகின்றேன். எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் ஆளுநர் உரை என்பது சம்பிரதாயமான ஒன்று என்றும், திரு. ரமணி அவர்கள் பேசும்போது, அந்த ஆளுநர் உரையிலே வேலை வாய்ப்புகளுக்கு எதுவும் இல்லை என்றும்; மகளிருக்கான வேலை இன்மையை போக்குவதற்கு எந்தவித பாதுகாப்பு திட்டங்களும் இல்லை என்றும் ஒரு கருத்தை அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் என்னுடைய கருத்துக்களை அவர்களுக்குப் பதிலாக தெரிவிக்க விரும்புகிறேன். முதற்கண். நான் எடுத்துக்கொள்ள விரும்பும் திட்டம் இலவச காலணிகள் வழங்கும் திட்டமாகும். எதிர்கால சந்ததியினர், பள்ளிச் சிறார்களை சுகாதார பாதுகாப்போடு வளர்க்க, அவர்களுக்கு சமூகத்தில் ஒரு பிடிப்பான நிலையை ஏற்படுத்த இந்தச் சிறப்பான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அறிவித்திருக்கிறது. காலணிகள் கொடுப்பதை எதிர்க்கட்சிகள் இகழ்ச்சியாகப் பேசுகிற நிலைகூட சில நேரங்களில் ஏற்பட்டிருக்கிறது. பள்ளி செல்லும் சிறார்கள், ஏழை தாய்மார்கள் ஆகியவர்களுக்கு இலவச காலணிகள் கொடுப்பதன் மூலம் தமிழகத்தில் சுமார் ஒரு கோடி பேர்கள் பயன்பெறுகிற நிலை உருவாகிறது. சிறார்களுக்கு அளிக்கப்படும் சுகாதார பாதுகாப்பின் மூலம் அவர்களுக்கு கல்வியிலும் சமூகத்திலும் ஒரு பிடிப்பு ஏற்படுகிறது. கிராமப்புறங்களில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள், அருந்ததியினர் வகுப்பைச் சார்ந்தவர்கள், நிரந்தர வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இன்றைய தினம் இலவச பாடப்புத்தகங்களைக் கொடுக்கிறோம். இலவச சீருடைகளைக் கொடுக்கிறோம். இலவச சத்துணவு கொடுக்கிறோம். இப்போது இலவச காலணிகளையும் வழங்குகிறோம். இப்படி எதிர்கால நோக்கோடு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருப்பது வேலையின்மையைப் போக்காதா, ' வேலை வாய்ப்பை உருவாக்காதா என்று கேட்க விரும்புகிறேன்.



அண்ணா மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சமூக பொருளாதார வீட்டுவசதி முன்னோடி ஆய்வின் அடிப்படையில் வீட்டுவசதி அளிப்பதில் ஒரு புதிய அணுகுமுறை தமிழகத்தில் இன்றைய தினம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் வீடு கட்டுகிற திட்டம். இந்த வீடு கட்டுகிற திட்டத்திற்கு ஆங்காங்கு உள்ள வட்ட அளவிலான கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களை ஏற்படுத்தி, அந்தச் சங்கங்கள் வீடு கட்டுகிறப் பணிகளுக்கு நிதியைப் பெறவும், மத்திய அரசிலிருந்து வருகிற ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., போன்ற நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அதிக நிதியை வீடு கட்டுகிறப் பணிகளுக்கு ஒதுக்கி, வீடு கட்டுவதற்கான கட்டிடப் பொருள்களைப் பெறுவதற்கும் இன்றையதினம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்கள் முன்னுதாரணமாகக் கொள்கிற அளவிற்கு இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்களுடைய திட்டம் நம்முடைய ஆளுநர் உரைக்குப் பின்னால் அங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் பட்ஜெட் பற்றி கூறவேண்டுமென்றால் It is a pragmatic practical and result oriented budget, to alleviate the sufferings of the poor இன்னும் கூற வேண்டுமானால் வீடு கட்டுகிற திட்டங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடுகள் அளிக்கிற வகையில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நமது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் வீடு கட்டும் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடுகள் வர வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக பொதுமக்களின் குறைகளைப் போக்குவதற்கு இன்றைய தினம் தமிழக சட்டமன்றப் பேரவையின் பெட்டிஷன் கமிட்டி ஒன்றினை ஏற்படுத்தி இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அந்தக் குழு பொதுமக்களின் குறைகளைப் போக்குகிற குழுவாக இன்றைய தினம் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதைப் போல பொதுமக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு ஒரு தனிப்பிரிவு மாவட்ட அளவில் ஏற்படுத்த இருப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

இன்றைய தினம் ஆளுநர் உரையில் ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி கவலை தெரிவித்ததற்குப் பின்னாலே, இலங்கையில் நடப்பது 'ஜெனோசைட்', இனப்படுகொலை என்று குறிப்பிட்டுக் காட்டியதற்குப் பின்னாலே, இந்தியப் பிரதமர் அவர்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு, ஜெயவர்த்தனா அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிற ஒரு நிலையை மத்திய அரசு எடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1987 மார்ச் 4

(பிற்பகல் 1-20)

அதேபோல் இந்த ஆளுநர் உரையில் தொலைக்காட்சியைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம், தமிழகத்தில் செய்த அந்த கொடைக்கானல் லிங்க் பற்றி இங்கே கூற வேண்டும். இந்த கொடைக்கானல் லிங்க் ஏற்பட்டதற்குப் பின்னால், தமிழகத்தினுடைய 70 சதவீதம் மக்கள் இன்றைய தினம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். மாலை 6 மணி முதல் இரவு 8-40 மணி வரை, தமிழ் நிகழ்ச்சிகளை பார்க்கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்ந்து, அங்குள்ள மாணவர்கள் நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த ஒளிபரப்பு நேரங்களில், அதிகமாக கல்வி சம்பந்தப்பட்ட ஒளிபரப்புகளைக் கொண்டு வரவேண்டும் என்றும், அதன்மூலமாக கிராமப்புறங்களில் இருக்கிற மாணவர்கள் படிப்பதற்கும், கல்வி அறிவு பெறுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்றும் நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இங்கே இருக்கிற இந்திரா காங்கிரஸ் தோழர்கள் ஒன்றைக் கூறினார்கள். திட்ட ஒதுக்கீடு பற்றிக் கூறும்போதும் சரி, மதுவிலக்கு பற்றிக் கூறும்போதும் சரி, அவர்களுக்கு ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிதி இழப்பு 200 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தாலும் மதுவிலக்கை அமல்படுத்தியேதீருவேன் என்றுசொல்லி, சொல்லியதை செய்த புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகின்ற நேரத்தில், இங்கேயிருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, மதுவிலக்கினால் ஏற்படுகின்ற இழப்பை ஈடுகட்ட அதிக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மின்சக்தியைப் பொறுத்தவரையிலும், இன்றையதினம் வளர்ந்துவரும் தமிழகத்தினுடைய தேவைக்கு மின் சக்தி உற்பத்தி மிக ஆதாரமான ஒன்று, மிக முக்கியமான ஒன்று. வட சென்னையில் ஆசியா வளர்ச்சி வங்கியிடமிருந்து 150 மில்லியன் டாலர் நிதி உதவி பெற்று, 420 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்கின்ற அந்தத் திட்டத்திற்கும், கடலூரில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட, ஐந்து பிரிவுகளைக் கொண்டமின் நிலையத்திற்கும், தூத்துக்குடியில் 420 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்கின்ற அந்த திட்டத்திற்கும், இந்தத் திட்டங்களுக்கு வேண்டிய நிலக்கரியைக் கொண்டு வருவதற்கும், தமிழ்நாடு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் வாயிலாக தூத்துக்குடிக்கு நிலக்கரியைக் கொண்டு வருகின்ற அந்தத் திட்டத்திற்கும், மத்திய அரசின் உதவியை தமிழ்நாடு



1987 மார்ச் 4] [திரு. வே. இரா. ஜெயராமன்]

அரசு கோரியிருக்கிறது. அந்தத் திட்டங்களை விரைவாக அமுல் படுத்துவதன் மூலம் தமிழகத்தினுடைய எதிர்கால மின் சக்திப் பற்றாக் குறையை அறவே போக்குகின்ற வகையில் இந்தத் திட்டங்களைச் சுட்டிகாட்டியிருக்கிறோம்.

அதேபோல் நெய்வேலியில் கிடைக்கின்ற பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் வைத்து, அங்கே ஒரு அனல் மின் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். 11 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்கின்ற மூன்றாவது சுரங்கத்தை உடனடியாக ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு முன் வரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் இன்றைய தினம் லாபத்திலே ஓடுகின்ற ஒரு நோக்கினைப் பெற்றிருக்கின்றன. குறிப்பாக தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான 'டாமின் கிரானைட்ஸ்' என்ற கனிம நிறுவனத் தொழிற் சாலையை மணலியில் தொடங்குவதும், கிராபைட் தாதுப் பொருளைச் செய்முறைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை சிவகங்கையில் நிறுவ உள்ளதும், உயர் ரக மெக்னீசயம், எரியூண்ட் மாக்னசைட் ஆகியவற்றைப் பயன்படுத்தி தனி உயர் வெப்ப செங்கற்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 52கோடி செலவில் அமைக்க இருப்பதும், வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்களிடமிருந்து அன்னிய முதலீடுகளைப் பெற்று, தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற அந்த முன்னோடித் திட்டமும் பாராட்டுக்குரிய திட்டங்களாகும்.

அதைப் போல மத்திய அரசினுடைய புதிய சர்க்கரைக் கொள்கையின் வாயிலாக இன்றைய தினம் புதிய சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துகின்ற அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. அந்த வகையில் எனது தொகுதியாகிய தேனிப் பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல், 170 கோடி ரூபாய் செலவில் உதகையில் எக்ஸ் கதிர் படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்தமைக்கு இந்த நேரத்திலே நான் பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு அரசு ஏற்படுத்துகின்ற முன்னோடித் திட்டங்களை வரவேற்கிறேன்.

அடுத்து மணலியில் ரூ. 600 கோடி செலவில் அமைக்கக் கருதியுள்ள அரோமாட்டிக் சேர்மங்கள் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவ மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதை வரவேற்று, அதை மிக வேகமாக நடைமுறைப்படுத்த வேண்டும்

என்று இந்த நேரத்திலே வேண்டிக் கொள்கிறேன். இவற்றை எல்லாம் நான் கூறுவதற்குக் காரணம் வேலைவாய்ப்பு இல்லை, தொழில் வளம் பெருகவில்லை என்று கூறுகிற எதிர்க்கட்சி நண்பர்கள் இத்தனை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழக அரசு தன்னை ஆட்படுத்திக் கொண்டு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டு வருகிற அந்த நல்ல எண்ணத்தைப் பாராட்ட வேண்டும். அவர்கள் பாராட்ட மறந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்க இருக்கிற 15 உரத் தொழிற்சாலைகளில் ஒன்றை மதுரை மாவட்டத்தில் உள்ள வைகை பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் கைத்தறித் தொழிலுக்கும் மற்றும் ஜவுளித் தொழிலுக்கும் முதலாக உள்ள பருத்தி உற்பத்தியாளருக்கும், பருத்தியினுடைய அடிப்படை விலையை ரூ. 700-க்கும் குறையாமல் நிர்ணயிக்க மத்திய அரசை, மாநில அரசு கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து உழவுத் தொழிலில் பெண்களுக்கு எந்த விதமான பங்கும் இல்லை என்ற நிலையை மாற்றி, அதில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு தொழில் நுட்ப உதவிகளைக் கற்றுக் கொடுக்க 'உழவுத் தொழிலில் தமிழ்நாட்டு மகளிர்' என்றும் புதிய தொரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் உள்ள மகளிர்களுக்கு வேண்டிய பல நலன்களை விளைவிக்கின்ற நல்ல திட்டமாக இருக்கும் என்பதால், இந்தத் திட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வறட்சி. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அடைமழை பொய்த்த காரணத்தால் அடுத்து வரும் மாதங்களில் நிச்சயமாக வறட்சி ஏற்படும் என்ற நிலையை கருத்தில்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன் கூட்டியே அறிக்கைகள் தயாரித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்து வறட்சியை போக்குவதற்கு முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குளங்கள், ஏரிகள், நீர் வழி பாதைகள் இவைகளில் எல்லாம் தூர் வாரும் பணியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் எனது பகுதியில் இருக்கின்ற 18 ஆம் கால்வாய் திட்டம், வீரபையனார் அணை திட்டம் ஆகிய திட்டங்களை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியான கம்பம் பள்ளத்தாக்கில் இருக்கின்ற 14,500 ஏக்கர் நிலத்தில் இன்றைய தினம் பாதிக்கு காய்ந்து போன நிலையிலு





இருக்கின்றன. அவைகளை மீண்டும் அறுவடை செய்ய இய லாமல் இருக்கிறது. இவைகளை எல்லாம் வறட்சி நிவாரணப் பணியில் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஊஞ்சாம்பட்டி, அல்லிநகரம், வீரபாண்டி, உப்பார்பட்டி. கோட்டூர், சிலையம்பட்டி, சின்ன ஊர், மார்க்கையன் கோட்டை, ஐயம்பட்டி, புளிசுத்தி, கரு காட்டாங்குளம் ஓடைப்பட்டி, எருசக்க நாயக்கனூர், சின்ன ஓலா புரம், தண்ணீசேர்வைப்பட்டி, சீப்பால கோட்டை, வேப்பம் பட்டி, பூமலைகுண்டு, ஐங்காய்பட்டி கோவிந்தநகரம், தப்பு குண்டு, தாடிசேரி, கொடுவிலார்பட்டி ஆகிய வருவாய் கிராமங் களில் இன்றைய தினம் வறட்சி கோர தாண்டவம் ஆடுகிறது. குடிநீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. அத்தனை கிராமங்களையும் வறட்சிப் பகுதிகளாக அறிவித்து வறட்சிக்கு உள்ளான பகுதிகளுக்கு எப்போதும் கொடுக்கின்ற அந்த நிவாரணம் மட்டும் அல்லாமல் மேலும் பல நிவாரணங்களை அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியில் ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் உறுப்பினர்களை தேர்ந்து எடுத்ததற்குப் பின்னால் அங்கே சில ஊராட்சி ஒன்றியங்களில் அரசியல் காழ்ப் புணர்ச்சியின் காரணமாக நடைபெறுகின்ற பாதகங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கே சில வேலைவாய்ப்பு களும், சில நல திட்டங்களும் தடைபட்டு இருக்கின்றன என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கு ஒரு உதார ரணத்தை நான் கூற விரும்புகிறேன். போடி ஊராட்சி ஒன்றியத் திலே................. (மணியடிக்கப்பெற்றது).

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் 27–2–1987 அன்று இந்தப் பேரவையில் உவந்து அளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர் மானத்தை வழிமொழிந்து நான் சார்ந்து இருக்கின்ற இந்து முன்னணி இயக்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்க நின்று கொண் டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையின் துவக்கத்தி லேயே இந்த ஆண்டு தமிழகத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நலம் பயக்கும் ஆண்டாக அமைய வேண்டும் என்ற விருப்பத் தையும், இந்த ஆண்டு தமிழகத்திற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் வளம் சேர்க்கும் ஆண்டாக அமையும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்து இருக்கிறார்கள். நம்முடைய மேதகு ஆளுநர்

அவர்கள் அந்த விருப்பத்தையும், அந்த நம்பிக்கையையும் தெரிவி
வித்து இருப்பதால், கடுமையான வறட்சியின் கைப்பிடியில் சிக்கி
தவித்துக் கொண்டு இருக்கிற நாட்டு மக்களுக்கு ஒரு நம்பிக்கை
யையும், ஒரு மகிழ்வும் ஏற்பட்டு இருக்கின்றது. தமிழகம் முழு
வதும் இன்றைக்கு பரவலாக வறட்சி இருந்தாலும் குறிப்பாக 15
மாவட்டங்களில் வறட்சியினுடைய பாதிப்பும், அதனுடைய விளை
வும் மிகக் கடுமையாக இருக்கிறது என்று சொல்லப்படுகின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடல் ஓரத்தில் நின்று கொண்டு நித்தம் நித்தம் தவம் செய்து
கொண்டு இருக்கும் கன்னியாகுமரி தேவியின் பெயரால் அமைந்து
இருக்கும் என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வரலாறு
காணாத வறட்சி என்று சொல்லப்படுகின்ற வறட்சி இன்றைக்கு
நிலவிக் கொண்டிருக்கிறது. இந்த வறட்சியினுடைய கடுமையை
நான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த வறட்சியின்
காரணமாக 3 பேர் அங்கே இறந்து இருக்கிறார்கள் என்ற
செய்தி நமக்கு வந்திருக்கிறது. ஆகவே 3 உயிரை பலி கொண்ட
வறட்சி அது. அந்த வறட்சி கன்னியாகுமரி மாவட்டத்தில் தலை
விரித்து ஆடுகின்ற காரணத்தால் அந்த வறட்சியின் கொடுமை
யினை மட்டுமே நான் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்தை தங்கள் மூலமாக ஈர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில்
உள்ள மக்களின் மேல் இந்த அரசுக்கு பரிதாப உணர்வை ஏற்
படுத்துவதற்கு நான் முயற்சிக்கிறேன்.

[பிற்பகல் 1-30]

சாதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,800 மில்லி
மீட்டர் மழை பெய்திருந்த அந்த வரலாறுகள் எல்லாம் பொய்க்
கதைகளாய் மாறிப் போய் கடந்த ஆண்டு 500 மில்லி மீட்டருக்குக்
குறைவாகவே மழை பெய்தது. 1,800 மில்லி மீட்டர் மழை
பெய்த காலங்களிலேயும் பாசனத்திற்கு போதிய நீரின்றி அவதி
யுற்றது எங்களுடைய மாவட்டம். இப்போதுள்ள இந்த 500
மில்லி மீட்டரின் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்களின்
கழனிகள் எல்லாம், அங்குள்ள பயிர்கள் எல்லாம் கருகிப்போய்
இன்றைக்கு அவர்கள் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்
கள். அங்கேயிருக்கின்ற வறட்சிக்குக் காரணம், அங்கே இருக்
கின்ற குடிநீர் பற்றாக்குறைக்குக் காரணம், அங்கே இருக்கின்ற
பாசனத்திற்கு நீர் பற்றாக்குறைக்குக் காரணம், மழை இல்லாத
நிலைமை தான் என்று சொல்லப்பட்டாலும், அதை மட்டுமே
முழுமையான காரணமாக கொள்ளக் கூடாது என்பதை அந்த
மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே குறிப்பிட்டுக்
காட்ட விரும்புகிறேன்.





அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த மாவட்டத்
தினுடைய பூகோள அமைப்பு, நில அமைப்பு, வேறு மாவட்டங்
களை விட சற்று வேறுபட்டதாக இருக்கிறது. இந்த மாவட்டம்
மலைக்கும் கடலுக்கும் இடையில் சரிவாக, செங்குத்தாக இருக்
கிற காரணத்தால் எப்போதெல்லாம் மழை பெய்கிறதோ, அப்
போதெல்லாம் பெய்கின்ற மழையால் கிடைக்கின்ற நீரை தேக்கி
வைக்காமற்போனால், மழை பெய்யும்போது கிடைக்கின்ற நீர்
விரைவாகக் கடலுக்குச் சென்று, கடல் நீரோடு சேர்ந்து
கலந்து வீணாகி விடுவதை நாம் ஆண்டாண்டு காலமாகக் கண்டு
கொண்டு இருக்கிறோம். கடந்த ஆண்டில் பெய்த மழையின்
போது கூட, மூன்றில் ஒரு பகுதி நீரை அங்கே சேமித்து வைக்க
முடியாத நிலைமை ஏற்பட்டு, அந்த நீர் கடலில் சென்று சேர்ந்து
வீணாகிவிட்டதாக நாம் அறிந்து கொண்டிருக்கிறோம்.

அங்கேயிருக்கின்ற பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற
அணைகள் எல்லாம் இன்றைக்கு தூர்ந்து போய், அவைகளின்
கொள்ளளவு குறைந்து விட்ட காரணத்தால் அணைகளிலே
போதிய அளவு நீரை தேக்கி வைக்கமுடியவில்லை.

அதுமட்டுமின்றி, எங்களுடைய மாவட்டத்தை மன்னர்கள்
ஆண்டுவந்த காலத்தில் அந்த மாவட்டத்து மக்களுக்கு நீரை
எப்படி சேமித்து வைத்துக்கொடுப்பது என்று சிந்தித்துப் பார்த்து,
அந்த மாவட்டத்து அமைப்பை நன்கு ஆராய்ந்து, அந்த மாவட்
டத்தில் ஊருக்கு ஊர் ஆங்காங்கே பரவலாக எங்கெல்லாம் முடி
யுமோ, அங்கெல்லாம் குளங்களைத் தோண்டி வைத்து, அந்தக்
குளங்களில் நீரைத் தேக்கி வைத்தால்தான் அங்கே பாசனத்
திற்கு நீரைக் கொடுக்கமுடியும் என்பதை அறிந்து எல்லா ஊர்
களிலும் குளங்களை பெருமளவில் தோண்டி வைத்தார்கள்.
ஆனால் இன்றைக்கு நூற்றுக்கணக்கான குளங்களையெல்லாம்
ஆக்கிரமிப்பாளர்கள் முழுவதுமாக அல்லது அதனுடைய நான்கு
பகுதிகளையும் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். நூற்றுக்
கணக்கான குளங்கள் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டன
நூற்றுக்கணக்கான குளங்கள் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இருந்த
இடம் தெரியாமல் அழிந்து போய் விடுமோ என்று சந்தேகப்
படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இன்னும் சுருக்கமாகச்
சொல்லவேண்டுமென்றால், எங்களுடைய மாவட்டத்து குளங்கள்
எல்லாம் ஆக்கிரமிப்பாளர்களால் கற்பழிக்கப்பட்டு, அதன்
காரணமாக நூற்றுக்கணக்கான குளங்கள் இறந்துபோயின.
நூற்றுக்கணக்கான குளங்கள் தங்களுடைய கடைசி மூச்சோடு
அங்கே இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கின்றன. அங்கே
குளங்களுடைய ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டு, அந்த குளங்களை
தூர் எடுத்து, குளங்களின் கொள்ளளவை அதிகப்படுத்தாத
வரையில், இந்த மாவட்டத்தில் எத்தனை மில்லி மீட்டர் மழை
பெய்தாலும் கூட, பாசனத்திற்கு நீர் போதுமான அளவிற்கு

இல்லாத நிலைமை தான் இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே வறட்சிப் பணிகளை மெற்கொள்கின்ற இந்த அரசாங்கம் இதைத் தன்னுடைய மனதிலே கொண்டு செயல்படவேண்டுமென்பதே என்னுடைய வேண்டுகோள்.

அதுமட்டுமின்றி, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாம் கிணறு ஒன்றைத் தோண்டினால், 40 அடி ஆழத்திற்குப் பிறகு அங்கே பாறை தான் இருக்கும் என்பது ஒரு பொதுவான உண்மையாக இருந்துகொண்டிருக்கிறது, பரவியிருக்கிறது. ஆகவே வெட்டப் பட்டுள்ள கிணறுகளுக்கும் வெட்டப்பட இருக்கும் கிணறுகளுக் கும் நீர் ஊற்று வேண்டுமென்றால், குளங்களில் எல்லாம் நீர் தேங்கி இருக்கவேண்டும். குளங்களிலே நீர் தேங்கி இருந்தால் தான் அங்கே இருக்கின்ற கிணறுகளில் நீர் ஊறுகின்ற நிலைமை இருக்கும். ஆனால் குளங்கள் விற்கப்பட்டு குளங்களே இல்லாத நிலையில் வறட்சி இல்லாத காலத்தில்கூட, மழைக் காலங்களில் எல்லாம் கூட எல்லா குடிநீர்க் கிணறுகளும், அங்கே நீரின்றி, எப்படி வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களின் கற்பனைக் கனவுகள் கருகிக்காய்ந்து உள்ளனவோ, அப்படி காய்ந்து வறண்டு காணப்படுகின்றன. இந்த நிலைமை மாற்றப்படவேண்டுமென் றால், குளங்கள் ஆக்கிரமிப்புகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். இன்னொரு வேதனை என்னவென்றால் குளங்களுக்கு நீர் வந்து சேருவதற்குப் பயன்படும் சிறு கால்வாய்கள் கூட இன்றைக்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், குளங்களுக்கு தண்ணீர் வந்து சேரமுடியாத நிலைமை யிருக்கிறது. ஆகவே குளங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது, அந்த குளங்களுக்கு நீர் கொண்டு வந்து சேர்க்கின்ற கால்வாய்களின் ஆக்கிரமிப்புகளையும் அப்புறப்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துகின்ற வகையில், வறட்சியினுடைய கொடுமையினால் குடிநீர் இல்லாமல் தவிக்கும் மக்களுக்கு குடிநீர் கொடுக்கின்ற நல்ல எண்ணத்தில், இந்த அரசால் நூற்றுக்கணக்கான ஆழ்துளைக் கிண்றுகள் அந்த மாவட் டத்தில் அமைக்கப்படுகின்றன. ஆனால், தொலை நோக்கோடு திட்டமிடாமல் தேவை ஏற்படும் போது எல்லாம் நிலத்தடி நீரை மட்டுமே பயன்படுத்துவது என்ற அளவில் அரசு செயல்படுமே யானால் இன்னும் ஐந்து, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு எங்க ளுடைய மாவட்டத்தில் குடிப்பதற்கு நிலத்தடி நீர்கூட கிடைக் காத நிலைமை வருமோ என்று அஞ்சுகிறோம், எங்களுடைய அச்சம், காரணமற்ற அடிப்படை அற்ற அச்சம் அல்ல. எங்க ளுடைய அச்சத்திற்கு சில அடிப்படையான காரணங்கள் உண்டு. .அக்காரணங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 3
பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருக்கின்றது. அது ஒரு கடற்கரை
மாவட்டம். எனவே மாவட்டத்தின் பெரும்பகுதியை சூழ்ந்துள்ள
கடல் நீரினுடைய அழுத்தத்தின் காரணமாக கடல்நீர் மாவட்ட
நிலத்தின் அடியில் புகுந்துவிடும் நிலைமை உள்ளது.
அப்படி, கடல்நீர் மாவட்ட நிலத்தினடியில் வந்து விட்டால்
குடிநீர் உப்புநீராகி விடும், விவசாய நிலங்கள் விவசாயத்திற்கும்
பயன்படாமல் ஆகிவிடும். ஆனால் கடல்நீர் மாவட்ட நிலத்
தினடியில் வந்து விடாமல் பாதுகாப்பதே தற்போது நிலத்தடியில்
இருக்கும் நீர்தான். நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக எடுத்து
விட்டால் அந்த காலி இடத்தை நிரப்ப கடல்நீர் நிலத்தடிபகுதியில்
புகுந்து விடும். எனவே நீரை அதிகமாக வெளியே கொண்டு
வருவதால், நிலத்தடி நீர் குறைந்துவருகிறது. ஆகவே இன்றைக்கு
பல்லாயிரக்கணக்கான கிணறுகளிலும், ஆழ்துளைக் கிணறுகளி
லும், உப்பு நீர் வந்துகொண்டிருக்கிறது. அந்த
அளவிற்கு நிலத்தடி நீரை அதிகமாக எடுத்து பயன்படுத்திக்
கொண்டு வந்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் நீர்
வந்துவிட்டால் அங்கே அதற்குப் பிறகு விவசாயம் நடத்தமுடியாது
குடிநீரும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே
இன்றைக்கு ஒரு மாற்று ஏற்பாட்டை நம்முடைய அரசு மேற்
கொள்ளவேண்டும் என்று நான் வேண்டுகிறேன். ஒரு நிரந்தர
ஏற்பாடு செய்யப்பட்டாக வேண்டும். இல்லையெனில் இன்னொரு
சகாரா பாலைவனமாக குமரி மாவட்டம் ஆகிவிடும்.

மாம்பழத்துறை அணை கட்டப்படும் என்று இரண்டு ஆண்டு
களுக்கு முன்னால் சொல்லப்பட்டு அதற்காக 13 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டதாக பத்திரிகையில் செய்தி போடப்பட்டது.
ஆனால் இப்போதும் அதற்கான ஆய்வு நடைபெறுவதாக எங்களு
டைய மாவட்ட ஆட்சித்தலைவர் சொல்கிறார். மாவட்ட ஆட்சி
தலைவரை பொறுத்தவரை இந்த வறட்சிப் பணிகளை செயல்
படுத்துவதில் அவர் தீவிரமாக இருக்கிறார் என்பது பாராட்டுக்
குரியது. ஆகவே, இந்த பணிகளை மீண்டும் சற்று துரிதப்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய
பத்மநாபபுரம் நகராட்சியை பொறுத்தவரை தமிழகத்திலே
இருக்கின்ற நகராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்
வசதி இல்லாத ஒரே நகராட்சி என்னுடைய நகராட்சிதான்.
ஆகவே நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தருகின்ற
அளவுக்கு ஒரு திட்டத்தை நீங்கள் தரவேண்டும். அந்த குடி
தண்ணீர் திட்டத்தை நீங்கள் தந்தாலும், பத்மநாபபுரம்
நகராட்சி என்பது நிலத்தடி நீர் அதிகமாக கிடைக்காத ஒரு
நகராட்சி. அங்கே பாய்கின்ற வள்ளியாறு போன்ற ஆறுகளில்
தண்ணீர் வந்தால் தான் என்னுடைய நகராட்சிக்கு குடிதண்ணீர்
கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, மாம்பழத்துறை

திட்டத்தை நிறைவேற்றினால், அதிலிருந்து 20 சத விகிதம் தண்ணீரை இந்த நகராட்சிக்கு குடிநீராகத் தரப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது போன்று தரவேண்டும். அந்தத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இவை பொது நலத் திட்டங்கள். இவற்றை நீங்கள் நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, அணையிலிருந்து நீரைக் கொண்டு வரும் சானல்களில் தூர் எடுக்க வேண்டும். திருவிதாங்கோடு சானலாக இருந்தாலும் பத்மநாபபுரம் சானலாக இருந்தாலும், வேறு சானல்களாக இருந்தாலும் இந்த சானல்களில் பல ஆண்டுகளாக தூர் எடுக்காத காரணத்தினால், நீர் இல்லாத நேரத்தில் அணைகளிருந்து நீர் விடுகின்றபோது, விடுகின்ற நீரிலே பெரும் பகுதி வீணாகி சேதாரமாகப் போய்விடுகிறது. இந்த சானல்களில் தூர் எடுக்கின்ற பணியை விரைவாக நம்முடைய அரசாங்கம் செய்ய வேண்டும் என்பதை வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அதே போன்று, சென்ற முறையும், இம்முறையும் எங்களுடைய மாவட்டத்தில் விவசாயிகள் தங்களுடைய பயிர்கள் எல்லாம் கருகிப்போய் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்து விவசாயிகளைப் பற்றி நம்முடைய அரசாங்கத்திற்கு சற்று அதிகமாகச் சொல்ல வே டும். இரண்டு சென்ட் நிலத்தையும், மூன்று சென்ட் நிலத்தையும் வைத்துக்கொண்டு அவர்கள் அங்கே விவசாயிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி கடன் பெற்று அந்த 2, 3 சென்ட் நிலங்களில், வயல்களில், அவர்கள் செய்கின்ற விவசாயம் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டதன் காரணத்தினால் முதுகெலும்பு உடைந்தவர்கள் போன்று மூலையிலே முடங்கிகிடந்து முனகிக்கொண்டிருக்கிறார்கள். வறட்சியால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்காக அவர்களுக்கு உதவித்தொகை நம்முடைய அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று நிலவரி, நீர் வரி போன்றவற்றை நம்முடைய அரசாங்கம் ரத்து செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, தெளிப்பு, சொட்டு நீர்ப்பாசன முறையை மிக விரைவாக செயல்படுத்தப்போவதாக நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறையை எங்களுடைய மாவட்டத்திற்கு மிக விரைவில் நீங்கள் செயல்படுத்தித்தர வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன். மேலும் காட்டாறுகளில் ஓடி வீணாக கடலில் கலக்கும் நீரை நாம் தடுத்து நிறுத்தி பயன்படுத்துவதற்காக அங்கே இருக்கின்ற காட்டாறு என்று சொல்லப்படுகின்ற வள்ளியாறு போன்ற ஆறுகளின்



குறுக்கே பல இடங்களில் தடுப்பு அணைகள் கட்டப்பட்டு ஆற்றின் உள்ளே குளங்களை ஏரிகளை உருவாக்குகின்ற வாய்ப்பு இருக்கிறது; இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நாளை 5-ந் தேதி டி.டி.சி. மாணவிகளுக்கு தேர்வு நடைபெற இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தில் மார்த்தாண்டம் அரசு மேல்நிலை பள்ளியில் 17 மாணவிகள் இந்த ஆண்டுக்கான பரீட்சை எழுத வேண்டும். ஆனால் அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இதுபற்றி அமைச்சரிடம் சொல்லி இருக்கிறேன். நாளைய தினம் தேர்வு இருக்கிறது. யாரோசெய்த தவறுகளால் இந்த மாணவிகள் பலியாகாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய எதிர்காலத்தை பாதுகாக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. மூ. பாண்டுரங்கன்:** தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தொடரும் விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சற்றேரக் குறைய 2,000 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் பெருந்தகை தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவேயே, கள் இருந்த காரணத்தினால்தான் 'கள் உண்ணாமை' என்ற ஒரு அதிகாரத்தை இயற்றி இருக்கிறார்கள். அன்றே கள் இருந்தது என்றால் இன்றைக்கும் கள் இருக்கிறது, கள் இருக்கிறது என்று சில நண்பர்கள் எல்லாம் சொல்லியிருப்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

(பிற்பகல் 1-40.)

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், மதுவிலக்குக் கொள்கையில் தீவிர ஈடுபாடு உள்ளவர் என்பதை நாடே அறியும். 1—1—1987 முதல் தமிழகத்தில் கள் - சாராயம் ஆகியவற்றை தயாரிப்பதையும், விற்பனை செய்வதையும், அருந்துவதையும் தமிழக அரசு தடை செய்துள்ளது. கள் - சாராயக் கடைகள்தான் மூடப்பட்டனவே ஒழிய, பிராந்திக் கடைகள் உள்ளன என்று சில உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே சொன்னார்கள்.

'சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்திலே இங்கே கள்ளும், சாராயமும் பெருக்கெடுத்து ஓடியதேயொழிய இப்போது ஒன்றும் அப்படியில்லை. உண்மையாக,

கள் - சாராயக் கடைகள் எங்கேயாவது இருந்தால், அவர்கள் குறிப்பிட்டு, இந்த அரசுக்கோ, அல்லது உயர்தர போலீஸ் அதிகாரிகளுக்கோ தெரிவிப்பார்களானால் உடனடியாக நிச்சயமாக அதன்மீது நடவடிக்கை எடுத்து பரிகாரம் கொடுக்க இந்த அரசு நிச்சயம் முன் வரும் என்பதை இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு உண்மையை இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புகிறேன் ; 1–1–1987-க்கு முன்பு தொகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்தபோது, குறிப்பாக என்னுடைய தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்தபோது, தாய்க் குலத்தைச் சேர்ந்த ஒருவர் தன் சட்டையின் தோள் பகுதியைக் காட்டி என்னுடைய கணவன் சாராயம் குடித்து விட்டு என்னை கொடுமைக்குள்ளாக்கி அடித்ததன் காரணமாக இவ்வாறு நேர்ந்து விட்டது, இதை புரட்சித் தலைவருக்கு தயவு செய்து எடுத்துச் சொல்லக் கூடாதா என்று சொன்னார்கள். தாய்க் குலத்தின் இந்த அவல நிலை புரட்சித் தலைவருக்குத் தெரிந்துதான் கள் - சாராயக் கடைகளை மூடி, ஏழை மக்களுக்கு, குறிப்பாக ஏழைத் தயாய்மார்களுக்கு நிம்மதியைத் தேடித் தந்துள்ளார்கள்.

தவிர, மாலை 4 மணிக்கு மேல் தொகுதியின் உள்ளேயே போக முடியாத நிலை இருந்தது. அந்த அளவுக்கு மக்கள் கள் - சாராயம் குடித்து சீரழிந்த நிலைமை இன்று மறைந்து விட்டது. போலீசார் சாராயக் கடைகளை ஆங்காங்கே விட்டு இருக்கிறார்கள் என்று சில உறுப்பினர்கள் சொல்வது சரியல்ல. அப்படி ஏதாவது சாராயக் கடைகள் இருக்குமானால் அரசுக்கோ அல்லது உயர்தர போலீஸ் அதிகாரிகளிடமோ நேரடியாக தெரிவித்தால் உரிய நடவடிக்கைகளை எடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் உயர்தர போலீஸ் அதிகாரிகளிடம் இம் மாமன்றத்தின் மூலமாகக் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். கள்ளச் சாராயக் கடைகளை நடத்த கீழே உள்ள அதிகாரிகள் யாராவது உடந்தையாக இருந்தால் அவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய தண்டனைச் சட்டம் 34-வது பிரிவில்

Section 34, I.P.C.

"When a criminal act is done by several persons in furtherance of the common intention of all, each of such persons is liable for that act in the same manner as if it were done by him alone.".

என்று தெள்ளத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் யாராவது உடன்பாடாக, பொது நோக்காக ஏதாவது தவறிழைத்தால் நிச்சயமாக அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மாநில அளவில் பறக்கும் படை என்ற அமைப்பைக் கூட உருவாக்கி ஒரு சரகத்தில் பறக்கும் படை மூலமாக வழக்குகள் போட்டால் அதாவது கள்ளச் சாராய வழக்குகள் போட்டால் அந்த சரக போலீஸ் அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'உண்ணற்க கள்ளை' என்று வள்ளுவப் பெருந்தகை மிக அழகாக தெள்ளத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கொப்ப புரட்சித் தலைவர் அவர்கள், சாராயம், கள், இவைகள் எல்லாம் வேண்டாம் என்று சொல்லி தடை செய்துள்ளார்கள். மீறி சாப்பிடுபவர்கள் சான்றோரால் மதிக்கப்படமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரையில் 10-வது பாராவிலே ரூபாய் 170 கோடி செலவில் 'எக்ஸ் கதிர் படச்சுருள்' தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவ மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளமைக்கும், மணலியில் 600 கோடி ரூபாய் செலவில் அமைக்கக் கருதியுள்ள 'அரோமாட்டிஸ் சேர்மங்கள்' தயாரிப்பு தொழிற்சாலைக்கும் மத்திய அரசு இசைவளித்துள்ளமைக்கும் தமிழகம் பெரிதும் நன்றி உடையதாகும். மேற்கண்ட தொழிற்சாலையைச் சார்ந்த தொழில்கள் ஏராளமாக உருவாக ஏதுவாகும் என்று 10-வது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு இன்னும் விளக்கமாக இன்னின்ன தொழில்களை உருவாக்க வழி வகை உள்ளது என் பதைக் கூறி இருக்கலாம். 9–3–1987 அன்று வரும் பதிலுரையிலாவது அதனைக் குறித்து விளக்கம் சொல்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சத்துணவுத் திட்டம், இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் இவைகளுடன் இலவச காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைச் சிந்தித்துப் பார்த்தால், ஏழை மக்கள் உள்ளத்தை புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்கு புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாக தெரியும். நம் வீட்டுக் குழந்தைகள் நல்ல ஆடை அணிந்து, காலணி அணிந்து பள்ளிக்குச் செல்லும் காட்சியை எவ்வளவு மகிழ்ச்சியாக நாம் பார்க்கிறோம். ஏழை மாணவர்கள் காலணி அணிந்து பள்ளிக்குச் சென்றால், அந்தக் குழந்தைகளின் தாய், தந்தையர் மறந்தா விடுவார்கள் அவர்கள் மட்டும் மகிழ்ச்சி அடையமாட்டார்களா? மேலும், தொற்று நோய் பற்றாத நிலையும் ஏழை மக்களுக்கு வந்து அமையும் அல்லவா? இவைகளைத் தவிர எவ்வளவோ ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலையும் ஏற்படும்.

[திரு. மு. பாண்டுரங்கன்] [1987 மார்ச் 4

'விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது'

என்று வள்ளுவம் பேசுகிறது. வறட்சி நிலைமை தமிழ்நாடு முழுவதும் தலைவிரித்தாடும் சூழ்நிலை ஏற்படும் தருணத்திலே இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிய அதிகாரிகள் மூலம் எந்தெந்த ஊர்களில் குடிநீர் பற்றாக்குறை உள்ளது என்பதை கண்டறிந்து அவற்றை தவிர்க்க தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். எனக்குத் தெரிந்த யோசனை ஒன்றை இந்த மாமன்றத்திலே குறிப்பிட விரும்புகிறேன். 15 நாட்களுக்கு ஒரு முறை அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், மாவட்ட தலைநகரங்களுக்குச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை கூட்டி 1 மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் விவாதித்தால் மாவட்டத்திலுள்ள குடிநீர் பிரச்சினை நீங்க அதிகாரிகள் இன்னும் சுறுசுறுப்பாக வேலை செய்து இந்த அரசுக்கு நல்ல பெயரை வாங்கி கொடுக்க நல்ல ஒரு சூழ்நிலை உண்டாகும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு கடும் வறட்சி ஏற்படக்கூடும் என்பதை முன்னதாக உணர்ந்து 8,625 துளைக் கிணறுகளை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை எண்ணி தமிழக மக்கள் புரட்சித் தலைவரை வாயார மனமாற வாழ்த்துவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. துளைக் கிணறுகளை அமைப்பதற்கு முன்பு சட்ட மன்ற உறுப்பினர்களை கலந்து ஆலோசித்தால் எந்தெந்த ஊர்களில் துளைக் கிணறுகளை அமைக்கலாம் என்பதனை கூறுவார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை கலந்து ஆலோசித்து துளைக் கிணறுகளை அமைக்க வேண்டுமென்று அரசு, உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக எனது தொகுதியான கலசப்பாக்கம் தொகுதியில் கரும்பு நிறைய பயிர் செய்யப்படுவதாலும், செய்யார் அங்கே அமைந்திருப்பதாலும் சர்க்கரை ஆலை ஒன்றை கலசப்பாக்கம் அருகே அமைத்திட தக்க ஏற்பாடு செய்து தருமாறு இந்தத் தருணத்தில் தமிழக அரசை கேட்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* **திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துக்
களை கூற விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த
மட்டில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நிரந்தரமாக
தீர்க்கின்ற வகையிலே எந்த ஒரு திட்டமும் அறிவிக்கப்படவில்லை.
தமிழகம் முழுவதும் வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்திலே நில
வரியை ரத்து செய்வதைப்பற்றியோ அல்லது விவசாய கூட்டு
றவுக் கடன்களை நீடிக்கின்ற காலக்கெடுவைப் பற்றியோ



1987 மார்ச் 4] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

இந்த அறிக்கையிலே அறிவிக்கப்படவில்லை. மூன்று வருடங்
களிலே 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறோம்
என்று கடந்த ஆண்டு அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருந்தது.
ஆனால் கடந்த ஆண்டு 10 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு
விட்டனவா என்பதை இந்த அறிக்கையிலே அறிவிக்கப்பட
வில்லை. அதே நேரத்திலே, ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி.,
ஐ.யு.டி.பி. போன்ற திட்டங்களின் மூலம் கிராமப்புறங்களிலே
இலவசமாக கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகளுக்கு ஒதுக்கப்
படுகின்ற நிதியை இந்தத் திட்டத்திலே இணைக்கப்பட வேண்டு
மென்று இந்த அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.
மத்திய அரசும் இதற்கு இசைவு தெரிவித்திருப்பதாக இந்த
அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, 30 லட்சம்
வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற இந்தத் திட்டத்தை மத்திய—
மாநில அரசு இணைப்புத் திட்டம் என்று அறிவிக்கப்பட வேண்டு
மென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

தமிழகம் முழுவதும் மதுவிலக்கை அமல் செய்து 20 ஆண்டு
காலம் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தது. இப்போது பூரண
மதுவிலக்கை அமல்படுத்தாமல் கள், சாராயக் கடைகளை மட்டும்
மூடியிருக்கிறார்கள். ஏதோ 1947 ஆம் ஆண்டிற்கு பிறகு கடந்த
ஆண்டு முடிய கள், சாராயக் கடைகள் தமிழகத்திலே திறக்கப்
பட்டிருந்ததுபோலவும், இப்போதுதான் நாங்கள் சாராயக்
கடைகளை மூடிவிட்டோம் என்ற உணர்வினை தமிழக
மக்கள் மத்தியிலே இன்றைய தினம் உருவாக்கி இருக்கிறார்கள்.
ஆகவே இந்த நிலையை மாற்றி, இது விவேகமற்ற நிலை என்
பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். அதே நேரத்திலே இந்த அறிக்கையைப் பொறுத்த
மட்டிலே இலவச காலணிகள் வழங்குகின்ற திட்டம், மக்கள்
குறைகளை கேட்க தனிப் பிரிவு, கள் இறக்குகின்ற தொழி
லாளர்களுக்கு புது வாழ்வு அளிக்கின்ற திட்டம் போன்ற நல்ல
திட்டங்கள் இந்த அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருப்பதை
நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-50]

கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டத்
திற்கும், சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்திற்கும் அதிக
நிதி ஒதுக்க வேண்டுமென்று அறிக்கையில் மத்திய அரசை
மாநில அரசு கேட்டிருக்கிறது. இதை நான் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். அதோடு வாகைக்குளத்தில் ஒரு விமான
தளத்தை அமைத்து சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு வாயு
தூத் விமானப் போக்குவரத்தை அமைத்துத் தர வேண்டு
மென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான பழைய காயலில் டைன மைட் தொழிற்சாலை அமைக்க மத்திய நிபுணர்கள் குழு ஒன்று நேரில் வந்து பார்த்து ஆய்வு செய்து, அந்தத் தொழிற் சாலையை பழைய காயலிலேயே அமைக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழக அரசும் அந்தத் தொழிற்சாலையை பழைய காயலிலேயே அமைக்க வேண்டு மென்று மைய அரசுக்கு மாநில அரசின் சிபாரிசாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் வறட்சி நிலவுகின்ற காரணந்தால் நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்றும் விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்கான கால கெடுவையும் நீட்டிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே தமிழகம் முழுவதும் வறட்சி நிலவுகிற காரணத்தால் கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழை விவசாயிகள் வேலை இல்லா மல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற வகையில் கிராமப்புறங்களில் இருக்கிற குளங்களையெல்லாம் மராமத்து செய்கிற பணியை அவர்களிடமே ஒப்படைத்து அவர்களுடைய வறுமையைப் போக்கவேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராமப்புறத்தில் மழை பொய்த்ததன் காரணமாக விவசாயிகளுடைய கிணற்றிலெல்லாம் நிலத்தடி நீர் குறைந்து விட்டது. அவ்வாறு நீர் குறைந்திருக்கிற காரணந்தால் பல இடங்களில் தண்ணீர் இல்லாமல் சில கிணறுகள் வறண்டு போய் உள்ளன. ஆகவே மின்வாரிய அதிகாரிகள் கிராமங்களுக்கு நேரிலேயே சென்று வறண்டு போன விவசாயக் கிணறுகளைப் பார்வையிட்டு மின்சார பம்பு செட்டுகளுக்காக வசூலிக்கப்படுகிற மின் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு மின் கட்டண பாக்கியை வசூல் செய்வதிலும் உள்ள கெடுபிடியைத் தளர்த்த வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மிகுந்த வறட்சி ஏற்பட்டிருக்கிற காரணத்தால் வல்லநாடு முதல் புதுக்கோட்டை வரை இருக்கிற அத்தனை கிராம மக்களுக்கும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட் டிருக்கிறது. ஏதோ ''அடி பம்பு'' போட்டுகூட குடிநீர்ப் பற்றாக் குறை நீக்கிவிடலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்திட வழி செய்யப் படவில்லை. வல்லநாட்டிலேயே சில ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் வல்லநாட்டிலிருந்து புதுக்கோட்டை வரை இருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் குடிநீரை சப்ளை செய்து இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்கிற வகையில் ஒரு திட்டத்தைத் தீட்டி செயல் படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.





அதோடு என்னுடைய தொகுதியில் வல்லநாட்டிலிருந்து புதுக் கோட்டை வரை விவசாயிகள் எல்லாம் மழையை மட்டும் நம்பியே பயிர் செய்கிற அவசியம் இருந்து வருகிறது. அவர்க ளெல்லாம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். எனவே வருகிற ஆண்டுகளிலாவது இதுபோன்ற நிலை மைகள் ஏற்படாமல் இருக்க கங்கை கொண்டான் அருகில் இருக்கிற பராக்கிரமபாண்டிய குளத்திலிருந்து ஒழக்குடிகுளம் வரை இடையே இருக்கிற சிற்றாறு, சீவலப்பேரி குளம், கலியாவூர் பெரிய குளம் இவைகளின் வழியாக ஒழக்குடிகுளத்துக்கு வாய்க் கால் வெட்டி தண்ணீரை கொண்டு போக வேண்டும். அப்படிச் செய்தால் வல்லநாட்டிலிருந்து புதுக்கோட்டை வரை இருக்கிற புனைக் குளங்களுக்கு தடை இல்லாமல் தண்ணீர் பாயும். அதனால் ஒரு போக விளைச்சலுக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை யைத் தமிழக முதல்வர் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தி யிருப்பதைப் பாராட்டுவதோடு மத்திய அரசு அவர்களுக்கு இலவச ரெயில் பாஸ் வழங்கியுள்ளதைப்போல் இந்தத் தியாகி களுக்கு இலவச பஸ் பாஸ் மற்றும் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கவும் வசதி செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்து ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகிற சலுகை யைப் போலவே கிறுத்துவ ஆதிதிராவிட மக்களுக்கும் அச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு அதற்குரிய சட்டத்தையும் திருத்த வேண்டும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆர். செங்காளியப்பன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நான் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்திலே உள்ள அங்கத்தினர்கள் அத்தனை பேருமே வறட்சியை முதலிடமாகக் கொண்டுதான் இங்கே உரையாற்றினார்கள்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்கள் திருவாளர்கள் இரா. தாமரைக்கனி மற்றும் கா. வே. கந்தசாமி ஆகியோர் இடம்மாறி அமர்ந்திருப்பது குறித்து.

திரு. ப. தீர்த்தராமன் : Sir, on a point of oder அவை யில் சில மெம்பர்கள் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறார்கள். அது பற்றி எங்களுக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லையே என்பதால் அதைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டிய தேவையில்லை.

**திரு. ப. தீர்த்தராமன் :** அவைக்குச் சொல்லவில்லையே என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமரைக்கனி, திரு. கே. வி. கந்தசாமி ஆகிய இரண்டு பேரையும் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையிலும், கட்சியின் நிறுவனர் என்ற முறையிலும் எனக்கு ஓர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டக் காரணத்தால் அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்.

### 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம் —தொடர்ச்சி.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** கோவை மாவட்டத்திலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவே கடுமையான வறட்சி நிலவுவதால் கிராம மக்கள் குடி தண்ணீருக்கு கூட வசதியில்லாத நிலையில் கஷ்டப்படுகிற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலையில் தமிழக அரசாங்கமானது பல இடங்களில் ஆழ்துளை கிணறுகளைப் போட்டு ஓரளவிற்கு குடி தண்ணீர் செய்து கொடுத்திருந்தாலும், இந்த நீர் மட்டமானது நாளுக்கு நாள் கீழே போய்க் கொண்டிருப்பதால் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுவதை நாம் பார்க்கிறோம். இதே போன்று பல பஞ்சாயத்துக்களில் குடி தண்ணீர் எடுப்பதற்கு இருக்கக் கூடிய மோட்டார்களுக்கு ஆகும் கரெண்ட் சார்ஜ்கூட கட்ட முடியாத நிலையில் பொருளாதார நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தர அங்கேயுள்ள பஞ்சாயத்துகளுக்கு உதவக்கூடிய முறையில் தமிழக அரசு அதிகப்படியாக உதவி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று வறட்சியின் காரணமாக ஆங்காங்கேயுள்ள குளங்கள், குட்டைகள் ஆகியவற்றில் தண்ணீர் வறண்டு போயிருக்கிற நிலையில், நிலத்தடி நீர் கீழே போகிற நிலையில், விவசாயக் கூலிகள் வேலையில்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கிறோம். அந்த விவசாயக் கூலிகளைக் கொண்டு குட்டைகள் குளங்கள் ஆகியவற்றை தூர் எடுப்பதன் காரணமாக, மழைக் காலத்திலே குடி தண்ணீர் கிடைக்க ஏற்பாடும் செய்ய முடியும், வறுமையின் காரணமாக, வறட்சியில் இருக்கக் கூடிய கூலி தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல விவசாயிகளும் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விளைபொருள் விளைச்சல் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களுடைய கடன்களை வஜா செய்ய





வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருந்தாலும் காலக்கெடு இல்லாமல் நிரந்தரமாக அந்தக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அறிவித்த நேரத்தில் ஓரளவிற்கு நிலைமை சரியாக இருந்தது. வரக்கூடிய காலங்களில் மழை பெய்து நல்ல முறையில் அறுவடை ஏற்படுமானால் அந்தக் காலத்திலே அவர்கள் கடன்களைக் கட்டத் தயாராக இருக்கிறார்கள். வறட்சி இன்று மேலும் வளர்ந்திருக்கும் நேரத்தில், நீங்கள் கொடுத்துள்ள காலக் கெடுகளை போக்கி கால வரம்பின்றி அந்தக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் நில வரியை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நில வரியைக் கட்டுவதற்குக் கூட வசதியில்லாத விவசாயிகள் பெரும்பாலும் இருக்கிறார்கள். ஆகவே நில வரியை நீங்கள் நிறுத்தி வைக்க வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டும். ஆனால் காலம் வரும்போது வசூல் செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று எல்லா இடங்களிலும் மாடு, கன்றுகளுக்குத் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாடு, கன்றுகளுக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவிற்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியமாக உதவி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் நீண்ட நெடு நாட்களாக போராட்டம் நடத்தி, உண்ணாவிரத போராட்டம் நடத்தி, ஆயிரக்கணக்கான பேர்கள் சிறைக்குச் சென்றும், இரண்டு ஆலைகள் தான் திறக்கப்பட்டனவே தவிர பெருவாரியான ஆலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. புதிய புதிய தொழில்களைத் துவங்க வேண்டுமென்று சொல்லும்போது பழைய தொழில்களை மூடும் நிலைமையைப் பார்க்கிறோம். இதனால் பத்துப் பன்னிரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு புதிதாக வேலை கொடுக்க வேண்டுமென்றால், புதிதாக ஆலைகளைத் துவக்க வேண்டும், அதற்கு சுமார் 100, 150 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்தாக வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க முடியும். ஆனால் பழைய ஆலைகளுக்கு ஒரு ஆலைக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் செலவழித்தால் நிச்சயமாக 12 ஆலைகளை ஓட வைக்க முடியும். ஆகவே இதிலே எது இலாபம் என்பதைக் கருதி நீங்களே கவனம் செலுத்தி இந்த ஆலைகளை மீண்டும் திறப்பதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1987 மார்ச் 4

(பிற்பகல் 2–00.)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில், இந்த ஆலைகளை எல்லாம் எடுத்துக் கொள்வதாக உறுதி அளித்தார்கள். அதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. 2 ஆலைகள். எடுக்கப்பட்டன. அங்கே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பற்றி மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களிடத்தில் பேசினோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு அது குறித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்கள்மீதுள்ள கேஸ்களை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5–3–1987) காலை 10–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–01 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

23. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

V211,31 N87
N87.32.3
136503
சென்னை-600 009

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District),
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]thaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.